# வேனில் விழா

பூவை எஸ். ஆறுமுகம்

விற்பனை உரிமை :

அப்பர் புத்தக நிலையம்

1521, தெற்கு ராஜவீதி : : தஞ்சாவூர்.

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

ஸ்ரீமகள் நிலையம் வெளியீடு—1
*முதற் பதிப்பு : நவம்பர், 1964.*
உரிமை பதிவு.

விலை ரூ. 3-75

வெளியிட்டோர் :
ஸ்ரீ மகள் நிலையம்
**144,** பவழக்காரத் தெரு, சென்னை-1.

*முல்லை அச்சகம், 258, பைக்கிராப்ட்ஸ் ரோடு, சென்னை-14.*

# பதிப்புரை

பூவை எஸ். ஆறுமுகம் நாடறிந்த எழுத்தாளர். தமிழ் நாட்டிலே சிறுகதைகள் படைத்துச் செல்வாக்குப் பெற்ற குறிப்பிடத்தகுந்த ஆசிரியர்களிலே அவர் ஒருவர்.

கிராமியச் சூழ்நிலைகளில் கதைகள் உருவாக்குவதிலும், கிராமங்களில் நடமாடும் பாத்திரங்களை அப்படியே அச்சுருவமாகப் படைத்துக் கொடுப்பதிலும், கிராமிய மொழியையே அழகும் சுவையும் பொருந்தியதாக ஆக்கித் தருவதிலும் கைவந்த இலக்கியகர்த்தா அவர்.

அவர் எழுதிய சில சிறுகதைகளைத் தொகுத்து 'வேனில் விழா' என்ற தலைப்பில் வெளியிட்டிருக்கிறோம். தமிழ் மக்களின் இலக்கிய ரசனைக்கு இது நல்ல விருந்தாகும்.

ஸ்ரீமகள் நிலையத்தார்.

# முன்னுரை

'பூவையின் கதைகள்' எனும் மகுடமிட்டு வந்த கதைத் தொகுப்பைத் தொடர்ந்து வருவது இந்த 'வேனில் விழா' என்கிற கதைக்கொத்து. புத்தகத் தலைப்பில் மணம் கமழ்கிறதல்லவா? அவ்வாறே, உள்ளடக்கம் கொண்டுள்ள கதைகளிலும் இலக்கிய மணம் கமழும். "தமிழன்னைக்கு அணிவித்த ஒரு புதிய அணி!" என்று அக் கதை இணைப்பிற்கு அறிஞர் தி. ஜ. ர. அணிந்துரை வழங்கினார். தத்துவச் செம்மல் எம். வி. வி. இதற்கெனச் சில வரிகளை எழுதுகிறார்.

அப்பர் பணி பாடல் பெற்றது.

நல்ல இலக்கியம் வளர கைகொடுத்து, தோள் நல்கி, மணம் மிக்க மனம் ஈந்துவரும் தமிழ்ப் பெரு மக்கள் அனைவருக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றியும் இதயபூர்வமான வணக்கமும் உரியவை.

பூவைமாநகர்,
11—11—64.

பூவை எஸ். ஆறுமுகம்.

# அணிந்துரை

'பூவை'யை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டிய தேவை இல்லை: நூற்றுக்கணக்கான சிறு கதைகள், ஓரங்க நாடகங்கள், பல நாவல்கள் எழுதி வாசகர்களை மகிழ்வித்து, அவர்களுடைய அன்பை யும் பாராட்டையும் பெற்றவர்; அவருடைய சிறு கதைகளைப் பற்றி என் கருத்து என்ன என்பதைக் கூறுவதுதான் இந்த முன்னுரை.

கதை சொல்லுவதும் கேட்பதும் மனித ஜாதி யின் இயற்கை. உலகத்துக்குப் பண்பாட்டையும் நாகரிகத்தையும் போதித்த ஆசானாக விளங்கும் நம் நாடு ஈடு இணையில்லாத இலக்கியச் செல்வம் படைத்தது என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆனால், 'கதை' என்பதுடன் 'சிறு' என்கிற அடை மொழியைச் சேர்த்த ஒருவகை இலக்கியத்துறை இருக்கிறதே, அது அண்மையில்தான் தமிழ் நாட்டில் தோன்றியது; அதுவும், மேல்நாட்டு உதாரணத்தைப் பின்பற்றித்தான் தோன்றியது என்று ஒப்புக்கொள்வதால் நமக்கு ஒன்றும் அகௌரவம் வந்து விடாது. சிறுகதைத் துறையில், பிரஞ்சு, ருஷ்ய, ஆங்கில, ஜெர்மன் மொழிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் இன்று கூட நமக்கு வழி காட்டியாகத்தான் உள்ளது; அந்த உயர்வை நாம் ஓரளவுதான் எட்ட முடிந்துள்ளது.

சென்ற முப்பது ஆண்டுகளாகத் தமிழில் கணக்கு வழக்கு இல்லாமல் பத்திரிகைகள் தோன்றி, தங்கள் இயல்புக்கு ஏற்றபடி தமிழை வளர்த்து வரு கின்றன; ஒவ்வொரு பத்திரிகையிலும் எண்ணி

லடங்காத கதைகள் வெளிவருகின்றன. அது மட்டும் அல்ல, வீட்டுக்கு ஓர் எழுத்தாளர் பிறந்து கொண்டிருக்கிறார். ஆனால், பேனா பிடித்தவர்கள் எல்லோரும் எழுத்தாளர்கள் ஆகிவிடவில்லை; அச்சில் வந்த கதைகள் அனைத்தும் சிறுகதைகள் ஆகிவிடவில்லை; 'நான் வகுத்துச் செல்லும் பாதை புதிது; என் எழுத்துக்கள் தனிரகம்' என்ற முத்திரையுடன் எழுதும் ஆசிரியர்களை நாம் விரல் விட்டு எண்ணி விடலாம். இந்தக் கோஷ்டியில் பூவை. ஆறுமுகம் அவர்களுக்கு நிச்சயமாக ஓர் இடம் உண்டு.

பூவையின் எழுத்துக்களில் என்னைக் கவர்ந்த சில அம்சங்களைக் கூறுகிறேன்.

அறுநூறுக்கும் அதிகமாய்க் கதைகள் எழுதியிருப்பதாக அவர் கூறுகிறார். இவ்வளவு 'அடர்த்தியாக' எழுதிய ஆசிரியர்கள் உலகத்திலேயே மிகச் சிலர்தான் இருக்க முடியும்; அந்த அளவுக்கு அது ஒரு சாதனை! ஆனால் அதை இலக்கியத்தரத்துக்கு அடையாளமாக ஏற்க முடியாது அல்லவா?

கதை 'கட்டும்' திறமைதான் கதாசிரியனை உருவாக்குகிறது. இந்தப் பழைய 'செல்லரித்துப்போன' உலகத்தில் புதிதாக, யாருக்கும் தெரியாததாக எதையும் எந்த ஆசிரியனும் கூறிவிடப் போவதில்லை. ஆனால் அவன் 'அதை எப்படிச் சொன்னான்?' என்பதைக் கொண்டுதான் அவன் கலைஞனா, இல்லையா என்பதை நாம் முடிவு கட்டுகிறோம். பூவை சொல்லவந்ததை நயமாகச் சொல்கிறார்; நேராகச் சொல்லுகிறார்; படிப்பவர்களின் மனத்தில் பதியும் வண்ணம் சொல்கிறார்; போதாதா? அவர் சொல்லுக்காகவோ, சொல்வதற்காகவோ தவிப்பதை அவருடைய எந்தக் கதையிலும் காண முடியவில்லை. அவருடைய எழுத்தாண்மைக்கு இது சிறப்பான சான்று தானே?

எந்தக் கதையையும் (சிறு கதை, நாவல், நாடகம் எதுவானாலும் சரி) அழகாய்ச் சொல்வதற்கு அழகான நடை அவசியம். உயர்ந்த கருத்து செம்மையான நடையில்தான் வெளியாகும். எண்ணத்திலும் கற்பனையிலும் கம்பீரம் தோன்றும்போது, நடை தானாகப் பண்படுகிறது. நடையழகை ரசிக்கத் தெரியாதவன் கலைஞனாகவோ விமரிசகனாகவோ இருக்க முடியாது. 'பண்பட்ட—பண்பாடு கொண்ட கலைத்தன்மை மிகுந்த நடைமுறை வாழ்வியல் கதைகளை'த் தாம் எழுதுவதாகப் பூவை கூறுகிறார்; அதற்கு அவருடைய 'பண்பட்ட' நடை வலிய கருவியாக உதவுகிறது. ஆற்றொழுக்குப் போல் பெருக்கெடுக்கும் அவருடைய நடையழகிற்காக—மற்றும் ஒருமுறை அவருடைய கதைகளைப் படிக்கவேண்டும் என்னும் ஆவல் தோன்றுகிறது. பூவையின் வெற்றிக்கு அவருடைய நடை மூலபலம்.

இலக்கியம் வாழ்க்கையைப் பிரதிபலிக்கிறது. பூவையின் கதைகளைப் படிக்கும்போது தமிழ் மண்ணின் மணத்தை நுகருகிறோம்; பட்டினக்கரை முதல் பட்டிக்காடுவரை, மாளிகையிலிருந்து சேரி வரை தமிழகத்தின் உயர்வு தாழ்வுகளை எல்லாம் காண்கிறோம்; 'இந்த உயர்வுக்காக மகிழ்வதா, அந்தத் தாழ்வுக்காக அழுவதா' என்று தடுமாறுகிறோம்; 'மனித இயற்கை இதுதான்' என்று நம்மை நாமே தேற்றிக் கொள்ளுகிறோம். பூவையின் கதைகளைப் படிக்கும்போது இத்தகைய உணர்ச்சிகள் எழுகின்றனவா இல்லையா என்பதை, நீங்களே அக் கதைகளைப் படித்து முடிவு செய்யுங்கள்.

கும்பகோணம்,
10—11—64.

**எம். வி. வெங்கட்ராம்.**

# கதைகள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வேனில் விழா | 9 |
| 2. | மனோரஞ்சிதம் | 25 |
| 3. | சாவிலே வாழ்வு | 44 |
| 4. | ஆடும் குதிரை | 53 |
| 5. | கை அணைத்தது | 60 |
| 6. | மனம் எனும் வேள்வியில் | 73 |
| 7. | தனிக்காட்டு ராணி | 86 |
| 8. | எடுபிடி | 99 |
| 9. | ஆவணத்தாங் கோட்டைச் சாலை | 107 |
| 10. | காதலுக்குக் கண் உண்டு | 118 |
| 11. | பலியா ? | 129 |
| 12. | மையலும் தையலும் | 138 |
| 13. | மனச்சாட்சி | 145 |
| 14. | ஊஹூம் ! | 152 |
| 15. | ஏய் காளி | 160 |
| 16. | " ஡ !" | 168 |
| 17. | தாலி பாக்கியம் | 182 |
| 18. | இன்று நேற்று வந்த சொந்தமா ? | 194 |
| 19. | பொம்மித்தீ | 203 |
| 20. | ஆத்தா ! | 211 |

# வேனில் விழா

மாணிக்கக்கை உணவு படைத்தது!

"அம்மா...!"

"என்ன தம்பி..."

"இன்னும் கொஞ்சம்..."

"நெய் ஊத்தட்டுமா? இல்லே, அவியல் போடுறேன். சோற்றிலே பிசைஞ்சு சாப்பிடேன்! என்ன வேணும்?"

"நெய்!"

"ஓ...!"

"அம்மா, அம்மா!...போதும்மம்மா!...முந்திரிப் பருப்புகளை முன்னாலேயே சாப்பிட்டது, திகட்டுது!..."

"தம்பி, இந்தாப்பாரு; குடமிளகாய்...ரெண்டை எடுத்து வாயிலே போட்டுக்க. கொஞ்சம் உணக்கையாயிருக்கும்! இரு, தயிர் ஊத்துறேன்!..."

"ஊம்...ஊம்...வந்து..."

"என்னடா தம்பி சாரங்கா!...மனசிலே உள்ளதைப் பளிச்சினு சொன்னாத்தானேப்பா எனக்கு விளங்கும்?..."

சாரங்கராஜன் ஏப்பம் பறித்தான்!

தாய் மனம் விட்டுச் சிரித்தவாறு, மகனுடைய சுருள் முடியைக் கோதிவிட்டாள். கைகழுவ நீர்ச்செம்பை அவனிடம் நீட்டினுள்.

பெற்றவளின் பாசம் அவனுக்குத் துணிவை ஈந்தது. கால்வாயைத் தாண்டத் தெரியாதவன், வெட்கம் எனும் கடலைத் தாண்டினுன். இதற்கு, உண்மை மிகுந்த காரணம் ஒன்று இருந்தது. அதுதான், திலகவதியின் எழில்பூத்த திருமுகம். எண்ணியவன் திரும்பத் திரும்ப எண்ணினுன். கனவு கூட்டும் கண்கள்; கனவுகாணச் செய்யும் வல்லமை கொண்டிலங்கின அவை. இன்பக் கதைகள் சொல்ல வல்ல இதழ்கள். சுண்டினுல், ரத்தம் தெறிக்கும் சிவப்புத் தோல். போதையூட்டிப் போதம் ஊட்டும் கவர்ச்சி! பண்பு சேர்த்துப் பண்பை உருவாக்கும் பதுமை!

"கனவுலகப் பயணம் முடிந்ததோ?"

திலகவதியின் நிழற்படத்தை முதலில் தன் அன்னையிடம் நீட்டினுன் சாரங்கராஜன். அந்தப் பாவனையிலே, அவள் தன் மகனின் உள்ளப்பாங்கின் பாவனையை எடை போட்டாள். இனம்கண்டாள்போலும்! படத்தில் பாவையின் ஒளிவிழிகள் ஒளிகாட்டி யிருக்கவேண்டும்! தாய் சிரித்தாள். அந்தப் பாசச் சிரிப்பு மைந்தனின் இதழ்க் கண்ணுடித் துண்டங்களில் பிரதிபலித்தது.

பிரஹதீஸ்வரர் ஆலய மணி ஒலித்தது!

"சாரங்கன்...!"

"அம்மா!"

"பெண் எந்த ஊராம்?"

"சொந்த ஊர் திருச்சியாம். இப்போது பட்டணத்திலே இருக்கிருள். என்னேடு ஒன்ருகப் படித்தவள், அம்மா!"

இன்னபடி சொல்லவேண்டுமென்று திட்டம் இட்டு, அதன்படி பேசினுன் அவன். வார்த்தைகள் பிசிறு தட்ட

வேண்டுமே? ஊஹூம்; கிடையாது. கிடையவே கிடையாது! ஆனால் ஒன்று. பேசி நிறுத்துவதற்குள், அவன் பாடு 'போதும்போதுமென்றாகிவிட்டது. கைக்குட்டையை நீளமாக விரித்து உதறினான் அவன். தந்தி ரசீது ஒன்று தத்தித் தவழ்ந்து விழுந்தது. திலகவதியின் வெற்றிக்கு வாழ்த்து அறிவித்ததற்கு அடையாளம் வேண்டுமல்லவா?

கண்களிடைத் தேங்கிய காரிகையின் கருணை முகம், அவன் மனத்தைப் புண்ணாக்கிப் பள்ளுப்பாட வைத்தது! கை விரித்து, கை ஏந்தி நின்றவனுக்கு ஒருகணம் சிலிர்ப்பு உண்டாயிற்று. அப்நினைவுப் பறவை, மனக்கூண்டினுள் முடங்கிச் சிறகுகளை அடித்துக்கொண்டது. "தம்பி!" என்னும் விளிப்பு திரும்பத்திரும்ப உதித்தழிந்தது.

"தம்பி! பெண் வீட்டிலே வசதிகளெல்லாம் எப்படி?"

"நம்மைக்காட்டிலும் வசதி மிகுந்தவங்க!"

"சரி தம்பி. ஐப்பசி பிறந்தானதும், நான் ஒருதரம் பட்டணத்துக்கு வந்து பெண்ணைப் பார்த்துப்பிடறேன்!" என்றாள் அலமேலு அம்மாள்—சாரங்கராஜனின் அன்னை. மறுகணம், அவன் காண்பித்த அந்த இரண்டாவது புகைப் படத்தை அவள் விழி செலுத்தினாள். பதட்டமும் எரிச்சலும் உடன்பிறப்புப் பாசம் பூண்டவையோ?...'சேலை முந்தியைக் கொய்தாள் அவள். சொட்டிய வேர்வை மணிகள் அந்த வெள்ளைப்புடவை நுனியில் சொட்டின.

"இதுதான் திலகவதியோட அப்பா. திலகம் தாயில்லாப் பெண் அம்மா!"

அலமேலுவின் கண்கள் பொடித்தன!

'வரப்போற மருமகள் தாயில்லாப் பெண் என்கிற தகவல் கிடைத்ததும், அம்மாவுக்கு வருத்தம் தாளலே போலிருக்குது!...'

முகத்தைப் படிக்கக் கண்ணாடி உதவலாம். ஆனால், அகத்தைப் படிக்க முகம் எப்போதுமே உதவிவிடுமென்று சொல்லிவிட இயலுமா?

''அம்மா!...ஏம்மா ஒருமாதிரி இருக்கீங்க?...''

வேதனையின் நுழைவாயிலில் கால் பதித்து, வினச் சொடுக்கிற்று பாசம்.

அவள் சமாளித்துக்கொண்டாள். ''ஒண்ணுமில்லே தம்பி!...உன் அப்பா ஞாபகம் வந்திச்சு...அதுதான்!...ம், உன் இஷ்டப் பிரகாரமே செஞ்சுப்பிடலாம். நீ கொஞ்ச நேரம் படுத்து எழுந்திரு!''

யானைத் துதிக்கைப் பிடியினின்றும் ஊதுவத்தி மணம் புறப்பட்டுக்கொண்டிருந்தது. ஊதுவத்தி பிறப்பித்தது புது வாசனையையா?...புத்தம் புதிய வாழ்வுத் தத்துவத்தையா?

திலகவதியின் வாழ்த்துச் செய்தியை ஆயிரம் முறை படித்துங்கூட, அலுப்புக்கொள்ளவில்லை சாரங்கராஜன். அவளுடைய படம் மேஜை விரிப்புக்கு அழகு சேர்த்துக் கொண்டிருந்தது. அதைப் பார்க்கப் பார்க்க, அவனுக்கு 'ஆனந்த வெட்கம்' கிளர்ந்தெழுந்தது. மகிழ்ச்சியிலே தோய்ந்த மறக்கமுடியாத நிகழ்ச்சிகளின் பழங்கதை என்றால், அதன் மகிமை மனோரம்யமானதுதான்!

ஒருமுறை:

வாரந்தோறும் நடைபெறும் கல்லூரி வகுப்புப் பரீட்சை அந்த வெள்ளிக்கிழமையன்றும் நடைபெற்றது. இந்திய சரித்திரப் பரீட்சை அன்றைக்கு நடக்கவேண்டும். மணி அடிக்கப்பட்டது. அவரவர்கள் ஹாலுக்குள் பிரவேசித்தனர். சாரங்கராஜனும் தன் கைப்பிடியில் பற்றியிருந்த பேராசிரியர்கள் வி. ஏ. ஸ்மித், கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார், ஆர். சத்யநாத அய்யர் ஆகியோரை மரியாதைகுறையாமல் மேடைமீது இருத்திவிட்டுத், தன்னுடைய தேர்வு இலக்கம் குறிக்கப்பட்டிருந்த இருக்கையை நாடி நடந்தான். அப்போது, மோஹஞ்சதாரோ-ஹாரப்பா நகரங்களின் அழிவு சரித்திரத்திலே சிரஞ்சீவித் தன்மையுடன் வாழ்வது குறித்துச் சாஸ்திரியார் கூறியிருந்த அழகிய நீண்ட வாசகம் ஒன்று சரியான வாக்கிய அமைப்போடு நினைவுக்கு வழி கூட்டவில்லை, ஆங்கிலத்தில். அதுபற்றி அருகில் இடம்

தேடியவாறிருந்த ஓர் உருவத்திடம் வினவினான். பதில் கனகச்சிதமாக வந்தது. நன்றி சொன்ன போழ்திலே, நாணம் பூத்த குறுஞ்சிரிப்பினைத் தரிசிக்கலானான்.

"ஓ...ஐ...ஸி...திலகவதியா?..."

திலகவதி மிகவும் கெட்டிக்காரப் பெண். நிதி மிகுந்த குடும்பம். நாளுக்கு ஓர் உடை. ஆனாலும், நாணயமான—பண்பு இழைந்த அலங்காரம். அழகு கொழிக்கும் சொல்லடுக்கு. ஆணித்தரமான ஞாபகசக்தி. பி. ஏ. இறுதி வகுப்பில் அவள் மிகமிகப் புத்திசாலிப் பெண். இதே அளவுக்குச் சாரங்கராஜனும் விளங்கினான். அந்த வாரப் பரீட்சையின் மார்க்குகளின் விவரம் கிடைத்தபின், தன்னை நிறுத்தி, "என்னிடம் சந்தேகம் கேட்பதுபோல நடித்து, வகுப்பிலேயே முதல் நபராக வெற்றி பெற்றிருக்கிறீர்களே?...பேஷ், பேஷ்! இதே வெற்றி பட்டப்பரீட்சையிலும் கிடைக்க நான் உங்களை இதயபூர்வமான நல்லெண்ணம் கொண்டு வாழ்த்துகிறேன்!" என்றாள் திலகவதி. அன்பின் நெருக்கத்தை உணர்ந்து, வார்த்தைகளும் நெருங்கின. அன்பின் பரிவர்த்தனையே ஒரு கலை!

தேய்ந்த நாட்கள், வளர்ந்த அவர்களின் நேசத்துக்கு உரைகல்; சாட்சியம்!

ஒருசமயம்...

'தொலைபேசி' அழைப்பொன்று விழிப்புப் பெற்று ஓடி வந்தது. கோழித் தூக்கம் பயின்றவனை ஹாஸ்டல் பியூன் உசுப்பிவிட்டான். முகம் நிமிர்த்தி, 'செய்தி வாங்கி'யை நிமிர்த்திப் பிடித்தான். நினைவில் பிடிபட்ட குரல்; எதிர்த் தரப்பில் முகம் காட்டிடாமல், ஆனால், அகம் காட்டிப் பேசினாள் திலகவதி. "அப்பா வந்திருக்காங்க. உங்களைப் பார்க்க வேணுமாம்!...உடனே தயவுசெஞ்சு புறப்பட்டு வாரீங்களா?..." என்று நயம் சேர்த்துக் கேட்டாள். பவ்யமான பதிலில் இணக்கம் சேர்த்து அனுப்பி வைத்தான் அவன்.

சாரங்கராஜன் உடுப்புக்களை மாற்றி அணிந்துகொண்டான். 'சுருள் அலைபடிந்த கேசத்தை நேர்வகிடு எடுத்து

வாரிவிட்டான். 'புட்டாமாவு' வாடையில் நாசி புடைத்தது; அழுந்தியது. கைக் கடிகாரத்தைப் பார்த்தபொழுது, மோதிரவிரல் மூளியாக இருப்பதை அறிந்து திடுக்கிட்டான். ஊரிலிருந்து புறப்பட்ட சமயம், பெட்டியிலிருந்த ஒரு மோதிரத்தைத் தாயிடம் வேண்டிப் பெற்று வந்ததாயிற்றே அது? 'தளதள'வென்று இருந்ததால், எங்கேனும் நழுவி விட்டிருக்குமோவென்று பயம் கீறல் அமைத்தது. 'தம்பி! இந்த மோதிரத்தை நீ ரொம்பவும் பத்திரமாக வச்சிக்கிடணும். விலை மதிக்கமுடியாத பொருள்போலத்தான் இதுவும்' என்று எச்சரித்திருந்தாளே தாய்? எங்கும் ஒரு மூச்சு தேடினான் அவன் கிடைத்தது மோதிரம்; கிடைத்தது நிம்மதி. மோதிர விரலில் அழகுமின்ன, முகத்திரையில் எழிற் கனவு விளையாட, அவன் புறப்பட்டான்!

வானப் பொய்கைதனிலே அந்தி நிலா மடலவிழ்ந்து கொண்டிருந்த வேளை அது.

சாரங்கராஜனைக் கண்டவுடனே, எடுத்த எடுப்பிலேயே அவனை மனத்திற்கு நிரம்பப் பிடித்துவிட்ட மாதிரியாக அப்படி விநயமின்றி மணம்பரப்பிச் சிரித்தார் நடராஜன்—திலகவதியின் அப்பா. குறுக்குக் கேள்விகளை அவர் உதடுகள் கேட்டுக்கொண்டிருந்த நேரத்தில், அவர் விழி இணை சாரங்கராஜனின் மோதிரத்தையே உறுத்துப் பார்த்தவாறு இருந்தது. அவரது சுருக்கங்கள் விழுந்திருந்த வதனத்தில் சலன அலைகளின எண்ணிக்கை நீண்டுகொண்டே போனதைச் சாரங்கராஜன் கவனித்தானோ, என்னவோ? அவன் கவனிக்கத் தவறவில்லை.

"அப்பா!"

"......"

"அப்பா!..."

நடராஜன் தட்டுத் தடுமாறியவராகக் கண்களை மூடி மூடித் திறந்தார். "உன் இஷ்டம்போல ஆகட்டும். பரீட்சை முடிஞ்சு ரிஸல்ட் வரட்டுமே!..." என்று ஆறுதல் கூறினார். பிறகு, சாரங்கராஜனின் பக்கம் திரும்பினார். "மிஸ்டர்

சாரங்கன், உங்களை எனக்கும் ரொம்பப் பிடிச்சிப் போச்சு!..."

* * *

நற்கனவுகள் ஒளி வட்டமெனச் சுற்றிச் சுழன்று, கடைசியில் பொற்கணங்களாக உருமாறி மனக்குகை வெளியிலே ஓய்வுகாணும் நிலையில், மீண்டும் அவற்றை ஒவ்வொன்றாக எண்ணமிட்டுப் பார்க்கும் தருணத்தில், உரு வாகக்கூடிய அமைதிக்கு ஆதங்கத்திற்கு-ஆறுதலுக்கு ஈடு எடுப்பு இருக்கக்கூடுமென்று நீங்கள் நினைக்கின்றீர் களா?

மிட்டாயைத் தின்று முடிந்ததும், குழந்தை நாக்கு நுனி யினால் இதழ்க் கரையைத் தடவிக்கொடுத்து, மிச்சம் சொச்சமிருக்கும் இனிப்புச் சக்தியைச் சுவைக்கும்.

இனிய காலத்தின் கழிவை மனிதன் நினைத்து முடித்த தும், அவனையும் கேட்காமல் அவனது இமையோரங்களிலே முத்துச்சரம் வளைவுகட்டித் திகழ்வது இயல்பு. அதை அவ னது நகக்கண் மெல்ல மெல்ல வழித்துவிடும். இவனுக்கும் மிட்டாய் சாப்பிட்ட நிலைதான்!

தோல் பெட்டியைக் கையில் பிடித்தவாறு வாசல் நிலைப் படியைத் தாண்டினான் சாரங்கராஜன். பட்டணத்தில் வேலைக்கு உத்தரவு வந்திருந்தது. தெய்வத்தை நினைத்து, மகன் நெற்றியில் நீறு தீட்டினாள் அலமேலு அம்மாள். தந்தையின் படத்தைத் தொட்டு வணங்கிவந்த அவனுக்குக் கண்கள் கலங்கின. பெற்றவளிடமிருந்து விடை பெற்றுப் பிரிந்தவனுக்கு மனத்தில் அந்த ஒரு குறை வியூகம் இட்டு வளைத்துக்கொண்ட இடம் கொஞ்சமா, நஞ்சமா? 'திலகவதி விஷயமாய் அம்மா கடைசிபரியந்தம் எந்த ஒரு முடிவையும் சொல்லவில்லையே, ஏன்?'

சுவரில் மாட்டப்பட்டுள்ள காலண்டர் தாள்களை யாராவது அன்றாடம் கிழிக்காமல் இருப்பார்களா, என்ன?

அலமேலு அம்மாளின் உள்ளம் விம்மி வெடித்துக் கொண்டிருந்தது. இனம் புரிந்துகொள்ள வாய்க்காத ஒரு

பரபரப்பு அவளைச் சுற்றிச் சூழ்ந்து, பாடாய்ப் படுத்தியது. வெடிக்கத் துடிக்கின்ற பலூன் நிலை அவளுக்கு ஏன்?...''

கணவருடைய உருவத்தை இமைக் கதவம் பூட்டாது நோக்கிக்கொண்டிருந்தாள் அவள். விழிகள் உப்புப் பட்டாற் போன்று கலங்கி வந்தன. இருப்புப் பெட்டகச் சாவிக் கொத்தை இடது கைக்கு மாற்றிக்கொண்டாள். வலது கையினால், அந்தப் படத்தைத் தொட்டுக் கண்களிலே ஒற்றிக்கொண்டாள். விரல் நுனிகள் அழுகை சிந்தின. சுடுநீர்த் திவலைகள் புடைவைச் சங்கில் அடங்கின. அவள் தன் போக்கில் சிந்தனைச் சூறாவளியின் தடத்தினில் விழிபதித்து, வழிமிதித்து நடந்த வேளையில், திறந்து கிடந்த 'மாந்தளைப் பெட்டி'யின் மேல்தட்டில் பழைய மோதிரம் இருந்தது. அடிக்கடி கைநழுவி விடுவதாகக் காரணம் கற்பித்து அங்கேயே விடுத்துச் சென்றுவிட்டான் சாரங்கராஜன்.

அந்த மோதிரத்தையே திரும்பத் திரும்பப் பார்க்கலானாள் அலமேலு அம்மாள். கற்கள் பதித்த அந்த வட்டப் பகுதியில் நடராஜன் தோன்றினாரா?...

மறதியின் கண் மயக்கில் கைநழுவிப் போய்விடக் கூடியவை அல்ல அந்நாட்கள்!

* * *

கனவின் மடியில் அலமேலு சிரம் வைத்துப் படுத்துக் கிடந்தாள். காலம் அவளது நற்கனுக்களுக்குப் 'பொன் முலாம்' பூசியது; உருவம் சமைத்தது அவள் மனம் மேற்படி கனவுகளின் தாள்களிலே தவம் இயற்றியது. 'என் அத்தான் நடராஜன்...ஐய்ய...பேரைச் சொல்லி விட்டேனே...அவங்கதான் எனக்கு எல்லாம்!...அவங்க எனக்குக் கிடைச்சுப்பிட்டா, அப்புறம், என்மாதிரி பாச்யவதி வேறே யார் இருப்பாங்க?...' என்று அகம் மிக மகிழ்ந்திட்ட நாட்கள் ஒன்றல்லவே, இரண்டல்லவே!

நடராஜனும் அலமேலுவும் 'முறைமை' கொண்டவர்கள். சொந்தத்தில் பந்தம் சேர்க்கத் துடித்தார்கள். இருவர் தம் மணவினைப் பேச்சுக்களும் ஆரம்பமாயின.

'நிச்சயதாாத்தம்' நடந்து, அவர்கள் குல வழக்கப்படி, நடராஜனுக்குப் பெண் வீட்டிலிருந்து மோதிரம் ஒன்று செய்து அனுப்பப்பெற்றது. அந்த மோதிரத்திற்குப் பெயர் 'கைப்பிடி மோதிரம்'. ஆனல், மகிழ்வும் நிறைவும் விளை யாடிய மனையில் 'தொல்வினை'யும் உடன் இணைந்து விளை யாடிய—விளையாட்டுக் காட்டுமென்று அவர்களுக்குச் சோதி டம் தெரியுமா, என்ன? கீழராஜ வீதியிலிருந்து வடக்கு ராஜ வீதியை மிதித்தவளாக ஆக்கிவிட்டது. 'புதிதாக கெட்டிக் கார சோசியர் வந்து உங்க ரெண்டுபேர் ஜாதகத்தையும் பார்த்ததிலே, உங்களுடையது ரெண்டும் சரிவரக் கூடி வரலையாம்!' என்னும் செய்திதான் அது. இதைக் கேட்கக் கேட்க, அலமேலு அனல் தண்டிய அழகுமுல்லையானள். அடுத்த மூன்ரும் நாள் அவள் இன்னெரு செய்தியைக் கேள்விப்படலானள். திருச்சியில் பெரிய செல்வந்தர் மக ளுக்கு நடராஜன் திருப்பூட்டப்போவதாக அறிந்தாள். 'பணம் அவரோட கண்ணை மூடிப்பிடிச்சு. இதை மறைக்க, ஜாதகக் கோளாறு என்கிற திரையை இழுத்துமூடி நாட கம் போட்டிருக்காரு. பணம் எட்டின மட்டும் பாயும் என் கிறது சரியாகப் போச்சுது!...ம்!' என்று எண்ணம் பரப்பி னள். நடராஜனின் திருமண அழைப்பு வந்தது. யாரும் போகவில்லை. அப்பால், அவர் சென்னையில் தொழில் பண்ணினர். ஆண்டுகள் எத்தனையோ ஆகிவிட்டன. எல்லாம் பழங்கதையாகிப் போயின. ஆனல், நடராஜ னிடமிருந்து திருப்பித் தரப்பட்ட அந்த மோதிரம் அலமேலு அம்மாளை அவ்வப்போது சலனத்திற்குள் ஆழ்த்தி வேடிக் கை காட்டி வந்ததென்னவோ உண்மைதான்!...

'தெய்வசித்தம்' என்ற ஒன்று இருக்கத்தான் செய் கிறது!

அலமேலுவைக் கைபிடித்தார் நாகலிங்கம். சாரங்க ராஜனை அவ்வீட்டுக்கு ராஜாவாக ஆக்கிய நிம்மதியுடன் அவர் விண் ஏகினர். மகனே அவளுக்குச் சகலமாக உலகத்தின் உருபொருளாக—உற்ற பொருளின் உயிர்த் தத்துவமாக விளங்கினன். ஓடிய நாட்களின் பின்னே அவ ளும் ஓடினள். அந்த ஓட்டல், சாரங்கராஜனின் படிப்புக்கு உறுதுணை நின்றது. தாயையும் மகனையும் பிரித்த காலம்,

அவனையும் அவனுடன் பி. ஏ. என்னும் இரண்டெழுத்துப் பட்டத்தையும் சேர்த்தது. பட்டம் வீசி விளையாடும் பிஞ்சுச் சிறுவனைப்போல் அவன் மகிழ்வின் நிழலில் துள்ளிய நாட்கள் எத்தனையோ? அந்த ஆட்டத்திற்கும் பாட்டத்திற்கும் ஓர் அர்த்தம் இருக்கும் இரகசியத்தை அறியும் வாய்ப்பு பெற்றவளுக்குக் கிட்டத்தான் செய்தது. பாவையின் கதையைக் கேட்டாள்; பூவையின் தந்தையின் படத்தையும் பார்த்தாள். வரவிருக்கின்ற மருமகள், தன்னை ஏய்த்தவனின் அருமந்த புதல்வியாக இருப்பாளென்று அவள் எங்ஙனம் எதிர்நோக்கி யிருக்கக்கூடும்?

வேலை ஏற்க ரெயில் ஏறினான் மகன்.

அவனை அனுப்பிய மறுவாரம், அவனுக்கு 'ஆணை' ஒன்றையும் அனுப்பினாள் தாய்!

சாரங்கராஜன் தட்சணமே திலகவதியை மறந்துவிட வேண்டுமாம்!...

* * *

தலை விரித்தாடிய வஞ்ச உணர்ச்சி, பொங்கிப் பிரவகித்து ஓடிய புத்திர வாஞ்சையை ஜீரணிக்க முடியாமல் திண்டாடிக்கொண்டிருந்தது!

கங்குலும் ஆந்தையும் அந்தரங்கம் பேசுகின்ற நேரம்.

இன்னமும் அலமேலு அம்மாள் தூங்கவில்லை. மலையெனக் கனத்துக் கிடந்த கபால வெளியின் அழுத்தத்திற்கு இடைவேளை அமைதியேனும் கிட்டாதா என்று ஏங்கித் துவண்ட சமயத்தில், ஏதோ ஒரு நினைவுத் துணுக்கு, உடைந்த 'ஓட்டாஞ்சல்லி'யாக நெஞ்சத்தைக் குத்திற்று.

பிஞ்சுப் பிராயத்தின் அமுதமான இளங்காலை.

அலமேலு அன்றைய வகுப்புப்பாடத்தை சிலேட்டில் எழுதக் 'குச்சி'யைத் தேடினாள். புத்தகப் பையில் இல்லை. கடைசியில் அவள் தன் சிலேட்டுக் குச்சியை நடராஜனுடைய சட்டைப் பையில் கண்டெடுத்தாள். 'முன்னாடி நான் கேட்டதுக்கு, எடுக்கலேன்னு பொய்ச் சத்தியம்

பண்ணினியே?...இப்ப அது...இந்தாப்பாரு, உஞ் சட்டைக் குள்ளே கிடக்குதாக்கும்?' என்று ஆத்திரம் கக்கினுள். தான் எடுக்கவில்லையென எவ்வளவோ மன்ருடியும், அவள் கேட்கவில்லை. அத்துடன் நின்ருளா? அவனுடன் பேசாமல் 'டூ' இட்டு விட்டாள். அவன் பாவம், அழுதழுது முகம் வீங்கிப் போனுன். கடைசியில் மறுதினம், எதிர்வீட்டுப் பையன் ஓடிவந்து '...அலமு, உன் அத்தான் நல்லவன். தப்பு எம்மேலேதான். நான்தான் உங்குச்சியை எடுத்துப் போய்ப் பாடம் எழுதினேன். திருப்பிக் கொண்டாரப்ப நீ வாசலிலே விளையாடிக்கிட்டிருந்தே! ஆனதாலே, யாருக்கும் தெரியாம அதை நடராஜன் சொக்காயிலே போட்டுப்பிட்டு ஓடிப்பிட்டேன்!' என்று செருமினுன். 'பார்த்தியா, பார்த்தியா? இப்பத்தானே உண்மை உனக்குப் புரியுது?...என்ன ஆனுலும், நீ ரொம்ப மோசம்...உனக்கு வீம்பு ரொம்ப... எதையும் லேசிலே நம்பவே மாட்டே!...' என்று தேம்பினுன் நடராஜன்!

காலத்தின் புதை மணலில் அழுந்திக் கிடந்த இந் நிகழ்ச்சி ஏன் இப்போது விசுவரூபம் எடுக்க வேண்டும்?

ஊம், அதை அவள் ஏன் நினைத்தாள்?

வெறி முட்டிய அதிவேகத்துடன் படுக்கையைவிட்டு எழுந்து இறங்கி நடந்தாள் அலமேலு அம்மாள். கால்கள் பூமியில் பாவவில்லை. அச்சம் அச்சுறுத்தியது. நடை விளக்கைப் போட்டாள். ஆறி அவலாகப் போயிருந்த சாப்பாட்டுப் பாத்திரம் அப்படியே இருந்தது. அருகே, கையில் தலைவைத்துப் படுத்துக் கிடந்தாள் வேலைக்காரி. 'அம்மா...நான் சொல்றேனேன்னு கோவிச்சுக்கிட மாட்டீங்களே?...உங்களை அந்த ஆம்பிள்ளை ஏமாத்தினுர் என்கிறதுக்காக, பாவம், மனசு ஒத்துப்போன சின்னஞ் சிறுசுகளை நீங்க ஏமாத்துகிறது தருமமா, அம்மா!' என்று வேலைக்காரி 'ஹிதோபதேசம்' செய்யப்போக, அவள் கன்னம் பழுத்தது தான் கண்ட பலன்!

அலமேலு அம்மாளை இனம் பகுக்கமுடியாத வேதனைக் குமைச்சல் வாட்டி வளைவெடுத்தது. நடந்தாள். சாரங்கராஜனின் கடிதம் காட்சி தந்தது.

"அம்மா அவர்களின் பாதங்களுக்கு அநேக கோடி நமஸ்காரம்.

நான் இதய பூர்வமாக நேசித்துவந்த திலகவதியை நான் திருமணம் செய்துகொள்ளக்கூடாதா?...உங்கள் ஆணை என்னை நடைப்பிணமாக்கி விட்டதே!...

அம்மா! பத்து மாதம் சுமந்துபெற்ற தங்கள் ஆணையே என் கடமை. இதை நான் உணராதிருக்க மாட்டேன்!... என்னுள் வாழும் திலகவதியின் நினைவு என்றேனும் என்னை வாழ வைக்காதா? அதுபோதும். மற்றப்படி, எனக்காக 'பெண் பார்க்கும் சிரமம்' தங்களுக்கு வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தங்கள் மகன்,
சாரங்கராஜன்.

அஞ்சல் சேவகன் ஓர் உறைக் கடிதத்தினை உள்ளே வீசிச் சென்றான்.

அலமேலு அம்மாளுக்கு இது தெரியும். ஆனால், அவளால் எழுந்திருக்கத் தெம்பு இல்லை. அனல் பறந்தது உடம்பில். வேலைக்காரி வாங்கி வந்திருந்த மருந்து அப் படியே இருந்தது. அவளுக்கு ஒரு சபலம் உதித்தது. 'ஒரு வேளை, சாரங்கன் மனசுமாறி, என் இஷ்டப்படியே பெண் பார்க்கிறதுக்குச் சம்மதம் அனுப்பி யிருப்பானோ? கடவுளே!...'

அலமேலு அம்மாளின் தளர்ந்த கைகளில் இருந்த கடிதத்தின் மேலுறையில் சாரங்கராஜனின் முகவரி இருந் தது. அவளுக்குச் சப்த நாடிகளும் அடங்கிவிட்டாற் போலிருந்தது. கண்கள் கலங்கின, அவசரம் அவசரமாக, கடிதம் சட்டை உரித்துக்கொண்டு, ஆஜராயிற்று!

"ஸ்ரீ சாரங்கராஜன் அவர்களுக்கு, நமஸ்தே!

என்னைத் தாங்கள் திருமணம் புரிந்துகொள்ள தங்க ளது அன்னையார் ஒப்பவில்லை என்பதைத் தெரிவித்த

தங்கள் தபால் கிடைத்தது. என் தகப்பனாரும் அதைப் படித்துப் பார்த்தார். மனம் ஒப்புதல் இல்லாத இடத்தில் என் வாழ்வு உள்ளடங்கிவிட என் அப்பா விரும்பவில்லை. ஆகவே, நம் காதலும் கனவும் சிதைய வேண்டியதுதான் போலும்! சொர்க்கத்தில் கலியாணம் நிச்சயிக்கப்படுவதாக நாம் படித்த ஒரு இங்கிலீஷ் பாட்டை நாம் அடிக்கடி பாடிப் பாடி மகிழுவோமே? இப்போது, சகலமும் கனவுதானா? தவறு என்பேரில் இல்லை; மன்னியுங்கள். இக்கடிதம் கூட, என் தந்தையாருக்குத் தெரியாமலே எழுதலுற்றேன். நீங்கள் ஊர்போய்ச் சேருமுன்னே நேரில் சொல்ல நினைத்தேன். அதற்குள் தாங்கள் புறப்பட்டு விட்டீர்கள். இக்கடிதத்தைப் படித்தானதும் தயவுசெய்து கிழித்தெறியுங்கள்.

இப்படிக்கு,
திலகவதி.

அலமேலு அம்மாளின் புறவெளிப் பார்வை மங்கி மழுங்கிவிட்டது. புவனம் சுழன்றது. பூகம்பம் அதிர்ந்தது. எரிமலை புரண்டது. காட்டு வெள்ளம் பொங்கிற்று. 'என் மகன் சாரங்கன் பட்டணத்தைவிட்டு இங்கே வந்திட்டானா? ...எங்கே வந்திருக்கான்?...அப்படின்னா, அவன் பட்டணத்திலே இல்லையா?...எங்கே போனான்...என் ஆணை நிஜமாவே அவனைப் பைத்தியமாயடிச் சிருச்சா?...மெய்யாகவே அவன் நடைப் பிணமாயிட்டானா?...தம்பி...சாரங்கா!... உன்னை நான் திரும்பப் பார்க்கிறத்துக்குக் கொடுத்து வச்சிருப்பேனா, சாரங்கா!...தெய்வமே, என் ஒரே மகனைக் காப்பாத்தித்தா!...''

'போட் மெயில்' தஞ்சைக்கும் சென்னைக்கும் இடைப்பட்டிருந்த தூரத்தைத் துண்டித்தது.

சாரங்கராஜனின் கடிதத் தலைப்பில் இருந்த விலாசத்தைக்கொண்டு, அவ்விடத்தை அடைந்தாள் அலமேலு அம்மாள். அவளுடன், அவர்கள் வீட்டுக் கணக்குப் பிள்ளையும் தொடர்ந்து வந்திருந்தார். அது ஒரு லாட்ஜ். சாரங்கராஜன் அவ்விடத்தைக் காலி செய்துவிட்டு ஊர் சென்று

விட்டதாகவே செய்தி கிடைத்தது. அழுது புலம்பினுள் அலமேலு அம்மாள். 'கடைசிப் பட்சமாக, திலகவதியை ஒருமுறை கண்டு, விவரம் ஏதானும் தெரியுதான்னு பார்க்கலாம்' என்று ஓர் ஆவல் தளிர்விட்டது. எழும்பூரிலிருந்து தியாகராய நகரம் சென்றுர்கள்.

அந்தப் பங்களா முகப்பில் அப்படிப்பட்ட ஒரு காட்சியைக் காண்பாள் என்று அலமேலு அம்மாள் துளியும் நினைத்திருக்கவில்லை.

நடராஜன் வாசலிலேயே நின்றுகொண்டிருந்தார்.

அலமேலு அம்மாளுக்குக் கண்ணீர் தத்தளித்தது. 'அத்தான்!'

அவள் திரும்ப யத்தனம் செய்தாள்.

நடராஜன் அவர்கள் அலட்டினுர்.

"அலமு, செளக்யமா இருக்கிருயா?..."

"ம்!" விம்மல்.

வெள்ளைப்புடவை அவள் செளக்கியத்தை எடுத்துரைத்ததோ?

"இன்று உனக்குத் தபாலில் அனுப்பவேண்டுமென்றிருந்தேன். உன்னையே ஆண்டவன் நேருக்கு நேராகச் சந்திக்கச் செய்துவிட்டார். இது என் மகளின் கல்யாணப் பத்திரிகை. வா, உள்ளே போவோம். வாங்க ஐயா!..." என்றுர் நடராஜன்.

அலமேலு அம்மாள் அந்தத் திருமண மடலை ஆழப் பதிந்த நோக்குடன் பார்வையிட்டாள். மறுகணம், அவள் நெஞ்சுருகக் கதறினுள். "அத்தான், அந்த நாளையிலே நீங்க சோதிச்சது போதாதா? இப்பவும் என்னைச் சோதிச்சுப்பிட்டீங்களே?...என் வைராக்கியம் எம் மகன் வாழ்வைக் குலைச்சுப்பிட்டுதே?...என் மனசு திருத்தி, உங்க காலிலே விழுந்து எப்படியும் எம் மகனுக்கு உங்க பெண்ணைக் கட்டி வைச்சுப்பிட வேணும்னுதான் ஓடோடி வங்

தேன்!...கடைசியிலே, எல்லாமே நிலைமாறிப் போச்சு! என் ஒரே மகனையும் காணோம்!...நீங்களும் வேறே மாப்பிள்ளையைப் பார்த்துத் தேதி வச்சுப்பிட்டீங்க?...ஈஸ்வரா!..."

அலமேலு அம்மாள் மயங்கிச் சுருண்டு விழுந்து விட்டாள்!

* * *

தண்ணவன் ஒளி புல்லிக்கோலம் புனைந்துகொண்டிருந்தது.

"அலமு!..."

"..."

"அம்மா!...அம்மா!..."

அலமேலு அம்மாளின் விழிகள் இமைக் கோட்டைகளை உடைத்துக்கொண்டு விழித்தன.

"அம்மா!...அம்மா!"

"ஆ...நான் கனவு காணலையே?...தம்பி, சாரங்கா!... மகனே!...சாரங்கா!...

அன்னையின் விழிநீரைத் துடைத்தான் மகன்.

"நான் உன் கண்ணீரைத் துடைக்க முடியாத பாவியாகிட்டேனேடா, தம்பி!"

அவள் மறுபடியும் கண்களை உருட்டி உருட்டி விழித்தாள். "இன்னமும் நான் இந்த வீட்டிலேயா இருக்கேன்?" என்று கூச்சலிட்டாள். சுற்றிலும் இருந்த மருந்துகளைத் தட்டிவிட்டாள். "தம்பி! இப்பவே புறப்படு...ஊருக்குப் போகலாம்" என்றாள். கீழே பாதங்களைப் பதித்தாள். அப்போது அவள் பாதத்திடைப்பட்டுக் கிடந்தது அந்த அழைப்பு. விம்மல் வெடிக்கும் சத்தத்துடன் அதை மீண்டும் எடுத்தாள். அடுத்த விநாடி, அவள் "அத்தான்" என்று கூப்பாடு போடலானாள்.

அழகின் திருவுருவமாய் உருமாறித் திகழ்ந்த திலகவதியின் பிடியில் அவள் அகப்பட்டாள்!

"அத்தான், என்னைப் பிழைக்க வச்சிட்டீங்க!...நீங்க கடவுள்!"

"அலமு, முன்னடி நம்ம ரெண்டு பேரையும் விதி பிரிச்சது. இதுதான் சத்தியம்! ஆனா, நீ நம்பல்லே!...அந்த ஆத்திரத்திலே, உன் மகன்கிட்டே நீ ஆணை இட்டே!...எப்படியோ, நான் எதிர்பார்த்த மாதிரி உன் மனசு திரும்பிச்சு! ...இந்த மாறுதல் ஏற்படணுமேன்னு நான் வேண்டாத தெய்வம் கிடையாது, அலமு! உன்னைப் புரிஞ்சுக்கிட்டவன் இல்லையா நான்?...நம் கனுதான் பலிக்கலே! நம்ம குழந்தைகளோட ஆசைக் கனவாச்சும் நிறைவேறப் போறதே! அதுதான் அலமு, எனக்கு நிம்மதி!...எனக்கு மட்டுமா, உனக்குந்தான்!..." நடராஜனின் தோள்துண்டு கண்களை அடைந்தது.

அந்த இரண்டாவது திருமண அழைப்பு:

மணமகன்: சிரஞ்சீவி சாரங்கராஜன்.

மணமகள்: சௌபாக்கியவதி திலகவதி.

வேனில் விழாவன்று, ரதி—மன்மதனின் மானஸீகத் திருவிளையாட்டில் பங்குகொள்ள விழைபவர்கள் போன்று, அழகே அமைப்பான அச்சுப் பதுமைகளாகத் திகழ்ந்தார்கள் சாரங்கராஜனும் திலகவதியும்!

"அலமு, ஒரு விஷயம். நம்ப குல வழக்கப்பிரகாரம் இதோ மோதிரம்—கைப்பிடி மோதிரம்...இதை உன் கையாலே என் மாப்பிள்ளை கைவிரலிலே போடு!"

நடராஜன் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்.

# மனோரஞ்சிதம்

டெலிபோன் அழைத்தது.

"ஹலோ! யார் பேசறது? ஓ, வாணியா?...ஆமாம், நான்தான்...உன் அத்தான்தான் பேசறேன்...! இதோ வீட்டுக்குத்தான் புறப்பட்டுக்கிட்டிருக்கேன்!...நீ இப்போதே டிரஸ் பண்ணிக்க ஆரம்பிச்சுடு. அப்பத்தான் நான் வந்து சேர்றதுக்கும் நீ புறப்பட்றதுக்கும் சரியாக யிருக்கும்! அடடே, கோபம் வந்துவிட்டதா? சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன், வாணி! என்ன, ஷீபான் ஸில்க்தானே? பேஷ்! ஆர்கண்டி சோளியா? ரொம்பப் பொருத்தம்; ரொம்பப் பொருத்தம்! மினர்வாவுக்கு...! படத்தின் பெயரை மறந்திடாதே! ஒரு பெண் இரட்டை வேஷத்தில் இருவேறு குணச் சித்திரப் பாத்திரமாக நடிக்கிறாளாம். நண்பர்கள் சொன்னார்கள். இதோ, இன்னும் அரைமணியில் நான் வாணி விலாசத்தில் இருப்பேன். ஆமாம், வாணி! நீதானே நான்! நான்தானே நீ? ஓ, கே!"

ரிஸீவர் தன் இடத்தில் மோனத்தவம் இருந்தது. எழுந்த மணி ஓசையின் மெல்லிய அலையில் வாணி சற்றுமுன் சிரித்த சிரிப்பு மிதந்தது; எதிரொலித்தது. சிரிப்பில் வாணி உருவெடுத்தாள். பெண்கள் பாக்கியசாலிகள். சிரிக்கத் தெரிகிறது; சிரிக்க முடிகிறது. அவர்கள் இல்லையென்றால்,

உலகத்திலே சிரிப்பே தோன்றியிராதோ...? இல்லை. உலகமேதான் தோன்றியிருக்காதோ?

முகுந்தனுக்குச் சிந்திக்கத் தெரியாது; அதற்கு அவசியமும் கிடையாது. அவன் அப்படி; அவனுடைய வேலை அப்படி. மாதாமாதம் தலைவலி மருந்துச் செலவு மிச்சம் தான். அப்படித்தான் அவன் எண்ணியிருந்தான். பின், எப்படி இந்த எண்ண அலைகள் பிறக்கின்றன? ஏன் பிறக்கின்றன? அவனுக்கு மண்டை ஓடு சூடேறிவிட்டது.

மேஜைமீதிருந்த கண்ணாடித் துண்டில் அவன் முகம் துலாம்பரமாகத் தெரிந்தது. 'டை'யைச் சரி செய்துகொண்டான். 'பைல்' ஒன்று அவன் கையில் இருந்தது. புறப்பட்டான்.

"தாரா"

"......"

"தாரா"

மெல்லிய அழுகைச் சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது—பெண்! யார் அது?—ஹேமாவா? பூமாவா? அல்லது தாராவேதானா?

மங்கையருக்கு இந்தக் கண்ணீர்தானுமே பொறுமையைப் போதிக்கிறதாம—உங்களுக்குத் தெரியுமா?

"தாரா!"

அழைப்பு தூது சென்றது. அழைத்தவன் தூது சென்றான்.

தாராவின் கருவண்டுக் கண்களிலே கண்ணீர்த் துளிகள் சிரித்தன. சிரித்தனவா? சிந்தித்தன—சிந்திக்க வைத்தன—அவளையல்ல—அவனை. அவனுக்குச் சிந்திக்க வேண்டிய தலையெழுத்து இல்லை என்றேனே! ஒருவேளை அந்தத் தலையெழுத்தையே சிந்திக்க வைக்கப் போகிறாளோ?

ஆம்!

வாணியிடம் சற்றுமுன் பேசினுனே, அந்த வார்த்தைகள் கூக்குரலிட்டன: 'ஆமாம், வாணி! நீதானே நான்! நான்தானே நீ!'

முகுந்தனின் பெருமூச்சுக்கு உறவு முறை இனி எதற்கு?

தாராவின் பெருமூச்சு அவன் நெஞ்சடியில் முட்டி மோதியது.

அவள் கையில் டவல் இருந்தது. சோப்பு டப்பா வேறு.

"போய்விட்டு வா"

அவனுல் அடுத்த அடி பெயர்த்துவைக்க முடியவில்லை.

தாரா மீண்டாள். சோப்பு நுரையில்தான் அழகு ஒளிந்துகொண்டிருக்க வேண்டும். அவள் அவனை வெறிக்கப் பார்த்தாள், ஊமையாக. அழகியின் முன் பெரிய வக்கீல்கூட ஊமையாகப் போய்விட வேண்டுமாம். இப்பொழுது அழகியே ஊமையாகி விட்டாளே! அவளுக்குக் கண்கள் பொங்கி வந்தன.

"உனக்கு இன்னம் வேலை இருக்கா? மணிதான் ஐந்தாகப் போகுதே? உடல்நிலை சரியில்லையானுல் வீட்டுக்குப் போய் ஓய்வு எடுத்துக்கொள்ளேன். நாளைக்கு வந்ததும் அந்த பாலன்ஸ் ஷீட்டை டைப் பண்ணிவிட்டால் தீர்ந்தது!"

"ரொம்ப நன்றி, ஸார்!"

"போய் வர்றேன், தாரா"

"நல்லதுங்க"

அந்தியில் அவள் நிழல் சிறுகச் சிறுகத் தேய்ந்து கொண்டிருந்தது.

சூழ்ந்திருந்த மயான அமைதி முகுந்தனை விரட்டியது. மூன்றும் மாடியிலிருந்து பாய்ந்தோடினுன்.

'கெடிலாக்' புறப்படவிருந்த சமயத்தில், மழை புறப் பட்டுவிட்டது. எட்டிப் பார்த்தான். கண்ணாடிக் கதவுக்கு நந்தியாக நடிக்க மனமில்லை. டம்பப் பையும் கையுமாக தாரா நின்றிருந்தாள்.

இரக்கம் ஒரு விலங்கு—அல்ல. அது ஒரு சிலந்தி வலை. எங்கோ படித்ததை ஏன் அவன் எண்ணிப் பார்த்தான்? அதே சடுதியில் ஏன் அதை மறக்கவும் யத்தனம் செய் தான்?

"தாரா, மழை வேறு வந்துவிட்டதே?...என்னுடன் காரில் வருகிறாயா?...உன்னை மயிலாப்பூரில் கொண்டு விட்டு விட்டு அப்புறம் அடையாறு போய்க் கொள்கிறேன். அது தானே எனக்கு வழியும்கூட?..."

அவள் சிரிப்புக்கு இணக்கம் என்று அர்த்தம்.

மழைச் சரங்களினூடே கார் பறந்தது. புஷ்பக விமான மாக. தெரு விளக்குகளின் அடியிலேயே வெளிச்சத்தைப் பிரித்துக் காட்டியவாறு இடைநின்ற தெருக்கள் விடை பெற்றுக் கொண்டன. நடைபாதை வாசிகள் தம்பதி சமேதராகப் பின்னிப் பிணைந்து கிடந்தனர். அவனுக்கோ, அவளுக்கோ அவர்களைப்பற்றி அக்கறை கிடையாது. ஆனால், அவர்கள் அவனைப்பற்றி, அவளைப்பற்றி அக்கறைப் பட்டார்கள். பேச்சு வளர்ந்தது. 'ஏ பொண்ணு! என்ன அப்பிடிப் பாத்துக்கிணே நிக்கிறே? பாவம், ஒங் கொள்ளிக் கண்ணு அவங்கமேலே வுளுந்திடப் போவுது...புதுக்கண் ணாலம் போலே!...'

கார் திரும்பியது. அவனுடைய இடதுகைக் கடிகாரத் தில் அவளுடைய வலதுகை மோதிரம் உரசி விட்டது. கார் நின்றது. சைனாபஜார் நின்றது. புஹாரி முகமன் சொன்னது.

"சாயா இரண்டு!"

எதிரும் புதிருமாக பாதரஸ விளக்கில் மிதந்தார்கள். 'டை' எம்பி விழுந்தது. நைலான் புடவையைவிட்டு வெளி யேறத் துடித்த வண்ணாத்திப்பூச்சிகள் எம்பிஎம்பிச் சிற

கடித்துப் பறந்தன. விசைக்கதவுக்குக் குறும்பு ஜாஸ்தி. 'குடும்ப அறை' என்ற எழுத்துக்களைக் காட்டியது.

சிகரெட்டின் ஒரு முனையில் நெருப்பும், இன்னொரு முனையில் முட்டாளும் இருப்பதாகச் சொன்னானே, யாரோ ஒருவன் !

கபாலீஸ்வரர் ஆலயத்தில் புனிதம் இருந்தது. முகுந்தன் கும்பிடக் கைகளைத் தூக்கினான். நடுங்கின. நல்லவேளை பிழைத்தான். கார் ஓடிக்கொண்டிருந்தது.

"நீங்களும் வாணியும் தானே இன்றைக்குப் படத்திற்குப் போகப் போகிறீர்கள். அத்தான்?"

"ஆமாம்"

"உங்கள் இரண்டு பேருக்கென்றுதான் பிடித்த மழையும் நின்றுவிட்டது.

"ம்......"

"அத்தான், நான்கூடப் படத்துக்கு வரட்டுமா?"

"ஓ! வாயேன்? ஏன், நீயும் நானும் இப்படியே திரும்பி விடுவோமா?"

"ஓ...!"

"ஓ. கே!"

இரு ஜோடிக் கண்களுக்கு அப்படி என்னதான் மாளாத பேச்சோ!...முகுந்தன் காயகல்பம் சாப்பிடவில்லை. சிறுவன் ஆனான். மணல்வீடு தோன்றியது. அப்போது அவன் உள்ளத்தில்—உடலில் வித்திடப்பட்ட ஓர் இன்ப வெறி—

"தாரா!"

"அத்தான், அத்தான்! காரை நிறுத்துங்கள். நான் இங்கேயே இறங்கிக்கொள்ள வேண்டும். தலைவலி தாள முடியல்லே. குட் நைட், அத்தான்!"

வாணி விலாசத்திற்கு வந்து தான், முகத்தில் புது வெள்ளமாகப் பெருகிய வியர்வையை துடைத்துக்கொண் டான் முகுந்தன்.

"வாணி! வாணி!"

"இதோ வந்திட்டேன், அத்தான்!"

'கெடிலாக்'கின் பின் ஆசனத்திலிருந்து எழுந்து, கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள் வாணி!

உலகம் பொல்லாதது!

* * *

காதல் பொல்லாதது!

'காதல்' என்றால் என்ன அர்த்தமாம்?

'காதலைத் தொடங்கும்போது ஒருவன் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்கிறான்—முடிக்கும்போது மற்றவர்களை ஏமாற்றுகிறான். இதைத்தான் உலகம் காதல் என்று பெய ரிட்டு அழைக்கிறது!'

புரட்டு!

'...காதல் என்பது ஒரு ரப்பர் பலூன், காற்றை நிரப்ப நிரப்ப அது அழகாகத் தோன்றும். நன்றாக உப்பும். ஆனால் அது எப்போது உடையும் என்பது மட்டும் நிச்சய மில்லை!...'

நிஜம்தானா?

'காதல் சோம்பேறிகளின் தொழில். சுறுசுறுப்பு மிக்க வர்களையும் சோம்பேறிகளாக்கி விடும்.'

வாஸ்தவந்தானா ?

'காதலர் இருவர் பரிபூர்ணமாக அறிந்தபின், இருவர் ஆத்மாவும் அறிவும் உடலும் ஒன்றுகலந்து மலர்வதுதான் இலட்சியக் காதல். அத்தகைய காதல் துன்பத்திலும் இன்பத்திலும் நோயிலும் தேகாரோக்கியத்திலும், உலகின் எந்தத் தாக்குதல்களாலும் இணை பிரியாதது!'

அப்படியா?

வாழ்க்கையிலே காதலில் வெற்றி கண்டவர்களுக்கு அது ஒரு பூலோக சுவர்க்கம்; தோல்வி அடைந்தவர்களுக்கு அது ஒரு நரகக்குழி!

பொய்! பொய்! பொய்!

முகுந்தனுக்கு உலகம், வாழ்க்கையெல்லாம் அப்பொழுது நரகக்குழியாகத்தான் தோன்றியது.

அழகுக்குப் பதவுரை சொல்லும் ஆருயிர் மனைவி இருந்தாள். எம்.ஏ. பட்டத்திற்குப் பலன் சொன்ன அந்த இங்கிலீஷ் கம்பெனியின் மானேஜர் பதவி இருந்தது. 'கெடிலாக்' இருந்தது. வாணி இருந்தாள், அன்பு மனைவியாக. எல்லாம் இருந்தது—ஆனால், காதல் இல்லை...! தாரா இல்லை.

சூன்யம் நையாண்டிச் சிரிப்புச் சிரித்தது. பெண்கள் மணவறையில் அமரத் துடிப்பார்கள். ஆண்களோ, திருமண வினையினின்றும் எவ்வளவு தூரம், எவ்வளவு காலம் விலகிவிட முடியுமோ, அவ்வளவுவரை விலகியே யிருப்பார்கள்!

தாரா!

அவள் அவனுடைய உரிமைப் பெண். பிஞ்சுக் கரங்கள் கட்டிய அன்பு மணல் வீட்டை காதல் அத்தாணி மண்டபமாக நிர்மாணித்துவிட வேண்டுமென்று பொழுதெல்லாம் கனவு கண்டார்கள். ஒரே கல்லூரியில் கூட்டுப் படிப்பு-எம். ஏ! காதல் என்ற ஒன்றே அவர்களது தாரக மந்திரமாக அமைந்தது. வாழ்க்கையையே காதலாக்கி விடப் பார்த்தார்கள். காதலையே வாழ்க்கையாக்கிவிடத் துடித்தார்கள். காதலில் தோற்றவன் உளறிக் கொட்டிய கவிதைகளை, எண்ண அலைகளைத் தேடிப்பிடித்துக் கிழித்தெறிந்தார்கள். காதலில் வெற்றி கண்டவனின் அனுபவ மொழிகள் அவர்கள் வரை பொன் மொழிகளாயின. திருமண நாள் வந்தது—ஆனால், திருமண வேளை வரவில்லை. முகுந்தன்—தாரா இருவரும் தம்பதியானால், அவர்களில் ஒருவர் இன்னொருவரை வெகு சீக்கிரமே இழந்துவிட நேரிடுமாம்!—காதல் தோற்றது. தோற்கடிக்கப்பட்டது.

வாணி:—கானலாகி விட்ட அவனுடைய வாழ்வின் அன்பூற்ருகத் தோன்றினுள். இனிய பாதி—உயிர்த் துணை —மனை விளக்கு போன்ற முத்திரைகள் அவள் தாலிச் சரட்டில் மின்னின.

முதல் இரவு வந்தது. "வாணி, நீ என் மனைவி. என்னுடன் இரத்தத்தோடு இரத்தமாக, உயிரோடு உயிராக, உணர்வோடு உணர்வாகப் பின்னிப் பிணைந்திருக்க வேண்டியவள்—நீ என் மனைவி, உயிர், உலகம்! இது என் இரண்டாம் காதல். கலியாணத்திற்குப் பிறகுதான் சிலருக்குக் காதல் கனியுமாம்—நாம் இந்த ரகம். உன்னிடம் நான் எதையும் மறைக்க விரும்பவில்லை. என் முதற் காதல் தோற்றுவிட்டது. மறந்துவிட மாட்டாயே?—நீதான் நான். நான்தான் நீ...!"

வாணி புதுமைப் பெண்.

அவள் படித்திருந்தாள். 'ஒரு பெண் தன் புருஷனை வசீகரிப்பதில் தாசியாகத் தன்னை ஆக்கிக்கொள்ள வேண்டும்' என்பதை.

அவன், அவளுள் இரண்டறக் கலந்தான்.

என்ருே ஒருநாள், தாரா வந்தாள். உருவம் தெரிந்தது; திகைத்தான். முதற் காதல் கண்ணீர் விட்டது. அவள் வேலை வேண்டுமென்ருள். 'ஸ்டெனோ டைப்பிஸ்ட்' ஆனுள். ஆபீஸ் விவகாரங்கள் எல்லையிலேயே 'சுபம்' கூறின.

அன்றைக்கு அழகி தாராவின் மோதிரமும் முகுந்தனின் கைக்கடிகாரமும் கைகுலுக்கி கொண்டபோது—? ஒரு சில கணப்பொழுதிலே, ஒரு பெண் நீண்ட காலத்திய உணர்ச்சிமயமான வாழ்க்கையை வாழ்ந்துவிட முடியும். தாராவுக் கென்று—முகுந்தனுக் கென்று எழுதப்பட்ட எழுத்து?—தாரா ஏன் விம்மினுள்?—உணர்ச்சி வசப்பட்டவர்களுக்கு வாழ்வு ஒரு சோக நாடகமா?

அன்று, திட்டமிட்டிருந்த திரைப் படத்திற்குத் தன் உயிரின் மறு பாதியை அவன் சமாதானப்படுத்தி அழைத்

துச் செல்வதற்குள், அவன் பட்டபாடு சொல்லத் தரமல்லவே?—"வாணி, மனம் சலனமடைந்ததென்னவோ வாஸ்தவந்தான். ஆனால், நான் உன்னுடைய உரிமை என்பதை ஒருபோதும் மறக்கமாட்டேன். நான் உன்னைவிட்டு ஒரு நாளும் பறிபோக மாட்டேன். என்னை நம்பு, கண்ணே! இது ஆணை!"

அன்பு பயம் செறிந்தது.

* * *

வாழ்க்கை பயம் செறிந்தது!

வாணிக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டது. நோய்க்குப் பெயர்வைக்க டாக்டருக்கு ஆள் போயிருந்தான். கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டமாதிரி இருந்தது முகுந்தனுக்கு. அழ வேண்டும் போலிருந்தது. வாணியின் தங்கமேனியில் நெருப்பு மூட்டம் போடப்பட்டிருந்தது. பத்தரை மாற்றுத் தங்கம் உருகி வழிந்தோடிக்கொண்டிருந்தது.

காட்டிலிருந்து திரும்பிய ராமர், சீதையைத் தீக்குழியில் இறங்கச்சொல்லி, அவளுடைய புனிதத்தைப் பரீட்சை செய்தாராமே?—வழிநெடுகக் கதைத்துக்கொண்டு சென்றவனின் வாய்மொழி அவன் காதுகளை ஏன் முற்றுகையிட வேண்டும்?

'என் வாணி சொக்கத் தங்கம். நான் அவளுக்கு ஏற்ற கணவன்தானா என்பதைப் பரீட்சிக்க அவளல்லவா எனக்குச் சோதனை நடத்தவேணும்?...'—தன்னுள் தனதாக, தானே—தானாக—எண்ணமே அவனாக—அவனே எண்ணமாக, மனச்சாட்சியாக, மனிதத் தன்மையாகச் சுழன்றான்; கனன்றான்; கதறினான்.

இடதுகையில் கடிகாரம் இழைந்திருந்த இடம் சுட்டது. தீக்குச்சியைக் கிழித்து அந்த இடத்தைப் பொசுக்கிவிடத் தான் துடித்தான். ஆனால், வாணி அவன் மீதல்லவா தன் அன்புப் பார்வையை வலைவீசியவாறிருக்கிறாள்? நோயின் வேதனையை மறக்க முடிந்ததுபோலும்!

பொங்கி வந்தது கண்ணீர். அவள் பார்த்துவிடலாகாதேயென்று முகுந்தன் எதிர்ச் சுவர்ப்பக்கம் திரும்பிக்

கொண்டான். அவர்களது திருமணப் புகைப்படம் இருந்தது. தேதி—30, ஜனவரி, 1953. பெண் மனத்துக்கும் ஆண் மனத்துக்கும் மூன்று முடிச்சுகள் போட்டுக்கொண்ட புனிதவேளை நினைவில் ஓடியது. யாரோ ஒருத்தியாக மனை புகுந்து, தன் உரிமையாக மனம்புகுந்த மனைவிளக்கை அவன் போற்றாத வேளையுண்டா? புகழாதபோதுண்டா?—சக்தியுள் சிவமாகி, சிவத்துள் சக்தியாகிவிட்டவர்கள்!

வாழ்க்கை புதிராகத்தான் இருந்தது. ஆனால், அவன் வரை வாணி புதிராக அமையவில்லை. பெண் புதிராம், புதிர்! பெண்ணைப் புரிந்துகொள்ள முடியாதவன் உளறிக் கொட்டிய பொய்—பச்சைப்பொய் இது! அப்படியென்றால், அன்றைக்கு, அவன் தாராவைக் காரில் கொண்டுபோய் விட்டுத் திரும்புகையில், காரினின்றும் அவன் துணைவி வாணி இறங்கி வந்தாளே...?

அந்த ஒருநாள்—

"வாணி"

"......"

"கோபமா, வாணி!"

"ஊஹூம்!"

"பார்த்தியா, ஏன் கோபப்படணும்னு ஒரு வார்த்தை கேட்கக் காணோமே?"

ஏனும்?"

"தாராவைக் காரில் கொண்டுவிட்டுத் தாமதமாக வந்ததுக்கு...?"

"அதிலே தவறில்லையே?"

"சரி, நீ ஆபீசுக்கேயா வந்திட்டே?"

"ஆமா. என்னத்துக்கு இரட்டிப்பு வேலைன்னு நான் டாக்ஸி பிடிச்சு வந்து இறங்கிட்டேன். தம்புச் செட்டித் தெருவுக்கும் மினர்வாவுக்கும் ரொம்பத் தூரமா என்ன?...

வந்தவள், நம்ப காரிலேயே பின் ஸீட்டிலே உட்கார்ந்தேன். கூர்கா உங்ககிட்டே சேதிசொல்ல ஓடிவரத் துடிச்சான். உங்களுக்கு ஆபீஸ் நேரத்திலே தொந்தரவு தரக்கூடா தேன்னுதான் இப்படி நடந்துகிட்டேன். நீங்க வந்தீங்க. என்னைக் கவனிக்கல்லே. சின்ன தமாஷ் ஒண்ணு பண்ண லாம்னு கடுதாசியிலே ஏரோப்ளேன் பண்ணி உங்க தலை மேலே பறக்கவிட ரெடியாயிருக்கறப்போ, அந்தப் பொண்ணு வந்துட்டாங்க. 'கம்னு' அப்படியே நான் உட் கார்ந்திட்டேன். மழை பேஞ்சது. உங்க மனித மனம் ஒத்தாசை செஞ்சது. ஆக, நீங்க ரெண்டு பேரும் மாத்திரம் சாயா சாப்பிட்டீங்க...! ம்!' அவங்க மைலாப்பூரிலே இறங் கிட்டாங்க. நம்ப வீட்டிலே நீங்க இறங்கினதும், என்னைப் பேர் சொல்லிக் கூப்பிட்டீங்க. நான் மூச்சுக் காட்டாமக் கதவைத் திறந்து வெளியே வந்ததுந்தான் குரல் கொடுக்க ணும்னு பத்துத்தரம் நினைச்சிருந்தேன். என் குரல் வரலை யானு, பதட்டப்பட்டுப் போவீங்களேன்னு, நான் குரல் தந்துட்டேன். உங்களுக்கு முகம் வெளிறிப் போச்சு. சந்தர்ப்பங்கள் உதயமாகல்லையானு, அப்பால் வாழ்க் கைக்கே பொருள் தெரியாது; புரியாது. அத்தான், நீங்க வீணு உடம்பை அலட்டிக்காதீங்க. உடம்புக்கு வந்தா, எனக்குப் பொறுக்காது. எனக்கு இது ஒரு கனவுமாதிரி, நான் எப்பவோ மறந்திட்டேனே?''

டாக்டர் வந்தார். "மிஸ்டர் முகுந்தன்! உங்கள் மனை விக்கு மன உளைச்சலினுல்தான் இந்த ஜுரம் வந்திருக் கிறது. அதிர்ச்சிதரும் விஷயம் எதுவுமே ஏற்படாமல் இருந்தால் நல்லது. நீங்கள் கவலைப்பட்டு விடாதீர்கள். இரண்டு மூன்று நாட்களில் குணமாகிவிடும்" என்று உத்தா ரம் சொன்னர். உடற் பரிசோதனைக் குழலும் பாசக்கயிறும் ஒன்றுக்கொன்று எதிரான இரு துருவங்கள் ஆகாதவரை உலகம் பிழைத்துவிடும்.

டாக்டர் காப்பியைச் சுவைத்துப் பருகினுர். முகுந்தனுக் கசந்தது.

"டாக்டர், வாணிக்குக் காப்பி கொடுக்கலாமல்லவா?"

"கூடாது, கூடாது! பித்தம்!"

பித்தம் தெளிய மருந்தாகி வந்தவளுக்குப் பித்தம்!—உரிமை பூண்டவனின் கண்கள் உரிமைக்காரியின் கண்களை ஊடுருவின. கண்களின் கரையில் அமைதிக் கொடி பறந்தது. அவனுக்கு நல்ல மூச்சு வந்தது.

ஒன்பதாம் முறையாக ஒலித்த டெலிபோன் மணி, சூழலின் அமைதியைக் கலைத்தது. மனத்திற்காவது, அமைதியாவது...?

"ஆமாம், சரிதான்! ம்...இன்றைக்கே தபாலில் அனுப்பிவிட வேண்டும். சங்கரனின் கையெழுத்துப் போதும். லண்டனுக்குப் போய் பதில் வரணும்! ம்... வாணிக்கு இப்போது பரவாயில்லை. நன்றி!"

பற்களைக் கடித்தான். தாரா பஸ்பமானாள்!

"அத்தான்"

"ம்!"

"யார் பேசினது?"

"ஆபீஸிலேருந்து"

"உங்க சொந்தக்காரப் பெண் தாராவா?"

"ஊஹும் இல்லே. என்னோட அஸிஸ்டெண்ட்"

"அத்தான், நீங்க போய்ச் சாப்பிடுங்க. மணி மூணுக்கு மேலாயிடுச்சு"

"ஆகட்டும், வாணி! கொஞ்சநேரம் கண்ணை மூடு, கண்ணே?"

"அத்தான், என்ன சொல்றீங்க?"

"ஆ!...தூங்கச் சொன்னேன், வாணி!"

"எனக்கு உயிரே போயிடும் போலிருந்துச்சு..."

"வாணி! நிம்மதியாகத் தூங்கினால்தான் உடம்புக்கு நல்லது!..."

"உங்களுக்கும் நல்லது..."

"ஆமாம்..."

"அப்படியானு. நான் பாயும் படுக்கையுமானது உங்களுக்கு வீண் தொல்லே தானே?..."

"வாணி, ஜுர வெறியிலே ஏதேதோ பிதற்றுகிருயே? எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும். நீ இப்படி கிண்டிக் கிண்டி மறுமுறையும் கேட்டால்!..."

"அத்தான், நீங்கள் என் பக்கத்திலேயே இருக்கிற தாலேதான் எனக்குப் பைத்தியம் பிடிக்காமல் இருக்குது..." உங்களை என் நெஞ்சிலே வச்சுப் பூஜிக்க போன ஜன்மத்திலே நான் ரொம்பப் புண்ணியம் செஞ்சிருக்க வேணும்."

"கண்ணே, உன்மாதிரி ஒருத்தி என் மனைவியாக வர்றதும் என் பூஜாபலன்தான்!"

"அத்தான்!"

"வாணி!"

இரவு வந்தது. நிலவு வரவில்லை.

கண்ணுேடு கண் பொருதவில்லை இருவரும்!

"அத்தான், பக்கத்துத் தெரு பங்கஜத்தை அவள் புருஷன் விலக்கி வைத்து விட்டாராமே...?"

"ஊர்க்கதையெல்லாம் நமக்கு எதற்கு, வாணி? நீ தூங்க மாட்டாயா?..."

"நீங்கள் தூங்குங்கள்...!"

"ஆகட்டும்; முதலில் நீ தூங்கு."

"சரி...! அத்தான், நான் பூவும் மஞ்சளுமாக என்றைக்கும் இருப்பேனல்லவா?..."

"நிச்சயமாக!"

"உங்கள் நிழலில் ஒண்டும் பாக்யம் எனக்கு எப்போதும் கிடைக்குமல்லவா?"

"நிச்சயமாக!"

"என்னை நீங்கள் மறந்திட மாட்டீங்களே?..."

"நீலவானம் நிறைமதியை மறக்க முடியுமா?"

"நீங்கள் ரொம்ப அழகாகப் பேசறீங்க!!'

"நீ ரொம்ப அழகாக இருக்கே!"

"அத்தான், இதுக்கு மட்டும் பதில் சொல்லிப்பிடுங்க. நான் தூங்கிப்பிட்டறேன். உங்கள் மேலே எனக்குள்ள உரிமை என்னிக்கும் திருடு போகாமல் இருக்குமில்லையா?"

"ஆண்டவன் சாட்சியாக, என் பேரிலே உனக்கிருக்கும் உரிமை ஒருநாளும் பறிபோகாது!...உன் காய்ச்சலுக்குக் காரணம் புரிந்துவிட்டது; தாராவை நாளைக்கே வேலையைவிட்டு விலக்கி விடுகிறேன். இனி திருப்தி தானே?..."

இன்பக் கனவுகளின் அடிவாரத்திலே, வாணி ஆனந்தமாக நித்திரை வசப்பட்டுக் கிடந்தாள்.

முகுந்தன், காலடியில் கிடந்த அந்த மோதிரத்தைத் தூர விட்டு வீசினன். 'தாரா' என்ற எழுத்துகள் சிரித்தன —விஷச் சிரிப்பு; போதைச் சிரிப்பு!

காதலுக்கு இதயம் இல்லை.

* * *

காதலுக்குக் கண் இல்லை!

சுட்டிப்பயல் ஓடுவதைப்போல் இந்தோ சிலோன் எக்ஸ்பிரஸ் தன்னை மறந்து, தான் தாங்கிச் செல்லும் ஆயிரமாயிரம் இதயங்களைப் பொறுப்புணர்ச்சியுடன் நினைந்து கொண்டு ஓடிக்கொண்டிருந்தது.

ஆந்தைக் கண்களில் அழகா சொட்டும்? ஆனால், இருளின் கண்களில் அழகு சொட்டியது. வழிந்தது—தழலுக்கே தண்மை சிரிக்கும் பாங்கிலே.

இரண்டாம் வகுப்புப் பெட்டியை அவனால் ரசிக்க முடியவில்லை. அருகில் அவள் இருந்திருக்க வேண்டாமா?— பதட்டப்பட்டு விடாதீர்கள், சுவாமிகளே! அவள் என்றால், அவனுக்கு முன்றானை போடும் பாக்கியம் பெற்றவள்'— உரிமை பூண்டவள்—ஆம், அவள்—அவளேதான்!— வாணி! நாளைத் திரும்பும்போது, இந்தப் பாழும் இருளில் கூட அவன் பூரணநிலவைத் தரிசிப்பான் அல்லவா?

பிரித்து வைத்திருந்த மலரின் ஏடுகள் அவன் கண் முன் ஓடின. அவன் கண்கள் மலரின் ஏடுகளிலே ஓட வேண்டாமா?

ஒரு காக்காய், குருவிகூட அவனுக்குச் சக பிரயாணி யாக—சக பிராணியாக இல்லை. பண வீக்கம் என்று எழுதட்டுமா? பண முடக்கம் என்றே புரியும்படி எழுதிவிட லாமா? இல்லை. மேலை நாகரிகம் 'மௌஸ்' இழந்து வருகிற தென்று அர்த்தமா?—ஏதோ ஒன்று. தொலையட்டும், சனியன்!

ஹோல்டாலில் பதிந்திருந்த கை கடுத்தது. தலையை உயர்த்திக் கொண்டான். காற்று தேவைப்படவில்லை. அணைத்தான்.

"அன்புள்ள அத்தான் அவர்களின் பாதார விந்தங் களுக்கு, அனந்தகோடி நமஸ்காரம். என் உடம்பு முழுவ தும் தேறிவிட்டது. இந்த முப்பது நாட்களும் முப்பது யுகங் களாகி விட்டன. உங்கள் அன்பு நிழலில்தான் நான் உள்ளம் தேறுவேன். என்றைக்குத் தஞ்சை வருவீர்கள்? சீக்கிரம், அத்தான், சீக்கிரம்!

இப்படிக்கு,
உங்கள் அடியாள்
வாணி.

பி. கு:—நினைவிருக்கட்டும்—அகநானூறு.

சிரிப்பினுள் சிந்தை ஒடுங்கினான். சித்தனல்ல— முகுந்தன்! தூக்கம் சொக்கியது. காற்று சுழன்றடித்தது; விம்மி வெடித்தது. தூங்கிப் போனவன் கண் மலர்ந்தான்.

அழகு கொலு வீற்றிருந்தது. வெறுமைக்குப் பிரியா விடை, திரும்பினான். அழகு ரோஜா ஒன்று கண் உறங்கிக் கொண்டிருந்தது. 'இனம்' காண முடியவில்லை. முகம் மடித்து வைக்கப்பட்ட கரங்களில் புதைந்து கிடந்தது. 'ஆராரோ!' பாட ஆசைப்பட்டானோ, என்னவோ? சதி விரதன் என்றால்—

எழுத்துகள் பூதாகாரமாகத் தெரிந்தன: 'உனக்கு மேலே பெரும் அழகா இருக்கேன்னுன். நான் ஒண்ணும் அழகில்லேன்னேன். நீயா, நீயா, நீயான்னு கிட்ட வந்து...'

மலரை மூடினுன். திரும்பிப் பார்த்தான். உடம்பில் சூடு; நெஞ்சில் சூடு; நினைவில் சூடு.

வாணி அன்றைக்குச் சாவின் தலைவாசலில் நின்றபோது கூறினுளே, அதை இப்போது திரும்பவும் நினைவுபடுத்தினுன்: "அத்தான், எனக்கு உள்ள உரிமை என் உயிருள்ள வரை பறிபோவதை—பிறரால் பறிக்கப்படுவதை நான் சகிக்கமாட்டேன். இன்னென்று, நளாயினி கதை எனக்கு இஷ்டப்படுவதில்லை. தன் கணவனின் மிருக இச்சையைப் பூர்த்திசெய்ய வேண்டி, தன் புருஷனை— தீராத நோயாளிக் கணவனை—அவன் விரும்பிய தாசி வீட்டுக்குத் தூக்கிச் சென்றுளாமே? நிலைநிறுத்தப்பட்ட கற்பின் கதைக்குக் கைதொழுகிறேன். ஆனுல் அவள் தன் உரிமையை இழந்ததை...சே! சே!... அத்தான், நீங்கள் என் சொத்து —உரிமை!"

பூகம்பமாக நடுங்கியது உடம்பு.

அழகி புரண்டாள். அழகு வெள்ளம் கால்வாய் கட்டி நுங்கும் நுரையுமாகக் கொப்புளித்துக்கொண்டிருந்தது. யார், தாராவா?

அழகுச் சொக்கட்டானின் தீ நாக்குகள் பராசக்தியாக எரிந்துகொண்டிருந்தன. யார், வாணியா?

கண்களைத் தீட்டிக்கொண்டு பார்த்தான். 'தாரா' என்ற இரண்டெழுத்துகள் பிறைநெற்றியில் ஒட்டப்பட்டிருந்தன. இருபது பேய்கொண்டவன் நிலை அவனுக்கு.

தாராவை வேலையினின்று நீக்கிவிட வேண்டிய நிலையில் வைத்துவிட்டது வாணியின் உரிமைப் போர். அப்பொழுது அவள் நிலவுப் புன்னகையும், காட்டாற்றுக் கண்ணீருமாக விடைபெற்றுச் சென்றதை அவன் ஏன் எண்ண வேண்டும்?

அவன் உடம்பு சாம்பலாக ஆகும் வரை, நினைவை விட்டுப் பிரிவினை பெருத ஒரு சம்பவம் அது. தாராவுக்கும் முகுந்தனுக்கும் பிஞ்சுப்பிராயம். மணல் வீடு கட்டி புருஷன்—பெண்ஜாதி விளையாட்டு விளையாடினர்கள். அப்போது, அப்போது...?

அந்த ஸ்பரிசத்தை, புரியாத சம்பந்தத்தை, நிறைவேற்ற முடியாத பருவத்திலிருந்த வெறியை எண்ணும் போதெல்லாம், வாணியில் தாராவைத் தரிசித்தான் அவன்—பாழாய்ப்போன ஆண் மானம்! ஆனால், இப்போது—?

"தாரா!"

நாக்கின் மேலண்ணத்தில் 'தாரா' ஒட்டிக்கொண்டாள்.

பேய்க் காற்று; பேய் மழை; ஊழிக்கூத்து! ரயில் தடம் புரண்டது. "ஐயோ!"—கோடிக் குரல்கள்!

அடித்துப் போட்டாற்போலக் கிடந்தான் முகுந்தன். அவன் வலது கன்னத்தில் பதிந்திருந்த ஐந்து விரல்களில் ரத்தம் பீறிட்டது.

"தாரா" என்று அழைத்தான். புனிதம் மாருமல் கிடந்தது ரோஜா. அவன கண்கள் அவளைத் துழாவின. "ஆ!" என்று கூச்சல் போட்டான். நெற்றியிலிருந்து கீழ் நோக்கிப் பாய்ந்தோடி வந்த குருதித்துளிகள் ஒவ்வொன்ருக அந்த மஞ்சள் கயிற்றின்மேல் விழுந்து, பிறகு வெட்டி விடப்பட்ட கால்வாய் வழி மண்ணை முத்தமிட்டுக்கொண்டிருந்தன.

தஞ்சைச் சந்திப்பு நிலையத்திலே அவன ரத்ததானம் செய்துகொண்டே கிறுக்குப் பிடித்தவன்போல ஓடினன். வாணி ஓட ஓடத் துரத்தினளோ...?

"வாணி! வாணி!"

கால் இடறிவிட்டது.

"அத்தான்!"

"ஆ! என் வாணி! என் வாணி! நீ கூட இந்தப் பாழும் புயலிலும் மழையிலும் அகப்பட்டுக்கொண்டு விட்டாயா?... நேற்று இரவு உலகம் பேயாகியிருந்ததோ? ஐயோ!..."

"அத்தான், உங்களை உடனடியாகப் பார்க்கவேண்டும் போல் இருந்தது. ரயிலேறிவிட்டேன். உலகத்தில் எங்கோ தவறு, அநீதி நடந்திருக்க வேண்டும். இல்லையென்றால், இயற்கைத்தாய் இப்படிச் சீறியிருக்கவே மாட்டாள். நாம் இருவரும் நல்லபடி சந்தித்தோமே, என் தாலிப் பாக்கியம் தான்!" என்று சொல்லித் தன் தாலியைப் பக்தியுடன் கண்களில் ஒற்றிக்கொண்டாள் வாணி.

பிரகதீஸ்வரர் கோயிலில் உதயகாலப் பூஜை நடந்தது.

புதுப் பிறவியுடன் ஜோடியாகக் கைசேர்த்து நடந்தார்கள்; தேவதரிசனம் கிடைத்தது. திரும்பும்போது இன்னொரு ஜோடி தென்பட்டது.

"ஓ, தாராவா?...வாருங்கள், அத்தான்!" என்று வரவேற்றாள் வாணி.

"அத்தான், சௌக்கியமா?...வாணியின் முயற்சி இல்லையென்றால், எனக்கு இவ்வளவு சீக்கிரம் கலியாணம் நடந்திருக்க முடியாது...!" என்று குசலம் விசாரித்துக் கதை சொன்னாள் தாரா.

"அத்தான், தாராவின் கணவர் இவர். இவர் எனக்கு அத்தான் முறை வேணும். புதுமணத் தம்பதிகள் ரயிலுக்கு வந்திருக்கிறார்கள். ரயில் புறப்பட்டுவிட்ட அவசரத்தில் ஆளுக்கொரு பெட்டியில் ஏறிவிட்டார்களாம். உங்களிடம் சொல்ல மறந்திட்டேன். நேற்று இரவு அடித்த புயலிலும் மழையிலும், என் அத்தான் இல்லையென்றால் நான் இந்நேரம் உங்களைக் காணும் பாக்கியம்கூடச் செய்திருப்பேனோ, என்னவோ? உங்களைப்போலவும் மூர்த்தி அத்தான் மாதிரியும் உலகத்திலே நல்லவங்க நாலுபேர் இன்னம் நடமாடறதனாலேதான், ராத்திரி அடிச்ச பேய்க்காற்றும் மழையுங்கூட சீக்கிரம் ஓய்ஞ்சிடுச்சு?"

முகுந்தனின் உள்மனம் அணு அணுவாகச் செத்துக் கொண்டிருந்தது. "...தாரா! என்னை மன்னிக்க மாட்டாயா?

அறியாப் பருவத்திலிருந்து இன்றுவரை, ஏன் என்றுமே என் மனத்தைவிட்டு அகலாமல், நினைத்தபோது நினைத்தபடி நறுமணம் பரப்பும் புனிதமான மனோரஞ்சிதப் பூ நீ!...வாணி, என்மீது உனக்கு இருக்கும் உரிமைக்கு இனித் துளிகூடப் பங்கம் வராது. உன்னை இன்றுதான் பரிபூரணமாகப் புரிந்து கொண்டேன்!..."

# சாவிலே வாழ்வு

"ஆயா, வருசப் பிறப்புக்குத் தங்கச்சியையும் மச்சானை யும் நம்ப வீட்டுக்கு அழைக்கணுமில்லே. அதுக்காக அவங்க ரெண்டுபேருக்கும் புதுவேட்டியும் சேலையும் எடுத் தாந்திருக்கேன்."

"தம்பி, நானுந்தான் அப்பவே பிடிச்சு ரோசிச்சுக்கிட் டிருந்தேன். நல்லதாப் போச்க நீயே முந்திக்கிட்டது. பின்னே அவங்களையெல்லாம் சும்மாவா கூப்பிடறது. அதிலேயும் இந்த வருசந்தானே முதல் தேவை. ஆமா, அல்லாம் எம்பிட்டுப் பணமாவுது?"

"இருபது ரூபாய் கிட்டக்க ஓடிருச்சு. இதுக்குக் குறைஞ்சு எடுத்தாக்க இந்தக் காலத்திலே துணி வகைப் படுமா? அதோடே இன்னிக்குத் தேங்காய் லாவாரம் கொஞ்சம் மவுசு. ஒரு மூச்சிலே அம்பிட்டும் முதலா யிடுச்சு-" என்று சொல்லி அத்துடன் பேச்சிற்கு முத்தாய்ப் பிட்டான் சின்னையா. தன் தாய் துணிமணிக்காக எங்கே அதிகம் செலவழித்துவிட்டதாகக் குறைப்படுவாளோ என்ற அச்சம் ஒருபுறம் லேசாக அவன் மனத்தைச் செல்லரித்தது. தைலம்மாதான் தற்சமயம் வீட்டுக்குப் பொறுப்பு. அவள் கணவன் இறந்தபிறகு குடும்ப நிர்வாகம் பூராவும் அவள் கண்காணிப்பிலும், கண்டிப்பிலுந்தான் முன்னேறியது. ஓட்டுவீட்டு மாசிமலைத் தேவன் வழி வமிச மென்றால் பின்னே சும்மாவா?

தன் தங்கச்சி விஷயத்தில் பணம் செலவழிக்கச் சின்னையா ஒருபோதும் யோசிக்க மாட்டான். அதில் அவனுக்கு என்றும் தனித்த பெருமிதம் சுழித்தோடும், உடன்பிறந்த தங்கை—அவள் முகத்தில் என்றும் ஆனந்தம் மலருவதற்காக சின்னையா எதையும் தியாகம் செய்யச் சித்தமாயிருந்தான். தங்கையைப்பற்றி நினைத்த மாத்திரத்தில் அவன் மனத்தில் உற்சாகம் நிரம்பி வழியும். புது வருசப் பிறப்புக்கு தங்கையை அழைத்துவர எண்ணமிட்டான். சந்தைக்குப்போய்த் திரும்பிய களைப்பில் சாப்பிட்டு முடித்து வெற்றிலைப் போட்டுக்கொள்ள வாசலுக்கு வந்தான். அவனுடன் கையில் வெற்றிலைக் 'கொட்டான்' சகிதம் அவன் தாயும் வந்தாள்.

"நாளை விடிஞ்சதுமா மச்சான் கிட்டப் போய்ச் சொல்லிப் புது வருசப் பிறப்புக்கு வரச் சொல்லிப்பிடுறேன், ஆயா."

"ஆமா தம்பி. அப்பத்தான் மாப்பிள்ளைக்கும் புறப்பட லாயக்குப்படும். அவங்க பல சோலிக்காரங்க பாரு; இல்லியா?"

அவள் பேச்சைத் துண்டித்ததுதான் தாமதம். அதே கணம் "ஆயா" என்ற குரல் கேட்டது. ஏக காலத்தில் சின்னையாவும் அவன் ஆயாளும் பின் திரும்பினார்கள். சிறு குழந்தையின் நிலையில் தன்னை உடந்தையாக்கிச் செருமிக் கொண்டிருந்தாள் வள்ளி. சின்னையா அழைப்பதற்குச் செல்லுவதற்குள் கண்ணீரே அவளை அழைத்துக்கொண்டு வந்துவிட்டது. சின்னையாவின் இதயம் நெக்குவிட்டது.

"தங்கச்சி, என்ன விசயம்? எதுக்கு இப்படித் தேம்பி அழுகிறே? மச்சான் வரலையாங்காட்டியும்..." என்று கேட்டுக்கொண்டே வந்த சின்னையா 'டக்'கென்று திகைத்து நின்றுவிட்டான். அந்தியில் கண்ட நிலவில் வள்ளியின் சோம்பிய முகத்தில் கைவிரல்கள் ஐந்தும் அப்படியே தடம்பதிந்து வீங்கியிருந்தது தெள்ளத் தெரிந்தது.

தைலம்மா உள்ளம் நடுங்கினாள்.

சின்னையா என்னவோ ஏதோவென்று பதறித் துடித்தான்.

"இதெல்லாம் என்ன தங்கச்சி?"

"அதெல்லாம் அவரு—மச்சான் செஞ்ச அநியாயம்" கண்ணாலம் கட்டி எண்ணி நாலு மாசம் ஆகறதுக்குள்ளே அவருக்கு எம்மேலே வெறுப்பு வந்திடுச்சு. எல்லாம் காரியமாத்தான். கண்டிச் சீமையிலேருந்து அது அக்கா மகள் வந்திருக்குதாம். அந்தக் குட்டி மேலே அவரு கண்ணு வைச்சுப்பிட்டாராம். பணக்காரங்களாம். என்னை விலக்கி வைச்சிட்டு அந்தப் பொண்ணைத்தான் பிறக்கிற மாசம் கண்ணாலம் கட்டிக்கப்போறாராம். இனிமே நான் அந்த வீட்டுப் பக்கங்கூட அடியெடுத்து வைக்கப்படாதுன்னு அடிச்சுத் துரத்திட்டாரு" என்றாள் வள்ளி விம்மிய குரலில். அவள் மார்பகம் விம்மித் தாழ்ந்தது. அவளுடைய நயனச் செம்புகள் நீரைப் பெருக்கின.

சற்றுமுன் தாயும் மகனும் வள்ளியைப்பற்றி எவ்வளவு ஆசையாக நினைத்துத் திருவிழாவிற்கு மாப்பிள்ளையையும் மகளையும் வரவழைக்கத் திட்டமிட்டிருந்தார்கள். ஆனால் கடைசியில்...?

"அடிச்சுத் துரத்திப்புட்டானா? நன்னி கெட்ட பயமகன். தங்கச்சி, கலங்காதே ஊர் மனுசங்கிட்டச் சொல்லி நியாயம் கேக்கலாம். மாரிப்பயல் வழிக்கு வந்தாத் தப்பிச்சான். இல்லாப்போனா அவனை ஒரு கை பார்த்துக்கிறேன். பாவிப்பயல் ஒன்னைக் கைநீட்ட எப்படி மனசு வந்துச்சோ?" சின்னையா இப்படிப் பேசினான். அவன் குரலில், வார்த்தைப் பின்னணியில் சோளம் பொரிந்தது.

மாரி இப்படி நடந்துகொள்வான் என்று கிஞ்சித்தும் எதிர்பார்த்தவனல்ல சின்னையா. தன் தங்கையின் நிலை அவனுக்கு ஆத்திரம் உண்டாக்கியது.

மகளைச் சமாதானப்படுத்தி உள்ளே அழைத்துச் சென்றாள் தைலம்மாள். அவள் கண்களில் கண்ணீர் பனித்திருந்தது.

* * *

காலத் தேருக்கு 'ஹோல்டான்' போட யாருக்குத் திராணி உண்டு? நாட்கள் கடுகிப் பறந்தன. தன் சகோதரி வந்ததுதொட்டுச் சோம்பிய முகத்துடன் சதா காணப்பட்டதைக் கவனித்த சின்னையா பெரிதும் வேதனைப்பட்டான். அவ்வூர் மணியக்காரர் வீட்டுக்கு நடையாக நடந்து அவர் மூலம் மாரியைச் சமாதானப்படுத்த முயற்சித்தான். எப்படியும் தன் தங்கை திரும்பவும் அவள் புருசனிடம் ராசியாகிவிட்டால்தான் நிம்மதிப்படுமென்று எண்ணம் அவனுக்கு. ஆனால் அவன் ஆசை நிறைவேறவில்லை. வள்ளியைப்பற்றி இனிப் பேசிப் பயனில்லை என்பதாகக் கூறிவிட்ட மாரியின் முடிவைக் கண்டு அதிர்ந்து போய் விட்டான் சின்னையா.

அன்று முழுதும், வள்ளி முகம் வீங்க அழுது தீர்த்தாள். தன் வாழ்க்கைச் சூரியன் இங்ஙனம் அஸ்தமித்துப் போகுமென்று அவள் எப்படி நினைத்திருக்கக் கூடும்? ஆனால் அந்த ஒருநாள்—காதல் வாழ்வின் தொடக்கத்திற்குச் செப்பனிட்ட புனித சம்பவத்தை வள்ளி என்றுமே மறக்கமாட்டாள்!

கிராமமே பரபரப்பாகக் காட்சியளித்தது. ஆடவரும் பெண்டிரும் குழந்தைகளோடு கோவிலுக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். அன்று அம்மன்கோவில் கடைசித் திருவிழா. ஆகவே பலவித வேடிக்கைகளைப் பார்த்து மகிழுவதற்கு ஜனங்கள் திரள் திரளாகக் கூடியிருந்தார்கள். பலகாரக் கடைகளைச் சூழ்ந்து சிறுவர் கூட்டம் மொய்த்து நின்றது. இளங் காதலர்கள் பரஸ்பரம் பட்சணங்கள் வாங்கிப் பரிமாறிக் கொண்டார்கள். அம்மன்கோவில் திருவிழாவிலே அழகு உலாப் பாடப்போவது போலச் சீவிச் சிங்காரித்துக்கொண்டு போனாள் வள்ளி. சுற்றுப் புறங்களைப் பொறுத்த மட்டில் அவள் எடுப்பான பெண் என்று பெயர். அந்தி மயக்கம் அவள் கண்களில்; அழகு மயக்கம் அவளது எழில் முகப்படுதாவில்; கனவு மயக்கம் புன்னகை நெளியும் இதழ் ஓரத்தில். ஆக அவள் மயக்க உரு; அது வள்ளி!

'பொய்க்கால் குதிரை' ஆட்டம் ஒரு ஓரத்தில் நடந்து கொண்டிருந்தது. 'பெட்ரோமாக்ஸ்' விளக்குப் புடை சூழ, தம்பட்டம் முழங்க, அழகாக ஆடிக்கொண்டிருந்த அந்த இளைஞனை இமைக்காமல் பார்த்து நின்றாள் வள்ளி. அதே போதில் தன்னையும் அந்த உருவம் விழுங்கிவிடுவது போன்று நோக்கியிருந்ததையும் அவள் கண்டுகொண்டாள். விழா முடிந்து வீட்டுக்குச் சென்ற அவள் இதயத்திலே அந்த வாட்ட சாட்டமான ஆண்பிள்ளை இடம் பெற்றான். விழாவிலே ஆட்டம் முடிந்துவிட்டது. ஆனால் வள்ளி தன் இதயத்திலே ஏதோ ஓர் ஆட்டம் ஆரம்பமாகியிருப்பதாக உணர்ந்தாள்.

அடுத்த நாள் குளித்து முழுகி மனை மிதித்தாள் வள்ளி. மிதித்த அந்த இமைப்போதில் அவள் செய லிழந்தாள். காரணம்-தயக்கம்...! அன்று திருவிழாவில் கண்ட இளைஞனை வீட்டில் தரிசித்தாள். மாரியும் பார்த் தான். 'பைனக்குலர்ஸ்' கையாளும் விஞ்ஞானியைப்போல அவன் கண்கள் வள்ளியை எடை போட்டன. ஈரப் புடவை யுடன் நின்ற அவளுக்கு வெட்கம்! 'கிணற்றுநீரை வெள்ளமா கொண்டுபோயிடும்' என்று எண்ணமிட்டான் சின்னையா.

வள்ளிக்கு மகிழ்ச்சி எல்லை தாண்டிற்று. ஏனென்றால் உள்ளத்தில் சிலையோடிருந்த பிம்பத்தை - பிம்பத்தின் உரிமையாளரை-மீளவும் நேரில் காணும் பாக்கியம் பெற்று விட்டாளல்லவா?

அடிக்கடி அவர்கள் இருவரும் தனிமையைத் துண்டித்து, ஒருவரையொருவர் கண்டார்கள். இனமறியாத வெட்கப் புன்னகை அவர்களது இதய அந்தரங்கத்தைத் தம்பட்டமடித்துக் காட்டியது. வள்ளி—மாரி இருவரிடையி லும் ஏற்பட்ட அன்பைக் கண்டு மறுமாதமே இருவரை யும் தம்பதிகளாக்கினான் சின்னையா. வள்ளி மாரிக்கு வாழ்க்கைப்பட்டதில் பூரித்துப் போனாள். ஊராரும் பெரு மைப்பட்டப் பேசிக்கொண்டார்கள்.

ஆனால் அதே மாரிதானா இப்படித் தன்னை வேண்டா வெறுப்புடன் உதறித் தள்ளுவது என்று எண்ணிப் பார்த்த

வள்ளிக்கு அழுகை பொங்கியது. கடைசியாக அன்றைக்கு அவளைப் பார்த்து அவன் கணவன் "வள்ளியாமில்லே வள்ளி; ஆளைப் பாரு மூஞ்சியிருக்கிற பவுசிலே அழுகை வேறேயாங்காட்டியும்..." என்று ஏளனம் பேசிய சம்பவமும் நினைவில் எழுந்தது. உண்மைதான்; வள்ளி அப்போதைய நிலையில் அழகுமங்கித்தான் இருந்தாள். முகத்தில் பூராவும் அம்மை வடுக்கள் நிறைந்திருந்தன. திருமணமான மூன்றும் மாதம் அவளுக்கு 'அம்மை' கண்டு ஆள் தேறியதே பெரும்பாடாகிவிட்டது முகத்தில் சிறு சிறு வடுக்கள் தோன்றின. தகதகவென்று ஒளிவீசும் முகம் கருநிறத் தழும்புகளோடு அழகற்றுத் தோன்றியது—மதி முகத்திலே குறிப்பிடத் தகுந்த மாறுதல்—மனதில் வெறுப்பினையூட்டக்கூடிய அளவு படர்ந்திருந்தது. எந்த அழகு மாரியை ஆகர்ஷித்ததோ அது இப்போது அவளிடம் இல்லை. எனவே மாரியின் மனம் மாறியது. வள்ளியை வெறுத்தான். தற்சமயம் அவளிடம் அழகில்லை என்பதற்கு வெறுத்தானென்றால் பிறகு மாரியும் மலருக்கு மலர் தாவித் திரியும் மது வண்டு மாதிரிதானா? இதே வள்ளி அன்று ஓர் கிராம மோகினியாகப் பரிணமித்தவளேயல்லவா?

* * *

அந்தி வானத்தில் விந்தைக் கோலங்கள் மலர்ந்தன. சிந்தையில் ஆயிரம் எண்ணங்கள் புரள, கரங்களிடைக் கன்னத்தைப் புதைத்தவாறு வீற்றிருந்தாள் வள்ளி. தன் மச்சானின் இரண்டாம் கல்யாணத்துக்கு ஏற்பாடுகள் நடப்பதாகக் கேள்விப்பட்டதிலிருந்து அவளது இதய வேதனை இரட்டித்துப் பெருகியது.

"தங்கச்சி, எதுக்குப் பிரமாதமாக் கவலைப்பட்டுக் குந்தியிருக்கே. நான் தீர முடிவு பண்ணி ரோசிச்சிட்டேன். நம்ப சாதி வழக்கப்படி உனக்கு இரண்டாம் கண்ணாலம் கட்டத் தீர்மானிச்சிருக்கேன். மாப்பிள்ளை நம்ப மாங்குடி மாமன் மகன். அப்பத்தான் மாரிக்கும் சொரணை வரும் ஆமா, வள்ளி" என்றான் சின்னையா. அவர்கள் ஜாதிக் கட்டுப்பாடு அத்தகையதொரு உரிமைக்கு—புது வாழ்விற்கு

அனுமதித்தது. அதைப்பற்றி அவர்களுக்குள் விகற்பமோ, வித்தியாசமோ கிடையாது.

தமையனின் வார்த்தைகளைக் கேட்டதும் வள்ளி நிலை கலங்கிப் போனாள்.

சின்னையா மாங்குடிக்குப் பரிசம் போடப் போய் அன்றுடன் இரண்டு நாட்கள் ஓடியிருந்தன.

"அப்படின்னா மச்சானுக்கும் எனக்கும் இனிச் சொந்தமே இல்லையா, என்ன அநியாயம்?" என்பதாக எண்ணிறந்த முறை தன்னுள் குறைபட்டுக்கொண்டாள் வள்ளி. அவள் பெண் நெஞ்சில் பிரளயம் பிரவகித்துப் புரண்டது!

தண்ணீர் மொண்டுவரச் சென்றாள் வள்ளி. வழியில் "ஏலே வள்ளி" என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். எதிரே வந்து நின்ற அந்தப் பெண்ணைக் கண்டதும் ஒரு கணம் அவள் பிரமித்து நின்றாள். ஏனென்றால் அந்தப் பெண்தான் மாரிக்குப் புதிதாக வாழ்க்கைப்படவிருக்கும் 'கண்டிச் சீமைப் பெண்!'

"வள்ளி, என்னைக் கண்டு ஏதுக்கு இப்படிச் சிலை கணக்காப் போயிட்டே? மாரி அத்தான் வலையிலேருந்து நல்லவேளை தப்பிச்சுட்டேன். ஏற்கனவே அவருக்கு நீ வாழ்க்கைப்பட்டு, கடைசியா உன்னை விலக்கிட்டது எல்லாம் இப்பத்தான் சேதி காதுக்கு எட்டுச்சு. வள்ளி, உனக்குத் துரோகம் பண்ணி நான் அவரோடே வாழக் கொஞ்சமும் எனக்குப் பிடிக்கலே. ஆனா பாவம்...மாரிக்கு இந்தத் தண்டனை வரவேணும். இரண்டு நாள் முன்னாலே சந்தையிலிருந்து வரப்போ யாரோ ரெண்டு பேருங்க வழி மறிச்சு மாரியை அடிச்சுப் போட்டுட்டாங்களாம். ஆளு பிழைக்கிறதுகூட அரிதுன்னு பேசிக்கறாங்க. ஒனக்கு விசயமே தெரியாதா?" என்றாள் அவள்.

மின்னல் துவளும் நேரம் வள்ளிக்குச் சுயநினைவு அற்றுப் புவனமே பம்பரம் சுற்றியது. மறுகணமாக அந்தப் பெண்ணின் கருணைக்கு நன்றி தெரிவித்துவிட்டு, உடனே

தன் கணவன் வீட்டை நோக்கி வழி நடந்தாள்—ஓடினுள் போட்டியிட்ட மனப் புயலுடன். மச்சானுக்கு யாதொரு குறையும் ஏற்படாதிருக்கவேண்டுமென்று வேண்டிக் கொண்டாள். வள்ளியின் மனம் படபடவென்று அடித்துக் கொண்டது. ஐந்து விரல்கள் அழுந்திப் பதியத் தன் கன்னத்தைச் சுவைபார்த்த மாரியை அவள் நினைக்கவும் துணியவில்லை. ஆனல் இனிய மொழிபேசும் மாரி செல்லமாகத் தன் கன்னங்களைத் தட்டியதைத்தான் மீண்டும் நினைவுகூர்ந்தாள். இப்போது அவள் மனம் மாரிக்கு என்ன நேர்ந்ததோ என்று துணுக்குற்றது. வேகமாக ஓடினுள்.

பிணம் போலத் தரையில் கிடத்தப்பட்டிருந்த மாரியைக் கண்ணுற்ற வள்ளிக்கு உலகமே சுழன்றது. 'மச்சான்' என்று கூவியழைத்து அலறினுள். வள்ளியைத் திரும்பவும் அவ்வீட்டில் கண்ட உறவினர்கள் அவளது உயர்ந்த போக்கைக் கண்டு வியந்தார்கள்.

தன் மனைவியைப் பார்த்ததும் மாரி கண்ணீருகுத்த வண்ணம், "வள்ளி, நான் மகாபாவி, நீயே என் வீடு தேடி வந்துட்டியா? ஆமா, பூமியாட்டம் பொறுத்திருந்த ஒனக்குத் தீங்கு பண்ண நெனைச்சிருந்ததுக்கு இந்தத் தண்டனை போதும். நான் இனிப் பிழைக்கமாட்டேன். என்னைப் பெரிய மனசு பண்ணி மன்னிச்சுக்க. அப்பத்தான் என் உடம்பு வேகும்..." என்றுன் மாரி.

மேலே அவனுல் பேச முடியவில்லை. அதுவே அவன் இறுதிப் பேச்சாகவும் அமைந்தது. அழுது புரண்டாள் வள்ளி. அந்த வீட்டில் அப்புறம் ஒரு நிமிஷம்கூடத் தாமதிக்காமல் அதே இரவில் தாய் வீடு திரும்பினுள்.

*    *    *

வள்ளியைக் கண்டதும்தான் தைலம்மாவிற்கு உயிர் வந்தது. மாங்குடியிலே பரிசம்போட்டு முகூர்த்தத்திற்குத் தேதி வைத்திருக்கும் சேதியைத் தங்கச்சியிடம் கூறத் துடித்தான் சின்னையா. அதே சமயத்தில், "அண்ணுச்சி அவரு-எம் புருசன் செத்துப் போயிட்டாரு. யாரோ பாவிப் பயலுங்க அவரை அடிச்சுக் கொன்னுட்டாங்க. அங்கே

போயிட்டுத்தான் இப்ப வாறேன். மச்சான் சாவுக்கப்புறம் இனிமேப் புதுசா என்னுலே வாழ்க்கை தொவக்க ஏலாது. அவரு கைதொட்டுக் கட்டின தாலியைத் தவிர இனி வேறே யாரும் என் கழுத்திலே மஞ்சள் கயிறு முடியச் சம்மதிக்கமாட்டேன். எம்மேலே ஆணை இது...'' என்ருள் வள்ளி. அவள் பெண்! அவள் அவன் மனைவி!

சின்னையா ஆணியால் அறையப்பட்டவனுக நின்ருன்.

வள்ளியின் அழுகை வளர்ந்தது.

''தங்கச்சி, என்னை மன்னிப்பியா? உன்னை இப்ப அநியாயமா மாரி தள்ளி வச்சிட்டானே என்கிற ஆத்திரத் திலே, அவன் மேலே பழிவாங்க நான் அவனை அடிச்சுப் போட ஆட்களை ஏவிப் போட்டேன். ஆனு இப்படி அவன் உசிருக்கு ஆபத்து வருமின்னு துளியும் தெரியாது. ஐயோ, தங்கச்சி...'' என்று கூறிய தன் தமையனின் வார்த்தை களைக் கேட்ட வள்ளி, அப்படியே தலைசுற்றித் தட்டுக் கெட்டுத் தரையில் விழுந்தாள்!

# ஆடும் குதிரை

"டோய், பொம்மைக் குதிரை டோய்! ஆடும் குதிரை டோய்! ஏ தாத்தா! எங்களுக்குக் கொஞ்சநேரம் விளையாடத் தருகிறாயா? ஆளுக்கு ஒரு சவாரி, தாத்தா!"

மாயாண்டி திரும்பினான். பிஞ்சுக் குழந்தைகளின் ஆனந்த ஆரவாரம் அதிகரித்தது. கிழவன் சிரித்தான். தலையில் இருந்த பொம்மைக் குதிரையைத் தரையில் வைத்தான்.

"தாத்தா, எனக்குத்தான் முதலிலே சவாரிக்குத் தர வேண்டும் குதிரையை."

அந்தப் பத்துக் குழந்தைகளும் அதையே கேட்டன. "ஆகட்டும்" என்றான் அவன். அவனுக்கு ஒரே மகிழ்ச்சி வெள்ளம். அன்பு உள்ளங்களின் இன்பச் சூழல் அது.

தன் காரணப் பெயரைக் காப்பாற்றிக்கொள்ளப் படாத பாடுபட்டது பாவம், அந்த ஆடும் குதிரை.

"இவர் நல்ல தாத்தா டோய்! தங்கமான தாத்தா டோய்!"

மாயாண்டியின் வலதுகை மோதிரவிரலில் கண்ணீர் முத்து ஒன்று சிரித்தது. நடந்தான். குறி வைத்து ஏதோ

ஒன்றைத் தேடுபவன் மாதிரி அவன் விசையாக நடந்தான், பொம்மைக் குதிரையில் அவனுடைய தளர்ந்த விரல்கள் இழைந்திருந்தன.

"பொம்மைக் குதிரை வேணுமா, பொம்மைக் குதிரை!" என்று கூவாவிட்டால், எப்படி அவனுக்கு அதைப் பண மாக்க முடியும்? ஊமைபோல நடந்தான்.

"ஏ பொம்மைக் குதிரை!"

அழைப்பு வந்தது. கனவுகண்டு விழிப்பவன் போன்று அவன் கண்களை உருட்டி விழித்தான். குரல் மிதந்த பாதைக்குப் பார்வையை அணை போட்டான்.

"குதிரை என்ன விலையப்பா?" என்று யாரோ ஒரு பெண் கேட்டாள்.

கிழவன் அவளை ஒருமுறை நோக்கினான்.

நிறைமாதக் கர்ப்பிணி அவள். உள்ளம் எதிர்பார்த்த ஓவியத்திற்கென்று, அவள் கண்களில்தான் எத்தனை கனவுகள்!

"பொம்மைக் குதிரை வேணுங்களா அம்மா?"

"ஆமாம்; விலை?"

"விலை கிடக்கட்டும், அம்மா. தங்கச்சிக்கு இதுதான் தலைப்பிரசவம் போலே..."

"உம்" என்று சொல்லி அவள் பெருமூச்சுவிட்டாள்.

"அது சரி; பணம் எத்தனை வேண்டும்?"

"தங்கச்சி, குதிரையை வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் குழந்தையும் கையுமாக இருப்பீர்கள் பாருங்கள், அப்போது வந்து நீங்கள் இஷ்டப்பட்டுத் தருகிறதைத் திருப்தியோடு வாங்கிக்கொள்கிறேன். ஏழுமலையான்தான் உங்களுக்கு நல்ல வழிகாட்டித் தாயும் பிள்ளையுமாக உங்களை க்ஷேமமாய் வைக்கவேண்டும்."

கூடத்தில் பொம்மைக் குதிரையை வைத்தான்; மாயாண்டிக்கு வாயெல்லாம் பல்லாகிவிட்டது; திரும்பினான்.

கிழவனை நிமிர்ந்து பார்த்தாள் அந்தப் பெண் ஜானகி. அவளுடைய அழகிய உதட்டோரத்தில் அழகான சிரிப்பு இருந்தது. "தாத்தா, நிஜமாகவே உன் வாக்குப் பலித்து விடுமா? ஆஹா! சரி, அடுத்த வாரம் வா. என் கனவு பலித்துவிட்டால் நீ கேட்கும் பணம் தருகிறேன்" என்ருள். உணர்ச்சி புரண்டது. கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

விடை பெற்றுக்கொண்டு நடந்தான் கிழவன் மாயாண்டி. கண்ணீர் வழிந்தோடியது.

"நல்ல பொம்மைக்கார வியாபாரி!" ஜானகியின் நெஞ்சில் கிழவனின் உருவமும் ஆடும் குதிரையும் மாறி மாறிச் சுழன்றுகொண்டிருந்தன.

"யாரோ ஒரு கிழவன் வந்து கொடுத்தான். விலை கேட்டால், எனக்கு நல்ல வழி பிறந்ததும் வந்து பணம் வாங்கிக்கொள்வதாகச் சொல்லிப் போய்விட்டான்" என்று தோழி கமலாவிடம் சொன்னுள்.

"ஓகோ, மாயாண்டிக் கிழவனு? பாவம்! தங்கமானவன். நானும் அவனைப்பற்றிப் பலபேர் பல இடங்களில் சொல்லக் கேட்டிருக்கிறேன். அவனுக்குக் குழந்தை என்ருல் ஒரே பாசம். மாதத்துக்கு ஒன்று இரண்டு என்று செய்து விற்று வயிறுவளர்க்கிருன் போலிருக்கிறது. உம், என்னவோ, அந்தக் கிழவன் கைராசியாலே உனக்கு இந்தத் தடவையாகிலும் தெய்வம் நல்லவழி காட்டவேண்டும். நாலு தடவை உனக்கு ஆசைகாட்டி, நாலு தடவையும் குழந்தையைப் பறித்துக்கொண்ட அந்தக் கடவுள் இந்த ஐந்தாவது தரமாவது கருணை காட்டவேண்டும்."

"இந்த ஐந்தாவது தவணை எனக்கு வழிபிறந்தால் தான் நான் உயிர் தரிப்பேன், கமலா. கடவுளே வந்து இப்படிப் பொம்மைக் குதிரையைத் தந்துவிட்டுச் செல்கிற மாதிரி எனக்கு ஓர் இன்ப உணர்ச்சி ஓடுகிறது" என்று கண்ணீர் வடித்தாள் ஜானகி.

* * *

அன்று அமளி துமளிப்பட்டது, அதே வீட்டில். ஏழெட்டுப் பேர்கள் திண்ணையில் உட்கார்ந்திருந்தார்கள். கார் ஒன்று வந்தது. லேடி டாக்டர் வந்தாள்.

ஜானகிக்குப் பிரசவ வேதனை மிகுந்திருந்தது. அவள் கணவன் சேகரன் தூண்டில் புழுவாகத் துடித்தான். “தெய்வமே, இந்த ஐந்தாவது முறையாகிலும் எங்கள் இருவர் வயிறுகளிலும் பால் வார்ப்பாயா?” என்று பூஜை யறையில் ஆண்டவனிடம் கண்ணீரும் கம்பலையுமாக வேண்டிக்கொண்டு வெளியே திரும்பினான்.

கூடத்தில் இருந்த அந்த ஆடும் குதிரை அவனுக்கு நல்ல சுப சூசனைபோலப் பட்டது. வீடு தேடிவந்த குதிரைப் பொம்மையின் கதையை நினைத்துக்கொண்டான்.

உள்ளே வேதனை தாளாமல் அலறும் குரல் எதி ரொலித்து மிதந்தது. “தெய்வமே!” என்று புலம்பிக் கொண்டிருந்தான் சேகரன்.

லேடி டாக்டருக்காகக் காத்திருந்தான் அவன். அரவம் கேட்டது. துடிக்கும் உள்ளத்துடன் திரும்பினான். மறு கணம் “ஆ” என்று அலறினான். அப்பொழுது கூடத்தி லிருந்த ஆடும் குதிரையைத் தூக்கிக்கொண்டு பழைய கிழவன் ஓட முயன்றுகொண்டிருந்தான். நெஞ்சு நெருப் பாகத் தகித்தது சேகரனுக்கு. “இந்தப் பொம்மைக் குதிரை ஒரு நல்ல ஆசனை. இந்த முறை நல்லபடியாகக் குழந்தை பிறந்து சுபமாக இருக்கும் என்பதற்கு இதுவே ஒரு முன் எச்சரிக்கைபோல என்று ஆசையுடன் நினைத்துக்கொண் டிருந்தேனே. கடைசியில் அதே குதிரைப் பொம்மையைத் திருட வந்திருக்கிறானே!” என்று குமுறினான்.

கைநொடிப்பொழுதில், கிழவன் மாயாண்டி, சேகரனின் பிடியில் நின்றான்.

“ஐயா, இது என் குதிரை. நான்தான் கொடுத்தேன்” என்று தழுதழுக்கக் கூறினான் மாயாண்டி.

“வேஷமா போடுகிறாய்? பணமில்லாமல் பொம்மைக் குதிரையைக் கொடுத்துவிட்டுக் கடைசியில் அகப்பட்ட தைச் சுருட்டிக்கொண்டு போவதற்கா வந்தாய்; திருட்டுப் பயலே!” என்று ஆத்திரத்தில் கிழவனின் கன்னத்தில் அறைந்தான் சேகரன்.

ஆடும் குதிரையையே இமைக்காமல் பார்த்துக் கொண்டு கிழவன் மாயாண்டி கண்ணீர் மாலை மாலையாகப் புரண்டோடச் சிலையாக நின்றுகொண்டிருந்தான்.

சேகரனுக்குத் தன் நினைவு வந்தது. உள்ளே 'கசமுச' வென்று சத்தம் கேட்டது. நகர்ந்தான்.

"சேகரன், ஆண் குழந்தை பிறந்திருக்கிறது!" என்ற நல்ல சேதி வந்தது.

சேகரன் ஆனந்தமயமான கனவு உலகில் பறந்து கொண்டிருந்தான்.

"ஆகா, ஏழுமலையான் என் கவலையைத் தீர்த்து, நல்ல வழிகாட்டிவிட்டான். ஐயா! என் ஆடும் குதிரை இங்கேயே இனி இருக்கட்டும். உங்கள் மனைவியிடம் சொல்லுங்கள். இந்தக் குதிரை இந்த ஏழை மாயாண்டியினுடைய அன்புப் பரிசு. நான் போய் வருகிறேன்" என்று கூறிய கிழவன் புறப்பட்டான்.

தேடிவந்த தெய்வம் போன்று வந்த அந்த ஆடும் குதிரை, அந்த வீட்டில் இன்ப விளக்கேற்றி வைத்திருப் பதைக் கண்டு சேகரன் ஆனந்தப்பட்டான். அதேசமயம், விடை கூறிப் புறப்பட்ட கிழவனின் வார்த்தைகளும் போக் கும் புதிர்மாதிரிப் பட்டன அவனுக்கு.

அழைத்தான்.

"ஏய் கிழவா! நிஜமாக நீயேதானு என் மனைவியிடம் போன வாரம் இந்த ஆடும் குதிரைப் பொம்மையைக் கொடுத்துப் போனுய்?"

"ஆமாமுங்க."

"குதிரைக்குள்ள கிரயத்தைத்தான் நாங்கள் கொடுத்து விடுவோமே; பிறகு, ஏன் அப்படித் திருடன் மாதிரி வந்து அதை எடுத்துப்போகப் பிரயத்தனப்பட்டாய்?"

"எசமான், அதுதான் விடுகதை. அன்றைக்கு இந்தப் பொம்மையை அம்மாவிடம் கொடுத்தபோது, தலைப் பிரசவமா என்று கேட்டேன். அவர்கள் ஆமாம் என்கிற மாதிரித் தலையாட்டினார்கள். குழந்தை பிறந்ததும் பணம் வாங்கிக்கொள்வதாகச் சொல்லிப் பிரிந்தேன். ஆனால் நான் சுந்து திரும்புகிறபோது, போன நாலு தடவையும் குழந்தை பிறந்து தவறிப்போய்விட்டது என்கிற செய்தியைக் கேட்டேன். இந்த ஐந்தாவது தடவையாவது நான் பொம்மைக் குதிரை கொடுத்த கைராசியைக்கொண்டு அம்மாவுக்கு நல்லவழி பிறக்கவேண்டும் என்று ஒரு புது அம்மா வாழ்த்தினார்கள். அப்போதுதான் எனக்குப் பித்துப் பிடித்தமாதிரிப் போய்விட்டது. ஐயா, அந்தக் காலத்திலே இதேமாதிரிதான் என் மனைவிக்கும் நாலு தடவை கருத் தரித்து, நாலு தடவையும் குழந்தை தங்கவில்லை. அதே ஏக்கத்தில் என் மனைவியும் கண்ணை மூடிவிட்டாள். நானும் இப்படி அரைப் பைத்தியம் மாதிரி ஊரெல்லாம் அலைந்து திரிகிறேன். பணம் வாங்காமல் வலியக் கொடுத்துப்போன குதிரையை நான் எதுக்கு இப்படித் திருடன் மாதிரி எடுத்துப்போக வேண்டும் என்று யோசிக்கிறீர்களா? தங்கச்சிக்கு - உங்கள் மனைவிக்கு - நல்ல வழி பிறக்க வேண்டும் என்று நான் வேண்டிக்கொள்ளாத தெய்வம் இல்லை. கொஞ்சம் முந்தி வந்தபோது வீட்டிலே ஒரே அமளி குமளிப்பட்டது. நான் உங்கள் வீட்டிலே பொம்மைக் குதிரையை வைத்ததனால் என்னைப் பிடித்திருக்கும் அந்தப் புத்திரதோஷம் ஒருவேளை இங்கேயும் பிடித்து விட்டால் என்ன செய்வது என்கிற அச்சத்திலேதான் அப்படிச் செய்தேன். ஐயா! என் அச்சமும் வேதனையும் ஆலாய்ப் பறந்துவிட்டன. கடவுள் இப்போதுதான் என் வேண்டுதலுக்கு இரங்கியிருக்கிறார். குழந்தை நீடூழி வாழ ஏழுமலையான் அருள் புரியவேண்டும்" என்று சொல்லி விட்டு 'விர்'ரென்று நடந்தான் கிழவன்.

"மாயாண்டி, மாயாண்டி!" என்று அவனிடம் மன்னிப்புக் கேட்கத் தொடர்ந்தான் சேகரன்.

அப்போது உள்ளிருந்துவந்த சிறுமி ஒரு செய்தி சொன்னாள்: "சேகர் அண்ணா, ஜானகி அண்ணி சொன்னார்கள்.

இந்த ஆடும் குதிரைப் பொம்மையைக் கொடுத்துப்போன அந்தக் கைராசிக்காரக் கிழவன் மாயாண்டி கடைத்தெருப் பக்கம் சுற்றுவானும். அவனைத் தேடிப்பார்த்து அழைத்து வரச் சொன்னார்கள். பொம்மைக்குப் பணம் கொடுக்க வேண்டுமாம். அவனுக்கு விருந்துகூட வைக்கப் போகிருர் களாம், அண்ணி. உம், புறப்படுங்கள் அண்ணு!''

# கை அணைத்தது!

அப்போது கிணற்றிலிருந்து திரும்பி வீட்டினுள் நுழைந்ததும், அவள் கண்ட காட்சி அவள் மனத்தை அப்படியே நிலைதடுமாறச் செய்துவிட்டது. அந்தக் குழந்தை கையில் பிரித்து வைத்திருந்த ஜரிகைக் கவுனை முன்னும் பின்னுமாகத் திருப்பி அழகு பார்த்துக்கொண்டிருந்தது. தான் அணியவேண்டிய சட்டைதானே என்ற எண்ணம் போலும்! பச்சைக் குழந்தையின் பால் வழியும் முகத்தில் ஆனந்தம் பொங்கி வழிந்துகொண்டிருந்தது. ஆனால் பூங்கொடியின் உள்ளமோ குமுறிக் கொந்தளிக்க ஆரம்பித்தது.

அந்த ஒருகண நேரத்தில் என்ன நடந்ததென்பது அவளுக்கே தெரியாது. மறுகணம் தரையில் சுருண்டு கிடந்த தன் மகள் வீறிட்டு அலறுவதைக் கண்டதும், முகத்தைப் பார்த்தாள். அவள் உயிரே போய்விடும் போலாகி விட்டது. ஐந்து விரல்களும் அப்படியே அதன் கன்னத்தில் ஆழப் பதிந்திருந்தன. அச்சமயம் அவள் செய்த அடாத செயல் அவளது தளர்ந்திருந்த மனத்தைப் பிளந்துவிடும் போலச் செய்துவிட்டது.

சரோஜாவின் அழுகைச் சத்தம் கேட்ட கந்தன், கை வேலையை அப்படியே போட்டுவிட்டு அலறிப் புடைத்துக் கொண்டு ஓடிவந்தான். குழந்தையின் கண்கள் அழுததன்

காரணமாக சிவந்திருந்தன, கொவ்வைப்பழம் மாதிரி. கன்னமும் ரத்தச் சிவப்பாய் விட்டது. தன் மனைவியின் பக்கம் பார்வையைத் திருப்பினன். அவள் விழிக்கோடியில் கண்ணீர் மிதந்துகொண்டிருந்தது. தற்செயலாக ஓரத்தில் ஒதுங்கிக் கிடந்த அந்த ஜரிகைக் கவுன் அவன் பார்வையில் பட்டது. அப்பொழுதுதான் அவனுக்கு சங்கதி புலனுயிற்று. ஒன்றுமே பேசாமல் விசும்பிக்கொண்டிருந்த குழந்தையைத் தூக்கித் தோளில் சாத்தியவண்ணம் தெருப் பக்கம் சென்றுவிட்டான் கந்தன்.

பூங்கொடி மனமொடிந்து இடிவிழுந்தவள் போல உட்கார்ந்து விட்டாள். பன்னெடு நாட்களாக வெகு பத்திரமாக மறைத்துவைக்கப்பட்டிருந்த அந்தக் கவுன் திரும்பவும் தன் குழந்தையின் கையில் காணப்படுவதைக் கண்ணுற்றதும், அவள் பேதை மனத்திடை அவிந்து கிடந்த எண்ணச் சிதறல்கள் மீண்டும் புத்துயிர் பெற்றன. ஆனல் இந்த நினைவின் நிழல் ஒருபாவமும் அறியாத பச்சைப் பாலகனுக்கு எங்ஙனம் தெரியும்?

மடை திறந்ததுபோல் அவள் நயனச் செம்புகளினின்றும் கண்ணீர் மாலை மாலையாக வழிந்தோடியது. கண் இமைகளுக்கிடையே திரையாக விரிந்த நீர்ப்படலத்தில் புதைந்து கிடந்த நினைவுகள் புனர்ஜென்ம மெடுத்தன.

அன்று மாலைப்பொழுது. அந்திவானத்தில் விந்தைக் கோலங்கள் மலர்ந்திருந்தன. வேடிக்கை செய்து முடித்த பிறகு கையில் தட்டை ஏந்தி, கூட்டத்தை ஒரு தரம் வலம் வந்தான் ஒரு கழைக்கூத்தாடி.

காலணு, அரையணுக் காசுகள் கவிழ்ந்து முத்தமிட்டன; நெளிந்து காணியிருந்த அவனது தட்டில். உவந்தளித்த அப்புண்ணியவான்களுக்குத் தன் நன்றியைத்தெரிவித்தான் கையிரண்டையும் ஒன்று சேரக் குவித்த வண்ணம். திடுமென அவன் பார்வையில் ஏதோ மின்வெட்டிற்று. தட்டைப் பார்த்தான். இரண்டணுப் பணம் ஒன்று வந்து விழுந்தது. அக்காட்சி ஏதோ கனவில் நிகழுவது போன்றிருந்தது. அந்த ஏழைப் பாட்டாளி கந்தனுக்கு. தலையை உயர்த்தினன்.

அவனுக்கே ஆச்சரியமாகப் போய்விட்டது அழகு சொட்டும் கட்டழகி ஒருத்தி தன்னை விழுங்கி விடுபவள் போல அவ் விதம் வைத்த கண் வாங்காமல் உற்று நோக்குவதைப் பார்த்தான். கணநேரம் அவன் பார்வை அப்பெண் மீது சுழன்றது. அவளும் தன்னைப்போல ஓர் ஏழை என்பதை உணர்ந்தான், அப்போது அவள் தோன்றிய நிலையிலிருந்து. அவன் உடலில் புளகாங்கிதம் போர்த்தியது.

"இரண்டணு!" ஆமாம்; வாழ்வின் விசித்திரப் போக்கிலே ஓர் ஏழையைக்கண்டு மற்ருேர் ஏழையின் உள்ளம் தான் இளகுகின்றது !

கழைக் கூத்தாடி கந்தன் 'சலாம்' போட்டான் அந்தப் பெண்ணுக்கு. அதுவே அவனது என்றென்றும் மறக்க முடியாத உளமார்ந்த நன்றியின் சின்னம் போலும் !

கூட்டத்தைச் சுற்றி முடிந்து திரும்பவும் அதே இடத்திற்கு வந்ததும், அவன் அவளைக் காணவில்லை. தனக்கு உரித்தான கைப்பொருள் ஒன்றினைக் கைநழுவ விட்டது போன்ற ஓர் ஏக்கம் அவனுள் பொங்கி எழுந்தது

தெளிந்த நீரோடை போன்றிருந்த அவன் உள்ளத்தைத் தொட்டுக் கலக்கிச் சென்றுவிட்டாள் அவ்வனிதை. அத்தி பூத்தது போன்றிருந்தது அவளைக் கண்டதும். ஆனல் கணப்பொழுதில் கோடைக்கால மின்னல் போல எங்கோ மறைந்து விட்டாளே !

அவன் சித்தம் குழம்பி விட்டது. ஒன்றிலும் அவன் மனம் நாடவில்லை. அன்றைய இரவைப் பகலாக்கிக் கழித்தான். சதா அவள் நினைவுதான். அவளது களைசொட்டும் சிரித்த முகம் அவன் முன் அடிக்கடி தோன்றிய வண்ணம் இருந்தது. முன்பின் தெரிந்திராத அந்தப்பெண் நினைவு அவன் மனத்தில் எழும் சமயமெல்லாம், அவனையும் அறியாத ஓர் இன்பம் இழைபின்னிச் சென்றது.

அடுத்த நாள் வித்தை செய்வதையும் மறந்து, பைத்தியம் பிடித்தவன் போல அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்த அவன் காவிரிக் கரைக்குச் சென்ருலாகிலும் மனத்

திற்குச் சிறிது சாந்தி பிறக்குமே என எண்ணி, அங்கு சென்றான்.

அப்பொழுது இருள் லேசாகப் பரவ ஆரம்பித்தது. நொங்கும் நுரையுமாக ஆரோகணித்துச் சென்று கொண்டிருந்த காவிரியின் அழகிலே லயித்திருந்த கந்தன், இடுப்பில் செருகியிருந்த குழலை எடுத்து ஊத ஆரம்பித்தான். குழலின் இன்பகீதம் இளங்காற்றில் மிதந்து சென்றது. அலைபுரண்டோடும் வெள்ளத்தின் இனிய சலசலப்பு அச்சமயம் அவன் எழுப்பிய உயிர் நாதத்திற்கு சுருதி கூட்டுவது போலிருந்தது. திடீரென அவனது குழலிசை தடைப்பட்டது. நீரின் சலசலப்புக் கேட்டுத் திரும்பினான். அந்த இருட்டு வேளையில் நீரினுள் இறங்கும் உருவம் ஒன்றின் நிழல் தென்பட்டது. விசித்தெழுந்து ஓடிச்சென்றான். நீரில் இறங்கிய உருவம் அப்போது தோன்றி மறைந்த மின்னொளியில் நன்கு தெரிந்ததும் அப்படியே அவன் பிரமித்து விட்டான்.

தன் உயிரைப் பணயம் வைத்து ஒற்றைச்சாண் வயிற்றைக் கழுவி மூட, உச்சாணிக் கம்பில் ஏறி வேடிக்கை செய்து முடித்த பின்னர் அன்று தனக்கு இரண்டணா மனமுவந்தளித்த அதே உருவம்; அவளும் பார்த்தாள். அவள் பார்வையிலே துடிப்பின் வேகம் அதிகரித்தது. அவளும் அவனை யாரென்று அறிந்து கொண்டாள் என்பது அவளது முகபாவனையிலிருந்து தெரிந்தது.

'இவ்வளவு கும்பிருட்டிலே ஒண்டியாக அலை பாய்ந்து ஓடும் ஆற்றிலே இறங்கவேண்டிய காரணம்?'—அவன் யோசனை செய்தான்.

"ஐயா, இன்னும் ஒரு கண் சிமிட்டுற நாழி களிச்சு நீங்க வந்திருந்தீங்கண்ணா, எம்மனசு எம்பிட்டு குளுந்து போயிருக்கும்?"

அவ்விதம் சாரமற்றுப் பேசும் அப்பெண்ணினது வார்த்தைகள் அவனுக்கு வியப்பைக் கொடுத்தன.

"அப்படியென்ன ஒனக்கு அதுக்குள்ளே உசிருமேலே அம்பிட்டு வெறுப்பும் சங்கடமும் வந்திடுச்சு."

"ஏழை அனாதை நான். அப்பனையும் ஆத்தாளையும் பறிகொடுத்துப்பிட்டுக் கடைசியா கடவுளை நம்பிக்கிட்டிருந்தேனுங்க. திக்கில்லாதவர்களுக்குத் தெய்வந்தானே தொணை. ஆனால் கடைசியிலே மாரியாத்தாவும் என்னை கைவிட்டுப்பிடுச்சுங்க. அப்புறம் இந்த ஏழைக்கு யாரு கதி? ஏதோ ஒரு ரோசனை ஓடுச்சு மனசிலே. ஆத்தா காவேரி கிட்டயாச்சும் அடைக்கலம் புகலாமின்னு நெனைச்சேன். அப்பத்தான் நீங்க ஓடியாந்திருக்கீங்க. தெய்வம் போல இருந்திச்சு, ஒங்களைப் பார்த்ததும்."

அவள் குரலில் சோகம் பின்னணியாய் அமைந்தது. கண்களில் நீர் மல்கிப் பெருகியது.

வாடியிருக்கும் புஷ்பங்கள் பனித்திவலை பட்டமாத்திரத்தில் மலர்ந்து சோபிதமடைவதைப் போல, அவளது குவிந்திருந்த முகமண்டலத்தில் மலர்ச்சியின் ரேகைகள் நெளிந்து காணப்பட்டன. அதிர்ந்திருந்த அவள் உள்ளத்திற்கு அபயமளிப்பது போன்றிருந்தது அக்காட்சி.

"இந்தாப்பாரு. அன்னிக்கு ஒன்னைக் கண்டதிலேயிருந்து என் மனசு என்கிட்டே நிக்கலை. சதா ஒன் நினைவுதான். மாரியாத்தா ஒன்னை மறக்கவேயில்லை. இல்லாட்டி, நான் இந்தச் சமயத்துக்கு கணக்காக எப்படி இங்கே வந்திருக்கமுடியும். நம்ப ரெண்டு பேரையும் ஜோடி சேர்க்கத்தான் இது நடந்திருக்குது. நீ என்னோடே வந்திடு. ஒன் மனசு கோணாமெ எல்லாம் செய்கிறேன். ரெண்டு பேருமா எங்கினாச்சும் அக்கரைச் சீமைக்குப் போயி வயிறு கழுவிக்கலாம். வரவர இந்தக் கம்பங் கூத்தாடிப் பிழைப்பும் புளிச்சுப் போச்சு. நானு ஒண்டிக்கை மனுசன். என்னதான் செய்யமுடியும்? யோசிச்சிச் சொல்லு."

அவன் குரலில் இன்பம் கொஞ்சியது. தாபம் தடம் பதிந்திருந்தது.

தண்ணீர் சொட்டும் சேலையைப் பிழியக்கூட நினைவின்றித் தீவிர யோசனையில் ஈடுபட்டாள் பூங்கொடி. மறுகணம் அவள் தலை கீழே கவிழ்ந்தது. தீர்க்கமான முடிவின் அடையாளமா, அத்தகைய நாணம்? ஆமாம், உயரப்படர்ந்து

செல்லவேண்டிய துவளும் கொடி ஒன்றிற்கு நல்ல கொழு கொம்பு கிடைத்தால் அப்புறம் அதன் வளர்ச்சிக்குக் கேட்க வும் வேண்டுமா?

அவள் பெயர் பூங்கொடி. பூங்கொடி! நாசுக்கான பெயர். அழகுக்கேற்ற பெயர்; பெயருக்கேற்ற பொருத் தம்.

கருவேப்பிலைக் கொழுந்து போன்ற தன் ஒரே பெண் ணைக் கண்ணும் கருத்துமாக வளர்ப்பதில் தன் அருமை மனைவி இறந்த ஆருத் துயரத்தையும் மறக்க முயன்ருர் கோனுர். கருப்பையாக் கோனுர், பூவத்தக்குடி சுற்று வட்டாரத்தில் ஒரு பெரும் புள்ளி. அவரால் கைதூக்கி விடப்பட்டு முன்னுக்கு வந்த குடும்பங்கள் அனந்தம். இவ் வளவிற்கும் மனுஷன் ரொம்பவும் 'சுவாகி.' கொஞ்சம்கூட கெடுபிடி இல்லாதவர். பதவிசான குணம். ஆனல் நல்ல மனிதர்களுக்குத்தான் இந்தப் பாழும் உலகில் காலம் இல்லையே!

பூங்கொடி என்றென்றும் செல்லப் பெண்ணுகவே வளரக் கொடுத்து வைக்கவில்லை. கோனுருக்கு இரண்டு நாள் லேசாக ஜுரம் கண்டதாம். வரவரக் காய்ச்சல் பல மாய்ப் போய்விட்டது. சாசுவதமாகக் கண்களை மூடிவிட் டார் கோனுர். ஆனல் அவரது ஆவி ஒடுங்கும்வரை அந்த ஒரே கவலைதானும். தன் செல்லப் பெண்ணின் எதிர்கால வாழ்க்கையை நினைத்து வடித்த கண்ணீரைக் கணக்கிடவே முடியாதாம். பாவம், ஒரே மகள்!

பெண் உள்ளத்தில் பெரியதொரு கொந்தளிப்பு ஏற் பட்டது. தன் தந்தை தன்மீது காட்டிய அன்பைத் திரும் பவும் எண்ணும் போதெல்லாம் அவள் மனம் கருகிச் சாம்ப லாகி விடுவது போன்ற உணர்வு, எழ ஆரம்பித்தது இறுதி யில் அவள் தகப்பன் விட்டுச்சென்ற பணத்தையும் பறி கொண்டு விட்டது அக்கும்பல். பாவம் பூங்கொடியின் எதிர்கால வாழ்வு?

தனி மரமானுள் பூங்கொடி. கடவுளின் கருணைக் கண் கள் தன்மீது விழாதா என ஏங்கித் துவண்டாள். அந்தச்

சமயம்தான் அவளுக்குச் சிறிது நிம்மதி ஏற்பட்டது, அந்தச் செய்தியைக் கேட்டதும்.

பக்கத்து ஊர் மாடசாமிக் கோனார் அவளைத் தன் வீட்டிற்கு அழைத்துக் கொண்டார். அவரது குடும்ப விளக்கு அணையப் போகும் தருணத்தில், சுடரைத் தூண்டிவிட்டுப் பிரகாசமெய்தச் செய்தவர் பூங்கொடியின் தந்தைதான்.

'நம் குடும்பத்தைக் கைதூக்கிவிட்டு முன்னுக்குக் கொண்டுவந்த அந்தப் புண்ணியவானுடைய பெண் அனாதரவான நிலையில் தெருவில் அலைந்து கொண்டிருப்பதைக் கண்டு நாம் கவனியாதிருந்தால் ஊரில் என்ன பேசிக்கொள்வார்கள்?' என்ற அந்த ஊரின் வசைச் சொல்லிற்காக அவளை அங்கு அழைத்துக்கொண்டார்.

அவருக்கும் ஒரு பெண் இருந்தாள்; பாஞ்சாலி என்று பெயர். இருவருக்கும் கிட்டத்தட்ட சமவயது. ஆனால், அழகில் பாஞ்சாலி எவ்விதத்திலும் பூங்கொடிக்கு ஈடாகவே முடியாது. அவ்வளவு அழகி பூங்கொடி. இருந்து என்ன செய்வது? அதுதான் அவளது அழகிற்கு வறுமை திரையிட்டு விட்டதே?

பாஞ்சாலி வீட்டு வேலை ஒன்றும் செய்யமாட்டாள். வாய் நிறைய வெற்றிலையைக் குதப்பிக்கொண்டு அசை போடும் மாடுமாதிரி எங்காகிலும் சென்று வம்பளந்து காலத்தைக் கழிப்பதுதான் அவளது அன்றாட வேலை. ஆனால், காலையில் படுக்கையைவிட்டு எழுந்தது முதல் மீண்டும் படுக்கைக்குப் போகும்வரை உள்ள வேலை அனைத்தையும் உடல் நலியச் செய்யும் 'பாக்கியம்' ஏழைப் பூங்கொடிமீது விழுந்தது. இதற்குத்தான் 'செஞ்சோற்றுக் கடன்' என்ற பெயரா? மாடாக உழைத்து ஓடாகி விடும்படிதான் அன்று அவளைப் படைத்த பிரமன் அவள் தலையில் எழுதினானோ? அழிக்கமுடியாத சிரஞ்சீவித்வம் வாய்ந்ததா அவ்வெழுத்து? ஐயோ! என்ன வஞ்சமோ அந்த ஈசனுக்கு!

அன்று ஒருநாள். அடுத்த ஊரிலிருந்து பாஞ்சாலியின் அத்தான் தங்கவேலு வந்திருந்தான். அவன் கடைக்கண் வீச்சில் பூங்கொடி விழுந்துவிட்டாள். அவளது வாளிப்பாக

வளர்ந்திருந்த வனப்பு வாய்ந்த தோற்றப் பொலிவு தங்க வேலின் உள்ளத்தில் தனியிடம் பெற்றுவிட்டது. எப்படி யாகிலும் பூங்கொடியிடம் ஒரு வார்த்தையாகிலும் பேசிவிட வேண்டுமென்று துடியாய்த் துடித்தான் அவன்.

வந்தவேலையை முடித்துக்கொண்டு உடனே கிளம்பி விடும் தங்கவேலு, அங்கு இரண்டு நாள் தங்கினான். ஒரே அதிசயமாக இருந்தது பாஞ்சாலிக்கு.

நாட்கள் சென்றன. அவன் அடிக்கடி ஏதாகிலும் வேலையென்று 'சாக்கு'ச் சொல்லி அங்கு வந்து தங்கிவிடு வான். இவ்வளவிற்கும் தன் மாமன் மகள் பாஞ்சாலியுடன் ஒரு வினாடிகூட மன அன்புடன் அவன் முகங்கொடுத்துப் பேசினதில்லை.

தன்மீது தங்கவேலு காண்பிக்கும் தனிப்பட்ட சலுகை யில் ஒருவித மனத்திருப்தி எய்தினாள் பூங்கொடி. ஆனால், அதே தருணம் "அவர் நம்முடன பேசும சமாச்சாரம் பாஞ் சாலியின் பெற்றோர்களுக்குத் தெரிந்துபோனால் என்ன ஆவது நம்கதி? அப்புறம் வயிற்றுச் சோற்றுக்குக் கூடத் திண்டாட்டமாக வல்லவா போய்விடும்" என்ற எண்ணம் தோன்றியதும் மலர்ந்திருந்த அவளது முகம் கூம்பி விட்டது.

இந்த நாடகமெல்லாம் பாஞ்சாலிக்கு எட்டாதிருக்குமா? அவள் உள்ளத்தில் பொறாமைத் தீ கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது.

"என் அத்தான்—நான் கண்ணாலம் கட்டிக்கவேண் டிய மொறை அத்தான்—அவரை நேத்திக்கு வந்த அனா தைச் சிறுக்கி மயக்கிப்பிட்டாளே. எங்கண்ணிலேயும் தூவிப்பிடுவாளே."

நெய்யுண்ட நெருப்புப் போலானது அவள் நெஞ்சம்.

அப்போது தெருவைப் பெருக்கிவிட்டு வீட்டிற்குள் நுழைந்த பூங்கொடி திக்பிரமை பிடித்தவள் போல அப்ப டியே நின்றுவிட்டாள் கற்சிலையாக. அந்த வார்த்தைகள் அவளது காதுகளில் நாராசமென விழுந்தன. "நான்

அப்பவே சொன்னேனே கேட்டீங்களா? பலே கைகாரியாக இருப்பாண்ணு எனக்கு முன்னமே தெரிஞ்சுதே, அவ ஆடிக் குலுங்கி சினிமாக்காரிபோல நடந்து வரதிலேருந்து. பாஞ்சாலிக்குச் சொந்த அத்தான். எனக்குத் தம்பி. அதுக்கும் நேத்திக்கு வந்த அனாதைக் கழுதைக்கும் என்ன சம்பந்தம். வரட்டும் அவள்? உண்ட வீட்டுக்கே ஓலே வச்சுப்புட்டாளே. அது கண்ணிலே மையைப் போட்டில்ல மயக்கிப்பிட்டா பாவி.''

பூங்கொடி தளும்பி நின்ற கண்ணீரைத் துடைக்கக் கூட நினைவின்றிப் புறப்பட்டுவிட்டாள் கால் சென்ற வழியே. காவேரி! அந்த எண்ணம் மின்வெட்டியது பேதையுள்ளத்தில். அன்னை காவேரியிடம் அடைக்கலம்பெற விரைந்தோடிச் சென்ற சமயம்தான், கந்தன் அங்கு தோன்றிய காட்சி அவளுக்கு வாழ்வின் புதுமலர்ச்சியென இருந்தது.

"பூங்கொடி!''

புதுவெள்ளத்தின் உற்சாகம் தொனிக்க அன்பு கொஞ்சும் குரலில் தன் மனைவியை அழைப்பான் கந்தன்.

அவளும் ஓடோடிவந்து 'துறுதுறு'வென்று எழில் செய்யும் அவளது குறும்புப் பார்வையைத் தன் கண்வன் மீது சுழல விட்டபடி அவனை வரவேற்பாள்.

'கண்டிச் சீமையில்' தேயிலைத் தோட்டமொன்றில் அவனுக்கு வேலை. காலையில் செல்லும் அவன் மறுபடியும் திரும்பும் சமயம் இருட்டிவிடும். அவன் வீட்டிற்குள் நுழைவதற்கும் பூங்கொடி சாதத்தைப் பரிமாறித் தயாராக வைத்திருப்பதற்கும் கணக்காக இருக்கும். பசிக்களைப்பில் அடைத்தவாய் திறக்காமல் தட்டைக் காலி செய்துவிடுவான் கந்தன். ஆமாம்; தன் வரவிற்காக நெடுநேரம் வரும் வழியின் மீது விழி தாழ்த்திய வண்ணம் காத்துக் கிடக்கும் தன் அருமை மனைவி கொஞ்சும் கிள்ளைமொழிகள் உதிர்ந்த வண்ணம் உணவு பரிமாறும் சமயம் கூழானாலும் அவனுக்குத் தேவாமிர்தம் போன்று சுவைமிகுந்துதானே காணப்படும்? சாப்பிட்டுக் கை அலும்பியவுடன் கையில் மடித்து

வைத்திருக்கும் வெற்றிலையை அவனிடம் நீட்டுவாள். வெற்றிலையை வாயிலிட்டு மென்றவண்ணம் வாசலில் துண்டை விரித்துப் பேச உட்கார்ந்துவிடுவார்கள் அந்த ஏழைத் தம்பதிகள் இரண்டுபேரும். அப்போது காலம் போவதே தெரியாது.

அவர்கள் இருவரும் ஏழைத் தம்பதிகள். ஆமாம்; அது அவர்களது குற்றமல்லவே. அந்த ஏழைபங்காளன் என்றே அவர்களை அங்ஙனம் சதிசெய்துவிட்டான். ஆனல் அவர்கள் தங்களது ஏழ்மை நிறைந்த வாழ்விலே காணும் இன்பத்திற்கு ஈடே இருக்க முடியாதல்லவா?

காலச்சக்கரம் கனவேகத்தில் சுழன்று வருஷம் ஒன்று அதற்கப்புறம் ஓடிவிட்டதை அறிவித்தது. அப்பொழுது பூங்கொடி சாதாரணப் பூங்கொடியா யிருந்தாள். ஆனல், இன்று அவள் ஒரு தாய்!

நாட்கள் நழுவின.

அன்று ஒருநாள் 'பூங்கொடி' என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே வந்தான் கந்தன். சரோஜாவைத் தோளில் சாத்தி வைத்திருந்தான். பொக்கை வாயைத் திறந்தவண்ணம் தன்னையும் மறந்துவிட்டுச் சிரித்துக் கொண்டிருந்த தன் மகளைக் கவனித்தாள் பூங்கொடி. அவளுக்கு ஆச்சரியமாய் இருந்தது. குழந்தைக்குப் புதிதாக அழகாக மின்னும் 'ஜரிகைக் கவுன்' ஒன்று போட்டிருந்தது.

"ஆமா சட்டை புதுசா இருக்கே. இன்னிக்கு வாங்கினீர்களா. விலை ரொம்ப அதிகமாயிருககுமே."

"பூங்கொடி, நேத்திக்கு நம்ப தமிழ் நாட்டிலேயிருந்து புதுசா ஒருத்தர் இந்தக் கப்பலிலே வந்திருக்காரு. ரொம்பத் தங்கமான குணம். அந்த அண்ணன் வாங்கித் தந்தது தான் இந்தப் பட்டுச் சரிகை போட்ட சட்டை. பழகினது ரெண்டு நாழிகையாச்சும் இருக்குமோ என்னவோ; அதுக்குள்ளே ரெண்டு வருசம் தோளுக்குத் தோளாகப் பழகி விட்டது மாதிரி அவ்வளவு சிநேகிதமாகி விட்டோம் நாங்க.

கடைசியிலே நம்ப கண்ணுவைக் கண்டதும் சிலைகணக்கா ஏனோ அப்படி நின்னுட்டாரு. புள்ளையை எங்கிட்டேயிருந்து வாங்கி, முத்தங் கொஞ்சி எம்பிட்டு பலகாரம் வாங்கிக் கொடுத்தாரு தெரியுமா? பார்த்தியா, அதுக்குள்ளே மறந் துட்டேன். நான், நம்ப கண்ணு, அந்த அண்ணன் மூன்று பேருமா சேர்ந்து 'படம்' எடுக்கணும்னு பிடியாய்ப் பிடிச் சாரு. இதோ பாரு படத்தை'' என்று சொல்லி சட்டைப் பையிலிருந்து புகைப்படத்தை எடுத்து நீட்டினன் பூங்கொடி யிடம்.

படத்தைப் பார்த்ததுதான் தாமதம். அவள் கண்கள் கலங்கிவிட்டன.

''பூங்கொடி, ஏன் இப்படி மலைச்சுப்போய் நின்னுட்டே, பேயடிச்சவ கணக்கா? படத்தை ஏனு அப்படி முழிச்சுப் பார்க்கிறே? அந்த அண்ணனை முந்தியே ஒனக்குத் தெரி யுமா? எதனுச்சும் சொந்தம் கிந்தம் உண்டா?''

நெஞ்சை அழுத்திக் கொண்டு கேட்டான் கந்தன்.

''அவரைத் தெரியுமுங்க. அவரை எங்கே காண முடியும்?''

அவளது விம்மிக்கிடந்த மனத்தில் தங்கவேலின் மோகன உருவம் காட்சியளித்தது.

''ஐயையோ! இந்தக் கப்பலுக்குத்தானே போறதாச் சொன்னரு!''

அதற்குமேல் அவள் அங்கு நிற்கவில்லை. வேகம் வேகமாக ஓடினள், கன வேகத்தில் சுழன்று செல்லும் மனேரதத்தையும் போட்டியிட்டுக்கொண்டு.

உண்மையாக நடந்ததைச் சொல்லித் தன் மாசுமறு வற்ற தன்மையையும், விதி தன் வாழ்வில் ஆசைதீர விளை யாடிய விந்தை பற்றியும் விஸ்தாரமாகக் கூறி, தன்பேரில் கிஞ்சித்தும் அவருக்குச் சந்தேகம் இராக்காமல் செய்ய வேண்டுமென எண்ணித் துடித்தது, அவள் பேதை உள்ளம்.

ஆனல் நடந்தது!—குமுறும் கடலைக் கூர்ந்து பார்த்தாள். அப்போதுதான் கப்பல் புறப்பட்டுக் கொஞ்ச தூரம் நகர்ந்து சென்றது. அல்லலுற்ற மனம் ஆறுதல் எய்த மார்க்கம்......?

கலங்கிய கண்களுடன் ஏறிட்டு விழித்தாள்; தன் கணவனுடன் வந்துகொண்டிருந்த அவள், சிறு குழந்தை போல தேம்பி அழுதவண்ணம் அன்றுவரை மனத்தை அழுத்திக்கொண்டிருந்த சங்கதி பூராவையும் ஒன்று விடாமல் சொன்னாள்.

திரும்பவும் நீர்நிரம்பிய கண்களுடன் நீலத் திரைக் கடலைப் பார்த்தாள். கப்பல் மறைந்துவிட்டது. ஆனல், குமுறிப் புரளும் அலைகளின் பேரிரைச்சல்தான் அவள் காதுகளில் எதிரொலித்துக் கொண்டிருந்தது!

"அம்மா—அம்மா!"

குழந்தை தன் மழலை மொழியில் கொஞ்சும் குரலில் அழைப்பதைக் கேட்டதும்தான் அவளுக்குச் சுயநினைவு வந்தது. அவள் உள்ளக்கடலில் அதுவரை ஆர்ப்பரித்த வண்ணமிருந்த எண்ண அலைகள் ஓய்ந்தன. திடுக்கிட்டெழுந்தாள், முகத்தில் தோய்ந்திருந்த நீர்த்திவலைகளைத் தன் சேலைத் தலைப்பால் துடைத்துக்கொண்டு.

சரோஜாவைப் பார்த்தாள். தந்தையின் தோளில் ஒய்யாரமாகச் சாய்ந்திருந்த அக்குழந்தை ரொட்டித் துண்டைச் சுவைத்துக்கொண்டிருந்தது. அதற்கும் சந்தோஷம் தாங்கமுடியவில்லை.

பூங்கொடி தன் கணவனிடமிருந்து குழந்தையை வாங்கி, கீழே கிடந்த அந்த ஜரிகைக் கவுனை எடுத்துப் போட்டாள் சரோஜாவிற்கு. அச்சமயம் அதன் ஆனந்தம் பன்மடங்காகி சிவப்புக் கன்னங்களில் குழி விழுந்தன. அதன் எழிலில் மனம் பூரித்து அப்படியே வாரியணைத்த வண்ணம் உச்சி மோந்தாள் பூங்கொடி. அப்பொழுது அத்தாயுள்ளம் அடைந்த ஆனந்தததை அளவிடல் சாத்தியமாகுமா?

இந்த வேடிக்கை முழுவதையும் அடைத்த வாய் திறக்காமல் கவனித்துக் கொண்டிருந்த கந்தன் "எதுக்காக கொஞ்ச நேரத்துக்கு முந்தி புள்ளையைப் பளீர்னு அப்படி அறைஞ்சியாம். அப்புறம் இப்ப இம்பிட்டுத் தூரம் என்னுத்துக்குக் கொஞ்சறீயாம்" என்று கேட்டான் கந்தன், கிண்டலாக.

"அடிக்கிற கைதானே அப்புறம் அணைக்கவும் செய்யும்!" என்று பதில் கொடுத்தாள் அவள். கொஞ்சமும் விட்டுக் கொடுக்காமல் கொடுத்த பதில் அல்லவா?

# மனம் எனும் வேள்வியில்...!

டாக்டர் நாகசுந்தரம் இருமத் தொடங்கினுர்; புறப்பட்ட ஓர் இருமல் ஒன்பது இருமல்களைத் துணைகொண்டது. வழி நடையைத் தொடர முடியாமல் களைத்துச் சளைத்துப் போனவர் போன்று அவர் நெடுமூச்சை வெளிக்காட்டினுர். வெளிக்கொட்டப்பெற்ற வேதனையின் துகள்கள் டாக்டரின் சோர்ந்த முகத்திலே வேர்வை முத்துக்களாக உருமாறின. உருமாறிப்போன அவரது வதனத்தில் சுடுநீர் பாத்திகட்டத் தொடங்கியது. அவர் முணமுணத்தார். 'ஈசுவரா!'

நிலாக் கொழுந்தின் பால் வண்ணச் சீதளக் கதிர்கள் அந்தப் பெரிய வீட்டில் மணல் வீடு கட்டி விளையாடிக்கொண்டிருந்த வேளை அல்லவா அது?

டாக்டர் நாகசுந்தரம் உயிர்ச்சத்தை உள்ளத்துக்குப் பக்கபலமாக்கிக் கொண்டு, அதன் விளைபலனுகக் கிடைத்த வலுவை உடலில் ஒட்ட வைத்தவாறு எழுந்து அமர்ந்தார். அணுகிக்கிடந்த செய்தித்தாள் அவரை வருந்தி அழைத்தது; விழிக்கண்ணுடி மூக்கில் அணைந்தது; பார்வை திசை மயக்கம் கண்ட பாங்கில் அல்லாடிற்று. சில கணப்பொழுது கடுகிக் கழிந்தது. செய்தித்தாளின் கடைசிப் பக்கம் புரண்டது; டாக்டர் படித்தார்; மீண்டும் வரிகளை வரிசைப் படுத்திப் படித்தார்.

"நான் தற்சமயம் அறந்தாங்கியில் கீழ்க்காணப்படும் விலாசத்தில் வாசம் செய்துவருகிறேன். நான் சாவுடன் மன்றுடிக் கொண்டிருக்கிறேன். விதி என்னுடைய ஜீவனுடன் விளையாடிக் கெலிப்புக் கொள்ள வேளை பார்த்துக் கொண்டிருக்கிறது.

இப்படிக்கு,
டாக்டர் நாகசுந்தரம் எம்.பி.பி.எஸ்.
9, வீரமாகாளியம்மன் தெரு,
அறந்தாங்கி."

தலையை உயர்த்தினர் நாகசுந்தரம். சென்னைப் படிப்பு தந்த பட்டங்களைச் சுமந்து, இளமை பொலிவு காட்ட, அந்தப் பொலிவு வருங்காலத்தின் பசுமையை முன்கூட்டியே எடுத்துச் சொல்ல, நிழற்படத்தில் காட்சி தந்து கொண்டிருந்த தம்முடைய அங்கஈனைய உருவத்தை ஆழப் பதிய விழித்து விழித்து நோக்கினர். மீண்ட சுய நினைவு அவரது நோக்கிற்குத் தூண்டுதல் அளித்தது. அந்த உருவத்தினையே அவர் ஏன் அப்படித் திரும்பத் திரும்ப நோக்க வேண்டும்? உருவத்தின் உள்ளத்தை உய்த்துணரவா?..."ஊம்"

'வீரம் விளைத்த குமரன்' சுவரின் கீழ்க்கோடியில் அருட் கருணை மழை பொழிந்துகொண்டிருந்தான்.

அண்டியிருந்த தியேட்டரில் முதல் ஆட்டம் முடிந்தது; மண்டிப் புறப்பட்டது கும்பல்; பேச்சரவம் அவரின் நெஞ்சத்தை அரமெனத் தீண்டியது; செவிகளைப் பொத்திக் கொண்டார் அவர். 'அழைக்கும் மணி'யை அழுத்தி விட்டார். மும்முனைப் போட்டி ஒன்று உருவானது. வந்து நின்ற மூவரையும் உறுத்துப்பார்த்த நாகசுந்தரம் வலக்கையின் சுட்டுவிரலை அசைத்துச் சைகை செய்யலானர். மறு கணம் ஒருவன் மட்டுமே எஞ்சினன். எஞ்சிய அமைதியுடன், "சடையப்பா, விருந்தாளிங்க எல்லோரும் இன்னமுமா தூங்கவில்லை?...அவங்களிலே யாரும் இங்கே வரப் படாது; நீ சொல்லிப்பிடு!" என்று எச்சரித்தார்.

'ஆகட்டுமுங்க, முதலாளி."

"சரி, நீ போ!''

"மருந்து தாரேன்!"

டாக்டர் சிரித்தார்; விரக்தியும் வேதனையும் ஒட்டிய துருவங்களாக விளங்கின. "ஊம், நீ போ!" என்று வெய்துயிர்ப்புக் குரலில் பணித்தார் அவர்; பணியாள் போன பிற்பாடு, மேஜைமீது சோக முத்திரை தாங்கி நின்ற மருந்துக் குப்பிகளை நோட்டமிட்டார். 'உங்களாலே விதிக்கு மருந்து தர இயலுமா?'

தலையணைகளைத் தலைமாட்டிலும் கால்மாட்டிலும் போட்டுக்கொண்டு சாய்ந்த டாக்டர் நாகசுந்தரத்தின் மார்பில் நாட்குறிப்பு ஏடு விரிந்துகிடந்தது; அதை எடுத்துப் புரட்டத் தலைப்பட்டார். 'என்னுடை கனு பலிக்கவே பலிக்காதா?'

இட்ட உறவு எட்டு நாளைக்கு என்பார்கள். டாக்டர் நாகசுந்தரம் பத்திரிகைகளில் கொடுத்திருந்த விளம்பரத்தைக்கண்டு 'ஓடோடி' வந்தவர்கள் எட்டுநாட்களுக்கு மேலாகிவிட்டன. அனைவரும் அண்டி அணைந்த உறவினர்கள். காப்பி, பலகாரம், சாப்பாடு, வெற்றிலை பாக்கு, சுருட்டு அப்படி இப்படியென்று ராஜோபசாரம் நடந்தது. அவர்கள் கொடுத்து வைத்தவர்கள். ஆனால் ஒன்று—அவர்கள் டாக்டரிடம் மட்டும் எதையும் எப்போதுமே கொடுத்து வைக்கவில்லை.

சமையற்காரனுக்குரிய அலுவல்களை ஏவி முடித்துத் திரும்பினான் சடையப்பன்.

"ஏய் ஐயா, எங்க தாத்தாவுக்கு இப்ப எப்படி இருக்குது ?'' என்று வினச்சொடுக்கி மிடுக்குடன் நின்றான் சின்னப் பையன் ஒருவன்.

பாலசூரியனின் ஒளிக்கதிர்கள் சடையப்பனின் கண்களை உறுத்தின. அவன் விழி இணையினை மூடிமூடித் திறந்தபடியே, "எல்லாம் எப்பவும் போலத்தான் இருக்குது நீ

போ. உங்க அம்மா உளவு அறிஞ்சுக்கிட்டு வரச் சொன்னுங்களாக்கும்!...ஆபத்துக்கு உதவி ஒத்தாசை பண்ணவா இத்தனை படைங்களும் வந்து குமிஞ்சிருக்குதுங்க; எல்லாம் ஐயாவோட பணம் பண்ணுற வேலை! கிடைக்கிற பணத்தைக் கையிலே மடியிலே கொண்டுபோன மட்டும் ஆதாயந் தானே!" என்று தன் போக்கில் பேசிக்கொண்டேயிருந்தான். 'நீ போ!' என்றவுடன் நல்லபிள்ளையாகப் போய் விட்டான் அச்சிறுவன்.

வேலைக்காரன் சடையப்பனின் காதில் ஏதோ ஓதினுன் சமையலாள்.

"அட, நீ ஒண்ணு. கேக்கிறதைச் சத்தமாத்தான் கேட்டுத் தொலையேன் !"

"நீ என்ன ஐயா, என்னைப் போய்த்தொலையச் சொல்றே ?...என்னை நம்பி என் சம்சாரம், பிள்ளைகுட்டி எல்லாரும் இருக்காங்க ஐயா !"

"சரி, சரி. உனக்கு என்ன சந்தேகம் திடீர்னு முளைச்சிது ?"

"வந்து...நம்ம முதலாளிக்குக் கல்யாணம் காட்சி... ஒண்ணும்...! என்று கேட்கும்போதே, சமையற்காரனின் வார்த்தைகளை இடைவெட்டினுன் சடையப்பன்.

"ஊஸ், சத்தம் காட்டாதே. எனக்குத் தெரிஞ்ச வரைக்கும், எசமானுக்குக் கல்யாணம் அது இது எல்லாம் எப்பவோ நடந்திடுச்சாம். அவுங்க காலமாயிட்டாங்கண்ணு காதிலே சேதி விழுந்திச்சுது. இப்ப ஐயா ஒண்டிக் கட்டையாத்தான் இருக்காங்க. இந்த வீட்டுக்கு நான் வேலைக்கு வந்தும் ஒரு 'மகாமகம்' ஆயிடுச்சு. முந்தியெல்லாம் தொழில் முடிஞ்ச நேரங்களிலெல்லாம் ஐயா தனியே உட்கார்ந்துகிட்டு எதைப்பத்தியோ தீவிரமா யோசனை செஞ்சிக்கிட்டே இருப்பாங்க. இப்ப ஒரு வருசமாத்தான் ஆளைக் கீழே தள்ளிப்பிடுச்சிதே !.. எப்பிடிப்பட்ட கடல் கொள்ளாக் கவலையோ, என்ன காரணமோ ?..."

'செஞ்சோற்றுப்பணி' இயற்றுபவனைப் போன்று அவனது கண்ணீர் மடைகட்டி, மடைமீட்டு வெடித்து வடியத் தொடங்கிற்று.

"ஆமா; ஐயா பேப்பரிலே விளம்பரம் குடுத்திருக்காங் களாமே அது என்ன கதை?" என்று மற்றுமொரு புதிய ஐயப்பாட்டை உணர்த்தலானான் உணவுத் தயாரிப் பாளன்.

"அதுதான் எனக்கும் மூடு மந்திரமா இருக்குது. இம்பிட்டுப் பெரிய வீட்டிலே வந்து கூடியிருக்கிறவங்களை முதலாளி எதிர்பார்க்கலேன்னு புரியுது. ம், வேறே யாரை ஆவலாப் பார்க்கிறத்துக்குக் காத்துக்கிட்டிருக்கிறாரோ?—"

அந்தித் தென்றல் இதயத்தளத்திலே இதம் அளித்தது; அழிபட்ட வேதனைக் குமைச்சலை மறுமுறையும் கிண்டிக் கிளற எத்தனித்தது அழைப்பிதழ். தோட்டமும் தோட்டத்து நிழலில் மனிதனின் ஆயுளும் குறைபடுகிறது என்பது மெய் தானே? அப்படியென்றால், அந்த நிழலிலே தான் விதியின் கையெழுத்தும் அடங்கிக் கொள்கின்றதா?

'விதியாவது மண்ணாங்கட்டியாவது!'—டாக்டர் பற்களைக் கடித்துக் கொண்டார். விதியை மென்று துப்ப முனைந்திருக்க மாட்டார் அவர் காரணம் அவருக்கு அந் நிலையில் அத்துணைச் சக்தி ஊறிக்கிடக்கவில்லை என்பது தான்!

'மணமகன்: சிரஞ்சீவி டாக்டர் நாகசுந்தரம்—சௌ பாக்கியவதி டாக்டர் ஊர்மிளா' என்ற பெயர்கள் பளிச் சிட்டன; அப்பெயர்களுக்குத் தொடர்பாக எம். பி. பி. எஸ். என்னும் பட்டங்களும் ஒட்டி உறவு கொண்டிருந்தன.

முறுக்குக் கயிறு பிரி தளரும்போது, கயிறு மதிப்பை இழந்து விடுவது இயற்கை; அதுபோலவேதான், டாக்டர் நாகசுந்தரத்தின் நிலையும் நினைவும் அப்பொழுது இயங்கின; இருந்தன. ஒருவேளை, அதுவேதான் காலமெனும் புதிர்க் கயிறோ?

காரைக்குடி பஸ் ஒன்று தோட்டத்துச் சுற்றுச் சுவரை உரசியவாறு சென்றது. புழுதிப்படலம் விரிந்தது. டாக்டர் இருமத் தொடங்கினர். அடிவயிறு எம்பியது; இறங்கியது. கண்ணீர் வந்துவிட்டது; கைத்தடியை மண்ணில் பதித்தவராக, எழுந்தார். புதுமணத் தம்பதிகள் போய்க்கொண்டிருந்தனர். இதழ் நெளிவில் சிரிப்பு கரைகட்டியது. சென்னைமாநகரத்தின் நினைவு வந்தது; அங்கே ஓரிடத்தில் கட்டுக் கட்டாகக் கட்டிப் போடப்பட்டிருந்த திருமண அழைப்புக்களின் நினைவு அவருக்கு இனிக்கச் செய்ய முடியுமா, என்ன ?

"டாக்டர் ஸார் !"

நாகசுந்தரம் மெள்ள மெள்ள அடியெடுத்து வைக்கத் தொடங்கினர். "ஓ ! நீங்களா ? வாங்க டாக்டர் ஸார் !" என்று கைகுவித்தார்.

இரண்டாங்கட்டில் போடப்பட்டிருந்த மெத்தையிட்ட நாற்காலிகளிலே இருவரும் எதிரும் புதிருமாக அமர்ந்தனர். இன்னொருவர் அரசாங்க மருத்துவமனையில் வேலை பார்த்தார் ; உற்ற நண்பர்.

"மிக்சர், டாப்லட், இஞ்செக்ஷன் இப்படி எல்லாவற்றையும் நீங்க உதறித் தள்ளினல், என்ன ஆகிறது டாக்டர் ஸார் ?"

"இவையெல்லாம் என் உள்ளத்துக்கு ஒருபோதும் மருந்தாகாதுங்க, டாக்டர் பிராணதார்த்தி."

"நீங்க வயசிலே பெரியவங்க. வேறே இதைக்காட்டிலும் நான்..."

"உங்க அன்புக்கு மெத்தவும் வந்தனம். ஆமாம் ; இதைப் பார்த்திருப்பீங்களே, பிராணதார்த்தி ?"

"ஓ !"

"இந்த விளம்பரம் கொடுக்கப்பட்டதன் நோக்கம் இன்னமும் நிறைவேறவில்லை. நான் எதிர்பார்க்கும் ஓர் உருவதனை நான் கண்டுவிட்டால், அப்புறம் என் ஆவி நிம்மதியோடு அடங்கிவிடும் !"

" அந்த நபர் இருக்கும் இடம் ?"

" ஊஹூம், எதுவும் தெரியாதுங்க !..."

" அந்த நபர்...யார்...?..."

நாகசுந்தரத்தின் விழிநீர் பாய்ந்தது ; ஓடோடிப் பெருகியது.

" மன்னித்து விடுங்கள், டாக்டர் ஸார் !"

" மிஸ்டர் பிராணதார்த்தி, நீங்களும் என்னை மன்னித்து விடுங்கள் !"

விடை பெற்றுப் பிரிந்தபோது, வழக்கம் போல டாக்டர் பிராணதார்த்தியின் இதழ்க் கரையில் காப்பியின் சுவை தங்கியது.

முதல் தேதி.

பூர்த்தி செய்யப்பெற்ற பணம் அனுப்பும் தாள்கள் சிலவற்றை நீட்டினார் ஓர் இளைஞர்.

" எல்லாவற்றையும் சரியாகப் போட்டுவிட்டீர்களா, பால்ராஜ் ?"

" ஆமங்க, சார் !"

எல்லாவற்றிலும் தம்முடைய கையொப்பத்தை இட்டார் டாக்டர் நாகசுந்தரம். பள்ளம் கண்ட இடத்தில் தண்ணீர் தேங்கும். அதுபோல, தம்முடைய அன்பில் ஏழை எளியவர்களின் வறுமை தேங்கியதை எண்ணமிட்டார் ; தேங்கிய வறுமைக்கு விடிவு காட்டின அவரது தயாள மனமும் அறப் பண்பும். ஊர்பேர் தெரியாதவர்களின் உடல், உள்ளம் ஆகியவற்றைச் செம்மைப்படுத்திய நிகழ்ச்சிகள் கொத்துக் கொத்தாக முகிழ்த்தன.

" இரும்புப் பெட்டியைத் திறந்து, உங்களுக்கு இன்று அனுப்புவதற்குத் தேவைப்படக்கூடிய பணத்தை எடுத்துக் கொள்ளுங்கள், பால்ராஜ். அத்துடன், இருப்புப் பணம், 'பாங்க் பாலன்ஸ்' ஆகியவைகளின் புள்ளிவிவரத்தையும் இன்றைக்கு இரவிலே எனக்குச் சொல்லவேணும் !"

"நல்லதுங்க!"

அப்பொழுது, வான் கண்ணில் சூடு பறந்தது.

புதிய காரொன்று வந்து நின்றது. சடையப்பன் வந்து தகவலைத் தெரிவித்தான். டாக்டர் நாகசுந்தரம் சாய்மானத்தில் சாய்ந்தவாறு தம்மைச் சரிசெய்து கொண்டார். நரை கண்ட இழைகளைக் கோதிவிட்டார்; அலமாரியில் பதிந்த கண்ணாடியில் அவரது உருவம் தெரிந்தது. அவர் வேறு புறம் திரும்பினார். பட்டம் ஏந்திய தருணம் எடுக்கப்பட்ட படம் இருந்தது. பட்டத்து இளவரசர் போலல்லவா இருக்கிறது படம்?

ஐம்பது வயதை எட்டிக் கொண்டிருந்த தம்பதியாக அவரும் அவளும் இணைந்துவந்து நின்றகோலம் நாகசுந்தரத்தின் விழி விரிப்பில் தெரிந்தது. அம்மணி முதலில் கரங் குவித்தாள்; அப்பால், அந்த மனிதர் வணக்கம் தெரிவித்தார்.

"உட்காருங்க!" என்றார் நாகசுந்தரம்.

"நான்தான்..." என்றவாறே அவள் ஆசனத்தை ஆட்கொண்டாள்; ஒட்டினாற்போல அவர் அமர்ந்திருந்தார்.

"தெரியுமே!......பத்மாவதி! உங்க ரெண்டு பேர் கல்யாணத்துக்கும் கோயமுத்தூருக்கு வந்திருந்தேனே!" என்று சிரித்தார் அவர்.

ஒரு காட்சி மாற்றம்:

இதே பத்மாவதியிடம் இருபத்திரண்டு வருஷங்களுக்கு முந்தி போய், டாக்டர் நாகசுந்தரம் பேசலுற்றார்: "பத்மாவதி, நீ என்னை மன்னித்துவிடு. உனக்கும் எனக்கும் ஏற்பாடாகியிருக்கும் திருமணம் நடக்காது; என் இதயத்தில் ஒரே ஒருத்திக்குத்தான் இடம் உண்டு. அந்த இடம் யாருக்காக உரிமைப்பதிவு செய்யப்பட்டிருந்ததோ அந்தப் பெண்ணை என்னிடமிருந்து விதி பிரித்துவிட்டது. மனம் ஒன்றுபட்ட எங்களின் ஜாதகங்கள் பொருந்தவில்லை யென பெண்ணின் தந்தைக்கு வேண்டிய சோதிடர் ஒருவர் பயங்

காட்டிவிட்டார். அச்சடிக்கப்பட்ட கல்யாணப் பத்திரிகைள் மூட்டையாகக் கட்டப்பட்டு மூலையில் வீசப்பட்டன. என் உள்ளக் கோயிலில் உருப்பெற்று வீற்றிருக்கும் அந்தச் சுவர்ண விக்கிரகத்தின் நினைவு ஒன்றே என்னை வாழ வைத்துவிடும். ஆகவே, நீ என்னை மறந்துவிடு. உன் தந்தையிடம் நானே வந்து சொல்லி உன்னை வேறிடத்தில் கட்டிக் கொடுக்க ஆவன செய்வேன். என்னைத் தயவு பண்ணி மன்னித்துவிடு, பத்மாவதி!"

பத்மாவதியும் நாகசுந்தரமும் ஓடிக்கொண்டிருந்த மனத்திரைப் படக் காட்சிகளில் லயித்திருந்தனர் போலும்!

"பத்திரிகையிலே பார்த்தேன். மனசு கஷ்டப்பட்டுப் போச்சு. இவுங்களையும் அழைச்சுக்கிட்டு அதுதான் ஓடியாந்தேன்" என்றாள் பத்மாவதி. வைரங்களுக்குக் கண் ஒளி மிகுதி ஆயிற்றே!

டாக்டருக்குக் கண் கூச்சம் உண்டாயிற்று: "ம்!"

"அடுத்த வாரந்தான் நீங்க ஊருக்குப் போகணும். இது உங்க வீடு மாதிரி!"

உம்மை வினைப் பயனை ஆய்ந்துணர எத்தனிப்பவர் போன்று, டாக்டர் தம் மார்பில் அந்த நாடிக்குழலைப் பொருத்திப் பார்க்கத் தலைப்பட்டார். அவர் தலை கனத்தது; அது உள்ளத்தின் சுமையோ, என்னவோ? 'ம்; என் கனு இனி எங்கே பலிக்கப் போகுது?...' அவர் பச்சைக் குழந்தை யென விம்மலானார்.

வெறும் உயிலும் கையுமாக வீற்றிருந்தார் வக்கீல். பால்ராஜ் நின்று கொண்டிருந்தான். அவன் கையில் கணக்குகள் தாங்கிய தாள் இருந்தது.

"பால்ராஜ், கூட்டுப் புள்ளி மொத்தத் தொகை என்ன சொன்னீங்க?" என்று கேட்டார் டாகடர் நாகசுந்தரம்.

"எல்லாம் சேர்ந்து எண்பதாயிரத்து அறுபது ரூபாய்க்கு நெருங்குதுங்க!"

"பால்ராஜ் இந்த லிஸ்ட்படி அவரவர்களுக்குப் பணத்தை இப்போதே பட்டுவாடா செய்து விடுங்க; பாங்க்

பணம் எழுபதாயிரத்தையும் இவ்வூர் அனுதைப் பிள்ளைகளின் விடுதிக்கு தானம் கொடுத்துவிட உத்தேசத்திருக்கிறேன். இப்போதே, வக்கீலிடம் சொல்லி உயில் எழுதி விடுங்கள். கையெழுத்திட்டு விடுறேன்!"—மேல் மூச்சு கீழ் மூச்சை முட்டியது.

உயில் உருவாகிக் கொண்டிருந்தது.

டாக்டர் நாகசுந்தரம் சுற்றிச்சூழ நோக்கினுர். நூல் அலமாரி சுழன்றது; உடற் கூறு நூல்கள் சிரித்தன; ஊசிக்குழாயும் நாடிக்குழலும் அவரது பார்வையிலிருந்து நழுவிக்கொண்டிருந்தன. மருந்துச் சீசாக்கள் குலுங்கிய பீரோ ஆடாமல் ஆசையாமல் நின்றது. வளர்ந்த தஞ்சை மண்ணும் வளர்த்த காவிரியும் படித்த சென்னையும் பணம் சேர்த்த பல்வேறு ஊர்களும் பட்டியல் போட்டுக் காட்டின. உரிமைக்கு உறவுகாட்டிய பாசம் பிணைத்துப் பங்கு கோருகின்றனவா அவை? டாக்டர் நாகசுந்தரம் படுக்கையில் சாய்ந்தார்!

பிற்பகல் மணி: இரண்டு—நிமிஷம்: நாற்பது—விஞடி: மூன்று!

வெள்ளை உடுத்து வந்தது ஓர் உருவம். "டாக்டருக்கு எப்படி இருக்குது?" என்று கேட்டாள் அவள்.

குரல் குறுக்கிட்ட நேரம் நல்லநேரம். டாக்டர் நாகசுந்தரம் கண்மலர்ந்தார். வேர்வை வேலிகட்டியிருந்தது; கண்ணீர் கரை அமைத்துக் கொடுத்தது; மலர்ச் சிரிப்பு இழையோடியது. "ஆகா!...வந்திட்டியா?......என்னுடை கனவு பலிச்சுப் போச்சு! அப்பனே, எல்லாம் உன் அருள் தான்!" என்று தம்மை மறந்து பேசினுர் அவர். படுத்திருந்தவர், கண்களைச் சுழற்றிய மயக்கத்தையும் தூரத் தள்ளி விட்டு, புத்தம் புதிய உத்வேகத்துடனும் உற்சாகத்துடனும் எழுந்து உட்கார்ந்தார் நாகசுந்தரம். மறுபடியும் அவருக்குக் குமிழ்நகை பீறிட்டது.

வந்தவள் மெய் நடுங்க நின்றுகொண்டேயிருந்தாள்; வலதுகாற்பெருவிரலைக் கொண்டு, வழிந்து சிதறிய

கண்ணீர் மணிகளை ஒதுக்கிக்கொண்டிருந்தாள் அவள். 'யாத்திரை போகாமல் இருந்திருந்தால் அந்த விளம்பரத்தை நல்ல சமயத்திலே பார்த்திருப்பேனே!...பாவம்!'

"உட்கார், ஊர்மிளா!"

ஊர்மிளா உட்கார்ந்தாள். அவளையே இமைமூடிய வண்ணம் பார்வையிட்டார் நாகசுந்தரம். வைத்தியக் கல்லூரி வாழ்வில் கனிந்த ஊர்மிளாவின் அறிமுகத்தையும் அவளது பண்பும் எழிலும் கைமயக்காகி—வசிய மருந்தாகி தம்மை ஆட்கொண்டதையும் எண்ணமிட்டாரா அவர்? இல்லை; யுவதியின் சதியை நினைத்தாரா?

பிறிதொரு எதிர்பாராச் சந்திப்பு.

டாக்டர் நாகசுந்தரம் மாயவரம் சந்திப்புக் கூடத்திலே டாக்டர் ஊர்மிளாவைச் சந்தித்தார். விதி பிரித்துவிட்டதற் கப்பால், பலமாதங்கள் கழித்து இருவரின் சந்திப்பும் வாய்த்தது. தாம் வேறூர் இடத்தில் பெண் பார்த்துத் திருமணம் செய்து கொண்டதாகவும், சுகமாக இருப்பதாக வும் தெரிவித்தார் டாக்டர். அது 'பொய்' என்று அவளுக்கு எங்ஙனம் தெரியும்?

"நீ ?"

"நான் ஒரு எம். பி. பி. எஸ். டாக்டரையே மணந்து கொண்டிருக்கிறேன் !"

டாக்டர் நாகசுந்தரம் ஒருகணம் விம்மினார். ஊர்மிளா வின் வெண்நிறக்கோலம் அவரை அவ்வாறு ஆக்கியது. "ஊர்மிளா, உன் கணவர்...?" என்று மெல்லிய குரலில் கேட்க முனைந்தபோது, ஒருநாள் இதே ஊர்மிளா 'இருவரும் கல்யாணம் செய்துகொண்டால், நம்மில் யாராவது ஒருவர் —நீங்களோ, நானோ உடனடியாக இறக்க நேரிடுமென் கிறார் சோதிடர்!' என்று சுட்டிய பழங்கதை, சட்டை உரித்துக் காட்டியது. "ஊர்மிளா !...ஊர்மிளா !"

உயிலில் கையெழுத்து வாங்கவேண்டி வந்தார் பால்ராஜ்.

டாக்டர் நாகசுந்தரம் அந்த உயிலை வாங்கினர்; அதை அப்படியே மடித்துக் கசக்கி வீசமுனைந்தார் அவர். டாக்டர் ஊர்மிளா தடுத்தாள்.

"வக்கீல் ஸார், அந்த உயில் வேண்டாம்! கொஞ்சம் மாற்ற வேண்டும்! என் சொத்தில் பாதியை ஊர்மிளா..." என்று சொல்லிவரும்போதே, தொண்டையை அடைத்தது. ஊர்மிளா தண்ணீர் கொடுத்தாள். மறுகணம், "ஆமாம், உங்க சம்சாரம்...குழந்தை...எங்கே ?" என்று கேட்டாள் அவள்.

"நான் ஏகாங்கி, ஊர்மிளா!" என்று செருமத் தொடங்கினர் நாகசுந்தரம்.

"அப்படியா ?" என்று அதிசயப்பட்ட டாக்டர் ஊர்மிளா நெருங்கி வந்து டாக்டர் நாகசுந்தரத்தின் கரங்களைப் பற்றித் தன் கண்களிலே ஒற்றியபடி "அத்தான், உங்கள் சொத்தை உங்களிடம் ஒப்படைத்துவிட்டேன்! முன்பு ஒருமுறை உங்களிடம் நான் சொன்னதும் பொய்யே தான்!..." என்று கதறினள். அடுத்த பத்தாவது நிமிஷத்தில் டாக்டர் ஊர்மிளாவின் கழுத்தில் மஞ்சள் கயிறு திகழ்ந்தது.

டாக்டர் நாகசுந்தரம் ஆனந்தமாகச் சிரித்தபடி குறிச்சியில் சாய்ந்திருந்தார். உயிர்ச் சிரிப்பு!—

இப்போது, ஊர்மிளா நாகசுந்தரம் பேசலானர்: வக்கீல் ஐயா, கசக்கப்பட்ட அந்த உயிலின் வாசகப்படியே வேறொன்றைச் சீக்கிரம் தயாரித்து விடுங்கள். வியாதிகளைச் சொஸ்தப்படுத்துவதிலே தெய்வத்தின் அவதாரமாகத் திகழ்ந்தவர் என் அன்பு அத்தான்! அவரிடம் உள்ள பெருஞ் செல்வம், ஆதரவிழந்த அனுதைப் பிள்ளைகளுக்குப் பயன்படுவதே முறையான காரியமாகும்; என் இஷ்டமும் அதுவேயாகும். சென்னையிலே நான் வைத்தியத் தொழிலிலே சேமித்த பணத்தைக் கொண்டு அனுதை ஆசிரமம் ஒன்றை இப்பொழுது நடத்தி வருகிறேன என்பதையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்...!"

டாக்டர் சுந்தரத்தின் கை அந்த உயிலில் ஒப்பம் பதிக்க 'வேளை' பார்த்துக்கொண்டிருந்தது!

விதியின் கை தன் முத்திரையை டாக்டர் நாகசுந்தரம் அவர்களின் 'தலையெழுத்'திலே பதிக்க 'வேளை' பார்த்துக் கொண்டிருந்தது!

# தனிக்காட்டு ராணி!

மூன்றுமாத இடைவேளைக்குப்பின், பூவைமாநகர் சென்றேன். எந்தவிதப் புதுமாற்றத்தையும் அங்குக் காணவில்லை என்றாலும், பிறந்த மண் என்னும் பாசமும் பிணைப்பும் எனக்குப் புதுரத்தமாயின. இயந்திர மனிதனின் செயற்கையான மலர்ச்சிக்கு இயல்பாக புது மலர்ச்சி கிடைத்தது. போதுமே! ஊரில் என் வாழ்வில் பங்கு கொண்டவள், உடன் பிறந்த தங்கைகள், அவர்களின் செல்வக் குழந்தைகள், உற்றார் உறவினர் ஆகியவர்களும் என்னைப் பற்றிய பாசத்திலும் பிணைப்பிலும் பங்கு கொண்டவர்கள் ஆயிற்றே!

பட்டணத்தில் வாங்கிய துணிமணிகள், பழங்கள், பிஸ்கெட்டுகளை அவர்களுக்களிக்கப் பிரித்துக்கொண்டிருந்த எனக்கு ஏதோ ஒரு நினைவு உந்தியது; திரும்பினேன்; கூடத்துச் சுவரிலுள்ள அந்தப் போட்டோவில் அந்த அழகி சிரித்துக்கொண்டிருந்தாள். "சுபத்திரை!" என்ற ஐந்தெழுத்துப் பெயரை என் உள்மனம் மாத்திரம் கேட்கு மளவுக்குச் சொல்லிக்கொண்டேன்.

"அமிர்தம், வழக்கம்போல இதையெல்லாம் பங்கீடு செய்துக் கொடுத்துவிடு. குழந்தைகளை முதலில் கவனி. நான் கடைத்தெருப் பக்கம் போய் வருகிறேன். அப்படியே சுபத்திரையையும் பார்த்து வருகிறேன். இரண்டு ஆப்பிள்

பழங்களை மட்டும் தனியே எடுத்து வை" என்று சொல்லி விட்டு நான் உடை மாற்றினேன்.

"அத்தான், சுபத்திரை என்றதும் எனக்கு நினைவு வருகிறது. இதோ பாருங்கள் இதை..." என்று சொல்லி விட்டு, அமிர்தம் என்னிடம் கல்யாணப் பத்திரிகை ஒன்றை நீட்டினாள்.

"...சிரஞ்சீவி ஓப்பிலாமணிக்கும், சௌபாக்கியவதி சுபத்திரைக்கும்..." என்ற வரிகளை மட்டுமே நான் பார்வை யிட்டேன். மகிழ்வு துளிர் விட்ட என் மனத்தில் ஒருவித நிம்மதியும் படர்ந்தது. சுபத்திரையும் அவள் காதலனும் நீடுவாழ என் மனம் எண்ணமிட்டது. நினைவுகள் பசுமை பெற்றன.

இளைஞர் சங்கப் பாதை என்றால் எங்கள் ஊருக்குப் பெரிய ராஜ வீதி பட்டபாடுதான். கதர்க்கடை, பள்ளிக் கூடம், ஜில்லா போர்டு, ஆஸ்பத்திரி எல்லாம் அங்குதான் உண்டு. அப்படிப்பட்ட இடத்தில் தான் அந்த டீக்கடை இருந்தது. டீ என்றால் அப்படிப்பட்ட டீ! சுபத்திரையின் தளிர்க்கரங்கள் தயாரிக்கும் 'சாயா'வென்றால் பின் சும்மா வா? சுபத்திரையின் விதவைத் தாய்க்கிழவிதான் கடைக் கல்லாவுக்குப் பொறுப்பு. மற்றப்படி எல்லாவேலைகளும் சுபத் திரையின் பொறுப்புத்தான். சுபத்திரை நல்ல அழகு; பட்டிக்காட்டில் இடம் தவறிப் பிறந்துவிட்ட அழகு ரோஜாவை நான் 'காட்டு ரோஜா' என்றுதான் அழைக்க வேண்டியிருக்கிறது. கள்ளங்கபடின்றி சதா ஓடியாடித் திரி யும் வானம்பாடி அவள்; வயதையும் தாண்டி வம்பளக்கும் குணம் அவளுக்கு உண்டு. தூய்மை படிந்த உள்ளம். எங்கள் சுற்று வட்டத்தின் ராணி! ஆம்; தனிக்காட்டு ராணி!...அவள் என்றால் எனக்கு உயிர். உடன் பிறந்தது போல ஒரு கூட்டுறவு: சிநேகிதியின் பாங்கில் பழகும் ஓர் இணைப்பு. அப்பொழுது வேலைபார்த்த பத்திரிகையில் அவளுக்கும் ஒவ்வோர் இதழ் அனுப்புமாறு கேட்டுக் கொண்டாள். நான் லீவுக்கு வரும் போதெல்லாம் அவள் ரசனையை என்னிடம் விமரிசனம் செய்வாள்.

"ஸார், நீங்க ரொம்ப பெரிய ஸார்தானுக்கும்! ஒவ்வொரு கதையிலும் உங்களுக்கு என் பெயர்தானு அகப்பட்டது? என்னையே அச்சாய் அப்படியே படம் பிடிச்சு அழகா வர்ணிக்கிறீங்களே...! அப்படின்னு, பட்டணத்துக்குப் போனுக் கூட உங்க அமிர்தம் ஆச்சியோடு என்னையும் நினைத்துக் கொள்வீங்களா, ஸார்?..." என்று இப்படி என்னவெல் லாமோ பேசுவாள்.

"சுபத்திரைக்கு வாய்ப்பூட்டுப் போட, என்றுதான் சிலோனிலிருந்து அந்த ஒப்பிலாமணி வரப் போகிருனே...? வரட்டும், வரட்டும் என்ன சுபத்திரை, அவனுக்கு ஒரு தந்தி கொடுத்து வைக்கட்டுமா...?" என்று நான் சொன்னது தான் தாமதம், அவள் முகம் குங்குமச் சிவப்பேறி ஒளிவிட்டு நிற்கும்.

ஒப்பிலாமணியைப் பற்றிச் சொல்ல வேண்டாமா? எங்களூர் ஆவுடை அம்பலக்காரரின் ஒரே பிள்ளை அவன். இளங்காளை. நல்லபடிப்பு. சின்ன வயசில் அக்கரைச் சீமைக்குச் சென்றவன்; ஆறு வருஷங்கழித்து அப்பொழுது தான் திரும்பினுன். ஒப்பிலாமணிக்கு 'முறைப்பெண்' சுபத் திரை. அவனுக்கு அவள் அத்தை பெண். பருவ வயதை எண்ணி, அம்பலமும் தன் தமக்கையிடம் ஆலோசித்து, 'குழந்தைகளின்' கல்யாணத்தை நடத்திவிட வேண்டு மென்று தீர்மானம் பண்ணினுன். அதன் பேரில்தான், தந்தி கொடுத்து, ஒப்பிலாமணியை அக்கரைச் சீமையிலிருந்து வரவழைத்திருந்தனர்.

"அத்தான், உங்களுக்குச் சேதி தெரியாதா?... நம்ப சுபத்திரைக்கும் ஒப்பிலாமணிக்கும்..."

"அதுதான் 'இன்விடேஷனைப் பார்த்தவுடனேயே புரி கிறதே, அமிர்தம்! பொங்கல் கழித்து, அடுத்த வாரம் தங்கி சுபத்திரை — ஒப்பிலாமணி கல்யாணத்துக்கு இருந்து விட்டுத்தான் 'மெட்ராஸ்' புறப்படப் போகிறேன்...!"

அமிர்தம் இடை மறித்தாள்.

"அத்தான், நான் சொல்ல வந்ததையும் கொஞ்சம் கேளுங்களேன்! சுபத்திரை—ஒப்பிலாமணி கலியாணம்

நல்லபடியாக நடந்து முடிஞ்சுவிட்டால், அது மாரியம்மன் தெய்வத்தின் கிருபைதான்! நேற்று ராத்திரி நம் ஊரே அமளிப்பட்டுவிட்டது. மஞ்சி விரட்டுக்காக நாட்டாண்மைக் காரர் கூட்டம் போட்டபோது, சிலட்டூர் கங்காணி வீட்டுப் பூரணிக்காளையை யாராலே பிடிக்க முடிகிறதோ என்ற பேச்சுத் தொடங்கியதாம். இளவட்டங்களும் சின்னஞ் சிறிசு களும் ஆண்களும் பெண்களுமாகக் கூடிக் கூடிப் பேசினார் கள். அப்பொழுது ஒப்பிலாமணி எழுந்து இளமீசையைக் கோதிவிட்டபடி, "நான் மஞ்சி விரட்டிலே கங்காணியின், பூரணியைப் பிடிச்சு, சாயத் துணியை அவிழ்த்து, பரிசுப் பணத்தையும் தட்டிக்கிட்டுப் போயிடறேன்..." என்றான்.

இந்தப் பெண் சுபத்திரை மருக்கொழுந்து வாசனை காட்டி வந்தவள், அந்த ஊர்க்கூட்டத்திலுமா தன் குறும் பைக் காட்டவேணும்? உடனே அது எழுந்து, "ம்...சும்மா வீராப்பு பேசாதீங்க, மச்சான்! உங்களுக்கு முன்னாடி அந் தப் பூரணியை நான்தானுக்கும் பிடிச்சுக் கெலிக்கப் போறேன்......" என்று பதில் சவால் விடுத்தது! காதலர் க்ளுக்குள் எழுந்த விளையாட்டுப் பேச்சு கடைசியில் இப்படி வினையாக முளைக்குமென்று யாருமே நினைக்கவில்லை. ஒப்பி லாமணி கோபத்துடன் திரும்பி, "சுபத்திரை, உன் சப தத்தை நெஞ்சிலே எழுதிவச்சுக்க. மஞ்சி விரட்டிலே அந்தப் பூரணிக் காளையை நான் பிடிச்சு வெற்றி கொண் டால்தான், உன் கையை நான் பிடிப்பேன், கெட்டுமேளம் முழங்க!...மாரியம்மன் பேரிலே ஆணை இது...!......" என்று கனத்த குரலில் பேசினான். பதிலுக்கு அந்தப் பெண்ணும் "நாளையப் பொழுது விடுஞ்சு மஞ்சிவிரட்டிலே பாத்தாத்தான் தெரியப் போகுதே நீங்க கெலிக்கிறீங்களா, இல்லே இந்தக் குட்டி கெலிக்கப் போவுதான்னு......! உங்க சபதத்துக்கு இந்தப் பொண்ணு ஒண்ணும் மலைச்சிடாது, மச்சான்! நான் மஞ்சிவிரட்டிலே வெற்றி கண்டால்தான், நானும் உங்களைக் கண்ணாலம் கட்டிக்குவேன்......! இதுவும் ஆத்தா பேரிலே வச்சுச் சொல்லுற ஆணைதான்...!" என்று மஞ்சள் பூசிய வதனம் சிவக்க எதிர்ச் சபதமும் ஆணையும் சொல்லிவிட் டாள்...! இதுதான் நடந்த கதை. அடுத்த வாரம் புருஷனும் பெண்டாட்டியுமாக ஆகவேண்டிய ஒப்பிலாமணியும் சுபத்தி

ரையும் இப்படிக் கீரியும் பாம்புமாக ஆகிவிடுவார்களென்று யார்தான் எதிர்பார்த்திருக்க முடியும்? பாவம்!...மாரியம்மன் தான் இந்தக் காதலர்களின் பிணக்கை ஒரு வழியாக 'ராசி' பண்ணி, அத்தோடு அவர்களிருவரையும் தம்பதிகளாகவும் ஆக்கிக் கருணை புரிய வேண்டும்!...

மௌனப் பிள்ளையாராக நான் நின்றேன். என் நிலையில் அதிசயம், ஆச்சரியம், திகைப்பு, புதிர் எல்லாம் ஏகமனதாகக் குரல் கொடுத்தன.

'கொட்டு முழங்க, பெரியோர்கள்முன் கணவன் மனைவியாகத் தகுந்த ஆனந்த வேளையை ஆசையுடன் வரவேற்றுக்கொண் டிருந்த ஒப்பிலாமணியும் சுபத்திரையும் இப்படிச் சபதமும் ஆணையும் பரிமாறிக் கொண்டிருக்கிறார்களென்றால் அதன் முடிவுதான் என்ன? அவன் நெஞ்சில் அவள் ஒருத்திக்குத்தானே இடமுண்டு! அதே போலத்தான் அவள் நெஞ்சிலும் அவன் ஒருவனுக்கே இடமுண்டு! அறியும் பருவம் வந்த நாள்தொட்டே இரு உள்ளங்களும் ஒன்றாகப் பின்னிப் பிணைந்துவிட்டனவே! அமிர்தம் சொல்வது மாதிரி இந்த முடிவுக்கு நல்ல தீர்ப்பு வழங்கி, அவர்கள் இரண்டு பேரையும் ராசிபண்ணும் சக்தி தெய்வத்திற்குத்தான் உண்டு! தாயே, கருணை பொழி! வளர்ந்த காதல் வாழவும் வழி செய்!...'என்று என் மனத்தின் மனம் பிரார்த்தனை செய்தது.

அமிர்தம் காப்பி கொணர்ந்தாள். ஒரே மடக்கில் ஊற்றிக்கொண்டு புறப்பட்டேன். ஒப்பிலாமணியையும் சுபத்திரையையும் தனித்தனியே கண்டு பேசினால்தான் எனக்கு மனம் ஒரு நிலைப்படும். என்மீது பிரியம் வைத்துள்ளவர்கள், என் எழுத்தில் நாட்டம் கொண்டவர்கள் வழியில் என் வரவு குறித்து விசாரித்தார்கள்; தலையை ஆட்டிப் புன்னகை உதிர்த்த வண்ணம் நான் நடந்துகொண்டிருந்தேன்.

நினைத்தபடி, ஒப்பிலாமணியைச் சந்தித்தேன். அவனது முகத்தில் பொலிவு இல்லை; தீவிர சிந்தனையிருந்தது.

"ஒப்பிலாமணி! அமிர்தம் சொன்னாள் விஷயம் பூராவையும். சுபத்திரைதான் சின்னப் பெண் என்றால் நீ விவரம்

புரிந்த பிள்ளை, இப்படிக் கோபப் படலாமா? நாளை கணவனும் மனைவியுமாகப் போகிற உங்களுக்குள் கல்யாணத்துக்கு முந்தியே இப்படி ஊடல் விளைந்து விட்டால்...'' என்று மெல்லச் சிரித்தேன்.

“ஸார், நீங்க நையாண்டி பண்ண ஆரம்பிச்சிட்டீங்களே?...ஆனா இந்தச் சங்கதியிலே கேலிக்கும் கூத்துக்கும் வழியே இல்லீங்க. நேற்று நடந்த சேதியிலே என் பேரிலே இம்மிகூடக் குற்றம் கிடையாது. மஞ்சி விரட்டிலே நான் கங்காணியின பூரணியைப் பிடிச்சு, சாயத் துணியையும் பரிசுப் பணத்தையும் அடைவேன்னு சொன்னேன். இதிலே அந்தக் குறும்புக்காரக் குட்டி குறுக்கிட்டுப் பேசி, என்னாலே காளையைப் பிடிக்க ஏலாதுன்னு எதிர்ச்சவால் விடுக்க, ஏதுங்க நியாயம்? மஞ்சிவிரட்டிலே காளையை அதுதான் பிடிச்சுக் கெலிக்கப் போவுதாம். கெலிச்சாத்தான் என்னைக் கட்டிக்குமாம்......பார்க்கலாமே, யார் ஆணையும் சபதமும் நிறைவேறுதின்னு! ஸார், என் வாக்கைக் காப்பாத்தினால் தான் நாளைக்கு என் வயசுப் பையன்கள் முன்னே நான் தலைகாட்ட முடியும்? மஞ்சிவிரட்டிலே நான் வெற்றி கண்டாத்தான், சுபத்திரையையும் கைப்பிடிப்பேன். என் ஆணையும் நிறைவேறும்......! நீங்களே சொல்லுங்க, ஊர்க்கூட்டத்திலே ஒரு பொண்ணு என்னைச் சவால் விடுகிறதுன்னா என் மனம் பொறுக்குங்களா?... ஆத்தா எழுதியிருக்கும் விதிப்படிதானே அத்தனையும் நடக்கும்?...நான் வரேனுங்க...!”

ஒப்பிலாமணியின் பேச்சில்தான் எத்தகைய ஆத்திரம் கொந்தளிக்கிறது? சொன்ன சொல்லுக்கு, சுபத்திரையின் சார்பில் ஆறுதலும் அமைதியும் கூறக்கூட வழி வைக்காமல் பேசிய பேச்சுடன் மறைந்து விட்டானே...!

சுபத்திரையைப் பார்த்தேன். வழக்கமாகக் கோலமிடும் அத்தனை குறும்பும் இப்போது அவளிடமிருந்து எங்குத்தான் விடை பெற்றுச் சென்றுவிட்டதோ? அழகைத் துணை கொண்டிருந்தவள் அப்போது தனிமையைத் துணை கொண்டாள்!...

"சுபத்திரை, ஆனாலும் நீ இன்னமும் இப்படி விளையாட்டுப் பெண்ணாக இருக்கக்கூடாது. உன் விளையாட்டு கடைசியில் விணையாகிவிட்டதைக் கண்டாயல்லவா?...ம்...!"

"ஐயா, பட்டணத்திலேருந்து வந்ததும் உங்களுக்குச் சேதி எட்டிப் போச்சுதா? ம்... குற்றம் என்னவாம் எம் மேலே?...மஞ்சிவிரட்டிலே கங்காணி வூட்டுக் காளையை அவர் பிடிச்சிடுறேன்னு சொன்னார். நான் எழுந்திருச்சு, உங்களுக்கு முன்னாடி நான்தானுக்கும் அதைப் பிடிக்கப் போறேன்னு விளையாட்டுக்குச் சொன்னேன். என் பேச்சைத் தப்பாப் புரிஞ்சுக்கிட்டு, ஆணை வச்சிருக்காரு அவர். காளையைப் பிடிச்சு வெற்றி காட்டினாத்தான் இந்தக் கன்னியைப் பிடிப்பாராம். நாலு பேரு முன்னாடி என்னைக் கிண்டல் செஞ்சவுடனே எனக்கும் ஆத்திரம் வந்திச்சு. நானும் பதிலுக்குச் சபதமும் ஆணையும் சொன்னேன். ஆமாங்க ஐயா! நாளைக்கி மஞ்சிவிரட்டிலே பூரணிக் காளையை அவருக்கு முந்தி நானே பிடிச்சு, பரிசுப் பணத்தையும் சாயத் துணியையும் அடைஞ்சாத்தான், அப்பாலே அவர் முன்னாலே முழிப்பேன்...நானும அவரைக் கண்ணாலம் கட்டிக்கிடுவேன்...! என் தலை எழுத்துப்படிதானே நடக்கும்...!"

கனல் தெறிக்கப் பேசிவிட்டு, ஓட்டமாய் ஓடி விட்டாள் சுபத்திரை. நான் இந்தப் பெண்ணையாகிலும் சமாதானப் படுத்தி, தன் சபதத்தை மறந்து, மஞ்சிவிரட்டில் கலந்து கொள்ளாதிருக்கும்படி சொலலலாமென்றால், அதற்குள் சிட்டுக்குருவி பறந்து விட்டதே!

ஒப்பிலாமணியின் தந்தையையும், சுபத்திரையின் தாயையும் கண்டேன். "தம்பி, நாங்களும் எம்பிட்டோ சொன்னோம் தனித்தனியே ரெண்டு பேரு கிட்டேயும். ரெண்டும் தன் ஆணையிலேயும் சபதத்திலேயும்தான் கண்ணாயிருக்குதுங்க. விளையாட்டு கடைசியா விணையாகிடுமோன்னு நாங்க பயந்து நடுங்கிறோம். மஞ்சி விரட்டிலே கங்காணி வீட்டுக் காளையைக் கட்டிப் பிடிக்கிறதுன்னா சாமானியமா? எந்தப் பயலாலேயும் ஏலாது; அந்தப் பொண்ணாலேயும ஏலாது. ஆத்தா மேலேதான் பாரத்தைப் போட்டுக் குந்தியிருக்கோம், பத்துநாளிலே அவங்க ரெண்டு

பேரும் மணவறையிலே உட்கார வேண்டியவங்க. ஆத்தா தான் நல்லவழி காட்டவேணும்...'' என்ருர் அம்பலம். 'ஆமாங்க' என்ருள் கிழவி.

திரும்பிக் கொண்டிருந்தேன்! 'கங்காணியின் பூரணி என்ருல் எங்கள் பதினுறு நகரத்திலும் சிம்ம சொப்பனமாயிற்றே; யானைத் தந்தம் போன்ற இரண்டு நீண்ட கூரிய கொம்புகள் திகழ, பயங்கரத் தோற்றமுடன் உள்ள அந்தக் காளையைப் பிடித்து, அதன் கழுத்திலுள்ள சாய வேஷ்டியை அவிழ்த்து, அதில் முடிந்திருக்கும் நூறு ரூபாய்ப் பணத்தை அடைந்து வெற்றிக் கொடி நாட்டுவ தென்ருல் லேசான காரியமல்லவே! எங்கிருந்தெல்லாமோ மஞ்சிவிரட்டில் கலந்து கொள்ள வீராதி வீரர்களும், சூராதி சூரர்களும் வருவார்களே! இவர்கள் முன் இந்த ஒப்பிலா மணியும் பேதைப்பெண் சுபத்திரையும் எம்மாத்திரம். ஆனுல், அவர்கள் இருவரும் போட்டிருக்கும் சபதத்தின் முடிவு - ஆணையின் தீர்ப்பு? தான் வெற்றி பெற்ருல்தான் ஒப்பிலாமணி சுபத்திரையைக் கரம் பற்றுவானும்; சுபத் திரை வெற்றி கொண்டால்தான் ஒப்பிலாமணிக்கு வாழ்க் கைப் படுவாளாம்! ஆக, இந்த இரண்டு பேருக்கும் வெற்றி கிட்டினுல்தான் இவர்கள் இருவரும் தம்பதிகள் ஆகமுடியும்! எப்படி முடியும்? ஒரே போட்டியில் இருவர் வெற்றி அடை வதா? முடியவே முடியாதே? அப்படியென்ருல் இவர்களது திருமணம்!... தெய்வமே...!' என்ற நினைவுகள் நெஞ்சில் சுழன்ருேடின; நான் சுழன்றேன்.

நான் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு நின்று கொண்டிருந்தேன்!

அன்றுதான் மஞ்சிவிரட்டு. பள்ளிக்கூடத் திடலில் ஆண்களும் பெண்களுமாக நிரம்பி வழிந்தனர். பொங்கல் புடவைகள் சலசலத்தன; கரும்புகள் வாண்டுகளின் ரச னைக்குப் பாத்திரமாயின.

நாலா பக்கங்களிலுமிருந்த மாடுகள் பொட்டலின் நடுவே கட்டப்பட்டன. கங்காணியின் பூரணிக் காளையைக் கொண்டுவந்து, தானே கட்டினுர் கங்காணி. அவர் என்ருல்

தான் பூரணி அடங்கும். கரும்புத் துண்டுகள், தேங்காய் மூடிகள் குலுங்கிய அதன் கழுத்திடை சாயவேட்டி, பரிசுப் பணம் ரூபாய் நூறு எல்லாம் அழகுடன் திகழ்ந்தன. வர்ணம் பூசப்பட்ட கொம்புகள் இரண்டும், இளம் வெய்யிலில் ஒளி உமிழ்ந்து மின்னின.

பறை. தம்பட்டம் முழங்கின. மஞ்சிவிரட்டுக்கான தீபாராதனை நடந்தது. சூழநின்ற மாட்டுக் கும்பலுக்கு நடுவில் தீ கொழுந்துவிட்டெரிந்தது.

தலை நிமிர்ந்தேன்.

ஒரு பக்கம் தலையில் கட்டிய முண்டாசுடன் ஒப்பிலாமணி மாட்டைப் பிடிக்கக் கண்ணில் எண்ணெயை ஊற்றிக் கொண்டு காத்திருந்தான்.

எதிர்ப் பக்கத்தில், சேலையை இழுத்துக் கட்டிக் கொண்டு சுபத்திரை பூரணியை பிடித்து வெற்றிகாட்டக் கருத்துடன் நின்று கொண்டிருந்தாள்.

அருகருகே மஞ்சிவிரட்டில் முன்னர் பரிசுபெற்றவர்களான ஆவணத்தான் கோட்டை ஆனந்தன், சிலட்டூர் சின்னையா, அறந்தாங்கி அருணசலம், பூவத்தக்குடி பூபாலன் எல்லோரும் பூரணியின் மேல் பதித்த கழுகுப்பார்வையுடன் தயாராக நின்றார்கள்.

அந்த ஒரு கணத்தில் மைதானம் அமளி துமளிப்பட்டது. மாடுகள் அவிழ்த்துவிடப்பட்டன.

கங்காணியின் பூரணிக் காளை சிங்கம்போல 'ஜம் ஜம்' என்று பறந்தது. பரிசில் நாட்டம் கொண்டவர்கள் பறந்தார்கள். சபதமும், ஆணையும் பரிமாறிக்கொண்ட ஒப்பிலாமணியும் சுபத்திரையும் பூரணியைத் தொடர்ந்தார்கள்.

நான் ஓடினேன். என் கடமை ஓடியது.

ஒப்பிலாமணிக்கு வேண்டிய ஆடவர்கள், "பலே ஒப்பிலாமணி...ம்...அவ்வளவுதான் கெலிப்பு உனக்கேதான்... ஓடு..." என்று உற்சகத்துடன் கூக்குரல் இட்டார்கள். சுபத்திரைக்கு வேண்டிய பெண்டிர் குழாம் அவளுக்குத்

தைரியமூட்டி, ஓசைப்படுத்தினுர்கள், "சபாசு, சுபத்திரை! ஓடு...நீதான் வீராங்கனையாகப் போகிருய். பரிசு உனக்கே தான்!" என்று.

நான் யாருக்கு உற்சாகமூட்ட முடியும்? இரண்டு கண் களும் எனக்கு ஒரு மாதிரி அல்லவோ? தெய்வமே! விஷப் பரீட்சையாகி விடமாட்டாதே என் கனவு.

பூரணியை நெருங்கிப் பிடித்துவிட்டனர் ஒப்பிலாமணி யும் சுபத்திரையும்!

நான் கண்களைத் திறந்தேன்.

ஒப்பிலாமணியும் சுபத்திரையும் என் முன் நின்ருர்கள்.

"ஸார், நான்தான் ஜெயித்தேன்!" என்ருன் ஒப்பிலா மணி.

"ஐயா, நான்தான் ஜெயித்தேன்!" என்ருள் சுபத் திரை.

"என்ன, அதிசயக் கூத்தாக இருக்கிறதே! ஒரே சம யத்தில் நீங்கள் இருவரும் ஜெயிப்பதாவது?" என்று கேட் டுக் கொண்டே, இருவரையும் பார்த்தேன். என்ன ஆச்சரி யம்! ஒப்பிலாமணியின் கையில் ஒரு சாயத்துண்டும், நூறு ரூபாய் நோட்டும் இருந்தது! அதேபோல, சுபத்திரையும் அதேமாதிரி சாயத்துண்டும, நூறு ரூபாய் நோட்டும் வைத் திருந்தாள்!

அப்பொழுது ஒப்பிலாமணியும் சுபத்திரையும் அதிசயம் குமிழ்விட, ஆச்சரியம் புதிர்போட, ஒருவரை யொருவர். பார்த்துக் கொண்டார்கள்.

"நான்தான் முதலில் வெற்றிக் கொண்டவன்; சுபத் திரையிடமுள்ள சாயத்துணியும் பணமும் கங்காணியுடைய தில்லை. இதிலே ஏதோ சூது இருக்குது..." என்று முழங்கி ஞன் ஒப்பிலாமணி.

"இவருக்கு முந்தி நான்தான் சாயத்துணியையும் பணத்தையும் பெற்றவள். கங்காணியுடைய முத்திரை

துணியிலும் நோட்டிலும் இருக்குதே, இதோ...! அவர்தான் ஏதோ சூது பண்ணியிருக்கார்...'' என்று கூவினுள் சுபத்திரை.

அவர்கள் இருவரும் வைத்திருந்த இரண்டு சாயத் துண்டிலும் நூறுரூபாய் நோட்டு இரண்டிலும் கங்காணியின் அடையாள முத்திரைகள் இருந்தன தங்கள் இருவரில் யாருடையதும் சூதில்லை என்பதை உணர்ந்ததும், ஒப்பிலா மணியும் சுபத்திரையும் ஆச்சரியத்துடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டே பதுமைகளாக நின்றுர்கள். ஆனுல், பூரணியின் கழுத்தில் எப்படி இரண்டு செட்' சாயத் துணிகளும், நூறு ரூபாய் நோட்டுகளும் இருந்தன என்றுதான் இவர்களிருவருக்கும் புரியவில்லை!

கங்காணி வந்தார்; என்னைப் பார்த்தார்; கண் சிமிட்டினுர்; சிரித்தார்.

கங்காணி பேசினுர்: தங்கப்பற்கள் சிரித்தன.

''ஒப்பிலாமணி, சுபத்திரை!...இன்றைய மஞ்சிவிரட்டிலே என் பூரணியைப் பிடித்து வெற்றி கொண்ட பெருமை உங்கள் இருவருக்குமே சம அளவில் உண்டுதான்! உங்கள் இருவர் கையிலுமுள்ள சாயத்துண்டுகளும் நூறு ரூபாய் நோட்டுகளும் என் பரிசுதான்! அதிசயமாகவிருக்கும் உங்கள் இருவருக்கும்! ஒரே சமயத்தில் நீங்கள் போட்டுக் கொண்ட சபதங்கள் இரண்டும் நிறைவேறினுல்தானே நீங்கள் இருவரும் கணவன்-மனைவியாக முடியும்! இப்போது உங்கள் இருவரின் ஆணையும் பலித்துவிட்டதல்லவா? பரிசுகள் இரண்டும்தான் உங்கள் இருவர் கைகளிலும் திகழ்கின்றனவே...! ஓஹோ! இரட்டைப் பரிசுகளின் ரகசியம் தானே—! இதோ சொல்லுகிறேன்: உங்கள் இருவரது சபதம் எத்தனை விபரீதம் கொண்டது! பூரணிக் காளையின் கழுத்தில் இந்த இரட்டைப் பரிசுகளையும் கட்டியது நானேதான்...! காளையோடு போராடிய நீங்கள் இருவரும் எங்கே இந்த ரகசியத்தைக் கண்டிருக்கப் போகிறீர்கள்...? ஒரே பொட்டு நேரத்தில் இரண்டு பரிசுகளும் ஆளுக்கு ஒன்ருகச் சொல்லி வைத்த மாதிரி உங்கள் கைகளில் வந்தவரை ரகசி

யம் வெளிப்படவில்லை, அப்பொழுது! ஊராருக்கு உங்கள் இருவரையும் தம்பதிகளாக ஆக்க வேண்டுமென்பதே ஒரே ஆசை! ஊராரின் ஒப்புதல் படிதான் நானும் அப்படிச் செய்தேன். அத்துடன் பூரணியின் திமிரும் சொரத்தும் குறைய மயக்க மருந்தும் கொடுத்தேன்; வழக்கமாகப் பரிசைத் தட்டிக்கொண்டு செல்லும் சூரர்களையும் காரணத்தை விளக்கிச் சமாதானப்படுத்தி, மஞ்சிவிரட்டில் கலந்து கொள்ளுவதைப் போல சும்மா பாசாங்கு செய்யவும் வேண்டிக் கொண்டேன்! ஒப்பிலாமணி, சுபத்திரை...! வருகிற முகூர்த்தத்துக்கு நீங்கள் இருவரும் மணவறையில் அமர இனியும் அட்டியில்லையல்லவா?...முதலில் உங்கள் இருவரின் நன்றியையும் இந்தக் கதாசிரியர் அவர்களுக்குத் தெரிவித்து விடுங்கள்!உங்கள் சபதங்கள் சுலபமாக வெற்றிபெற, எனக்குச் சகலயோசனைகளையும் சொல்லிக் கொடுத்தது இந்த ஸார்தான்! எழுத்தாளரென்றால் பின் சாதாரணமா?... என்னவோ, இந்தப் புதுமணக் காதலர்களின் கனவுகள் பலித்துவிட்டது. எல்லாம் அம்பாளுடைய கிருபைதான்!... சுபத்திரை என்றென்றும் மஞ்சளும் மருக்கொழுந்தும் திகழ வாழ்த்துகிறேன்!...''

இலங்கைச் சீமைத் தமிழ் ஆறுதல் பூத்தது!...

சுபத்திரையும் ஒப்பிலாமணியும் மஞ்சளின் நல்ல சகுனம் துலங்கச் சிரித்து, கள்ளவிழிப் பார்வைகளைப் பரிவர்த்தனை செய்தவாறு மருக்கொழுந்தின் மணத்தை நுகர்ந்து மகிழ்ந்தார்கள்!

ஆஹா! என்னுடைய ஆனந்தத்திற்கு எல்லை எது?

மணவறையில் அழகுக்குக் கிடைத்த அழகின் துணையுடன் சுபத்திரை குந்தியிருக்க, அவளுக்கு அருகாக, ஒப்பிலாமணி வீற்றிருந்தான்—தனிக்காட்டு ராணிக்கு வாய்த்திட்ட தனிக்காட்டு ராஜாவாக!...

''சுபத்திரை!..''

''ம்!''

''ஒப்பிலாமணி!''

"ம்!"

கேலியுடன் அவர்களிடம் சொல்ல நினைத்ததை வாய் விட்டுச் சொல்லத் துணிவு வரவில்லை எனக்கு!...எப்படி முடியும்?

அடுத்த பத்தாவது மாதம் அவர்கள் எனக்கு ஒரு 'புது ஜீவனை' அறிமுகப்படுத்தாமலா இருக்கப் போகிறார்கள்?...

# எடுபிடி

புதுக்கோட்டை சமஸ்தானமாக இருந்தபோதும் சரி, இப்போது திருச்சி ஜில்லாவுடன் இணைந்திருக்கும் நிலையிலும் சரி, அந்த மணிக்கூண்டுக்கு எப்பொழுதுமே ஓர் அலாதி மதிப்பு உண்டு. 'ஹோல்ஸ்வர்த் பூங்கா'வாக இருந்து இப்போது, காந்தி பூங்காவாக மாறிய அப் பூந்தோட்டத்தைச் சுற்றிலும் அங்கங்கே இன்னிசை பரப்பும் கீதமும், குதிரை வண்டிகளின் மெல்லடிக் குரலும், குறுக்கு நெடுக்காகப் பறக்கும் பஸ்களின் அவசரக் கூச்சலும் மணிக்கூண்டு வட்டத்திற்குத் தனிக்களையைக் கொடுத்துக் கொண்டேதான் இருக்கும்.

இப்படிப்பட்டதொரு விந்தைச் சுழலில் இயங்கும் பல கடைகளுள் அதுவும் ஒன்று. அது ஒரு சைக்கிள் கம்பெனி. சைக்கிள்களின் விற்பனை நிலையம் அல்ல; சைக்கிள் வாடகைக் கடை. 'காரியர்' இல்லாமல் எடுத்தால் வாடகை மணிக்குப் பத்துக் காசு; 'காரியர்' சேர்த்து எடுத்தால் பதின்மூன்று காசு. காலத்தை வரம்பு கட்டி நிர்ணயிக்கும் குறிப்பு நோட்டும், காலத்திற்கு நாணய மதிப்புச் சொல்லும் எடுபுடிப் பையன் சாரதியும் 'கிருஷ்ணா துவிச்சக்கர வண்டி நிலைய'த்துக்கு உயிர்நாடி போல.

சாரதி கைகளைக் கைப்பிடித் துண்டினால் துடைத்துச் சுத்தம் செய்துகொண்டு எழுந்து நின்றான். "பார்த்துப்

போ தம்பி!......அாமனேப் பக்கம் மெள்ளப் போகனும். போலீஸ்காரங்க நிற்பாங்க. உன் கை வரிசையைக் காண்பித்துப் பெடலே அழுத்தினுல், உன்னே மட்டும் சார்ஜ் பண்ணமாட்டாங்க; அப்பாலே எங்க சைக்கிள் வண்டிக்கும் ஆபத்து வந்துவிடும். அதுக்காகத்தான் இப்பிடிப் படிச்சுப் படிச்சுச் சொல்லறேனுக்கும்!" என்ருன் அவன்.

அவன் சொல்லி நிறுத்தினபோது, சிரிப்புச் சத்தம் வெடித்தது.

கடை முதலாளி கிருஷ்ணன்தான் சிரித்தது. "ஏ, சாரதி!" என்ருன் கிருஷ்ணன்.

"எசமான்!"

"கொஞ்சமுந்தி தம்பிண்ணு சொன்னியே, அந்தப் பையனேப் பார்த்து. நீ என்ன பெரிய ஆம்பளே ஆகி விட்டாயா? என் தலே மறைந்ததும் உன் வாய் திறந்து விடுகிறது என்று வாடிக்கைக்காரர்கள் சொல்வது சரியாகத்தான் இருக்கிறது. சரி, இங்கே வாடா!"

கிருஷ்ணன் உட்காரவேண்டிய ஆசனத்தில் 'ஆயில் கான்' இருந்தது. அவசரமாக ஓடிய பையன் அதை எடுத்துத் தரையில் வைத்தான். பிறகு, வினயமாக அண்டி நின்ருன்.

"என்னுங்க...?"

"சாத்தனூர் கோயில் மார்க்கெட்டுக்கு ஓடி புதினுக் கீரையும், பச்சைக் கொத்துமல்லித் தழையும் வாங்கிக் கொடு. நேற்று நீ அதை வாங்கிப் போகாததால், உன் பேரில் பூங்காவனத்துக்கு அசாத்தியக் கோபம். அப்படியே, பாப்பாவுக்கு ரொட்டிக் கட்டு ஒன்றும் வாங்கிப் போ. கல்லாப் பெட்டியிலிருந்து ரெண்டு ரூபாய் எடுத்துக் கொண்டு போ. போனகால் வந்தகால் தெரியாமல் ஓடி வரவேண்டும்!"

ஒன்பது அடிந்தது கடியாரம்.

"காற்று அடிக்கவேண்டும்" என்று ஒருவர் வந்தார்.

குரல் கேட்டதும், கிருஷ்ணன் இருக்கையைப் பிரிந்தான்.

"ஏங்க எடுபிடிப் பையன் இல்லையா?"

"இருக்கிருன். வீடுவரை போயிருக்கிருன்!"

காரைக்குடி பஸ் காதைத் துளைத்தெடுத் து.

கிருஷ்ணனே சைக்கிளுக்குக் காற்றடித்தான்.

"பொடிசு இல்லீங்களா? சுருக்குப் பை கொடுத்திட்டுப் போயிருந்தேன்," என்று விவரம் தந்து இன்னெருவர் வந்து நின்ருர்.

கடையின் உள்ளே கட்டை ஒன்றில் மாட்டியிருந்த பையை எடுத்து நீட்டினுன் கிருஷ்ணன். "பணத்தை எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்கள்!"

"நீங்க ஒண்ணு. சாரதியை எனக்கு ஒரு வருஷமாகவே தெரியுமே. பையன் பொடிசானுலும் கையும் வாயும் ரொம்ப சுத்தம்!"

கிருஷ்ணனுக்குப் பெருமை பிடிபடவில்லை, தன் ஊழியனை ஒருவர் பாராட்டுகிருரென்று.

கிருஷ்ணனிடம் சாரதி எடுபிடிப் பையனுக வேலைக்கு வந்து சேர்ந்து இந்த இரண்டு வருஷங்களில் அவனைப் பற்றி ஒருவரும் குறை கூறியதில்லை. பையன் காரியத்திலும் சூரன். அவனுடைய பேச்சும் செயலும் கிருஷ்ணனைக் கவர்ந்ததைப் போலவே எல்லோரையும் கவர்ந்திருந்தன.

சைக்கிள் ரிப்பேர், சாயா வாங்கி வருதல், அங்கங்கே போவது, யஜமான் வீட்டுச் செல்லப் பாப்பாவைத் தொட்டிலில் இட்டு ஆட்டுவது போன்ற வேலைகள் கிருஷ்ணனுக்கு.

இரவு.

சாரதி, யஜமான் வீட்டில் மிஞ்சிய சாப்பாட்டைச் சாப்பிட்டு முடித்து 'எச்சில்' எடுத்தானபின், முதலாளிக்கு வெற்றிலைப் பெட்டியை எடுத்துவந்து வைத்

தான். "இருடா," என்று சொல்லி பூங்காவனம் பாலும் ஸகயுமாக வந்தாள். தன் யஜமான் பாலைச் சாப்பிட்டபின் வெற்றிலை போட்டுக்கொண்டதும், சாரதி கேட்டான்: "ஏங்க முதலாளி, உங்க அப்பா அம்மா இங்கே வரமாட்டாங்களா?"

கிருஷ்ணனுக்கு முகம் மாறியது. 'சீ! போடா, தூங்குடா!" என்று அந்தப் பயல் முதுகில் ஒரு தட்டுத்தட்டி விரட்டி விட்டான்.

தன் பெற்றோரைப் பற்றி நினைவு வந்ததும் கிருஷ்ணனுக்கு ஆத்திரம் கிளர்ந்தெழுந்தது. "சீ! அப்பாவா அவர்?' என்று கிருஷ்ணன் முணுமுணுத்தான்.

நாட்கள் பல சென்றன.

ஒரு நாள் இரவு, சாரதி சாப்பிடவும் வரவில்லை. படுக்கவும் வரவில்லை. மறுநாள் காலையில் கிருஷ்ணன் அவனை வினவினான், முந்தின நாள் ஏன் வரவில்லையென்பதை.

"வடக்கு தெருவிலே என் உறவுக்காரர் வீட்டுக்கு, கிராமத்திலிருந்து என் அப்பன் வந்திருக்குது. அதனாலே அவுங்க வீட்டிலேயே சாப்பிட்டுத் தூங்கிப்பிட்டேனுங்க!' என்று காரணம் தெரிவித்தான் சாரதி.

அதற்கப்புறம் சாரதி கிருஷ்ணன் வீட்டில் சாப்பிடுவதோ, படுப்பதோ இல்லை. மாதாமாதம் நாற்பது ரூபாய் கூலியாக வாங்கிச் செல்லத் தொடங்கினான் அவன்.

அன்றைக்கு வெள்ளிக்கிழமை. சந்தை தினம்; கிராக்கிகள் அதிகம் வரும் நாளும்கூட!

மணி ஒன்பதாயிற்று: பத்தாயிற்று. எடுபிடிப் பையன் சாரதியைக் காணோம்! கடைக்கு வரவில்லை அவன். அவன் அன்றுவரை நித்தமும் ஒழுங்காக வந்ததால், அவனுடைய சரியான விலாசத்தைக் கேட்டுவைக்கவில்லை.

சரியாக உச்சிப் பொழுதிருக்கும்.

"எசமான்!"

விம்மி வெடித்து நின்ருன் சாரதி. கண்களில் ரத்தச் சிவப்பு. உடை பூராவும் ஒரே அழுக்கு. விரிந்து கிடந்தது தலை.

அவனை இழுத்து அறைந்துவிடத் துடித்தன கிருஷ்ணனின் கைகள். ஆனல் பையனின் தோற்றம் அவனது ஆத்திரத்துக்கு அணை போட்டது.

"ஏண்டா, என்ன கேடு உனக்கு?"

"எனக்கு இல்லீங்க. எங்க அப்பாவுக்கு!"

"பணம் வேணுமா?"

"இனிமேல் அது தேவையில்லீங்க!"

"ஏண்டா?" கிருஷ்ணனுக்கும் பையன்மேல் அன்பு பொங்கியது.

"அவருக்கு நிலைமை மிஞ்சிப்போச்சுங்க! ஆனல் உங்களை ஒருதரம் கண்ணுலே பார்க்கத் துடிக்கிருருங்க. தனக்கும் தன் பிள்ளைக்கும் சோறுபோட்டுப் படியளந்த புண்ணியவான் நீங்களாம். அதாலே உங்களைக் காண வேணுமாம்! வருகிறீங்களா, யசமான்...பெரிய மனசு பண்ணுங்க தர்மப் பிரபுவே!"

சாரதி கதறியழுது, கிருஷ்ணனின் பாதங்களில் சாய்ந்தான்.

"எழுந்திருப்பா வா, போகலாம்!"

சிறுவன் சாரதி காட்டிய இடம் ஒரு பழைய சத்திரம் ஆனல், அங்கே அவன் அப்பா இல்லை. மலைத்து நின்ருன். "ஐயையோ, எங்கப்பா எங்கே போனர்களோ? தெய்வமே!" என்று அலறினன். சிதறிக் கிடந்த பையையும் சாமான்களையும் மிதித்துக்கொண்டே அங்குமிங்கும் பார்த்தான். அவன் கண்கள் நிரம்பி வழிந்தது.

"சரி, வா. நம்ப வீட்டுக்குப்போய் ரெண்டுபேரும் சாப்பிட்டுவிட்டு உன் அப்பாவைத் தேடலாம்!"

"ஊஹ-ும்! எங்க அப்பாவைக் காணும, நான் ஒரு பருக்கைகூடச் சாப்பிடமாட்டேனுங்க!"

"சரி, வீட்டுக்குப் போகலாம் வா. நான் சாப்பிட்டு, அப்புறம் உன்னோடு அலைகிறேன்!"

"நல்லதுங்க, எசமான்!"

கிருஷ்ணனைப் பின்தொடர்ந்தான் சிறுவன்.

தன் வீட்டை அடைந்ததும், வெளிமுகப்பில் ஒருகணம் நிலைத்து நின்றான் கிருஷ்ணன். அவனது செவிகளில் பேச்சரவம் கேட்டது.

"இப்போதுதான் என் மனசு நிம்மதியடைஞ்சுது. என்னுடைய பேத்தியைக் கடைசி காலத்திலாவது காண முடிந்ததே தெய்வச் செயல்தான்! அம்மா பூங்காவனம், நான் சாவதற்குள்ளே நான் பெற்ற மகனை ஒருதரமாவது காண வேணும்னு ஆசையா இருக்கிறது. அதற்குச் சம்மதிக்கும்படி கிருஷ்ணன் மனசை மாற்றுவாயா? உன்னைக் கல்யாணம் செய்து கொள்கிற விஷயத்தில் அவனுக்கு நான் தடை போட்டதில்தான் அவனுக்கும் எனக்கும் விரோதமாகி விட்டது. உன் மனசுப்படி முந்தித்தான் நான் நடக்க ஒப்பலே. உன் அப்பன் செஞ்ச தீவினைக்காக உன்னை வெறுத்து விட்டேன். மன்னிச்சிடும்மா!...உன் விருப்பப் பிரகாரம் நீ நீட்டின கஞ்சியையும் குடிக்கிறேம்மா. ஊற்றிக் கொடு, பூங்காவனம். என் மருமகள் கையாலே கொடுக்கிறதை கடைசி காலத்திலேயாவது குடிச்சாத்தான் என் ஆவி அடங்கும். ஆமாம்மா!"

ஆத்திரம் புயல் வீசிய மனத்துடன் உள்ளே ஓடினான் கிருஷ்ணன்.

அங்கே கூடத்தில் படுத்த படுக்கையாகக் கிடந்தார் கிருஷ்ணனின் தந்தை சிவசாமி.

தந்தையின் அவலக் கோலம் அவனுடைய சினத் தீயை அவித்துவிட்டதா? 'அப்பா' என்று நெஞ்சு விம்மியது. வார்த்தைகள் மட்டும் வெளிக் கிளம்ப மறுத்தன.

அதுசமயம் உள்ளே வந்தாள் சாரதி.

"அப்பா! நீங்க வந்து சேரவேண்டிய இடத்துக்கே வந்துவிட்டீங்களா?" என்று கேட்டுக்கொண்டே சிவசாமியை இறுகக் கட்டிக்கொண்டான்.

கிருஷ்ணனுக்கு வியர்த்துக் கொட்டியது. நெஞ்சு விம்மியது.

"அப்பா! அப்பா!"

சிறுவன் சாரதியும் விம்மியழுதான்.

"எசமான், என்ன அப்படிப் பார்க்கிறீங்க? அப்பா இல்லே என்று சொன்னேனே என்று பார்க்கிறீங்களா? என் அப்பா இவரேதான். இந்த ஊருக்கு முதன் முதலிலே நான் வந்தபோது, பசியாலே துடிச்ச எனக்கு பஸ் ஸ்டாண்டுக் கிளப்புக் கடையிலே சோறு வாங்கிப் போட்ட தெய்வம் இவர்களேதான்!...அப்பன் ஆயி முகத்தைக்கூட கண்டறியாத நாதியில்லாத இந்த ஏழைப் புள்ளைக்கு இவுங்களே தான் அப்பாவாக இருந்தாங்க!...உங்க படத்தையே வச்சுக் கிட்டு சதா கண்ணீர் வடிப்பாங்க. நீங்க இவரை மதிக்காததை நினைச்சு வேதனை தாளாமல் துடிச்சுப் போயிட்டாங்க. அந்த மனத் தொல்லேதான் இவங்களைப் படுக்கையிலே கிடத்திவிட்டதுங்க!...நான் உங்ககிட்டே அலுவல் பார்த்துக்கிட்டிருந்ததைச் சொன்னு, எங்கே நான் சம்பாதிக்கிற பணத்தை ஏற்கமாட்டாங்களோண்ணு பயந்துதான் வேறே ஒரு இடத்திலே வேலே பார்க்கிறதாகப் பொய் சொல்லி வந்தேன். சாவதற்குள்ளாக, உங்க முகத்தைக் காணத் தவம் இருந்தாங்க. அதனுலேதான், என்னவெல்லாமோ சொல்லி உங்களே அழைத்துக்கிட்டுப் போனேனுங்க. எசமான்!... இவங்களே அப்பாண்ணு ஒருதரம் கூப்பிடுங்க!... கூப்பிடுங்க அண்ணுச்சி!"

பாதங்களில் கிடந்தான் சாரதி.

"அப்பா! அப்பா!" என்று அலறினுன் கிருஷ்ணன்.

கிழவர் சிவசாமி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். எழுந்து அமர்ந்தார். உயிர்ச்சிரிப்பைக் கொட்டினுர்; மகனது முகத்தைத் தடவிக் கொடுத்தார்; மைந்தனின்

கண்ணீரைத் துடைத்தார். "சாரதி இல்லாவிட்டால் நான் செத்த இடம் புல் முளைச்சுப்போயிருக்கும், கிருஷ்ணு!" என்ருர் அவர்!

"தம்பி!..." என்று விளித்து, சாரதியை நெஞ்சாரத் தழுவிக்கொண்டான் கிருஷ்ணன். சாரதியின் மேனி புல்லரித்தது.

# ஆவணத்தாங் கோட்டைச் சாலே

ஆவணத்தாங் கோட்டை மணியக்காரர் வீட்டுத் திண்ணையில் தொங்கிக்கொண்டிருந்த காலண்டரில் அன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை என்று நாள் காட்டிக்கொண்டிருந்தது. அந்த ஞாயிற்றுக்கிழமையைத்தானே பூவம்மாவும் ஆசை துள்ள, ஆனந்தம் பொங்க எதிர்நோக்கிக் கொண்டிருந்தாள்! அன்றுதான் கடல் கடந்து சென்ற மருதமுத்து பிறந்த மண்ணை மிதிப்பதாகத் தபால் போட்டிருந்தான்.

தாய்க்கும் மகளுக்கும் நாளெல்லாம் வரப்போகும் மருதமுத்துவைப் பற்றிய பேச்சுத்தான் மூச்சாக இருந்தது. இருக்காதா பின்னே...?

பூவம்மாவுக்கு மகிழ்ச்சி நிலேகொள்ளவில்லே. அடிக்கொருதரம் அவள் மனம் "அண்ணேச்சி—அண்ணேச்சி" என்று பஜனே பாடிக்கொண்டிருந்தது. அவள் இதயத் திரையில் மனம் அவளது உடன்பிறந்தானேப் படமாக வரைந்து காட்டிக்கொண்டிருந்தது.

"பூவம்மா, ஓடிவா இங்கே!"

"அண்ணாச்சி வந்துடுச்சா, ஆயா?" என்று கேட்டவாறே தோட்டத்தைத் தாண்டி வெளியே வந்தாள் பூவம்மா. வாசலில் மாட்டு வண்டி நின்றது. துள்ளும் உள்ளத்துடன் ஓடினாள்.

ஆனால் அவள் தன் அண்ணனைத் தரிசிக்கவில்லை. யாரோ ஓர் இளைஞன் காட்சியளித்தான். அவனது விழிகள் பூவம்மாவைச் சுற்றி முற்றுகையிட்டன. அவள் பூவிழிகள் தரையை நோக்கித் தாழ்ந்தன.

"பூவம்மா, உன் அண்ணன் அடுத்த மாசம்தான் வருகிறானும். இப்ப இவங்களோட அவன் வர முடியல்லியாம். கப்பல் பதிவுச் சீட்டுக்கு உத்தரவு ஆகலையாம். இவங்ககிட்ட சேதி சொல்லி அனுப்பிச்சிருக்கு..." என்று கிழவி மகளிடம் விஷயத்தை ஒருவாறு விளக்கினாள். உடனே என்ன நினைத்துக் கொண்டாளோ, "தங்கச்சி, இவங்களை உனக்கு நெனைப்பு இருக்குதா என்ன?" என்று கேட்டாள் கிழவி.

"ஓ, தெரியுமே, இவங்களை! நம்ம மருதமுத்து அண்ணாச்சியின் உசிருக்கு உசிராச்சே இந்த மச்சான்" என்று சொல்லிவிட்டு, அவள் கண்ணோட்டத்தைக் கீழே தாழ்த்திக் கொண்டாள்.

மலர் என்றால் அதன் மணம் அத்துடன் இரண்டறக் கலந்துதானே இருக்கும்? அப்படித்தான் பூவம்மாவின் இளம் மனசில் அந்தப் பழைய சம்பவங்கள் ஒன்றிவிட்டிருந்தன.

அப்பொழுது பூவம்மா பருவத்தின் எல்லைக்கோட்டில் தழைத்து நின்றாள். 'பூவோ, பூவு' என்று அவள் தெருவோடு பூ விற்றுக் கொண்டு செல்லும்போது பூவின் மணத்தோடு அவள் குரலின் இனிமையும் சேர்ந்து கொள்ளும். அவள் பூச்சரம் தொடுத்துத் தந்து காதலில் வெற்றி கண்ட பூவையர்கள் பலர் உண்டு; அவள் கையில் வாங்கிய பூவைக் குழந்தைகளுக்குச் சூட்டிப் பெருகி வாழ்ந்த குடும்பங்கள் எத்தனையோ? அக்கம் பக்கத்திலுள்ள பூவத்தகுடி நவராத்திரி, நகரம் பங்குனி உத்தரம், சிலட்டூர் மாரியம்மன் திரு

விழா முதலியவற்றில் எல்லாம் அவள் பூக்களின் மணம் தான் தலைமை வகிக்கும் என்றால் பின் கேட்பானேன்?

ஒருநாள், "தங்கச்சி, இன்றைக்கு இரவு கோவலன் நாடகம் நடக்குது. என்னோடே இன்னொரு ஆளுக்கும் சேர்த்துச் சோறுக்கச் சொல்லு ஆயாகிட்டே" என்றான் மருதமுத்து. பூவம்மாவுக்கு 'அந்த இன்னொரு ஆள்' யாரென்று துப்புத் துலங்கவில்லை. மெள்ளக் கள்ள விழிப் பார்வையை நடைக்குள் தூது விட்டாள். வாட்ட சாட்ட மான இளம் வயசு ஆண் பிள்ளை. அவன் பூபாலன்.

கையெழுத்து மறைந்த சுருக்கில் தமையனுக்கும் பூபாலனுக்கும் உணவு படைத்தாள். தானும் உண்டாள். எல்லோருமாக நாடகத்துக்கு வண்டி கட்டிக்கொண்டு புறப் பட்டார்கள். வழியெல்லாம் 'மச்சான்' பாட்டுப்பாடி பூபால னைக் கலாட்டா செய்தான் மருதமுத்து. ஆனால் அந்த மச்சான் தன்னைக் கணத்துக்குக் கணம் விழுங்கிவிடுவதைப் போலப் பார்த்துத் தீர்த்த விஷமத்தை மட்டும் பூவம்மா ஒரு காலும் மறக்கவே மாட்டாள். நாடகம் பார்த்தபோதுதான் தன் அண்ணன் 'ராஜபார்ட்' வேஷம் போட்டிருப்பது தெரிந் தது. மாதவியாக வேஷம் போட்ட பெண்ணை மாத்திரம் பூவம்மாவால் ஏனோ மறக்கக்கூடவில்லை.

நாடகம் முடிந்து வீடு திரும்புகையில், 'கோவலன்' நாடகத்தைப்பற்றிய அபிப்பிராய பரிவர்த்தனை நடந்த சமயம், மாதவியாக வந்த பெண்ணுக்குத்தான் முதல் பரிசு தந்தாள் பூவம்மா

"பூவம்மா, சபாஷ்! அப்படிச் சொல்லு. மாதவிதானுக் கும் உனக்கு ரொம்பப் பிடிச்சது? நம்ம பூபாலன் மச்சான் அப்படின்னு யோகசாலிதான். மாதவி வேசம் போட்டது பொண்ணு இல்லே, அது நம்ப மச்சான்தான்" என்றான் மருதமுத்து.

"நெசமாவா? நம்ப மச்சானு அசல் மாதவி மாதிரியே நடிச்சாங்க? அதிசயமாத்தான் இருக்குது!" என்று சொல்லி வியப்புமேலிட நின்றாள் பூவம்மா. முன்பின் பரிச்சயமில்லாத ஒரு ஜோடி ஆண் பிள்ளையிடம் வலியப் பேச்சுக் கொடுத்

ததில் நாணித் தலைகுனிந்து போனாள் பூவை. பூப்போலப் புன்னகைத்த வண்ணம், அன்று பிறந்தது பூவம்மா—பூபாலன் அறிமுகம். பூபாலன் பூவம்மாவின் இதயத்தில் நிரந்தரமாக இடம் பெற்றுவிட்டான்.

பேச்சு மூச்சுக் காட்டாமல் ஒருநாள் மருதமுத்துவும் பூபாலனும் இலங்கைச் சீமையை நாடிப் புறப்பட்டார்கள். அப்பொழுது மருதமுத்து தன் தங்கையிடம், "தங்கச்சி, அக்கரைச் சீமையிலே யிருந்து திரும்பினதும் உன்னை நம்ப பூபாலன் மச்சான்கிட்டே பரிசம் போட்டுக் கண்ணாலம் கட்டிக் கொடுத்துடுறேன். அப்பாலேதான் என் கண்ணாலம்..." என்று கூறி விடை பெற்றுக்கொண்டான். தமையனின் அவ்வார்த்தைகளை அவள் எங்ஙனம் மறப்பாள்? மறக்கக்கூடிய வார்த்தைகளா அவை? அப்பொழுது விஷமப் புன்னகையினால் தன்னைப் பரிகாசம் பண்ணிய அவளது ஆசை மச்சானின் நினைவு முகத்தைத்தான் அவளால் மறக்கமுடியுமா? அது மறக்கக்கூடிய முகம் அல்லவே!

"பூவம்மா!" என்று பூபாலன் அழைத்ததும் அவள் மனம் திடுக்கிட்டுப் பழைய நினைவுகளிலிருந்து மீண்டது.

"பூவம்மா, இந்தச் சாமான் எல்லாத்தையும் பத்திரமா உள்ளே எடுத்துவை. இந்தப் பணம் ஐந்நூறையும் மச்சான் மருதமுத்து உங்கிட்டே தரச் சொன்னான். இப்பவே உன் ஆயாகிட்டே பணத்தைக் கொடுத்துப் பத்திரமாக வைக்கச் சொல்லு. நான் போயிட்டு வர வெள்ளிக்கிளமை வாக்கிலே இங்கே வாரேன்..." என்றான் பூபாலன்; உதட்டில் இழையோடியது இள நகைக் கீறலொன்று; அவன் முகத்தில் ஆனந்தக் கனவொன்று தவம் பண்ணிக்கொண்டிருந்தது.

"நல்லாயிருக்குதுங்களே. விருந்தாளியாக வந்தவங்களை நனைக்காம போகலாமா? நொடியிலே ஆயா சமைச்சு விடுவாள். சாப்பிட்டுவிட்டுத்தான் போகணும், மச்சான்" என்றாள் பூவம்மா குதூகலம் ஏற்றம் புரிந்த குயில் குரலில். அவள் வேண்டுதலில் உரிமை தொனித்தது.

இன்பச் சூழ்நிலையில் நாட்கள் காற்றாய்ப் பறந்தோடக் கேட்கவா வேண்டும்? பூபாலன்—பூவம்மா ஜோடிக்கு அப்பொழுது தாங்கள் இந்திரலோகத்தில் வாழ்வதாகவே பட்டது.

சூரியன் உதயம் ஆவதற்குமுன்பே எழுந்து அவன் பூஞ்செடிகளுக்கு ஏற்றத்தில் தண்ணீர் இறைப்பான்; அவள் 'பாத்தி' கட்டித் தண்ணீரைச் செடிகளுக்குப் பாய விடுவாள். களத்துமேட்டில் கதிரடிப்பான் அவன்; மாடு கட்டிப் போரடிப்பாள் அவள். கும்பல் சேர்ந்த நெல்மணிகள் குன்றுகளாகிக் கிடக்கும்; காதலர்கள் மெய்ம்மறந்து போவார்கள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொன்மணி அல்லவா? எந்த வேலையிலும் பூபாலன் வில்லாதி வில்லன்; அவள்—பூவம்மா அவனுக்குப் பக்கபலம், உயிர்த்துணை. நிலா என்றால் அவர்களுக்கு நிலாச்சோறு உண்பதுபோலே. இலங்கைச் சீமையில் நூரெலியா, கந்தப்பாளை முதலிய பகுதித் தேயிலைத் தோட்டங்களில் தானும் மருதமுத்துவும் உழைத்து வாழ்ந்த வாழ்வைப்பற்றிக் கதை கதையாகச் சொல்லுவான் அவன். அவள் திறந்த விழி மூடாமல் ஆசை யாகக் கேட்டுக்கொண்டிருப்பாள்.

"பூவம்மா, நம்ம கல்யாணத்தைப்பத்தி யோசனை செஞ்சியா?"

"மச்சான், கிணத்துத் தண்ணியை வெள்ளமா கொண்டு போயிடும்? என் அண்ணாச்சி அக்கரைச் சீமை யிலேருந்து வந்த கையோட நம்ப கண்ணாலத்தை முடிச்சுக் கலாம். ஊட்டி வளர்த்து என்னை உருவாக்கின அண்ணாச்சி இல்லாம நான் கண்ணாலம் கட்டிக்க ஒப்பல்லே. பொறுத்தது பொறுத்துப்புட்டோம். அடுத்த மாசந்தான் அண்ணாச்சி வந்துடுமே. நம்ப கண்ணாலம் முடிஞ்சாத்தான் அண்ணாச் சிக்கு நல்ல மூச்சு தலைகாட்டும். ஆயாளுக்கும் அதுதான் நெனைப்பு. ஏன் மச்சான், சரிங்களா!..." என்றாள் பூவம்மா.

"பூவம்மா, உன் அண்ணாச்சிக்கு அங்கே ஏதோ தலைக்குமேலே அவசர ஜோலியாம். சொன்ன கெடுவுக்குத்

தோட்டத்திலே கங்காணி லீவு தரமாட்டேனுட்டாராம். இதோ பாரு கடுதாசியை..." என்று சொல்லி அவளிடம் கடிதத்தைக் கொடுத்தான் பூபாலன்.

அவள் படித்தாள்.

"அன்புள்ள தங்கச்சிக்கு,

நான் மச்சான்மூலம் சேதி சொல்லி அனுப்பின பிரகாரம் புறப்பட முடியவில்லை. லீவு கிடைக்காது போய்விட்டது. பூபாலன் மச்சானும் இங்கு புறப்பட வேணும். அதற்குள் மச்சானுக்கும் உனக்கும் கல்யாணம் நடந்து முடிந்தால் சிலாக்கியம். மச்சானுக்கும் எழுதியிருக்கிறேன். நான் இல்லையென்றால் என்ன, இனி உனக்கு மச்சான்தானே சகலமும்! உங்கள் திருமணம் சிறப்பாக நடக்க நம் குலதெய்வம் காளியம்மனிடம் பிரார்த்தனை செய்துகொண்டிருக்கிறேன்.

மருதமுத்து."

"இப்ப நீ என்ன சொல்லுறே, பூவம்மா?"

"மச்சான், நான் உங்ககிட்ட கொண்டிருக்கிற ஆசைக்கும் நேசத்துக்கும் நம்ப தெய்வந்தான் சாட்சி. ஆனால், உடன் பிறந்த என் அண்ணாச்சி இல்லாம நான் கண்ணாலம் கட்டிக்கிறதுக்கு லவலேசமும் சம்மதிக்க ஏலாது. ஒரு யோசனை ஓடுது மனசிலே. நீங்க இந்தத் தடவை அக்கரைக்குப்போய்ச் சேமமாத் திரும்புங்க அண்ணாச்சியோட. நொடியிலே நம்ப கண்ணாலம் முடிஞ்சிடும்... ஆமாங்க, அதுதான் தேவலாம்" என்றாள் பூவம்மா. கிழவியும் மகளுக்கு அனுசரணையாக 'ஆமாம்' போட்டாள்.

"பூவம்மா" என்று ஆரம்பித்த பூபாலன் பேச்சை மேலே தொடர முடியாமல் திணறினான். மறுகணம் கண்களில் நீர் வடிய அவன் நின்ற காட்சி அவளை மெய் சிலிர்க்கச் செய்தது.

"மச்சான்"

"..........."

"மச்சான்..."

"பூவம்மா, உன் வைராக்கியம் இம்மியும் குறையலேயே? அப்படியானு நம்ப கண்ணாலமும் நிப்பாட்டிப் போகவேண்டியது தானுக்கும்..."

"என்ன மச்சான், அப்படிச் சொல்றீங்க? அண்ணுச்சியைப் புறப்படச் சொல்லி ஒரு அவசரத் தந்தி கொடுங்க. அறந்தாங்கிக்குப் போய் இப்பவே கொடுத்துவிட்டு வாங்க..."

"பூவம்மா, உன் அண்ணுச்சியை இனி இந்தப் பிறப்பிலே காண முடியாது. எட்டு மாசங்களுக்கு முன்னுலே மருதமுத்து விஷ ஜுரம் கண்டு செத்துப் போயிடுச்சு. அந்த வேதனையைக் கௌப்பிவிட்டு உங்களையெல்லாம் வருத்தப்படுத்தி மனசு வெந்து மடியச் செய்ய எனக்கு ஒப்பாமத்தான் இத்தனை நாளாக அந்தச் சேதியைக் கமுக்கமாக மறைச்சேன். அண்ணன்மேலே இத்தனை உசிராக இருக்கிற உன் காதிலே இதை எப்படிப் போடுகிறது? புரியாமத் திகைச்சுப் போய்த்தான் ஒண்ணும் மூச்சு விடாமல் இருந்து வந்தேன். ஆனு உண்மை என்றைக்காவது தெரியத்தானே வேணும்? பூவம்மா, ஒண்ணுமட்டும் சொல்லுறேன். உன்னைக் கட்டிக்க வேணுமிங்கிற சுயநலத்தோடே நான் உன் அண்ணன செத்ததை இதுமட்டும் மறைக்கல்லே என்கிற மட்டும் காளி ஆத்தா ஆணையாச் சொல்லுறேன்...பூவம்மா..." என்று மேற்கொண்டு தொடர முடியாதவனுக பூபாலன் பொருமிக்கொண்டு சிலையாக நின்றுன்.

"ஐயோ மகனே, மருதமுத்து!" என்று பெற்றவள் கிழவி புலம்பினுள்; "ஐயோ அண்ணுச்சி!" என்று ஓலமிட்டாள் உடன்பிறந்தாள்.

அப்பொழுது மூன்று உள்ளங்கள் சுக்கல் சுக்கலாகச் சிதறி வெடித்துக்கொண்டிருந்தன.

"அப்படின்னு இது பரியந்தம் எனக்கு வந்த கடுதாசி. அன்னிக்கு அண்ணுச்சி தந்ததாகச் சொல்லிக் கொடுத்த

பணம் எல்லாம்...'' என்று கேட்டாள் பூவம்மா விம்மிக் கொண்டு.

''எல்லாம் நான் அனுப்பிய கடுதாசியும் என் பணமுந் தான்...'' என்றான் பூபாலன் குமுறிப் புரண்ட சோகக் குரலில்.

என்ன எண்ணினாளோ, பூவம்மா, உள்ளே ஓடித் திரும்புகையில் அவள் கையில் அன்று பூபாலன் கொடுத்த அத்தனை பண நோட்டுக்களும், அத்தனை சாமான்களும் இருந்தன.

''மச்சான், என்னை மன்னிச்சிடுங்க. இந்தப் பணம், சாமான் எல்லாத்தையும் நீங்க எடுத்துக்கங்க. என் கனவு சிதைஞ்சு போச்சு. என்கூடப் பறந்த அண்ணாச்சி செத் தப்புறம் இனி எனக்கு இந்தப் பூலோகத்திலே வேறே எது வும் கிடையாது. நீங்க என்னை மறந்துவிடுங்க. நான் உங்களுக்கு வாழ்க்கைப்படக் கொடுத்து வைக்காத பாவி ஆகிவிட்டேன்'' என்று பூவம்மா நெஞ்சுலரக் கதறினாள்.

''பூவம்மா, இந்தத் துக்க சமயத்திலே நான் உங்கிட்டே வேறே ஒண்ணையும் வேண்டல்லே. ஆனா இந்த என் கடைசி ஆசைக்காகிலும் நீ இடங் கொடு. இந்தப் பணம், சாமான் எல்லாத்தையும் நீதான் வச்சுக்க வேணும். உங்கிட்டே நான் கொண்ட அன்புக்கு இது ஒண்ணுதானே இனி எனக்கு ஆறுதல்? மறுக்காம எடுத்துக்கொள். மறுத்தா நான் மனசு உடைஞ்சு பித்துப் பிடிச்சுப் போயிடுவேன்...'' என்று சொல்லிவிட்டுப் பூபாலன் இமைப்பொழுதில் அங்கிருந்து மறைந்தான்.

அத்தனை சாமான்களும், அத்தனை பணமும் பூவம்மா வின்முன் சுழன்றோடின!

''காளி ஆத்தா, இதுதான் உன் சோதனையா? என் அண்ணாச்சி இறந்த சேதி காதுக்கு எட்டின மூணாம் நாளே என் ஆயா உசிரையும் போக்கடிச்சிட்டியே? ஐயையோ! தெய்வமே!...''

துாணுடன் துாணாக நின்ருள் பூவம்மா. அவள் மனசில் எரிமலை கனன்றது; ஊழிப் புயல் மூண்டெழுந்தது; துயரப் பிரளயம் அணை மீறியது. அவள் விம்மினுள்; அழுதாள்; புரண்டாள். அவள் தனி மரமானுள். உடன் பிறந்த அண்ணன் சென்ற விதி வழியே பெற்றவளையும் பறி கொடுத்து விட்டாள் அவள். மகனின் சாவு தாயையும் சாகடித்தது. பூவம்மா சாகாமல் செத்துக்கொண்டிருந்தாள், பாவம்!

உலர்ந்த அவள் உள்ளத்தில் பூபாலனின் அன்பு முகம் ஏடு விரிந்து மலர்ந்தது. அன்று இரவு தன் மச்சான் இலங்கைச் சீமைக்குப் பயணப்படும் சேதி அவளுக்கு எட்டவே, தலைதெறிக்க விழுந்தடித்துக்கொண்டு பூவம்மா ஓடினுள்.

அங்கே அவள் கண்ட காட்சி அவளைச் சிலையாக்கி விட்டது. பூபாலன் கண்ணீரும் கம்பலையுமாகக் கையில் தாங்கிய மருதமுத்துவின் படத்தின்மீது வைத்த விழிகளை எடுக்காமல் பிரமைகொண்டாற்போல நின்றது நின்றபடி நின்றுகொண்டிருந்தான். பூவம்மா சிலையானுள்.

“ஐயோ அண்ணுச்சி!” என்று கூக்குரலிட்டாள் பூவம்மா, தன் சகோதரனின் உருவத்தை முகத்துக்கு முகம் வைத்துப் பார்த்தபோது.

“பூவம்மா, அழாதே. அழுததனுலே நம்ப மருதமுத்து திரும்பவும் நமக்குக் கிடைக்கப் போகிருஞ? விசனப்பட்டு இனி என்ன செய்கிறது? இன்றைக்கு இரவு நான் அக்கரைச் சீமைக்குப் புறப்படுகிறேன். உன்னிடம் சொல்லி விட்டுப் போகத்தான் புறப்பட்டேன். அதுக்குள்ளே மருதமுத்துவின் ஞாபகம் வந்துடுச்சு. படத்தைப் பார்த்தவன் அப்படியே நின்றுவிட்டேன்.

“மச்சான், நீங்க இம்பிட்டு உசிராக அண்ணுச்சி மேலே இருப்பீங்க என்கிறதை இப்பத்தான் என் கண் முன்னுலே கண்டறிஞ்சேன். அன்னிக்கு அண்ணனைப் பறிகொடுத்த ஆத்திர வெறியிலே சொன்னதையெல்லாம் மனசிலே வைக்காதீங்க. என்னை மன்னிச்சிடுங்க, பெரிய

மனசு பண்ணி. இப்போ நான் யாருமே நாதி இல்லாத அநாதை. பெற்ற தாயாரை இழந்தேன். உயிருக்கு உயிராயிருந்த என் அருமை அண்ணனையும் இழந்திட்டேன். அன்னிக்கு எம்மேலே உள்ள அன்புக்கு அடையாளமாக பணமும் சாமான்களும் தந்தீங்க அன்னிக்கும் இன்னிக்கும்—ஏன் என்னிக்குமே என்னை உங்க பூவம்மாவா ஆக்கிப்பிடுங்க. கருகின மலரைச் சிரிக்கிற ரோஜாப் பூவாக ஆக்குங்க. இனி நீங்கதானுங்களே எனக்கு முழு ஆதாரம்...! மச்சான், முதலிலே நம்ப கண்ணாலத்துக்கு வேண்டியதைச் செய்யுங்க. அப்பாலே அக்கரைச் சீமைக்குப் போகலாம், மச்சான்!'' என்று விக்கலுக்கும் விம்மலுக்கும் இடையில் வேண்டி நின்றாள் பூவம்மா.

''பூவம்மா, கண்கலங்காதே. எப்பவுமே நீ இனி என் பூவம்மாதான்! நானே வந்து உங்கிட்டே நம்ப கண்ணாலச் சங்கதியைப் பத்திப் பேசணுமின்னு நினைச்சேன். அதுக்குள்ளாற நீயே முந்திக்கிட்டே. நெசமாச் சொல்றேன், இப்பத்தான் செத்துப்போன உன் ஆயா, அண்ணாச்சி ரெண்டு பேரு ஆவியும் நிம்மதிப்படும். மச்சான் கிட்டே அவன் இறக்கும்போது நான் கையடிச்சு வாக்குக் கொடுத்த படி உன்னை என் பூவம்மாவா ஆக்கிக்கப் போறேன். நீதான் எனக்கு உசிரு...'' என்று சொல்லிப் பூபாலன் பூவம்மாவின் கண்ணீரைத் துடைத்து விட்டான். பல நாட்களுக்கப்புறம் அப்பொழுதுதான் பூவம்மாவின் கடை இதழ்களில் புன்னகை மடல் இதழவிழ்ந்தது!

அருமை நண்பன் மருதமுத்துவை இழந்த பின்பு, பூபாலனுக்கு மறுபடியும் அக்கரைச் சீமைக்குப் போவதில் விருப்பம் சிறிதும் இல்லை. அதுவும் பூவம்மாவைக் கல்யாணம் செய்துகொண்ட பிறகு, எதிலும் முதலில் அவளுடைய விருப்பத்தைப் பெற வேண்டியதா யிருந்தது. அவளுக்கு அக்கரைச் சீமைக்குப் போக விருப்பமே இல்லை. ஆகவே பூபாலன் உள்ளூரிலேயே நிலம் வாங்கிக் கொண்டு சிரத்தையாகப் பயிர்த் தொழில் செய்ய ஆரம்பித்தான். பூவம்மா, பூபாலன்—இவர்களுடைய மனசைப் போல் பயிர்த் தொழில் நன்கு செழித்து அவர்களுக்கு நல்ல பலனைத் தந்தது.

அதோ பாருங்கள்! ஆவணத்தாங் கோட்டைச் சாலையில் அந்த வில்வண்டி காற்றினும் கடுகிச் செல்கிறதே!...

ஆகா! ஜோடிக்காளை பூட்டிய வில்வண்டியிலிருந்தல்லவா இந்த ஜோடிக் காதல் குரல் கிளம்பி வருகின்றது. அடடே, நம் பூபாலன்—பூவம்மா ஜோடிதானா? பேஷ்! கீரமங்கலத்துக்குச் சினிமாப் பார்க்கத்தான் ஆனந்தமாகப் புறப்பட்டுப் போகிறார்கள் போலும்! இந்தக் காதல் ஜோடிக்கு இதோ, என் மனமார்ந்த வாழ்த்துக்கள்!

# காதலுக்குக் கண் உண்டு!

கண்கட்டு வித்தை மை டப்பாக்கூட அவனிடம் இல்லை. பிறகு எப்படி அந்த ஒண்ணும் நம்பர் ஆச்சரியம் நடந்தது?

மேஜைமீது ஆபீஸ் பைல்களுடன் சேர்ந்து விழுந்து ஒலி எழுப்பிவிட்டு 'கப்சிப்' என்று கிடந்த அழகிய லேடீஸ் குடையையே வைத்த கண் வாங்காமல் பார்த்தான் சந்திரன். குடை வேறு, பிடிவேருகக் கிடந்த அழகுக் குடையைப் பார்க்கப் பார்க்க அவன் மனசைக் குடைந்தெடுத்தது. உடனே குடையையும் பிடியையும் ஒன்ருகப் பிணைத்தான்; 'ஆஹா' என்று அதன் முழு அழகில் மதிமயங்கிஞன். முழுக் குடைக்குமாக ஒருமுறை திருஷ்டி கழிக்க எண்ணிக் கைகளைச் சொடுக்கி விட்டான். அப்பொழுதான் அவனுக்குத் தன் நினைவைத் தாரை வார்த்தது அந்த எழில் சொட்டும் ஒயிலுடைய 'லேடீஸ் குடை!'

'இந்தக் குடை யாருடையது? குடையிலும் குடை லேடீஸ் குடையல்லவா? அப்படியென்ருல் எந்தக் குதம்பையின் குடை?...வழியில் எந்தத் தையலையும் கண்டு, கண்டதும் மையல் கொண்டு காதற் சின்னமாக அவள் எனக்கு இந்தக் குடையைப் பரிசளிக்கக்கூட இல்லையே! அப்படியென்ருல், அழையாத வீட்டுக்குள் நுழைந்த விருந்தாளியாக இந்தக் குடை எங்ஙனம் என் வீடு புகுந்தது?... ஓ மை காட்... அட கடவுளே!"—அவன் மனம் எண்ணமிட்டது.

காலில் இழைந்த 'ஷு'வைக் கழற்றி வீசக்கூட ஞாபக மில்லை ராஜேந்திரனுக்கு. மவுண்ட் ரோட் கோடியில் ஆங் கிலக் கம்பெனியொன்றில் அவனுக்கு உத்தியோகம். வேலை முடிந்து, 'ரெமிங்டனை' உறையிட்டு, ஆபீஸ் மண்ணை 'பூ' என்று உதறி விட்டு, பஸ் ஏறி வீடு மிதித்தான் பகவான் புண்ணியத்திலே.

"ஹும்... ஒரு வேளை, பஸ்ஸில்தான் எந்தப் புண்ணிய வதியின் குடையோ கை தவறுதலாக எடுத்து வந்து விட் டிருக்கிறேன். பாவம், அந்தப் பாவை குடைக்காக இந் நேரம் குடம் குடமாகக் கண்ணீர் சிந்தப் போகின்றாள்... சோதனைபோல திரும்பவும் அடை மழை பிடித்துக்கொண்ட தென்றால், அவள் பாடு திண்டாட்டமாகிவிடுமே......பாவம், அவளுக்கு மானஸீகமாக என் ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகட்டும்!..." என்று முடிவுரை சொன்னான் அவன்.

அப்போது மேஜைமீது காப்பி வந்தது. திரும்பினான். கதைகளில் வருவதுபோல, அங்கு அவன் மனைவி தோன்ற வில்லை. தன் மகனை மாலையும் கழுத்துமாகவும் மகனுக் குரியவளைத் தாலியும் கழுத்துமாகவும் கண்டுகளிக்கும் வரை தன்னை அண்டவே கூடாதென்று தர்மராஜனிடம் 'கருணை மனு' விடுத்து, உயிரைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்த அவனது தாய்க் கிழவி அங்கு நின்றிருந் தாள்!

* * *

நிலவுக்கன்னி, தனக்குப் பாராட்டுதல் கிடைக்குமென்று ஆவலோடு ஜன்னல் இடுக்கு வழியே ராஜேந்திரனைக் கள்ள விழிப் பார்வை பார்த்தாள். ஆனால் அவனோ, 'ஹுக்கூம்!' என்று அசிரத்தையில் விரக்தியையும் சரி பாதி கலவை செய்து, தலையைக் கோதியவண்ணம் திருப் பிக் கொண்டான்.

"ராஜா!"

"என்ன அம்மா, பழைய புராணத்தைத்தானே புரட்டப் போகிறாய்?...உன் கனவை நனவாக்கி விடுகிறேன் அம்மா, வெகுசீக்கிரம். என் கல்யாணத்தைப் பற்றி எனக்கு மாத்

திரம் அக்கறையில்லை என்று நினைக்கிறாய்? அப்பா உயிருடன் இருந்தாலாவது, 'இப்போது கல்யாணத்துக்கு என்ன அப்பா அவசரம்' என்று நவநாகரிக காலேஜ் மாணவி மாதிரி ஒரு போடு போட்டு நாடகம் நடிப்பேன். உன்னிடம் நான் ஏனம்மா வெட்கப்பட வேண்டும்?... தை பிறந்துங் கூட இன்னும் வழி பிறக்கவில்லையே யென்று யோசிக்காதே! உனக்குத் தெரிந்த இடங்களிலுள்ள பெண்களின் ஜாதகங்கள் அத்தனையையும் ஸ்பெஷல் லாரியிலாவது வரவழைத்துக் கொடு, புகைப்படங்கள் சகிதம்!... ஒரே மூச்சில் எனக்குப் பிடித்தவளைச் சுயம்வரம் நடத்தித் தேர்ந்தெடுத்துக் கொள்ளுகிறேன்......! அப்புறம் நீயும் உன் அருமந்த மருமகளும் என்னைக் குரங்காக ஆட்டி வைத்தாலும் எனக்கு அட்டி ஏதுமில்லை, தாயே!''

''போடா போக்கிரிப் பயலே...!''

* * *

போக்கிரிப் பயலுக்கு உறக்கம் கொள்ளவில்லை! ஊண் செல்லவில்லை; பால் கசந்தது; படுக்கை நொந்தது; ஐயையோ, காதல் நோயல்லவா இது...?

மழை கொட்டியது.

ராஜேந்திரனுக்கு அன்று கிடைத்த குடையின் ஞாபகம் வந்தது. குடைக்குரியவளின் இனம் புரியாத ஏதோ ஒரு பதுமை உருவம் அவனது பிரம்மசாரி மனசிலே ரவை ரவையாகப் பிறந்தது; வளரத் தொடங்கியது. தன்னை மறந்து, ''ஆஹா'' போட்டவன், அந்தக் குடையை ஒருமுறை விரித்தான். விரித்த குடையிலிருந்து, 'என்னைப் பார்!'' என்று சொல்லிக்கொண்டு ஒரு போட்டோ விழுந்தது. அதை எடுத்துப் பார்த்த ராஜேந்திரன் அப்படியே திக்குமுக்காடிப் போனான். ''என் கருத்தைக் கவரும் எந்த மோஹினியின் படமோ என்று எத்தனை ஆசையுடன் படத்தை எடுத்தேன்...ஆனால்...? ஹூம், கடைசியில் என் போட்டோ தானா விழுந்து தொலைக்க வேண்டும்...? பீடை!... யாரோ ஒரு பெண்ணின் குடையினின்றும் என்னுடைய புகைப் படம் விழுவதென்றால், எனக்குக் கதையொன்றும் புரிய

மாட்டேன் என்கிறதே...! காதற் கடவுளே, காதல் அனு பவமே இல்லாத அசல் 'ரெக்ரூட்'டான அடியேனுக்கு ஏன் இத்தனை பெரிய பிரச்னையைச் சமர்ப்பித்துச் சோதிக்கின் றாய்?...'' என்ற அவன் எண்ண அலைகளினூடே, கீழே கிடந்த அவனது புகைப் படம் இருந்த இடம் தெரியாமல் அந்தர்த்தியானமாகி விட்டது...!

* * *

'டிக்'காக உடை உடுத்துக்கொண்டு, ராஜேந்திரன் அலுவலகத்திற்குப் பயணப்பட்டான். பஸ் டெர்மினஸ் நெருங்கும் தருவாயில் மழை கொட்டிற்று. தன்னிடம் தஞ்சமடைந்திருந்த அந்த லேடீஸ் குடையைப் பிரித்தான். அவன் கனவுகள் குடை நிழலில் இந்திர ஜாலம் புரிந்தன.

கொட்டிய மழையைக்கூட லட்சியம் பண்ணாமல் யாரோ ஒரு யுவதியை 'ரிக்ஷா'வில் வைத்து இழுத்து வந்து கொண்டிருந்தான் ஒரு ரிக்ஷாக்காரன் முச்சந்தியில் திரும்பி ஓடி வந்தவனுக்கு, கால் வழுக்கிவிட்டது ரிக்ஷா விலே கால் மேல் கால் போட்டு ஜம்மென்று அரியாசனம் வீற்றிருந்த அந்த யுவதி, நொடிப் பொழுதில் தரையில் குடை சாய நேர்ந்தது. காணக் கிடைக்காத இக்காட்சியை ரொம்ப நாழிகை ரசிக்க விரும்பாத மிஸ்டர் ராஜேந்திரன், தான் பற்றி நின்ற குடையுடன்—ஆனால் பற்றற்ற மன சுடன் பாவையை அண்டினான். 'முதல் உதவி' அவசிய மில்லையெனத் தீர்மானித்து, இரண்டாம் உதவி செய்ய அவன் 'ரெடி' ஆனான். தரையில் சரண் புகுந்த தையல் தலையை நிமிர்த்தினாள். தயாராக வைத்திருந்த அனுதாப மொழிகளை வாரி வழங்கினான் மிஸ்டர் ராஜா. நாணம் மழை பெய்த முகத்தைக் கொஞ்சம் பத்து டிகிரி தாழ்த்தினாள் பூவை. அவள் கண்கள் அவன் வசமிருந்த அக்குடை மீது மொய்த்திருந்தன.

"...வந்து...என்னிடம் ஒரு லேடீஸ் குடையே இருக் கிறது. இதில் நீங்கள் ஒண்டிக் கொள்ளுங்கள். நான் வேண்டுமானால் எட்ட நின்று கொள்கிறேன். மழையின் ஜம்பம் என்னிடம் நடவாது...என...?'' என்று இன்னும்

ஏதோ திருவாய் மலர்ந்தருள உதடுகளைப் பிரித்தான் இளைஞன்.

"...ம்! அச்சா, பஹூத் அச்சா ஹை!...பார்த்தால் டம்பமாக டிரஸ் செய்திருக்கிறீர். ஆனால் ஆள்கூட உள்ளுக்குள்ளே பலே டம்பாச்சாரிதானா?...பேஷ்!...என்னுடைய இந்தக் குடையை நேற்றிலிருந்து நீர்தான் லூட்டி அடித்து சொந்தம் கொண்டாடி வந்தீரோ? மழை பெய்கிறது: நீர் தப்பித்தீர்! இல்லையென்றால், போலீஸ் ஸ்டேஷன் உம்மை இந்நேரம் சந்தி சிரிக்க வைத்திருக்கும்...என் அனுதாபங்கள் உமக்கு...!"

புராண காலத்திய கண்ணகி வழி வந்தவளோ இந்த நங்கை? அந்தப் பெண், தன்னுடையதென்று உரிமைப் போர் நடத்தி வலுவில் பிடுங்கிக்கொண்ட அந்த லேடீஸ் குடையுடன் அந்த மழையில் அந்த ரிக்ஷாவில் பறந்து கொண்டிருந்தாள்!

ராஜேந்திரனுக்குப் பதிலாக அவனுடைய 'லீவ் லெட்டர்' தான அன்றைய தினம் ஆபீஸ் படியை மிதிக்க நேர்ந்தது!

* * *

மீண்சாண் உடம்பும் ஒற்றைச் சாணாகிவிட்டது—ஆமாம், ராஜேந்திரனுக்குத்தான்! கண்ணாடியில் தன் முகத்தைப் பார்க்க அவனுக்கே சகிக்கவில்லை. 'பேய் கீய் பிடிச்சிருக்குமோ?' என்று தாய்க்காரிக்குக் கிலி பிடித்தது! முன் பின் தெரியாத ஒரு வயசுப் பெண்ணால் தன் மகனுக்கு நேர்ந்த ஒண்ணாம் நம்பர் அவமானத்தைக் தாய்க்காரி எப்படி அறிவாள்...?

ராஜேந்திரன் குடை ராட்டினம் சுற்றிக் கொண்டிருந்தான். அவன் செவியில் அன்று அவள் பேசிய பேச்சுக்கள் 'கிண்கிண்' என்று எதிரொலித்தன. பதிலுக்குப் பதில் சொல்லி அவளுக்குப் பாடம் கற்பிக்க வேண்டுமென்று துடியாய்த் துடிததான்.

அடுத்த விநாடி, அவன் தன்னையும் மறந்துபோய், "ஹா!" என்று வாய்விட்டு ரசித்தான். அந்தப் பெண் வாய்

மூடி மௌனியாகி, அவனுடைய நெஞ்சில் நடனம் ஆடிக் கொண்டிருந்தாள்—ஒருங்கே நிரம்பப் பெற்ற முப்பத்தி ரண்டு லட்சணங்களுடன். அந்தப் பெண் என்ருல், அந்தக் குடை மோஹினி! அந்தப் பேசும் பொற்சித்திரம் என்ன 'மாஜிக்' பண்ணிளுளோ, அவன் பேசாத சித்திரமானுன்!

தலைவலி மாத்திரையைத் தேடினுன் அவன்.

"ராஜா..."

ஆடுதன் ராஜாவாகிவிட்டிருக்கும் அவன் திரும்பினுன்.

"ராஜா, காப்பியை முதலில் குடி. அப்புறம் இந்தக் கட்டைப் பார். அத்தனையும் பெண்கள் ஜாதகங்கள். உன் நல்ல முடிவை நின்று நிதானித்து விடிவதற்குள் சொல்லி விடு!"

"ஆகட்டும், அம்மா,"

சீட்டுக் கட்டைக் கலைத்துப் பரப்பினுற்போலிருந்தது அக் காட்சி. பெண் ஜாதகங்கள், அவை ஒவ்வொன்றுக் கும் உரிய புகைப் படத்துடன் சிரித்தன. ராஜேந்திரனின் திருஷ்டி ஓரிடததில் நிலைத்தது; 'ஆ!' என்று கூச்சலிட் டான்; அடுத்த கால் விடிைக்கெல்லாம் மயக்கம் வந்து தரையில் சாய்ந்தான்.

ராஜேந்திரனுக்கு மயக்கம் தெளிய டாக்டர் வரவேண்டி யிருந்தது ஓர் அதிசயமே! கையில் அவன் பற்றியிருந்த 'அந்தப் பெண்'ணின் புகைப் படத்தைப் பார்த்த கிழவி, "தம்பி, உனக்கும் இந்தப் பெண்ணைத்தானே பிடிச்சிருக்குது. எனக்குக்கூட இந்தப் பெண்ணைத்தான் எடுத்த எடுப்பி லேயே பிடிச்சிட்டுது. இந்தப் பெண் ஜாதகமும் உன் ஜாத கமும் பெட்டியும் பேழையும்போல கன கச்சிதமாகப் பொருந்திடுச்சு பெண் மாம்பலம்தான்; போலீஸ் இன்ஸ் பெக்டர் கோபாலனின் ஒரே பெண். பெயர் ரஞ்சனி!—" என்ற புள்ளி விவரங்களை உதிர்த்தாள்.

"ம்...உன் இஷ்டம், அம்மா!"

* * *

ராஜேந்திரனுக்கு ராஜோபசாரம் நடந்தது. பெண் வீடு அல்லவா? செவிக்கு உணவுக்கு ஏற்பாடு செய்திருந்தும் கூட, வயிற்றுக்கும் ஈந்தார்கள். எதிர்கால மணப் பெண் ரஞ்சனி, ஜன ரஞ்சமாக ஒரு பாட்டைப் பாடினாள். தேன் அருவி சிந்து பாடியது; வசந்தம் போதை ஏற்றிச் சிரித்தது. ஒரு டான்ஸ் ஆடினாள். அந்த லேடீஸ் குடையுடன் சேர்ந்து அந்தப் பெண் நடனம் பயின்றதாகவே பட்டது. அன்றொரு நாள் கொட்டும் மழையிலே குமுறும் எரிமலையாகக் காட்சி தந்த அந்தத் துடுக்குக்காரப் பெண்ணா இன்று இப்படித் தவழும் பூந்தென்றலாக, புன்முறுவல் இழைக்கும் அழகு நிலவாக அமைதியே உருவாகக் காணப்படுகின்றாள் !... ஒரு வேளை, இவளுக்கும் 'தசாவதாரம்' அப்பியாசமிருக்குமோ? திருமால் பிரபுவே, நீ சொல்லமாட்டாயா?

பெண்ணின் தந்தை போலீஸ் ஜபர்தஸ்தையெல்லாம் போலீஸ் ஸ்டேஷனில் மூட்டை கட்டி வைத்துவிட்டு, வீட்டிற்கு வரவிருக்கும் மாப்பிள்ளையுடன் சரியாக இருபத்தொன்பது நிமிடம் மூன்று வினாடி பேசினார். மாப்பிள்ளையின் தாயும் பெண்ணை ஈன்றவரும் மேல்நாட்டு முறையில் கை குலுக்கிக்கொண்டு, அப்புறம் நம் நாட்டுப் பண்பாட்டிற்கு ஏற்ப காதைக் கடித்துக் கொண்டார்கள்.

"ராஜா !"

ராஜேந்திரன் திரும்பினான்; டாக்ஸியிலிருந்து ஒர் இளைஞன் இறங்கினான்.

"ஓ, கண்ணனா ?"

"ஆமாம்; உனக்காகத்தான் ஓடோடி வந்தேன். பெண்ணைப் பிடித்துவிட்டதல்லவா? உன்னை என்னுடைய மைத்துனனாக அடைய ஒரு வருஷக் கணக்கிலே 'பெண்டிங்' வைத்துக் கனாக் கண்டுகொண்டிருந்தது, இன்று நிறைவேறி விட்டது. ரொம்ப மகிழ்ச்சி...! என்ன அப்படி மலைத்து விட்டாய்? ரஞ்சனி என்னுடைய சொந்தத் தங்கை...!" என்று அடுக்கிக்கொண்டே போனான் கண்ணன்.

"நிஜமாகவா?..."

*   *   *

"சிரஞ்சீவி ராஜேந்திரன்—செளபாக்கியவதி ரஞ்சனி" கல்யாணப் பத்திரிகை அவ்விருவரின் உற்ருர், உறவினர், நண்பர் இவர்களின மேஜைகளை அலங்கரித்தது; திருமணத்திற்கு ஒருவாரம் முன்னதாகவே குடும்ப சகிதம் வந்து 'டேரா' போடும்படி தாக்கீதும் விட்டிருந்தது!

*   *   *

மாம்பலத்திலே திருமதி ரஞ்சனியின் பூங்கரங்களில் தவழ்ந்த கீழ்க்கண்ட கடிதம் முதற் குரல் தந்தது.

மயிலாப்பூர்,

..............

ரஞ்சனி!

இன்றைக்கு மூன்ரும் நாள் நம் இருவரின் திருமணம் நடக்கப் போகிறது. நீ ஆனந்த நடனமாடுவாய், சுதி, லயம், பாவம், எல்லாம் பொருந்தும்படி. இந்தச் சிதம்பர ரகசியத்தை அன்றைக்கு நான் உன்னைப் 'பெண் பார்க்க' வந்தபோது நீ ஆடிய ஆட்டத்திலேயே யூகித்தேன். உன்னை என் வாழ்க்கைப் பங்காளியாக ஆக்கிக்கொள்ளுவதிலும் நான் பூரிப்படைகிறேன்—ஆனுல் காரணம் உன்னை விழிக்கச் செய்யும். என்னை உதறியெறிந்து, கொட்டும் மழையில் அவமானச் சொற்களால் என்னை அர்ச்சனை செய்த உன்மீது நானும் பழிக்குப்பழி வாங்கிக்கொள்ள பொன்ஞன வேளை என் கதவைத் தட்டியிருப்பதற்குத்தான் பூரிப்படைகிறேன்;...உன்னுடைய "கர்வ பங்க விழா"வுக்கு ஒத்திகை பார்த்துக்கொண்டு தயாராக இரு!...என்னுடைய ஆழ்ந்த அனுதாபங்கள் உனக்கு!

இப்படிக்கு,

ராஜேந்திரன்.

*   *   *

மியிலாப்பூர் தபாலாபீஸில் திரு. ராஜேந்திரன் பெயருக்கு உறைக் கடிதமொன்றிருந்தது.

மாம்பலம்,

.............

" திரு. ராஜேந்திரன் அவர்கட்கு,

உங்களுடைய 'அன்பான' கடிதம் கிடைத்தது சந்தோஷம் என்று சொல்லுவதா? இல்லை, நன்றி என்று நவில்வதா?

அன்று, குடை காரணமாக நடந்துவிட்ட அசந்தர்ப்பத்திற்காக என்னை மன்னிக்கும்படி நானே உங்கட்கு எழுதத் திட்டமிட்டிருந்தேன். ஆனால் உங்கள் கடிதம்...? என்னைப் 'பெண்' பார்க்க வந்தீர்களே, அப்போதைய என் நிலை கூடவா நான் தவறை உணர்ந்ததைச் சொல்லவில்லை? ஆனால் உங்கள் கடிதம்—!

ஆனால் ஒன்று! உங்களைப் பற்றித் தினமும் கதை கதையாகச் சொல்வதுதான் என் அண்ணா கண்ணனின் நித்திய ஜோலி. உங்களிடம் என்னை 'சார்ஜ்' ஒப்புவிக்க வேண்டுமென்பது அவரின் இரண்டாண்டுத் திட்டம். அப்படிப்பட்ட பொன்னான நேரத்திலே, உங்கள் போட்டோவை எப்படியும் சம்பாதித்து வருவதாகவும் வாக்குத் தந்தார். அன்று என் குடையை எடுத்துக்கொண்டு ஆபீசுக்குச் சென்றவரின் வருகைக்காகக் காத்திருந்தேன்.

அப்பொழுதுதான் என் அண்ணா குடையைப் பறிகொடுத்து, எப்படியோ தேடிக் கண்டுபிடித்த உங்கள் போட்டோவையும் தொலைத்துவிட்டு என் முன் நின்றார்.

அடுத்த நாள்தான் நம்முடைய சந்திப்பு கிட்டியது.

ஆனால்...?

ஆண்—பெண் சரிநிகர் சமானம் என்ற பேச்சு அமலில் நடைபெற்று வரும் பொன்யுகம் இது.

கர்வபங்க விழாவுக்கு என்னைத் தயாராகும்படி எழுதி யிருக்கிறீர்கள் !

விதியின் எழுத்தை அழித்தெழுத நான் யார் ?

இப்படிக்கு,
ரஞ்சனி."

* * *

முகூர்த்த வேளை நெருங்கிக் கொண்டிருந்தது.

திருமணக் கோலத்தில் மணவறையில் மாப்பிள்ளையும் மணப் பெண்ணுமாக சிரஞ்சீவி ராஜேந்திரனும் சௌ பாக்கியவதி ரஞ்சனியும் மேளம், பாண்டு புடைசூழ வீற் றிருந்தார்கள்.

மாப்பிள்ளையும் பெண்ணும் குனிந்த தலை நிமிரவில்லை. இதை டெலிவிஷனில் அறிந்துதானோ என்னவோ தபால் காரன் அவர்கள் இருவரிடமும் தனித் தனியாக ஒவ்வொரு கவரை நீட்டிச் சென்றான்.

ராஜேந்திரன் அசந்து விட்டான். அவன் கையிலே தானும் ரஞ்சனியும் கொண்ட அழகிய புகைப்படமொன் றிருந்தது ! ரஞ்சனியின் உள்ளம் கவர் உருவம் அவனுக்குப் போதை ஏற்றியது !

ரஞ்சனி திகைத்தாள். அவள் கையிலே, தானும் ராஜேந்திரனும் கொண்ட அழகிய புகைப்படமொன்று காட்சியளித்தது. ராஜேந்திரனுடைய மனமோகன எழில் அவளுடைய மேனி முழுவதிலும் இன்பக் கனவை உற்ப வித்தது.

அடுத்த விநாடி ராஜேந்திரனும் ரஞ்சனியும் ஒருவரை யொருவர் அன்புடன், ஆதரவுடன் நிமிர்ந்து பார்த்துக் கொண்டார்கள். இரு ஜோடி விழிகளுமே பரஸ்பரம் மன்னிப்புக் கோரியிருக்குமோ ?...

* * *

கொட்டு மேளம் முழங்கியது !

கண்ணனின் கண்களில் அசல் ஆனந்தக் கண்ணீர் இருந்தது. அவனுடைய நெஞ்சின் அலைகள் இங்ஙனமாக ஆரவாரம் புரிந்தன ; " ஆஹா ! என் இன்பக் கனவு பலித்து விட்டது. நல்ல வேளை, ராஜேந்திரன் ஆத்திரத்துடன் பழிக்குப்பழி வாங்கப்போவதாக எழுதிய லெட்டரையும், அதற்குப் பதிலுக்கு வைராக்கியம் குரல் கொடுக்க ரஞ்சனி எழுதிய கடிதத்தையும் நான் பார்க்க நேர்ந்தது. இவ்விருவரின் குரங்குப் பிடிப்பான பழியுணர்ச்சியும் வைராக்கியமும் எந்த விபரீத முடிவில் கொண்டுபோய் விடுமோ என்றஞ்சிய எனக்கு நல்லதொரு மனோதத்துவம் பளிச்சிட்டது. நான் பிழைத்தேன் ! பெண் பார்க்கும்போது பிடித்த அவர்கள் இருவரும் கொண்ட போட்டோவை—அழகு சொட்டிய அந்தப் படத்தைத் தனித்தனியாக இருவருக்குமே அனுப்பினேன். அவர்களின் மனமாற்றத்தை—பிறந்த பொன் யுகத்தை—அவர்களுடைய சிரித்த முகம் சொல்லி விட்டதே...! ம்...எல்லாம் இவன் செயலல்ல—" அவன் " செயலாக்கும்...!"

# பலியா?

"ஏலே வடிவு, அடுத்த கிழமைக்குப் பொங்கலுங்குப் புறப்பட்டு வரச்சொல்லி உன் மச்சானுக்குக் கடுதாசி போடறதுதானே!"

"தபால் போட்டு நாலு நாள் ஆகப்போகுது. பொங்க லோடு காளி கோயில் திருவிழாவையும் பார்க்க வேணுமா அப்பா. அநேகமா இன்னிக்கு நாளைக்கு அவங்க வருற விபரத்துக்குத் தகவல் எழுதுவாங்க."

அவள் குரலில் மிதமிஞ்சிய ஆனந்தம் சுரந்தது. தன் கணவனுக்குக் கடிதம் போட்டு வரவழைப்பதில் தந்தையின் கட்டளைக்கு முந்திக் கொண்டதில் ஏனோ ஒருவகை வெட்கம் அவளைப் பற்றியது.

அதே சமயம் "அக்கா இந்தாப் பாரு" என்று ஓடிவந்த அவள் தங்கை, தபால ஒன்றை வடிவழகியிடம் நீட்டினாள்.

"அப்பா, மச்சான் கட்டாயம் வந்திடுமாம். தேரோட் டம் கட்டாயம் பார்க்க வேணுமாம்."

கணவனைப் பார்க்கும் பூரிப்பில் உருப்பெற்ற கனவு மயக்கம் அவள் வதனத் திரையில் அழகாக வரிக் கோடிட் டது.

"சபாசு வடிவு, ஊம்; அப்படியானு, மாப்பிள்ளைக்கு விருந்து பண்ண இப்பதொட்டே தயார்ப் படுத்த வேண்டியதுதானுக்கும்."

வடிவழகி—அவள் கணவன் வீரப்பன் இருவரும் ஜோடிப் புருக்கள். அவர்களிரண்டு பேர்களும் கைப்பிடித்த வாழ்க்கைத் துணைவர்களானது இருக்கின்றது பாருங்கள் அது ஓர் அதிசயமான கதை; உண்மை நிகழ்ச்சி!

* * *

வடிவழகி வீரப்பனுக்கு வாழ்க்கைப்பட வேண்டிய முறை. அவள் தன் அத்தானின் கரம் பற்றப் பொன்னுன சந்தர்ப்பத்துக்குக் காத்திருந்தாள். ஆனுல் வீரப்பன் அவளைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்பட்டவனுகத் தெரியவில்லை. அவள் செயலற்றுள். அவள் கவலை தந்தை சுப்பன் சேர்வையைத் திணற அடித்தது. பருவமடைந்த வடிவை வீரப்பனிடம் சேர்ப்பிக்க வேண்டுமென்று சேர்வை ஆசை ஆசையாக விருந்தான்.

வடிவழகி!

பெயரின் எழில் அவள் வடிவத்தில் எதிரொளி வீசிற்று; காட்டில் பூத்த ரோஜா அவள். பருவம் அவள் அழகிற்கு மூலாம் பூசியது. போதை நிறைந்த புன்னகையில் மின்னும் காந்தக் கவர்ச்சி அவள் அழகை மிகைப்படுத்தியது.

எல்லாம் பொருந்தியிருந்தும் வீரப்பன், வடிவழகியிடம் இப்படிப் பாராமுகமாகத்தான் இருந்தான். வீரப்பனுக்கும் வடிவழகிக்கும் முடிச்சுப் போட்டுவிட வேண்டுமென்ற கவலையில் நாட்களை விரலைவிட்டு எண்ணிக் கொண்டிருந்த இரண்டு தரப்புப் பெற்றோர்களும் அப்படியே கதிகலங்கிப் போகும் வண்ணம் வாய்த்தது வீரப்பனுடைய விபரீத முடிவு. அவன் மனமாற்றத்தைக் கேள்விப்பட்ட ஊரார்கள் ஒரு கணம் வாயில் விரலை வைத்து ஆச்சரியப்படத்தான் செய்தார்கள்.

தன் மச்சானின் தீர்மானத்தை அறிந்த வடிவு மனமிடிந்தாள்; அழுதாள்; புலம்பினுள்; ஆசை அத்தானேடு

அழகாக நடத்தப் போகும் இன்ப வாழ்க்கையைப் பற்றி எவ்வளவு எவ்வளவு எண்ணங்கள் எண்ணியிருந்தாள்!

வீரப்பனுக்குத் திடீரென வடிவழகியின் பேரில் இவ் விதம் அவளைப் புறக்கணிக்கும் ரீதியில் வெறுப்பு ஏற்படக் காரணம்?

புதிர் ஒன்றுமில்லை.

வடிவழகி எழுத்து வாசனை கிஞ்சித்தேனும் அறியாத வள் என்பது ஒன்றே குறை. அந்த வட்டாரத்திற்குள் நாலுந் தெரிந்தவன் வீரப்பன். உலக சமாச்சாரம், அரசி யல் சேதி இப்படிப்பட்ட செய்தி எல்லாம் அவன் சொல்லித் தான் மற்றவர்களுக்குப் புரியும். ஆகக்கூடி, ஊரார் களுக்கு வீரப்பனிடம தனித்த ஈடுபாடும், விசுவாசமும் உண் டானதில் ஆச்சரியம் எதுவுமில்லையல்லவா?

நாள் ஆக ஆக—அதாவது சுய அறிவு அவன் வாழ் விற்கு ஒளிபரப்பி வழிகாட்டும் நிலையில், தன்னுடைய எதிர் கால இல்லற வாழ்க்கைத் துணை குறித்து வீரப்பன் அடிக்கடி ஆலோசித்துப் பார்க்கலானான். அப்போது தனக்காகப் பரிசம் போட்டிருக்கும் வடிவழகியின் குறை பாடு அவனுக்குப் புலப்பட்டது. வருங்காலம் வளப்புக் கொண்டு விளங்க கைதொடும் மனையாட்டி அழகுடன் ஓரளவு கல்வியறிவுள்ளவளாக இருக்க வேண்டும்; அப்படி அமைந்தாலே தன்னுடன் இணைந்து வாழ்க்கை நடத்த முடியும் என்பது வீரப்பன் லட்சியம். ஆனால் அவனுக் காகக் காத்திருக்கும் வடிவழகி அவன் லட்சியத்துக்கு எங் ஙனம் ஈடுகொடுக்க முடியும்? அவள் எழுத்தறிவற்றவளா யிற்றே!

ஆனால் குற்றம் அவள் மேல்தான்!

"வடிவு, கொஞ்சமானும் படித்துக்கொண்டாத்தான் தேவலாம்" என்பதாகச் சமயம் வாய்க்கும் போதெல்லாம் அவளிடம் நேரில் பலமுறை வீரப்பன் எச்சரித்தும், அவள் அவன் சொன்ன சொற்களைச் செவிமடுக்க வில்லை.

கடைசியில் ஒருநாள் தேவையில், யாருக்கும் தெரியா மல் வீரப்பன் ஊரைவிட்டு மறைந்துவிட்டான், கல்யா

ணமும் தடைப்பட்டது; வடிவு தீயிலிட்ட மெழுகென உள்ளம் உருகினுள்; அடித்து வைத்த கற்சிலையாகி விட்டாள்.

"அத்தான் சொன்னது கணக்கா முன்னமேயே படிப்புக் கேட்டிருந்தா ஏதுக்கு இந்த இடுசாமம் வரப்போவுது. என் கண்ணே என்னை மறைச்சிருச்சே. காளியாத்தா நீதான் கருணை காட்டவேணும்."

அப்பொழுதுதான் அவள் குற்றம் வடிவுக்கு விளங்கியது: அண்டி வந்த புதையலைக் கைநழுவ விட்டதற்குத் தனது அறிவின்மையே காரணம் என்பதை நினைக்க நினைக்க அவளுக்கு அழுகை வளர்ந்தது.

"பள்ளிக்கூடத்து வாத்தியாரம்மா கிட்டப் போய் தெனமும் படிப்புச் சொல்லிக்கிட்டா என்ன?" என்ற யோசனை வடிவழகியின் மனத்தில் மின்வெட்டவே, அன்றே வாத்தியாரம்மாவிடம் சென்று வரலாறு பூராவையும் ஒளிவு மறைவின்றிக் கூறினுள் வடிவு.

"வடிவு, இன்று முதல் உன் கண் கலங்க நான் இணங்கேன். வீரப்பனை மணக்கவிருக்கும் நீ கொடுத்து வைத்தவள். எண்ணி ஏழெட்டு மாசத்திற்குள் உன் கைப்படவே அத்தானுக்கு 'லெட்டர்' எழுதும் அளவுக்கு நான் கற்றுக் கொடுத்து விடுகிறேன். அதற்கு நானுச்சு" என்ருள் அம்மா.

அவள் தன்மீது இவ்வளவு அன்பு காட்டுவதைக் கண்டு வடிவழகி எவ்வளவோ ஆறுதல் அடைந்தாள்.

"கொண்ட கொள்கைப்படி இனியும் அத்தான் என் சொந்த மச்சான்தானே..." என்று மனதிற்குள் சொல்லிப் பார்த்த பொழுது, பெருமிதமும் பூரிப்பும் அவளுக்கு ஏற்பட்டன. ஆனுல் மறைந்து போன வீரப்பனின் கதி......? அவளுடைய பேதையுள்ளம் குமுறியது.

* * *

மாதங்கள் பல கழிந்தன. ஒருநாள் பட்டணத்தில் வீரப்பனைக் கண்ட அவன் சொந்தக்காரன் எப்படியோ பின் தொடர்ந்து, அவன் கணக்கு வேலை பார்க்கும் கடை விலா

சத்தைக் கண்டுகொண்டான். சில நாள் கழித்துத் தன் பேருக்குக் கடிதம் ஒன்று வர முத்திரையை வீரப்பன் பார்த்தான். ஊர் முத்திரை! அவசரமாக தபாலே உடைத்தான். வீரப்பனுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. வடிவழகி இவ்வளவு அந்தமாகவும், அழகாகவும் தனிப்படக் கடிதம் எழுதித் தனக்குப் போடுவாள் என்று அவன் சிறிதும் எதிர்பார்த்தவனல்லவே! தன்னைப் படிக்கத் தெரியாதவள் என்ற ஒரே காரணத்துக்காகப் புறக்கணித்ததால் மனம் நொந்த அவள், வாத்தியாரம்மாவிடம் எழுதப் படிக்கக் கற்றுக்கொண்ட விருத்தாந்தம் முழுவதையும் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தாள்.

பாரதியாரின் 'புதுமைப் பெண்' சுவட்டில் அழகு காட்டி நிற்கும் வடிவழகியை இனிக் கைத்தலம் பற்ற வீரப்பனுக்கு என்ன தயக்கம்? தன்முன் வரவேற்புக் கூறி விரிந்து கிடக்கும் எதிர்காலத்தை எண்ணிப் பார்த்தான். வாழ்வின் வழிகாட்டியாக விளங்கிய லட்சியத் தம்பதிகள் பலரின் நிழல் சித்திரங்கள் அவன் நினைவில் அடங்கிச் சென்றன.

ஒரு நாள் வீரப்பனும் வடிவழகியும் 'இருமனம் ஒன்று சேர்' தம்பதிகளாயினர்.

அன்று பள்ளிக்கூடத்து வாத்தியாரம்மாவைக் கண்டு வரப் புறப்பட்டான் வீரப்பன்.

"அம்மா, உங்கள் உதவிக்கு நான் மிகவும் கடமைப் பட்டவன். நீங்கள் மாத்திரம் அடிக்கடி வடிவைத் தூண்டியிராவிட்டால் இவ்வளவு எளிதில் அவள் படித்துக் கொண்டிருக்கச் சாத்தியப்படுமா?" என்று சொல்லிப் புடவை ஒன்றை அவளிடம் சமர்ப்பித்தான்.

"வீரப்பன், ஆச்சரியமாக இருக்கிறதே! கொஞ்ச நேரத்துக்கு முன்தான் உங்க வடிவு வந்து புடவை, பழங்கள் எல்லாம் கட்டாயப் படுத்திக் கொடுத்துவிட்டுப் போனது. கேட்டதற்குக் காரணம் என்ன சொன்னது பாருங்களேன், குரு தட்சிணையாம்; கல்யாணப் பரிசாம். படிப்பு மட்டுமல்ல; அழகாகப் பேசவும் கற்றுக்கொண்டு விட்டது!"

"அம்மா, உண்மையில் இரண்டு பேருமே உங்களுக்குக் கட்டுப்பாடுடையோம்!"

வீரப்பன் பட்டணத்தில் இருந்த வண்ணம், எப்படியும் வடிவழகியைத் தூண்டி அவளுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்துவிட வேண்டும் என்பதாகப் பிரார்த்தித்து, அதே வாத்தியாரம்மாவிற்கு அடிக்கடி தபால் எழுதிய ரகசியம் வடிவிற்கு நாளது தேதி வரை தெரியவே தெரியாதாம்!

தமுக்குச் சப்தம் கேட்டது. பொங்கலுக்கு மச்சான் எடுத்து வந்த புடவை நாற்றில் சலசலக்க வடிவழகி புது மணப்பெண் போல நின்றிருந்தாள். வாசலில் 'கசமுச' வென்ற பேச்சொலி கேட்டு அவள் மெல்ல அடியெடுத்து வைத்தாள்.

"ஆமா, தம்பீ. காவு கொடுக்கிறார்களாமே, காவு. பாவம், வாய்பேசத் தெரியாத ஆடு, கோழிகளைத்தானு காளி ஆத்தா கேட்கிறுள்? எல்லாம் சாமி பெயரைச் சொல்லிக் கோயில்காரங்க ஏமாத்தற பொழைப்பு. சாயந் திரம் எப்படியும் பலி கொடுக்கிற வழக்கத்தை நிப்பாட்டணும். இல்லாட்டி என் தலையையே அந்தக் காளிக்கு......"

உணர்ச்சி கொப்பளிக்க வீரப்பன் பேசியதைக் காது கொடுத்துக் கேட்ட வடிவழகிக்கு உடல் வியர்த்துக் கொட்டியது.

அவளுக்குப் பேச்சின் சாராம்சம் புரிந்தது. பலி கொடுக்கும் சம்பவத்தை மாற்ற வேண்டும் என்பது அத்தானின் குறிக்கோள் என்பதையும் உணர்ந்தாள். ஆனுல் இது எப்படி சாத்தியம்? கோவில் உடமைக்காரர்கள் ஊரில் பெரும் புள்ளிகளாயிற்றே! "இல்லாட்டி என் தலையையே அந்தக் காளிக்கு..." என்று சபதம் செய்த தன் மச்சானின் பேச்சில் தொனித்த உறுதியை எண்ணிப் பார்த்த அவளுக்குக் கவலை மிஞ்சியது. பலகோடி நினைவுகள் அவள் நெஞ்சிலே விசுவரூபமெடுத்தன.

அன்று அந்திசாயும் பொழுது; வடிவழகி கோவிலை நோக்கிப் புறப்பட்டாள். எங்கும் ஜனத்திரள் மண்டியிருந்தது. ஒரு பக்கம் குண்ட ராட்டினம் சுழன்றது. அடுத்துச்

சிலம்பு விளையாட்டு. மற்ருெரு பக்கத்தில் "சீரங்கம் தெரியுது பார்; சென்னைப் பட்டணம் தெரியுது பார்!" என்று பாடிப் படம் காண்பிக்கப்பட்டது. ஒரு பக்கம் பட்டிக் காட்டுப் பாவையரின் கும்மிச் சத்தம் காதைத் துளைத்தது.

ஆச்சு!

அற்புதச் சோடனை செய்திருந்த தேர் ஊர்வலம் புறப்பட ஆயத்தமாக நின்றது. மறு விஞடி வடிவழகியின் பார்வை திசை திரும்பியது; திடுக்கிட்டாள், தூண்டில் போடப்பட்ட மீன் குஞ்சு போல. ஏராளமான ஆடுகளும் கோழிகளும் அம்மனுக்குக் 'காவு' கொடுக்க நிறுத்தப் பட்டிருந்தன. தலை முழுதும் மஞ்சள் பூசியிருந்தது. கழுத்தில் பூமாலை. பூசாரி சாம்பான் கையில் தீட்டிய அரிவாளுடன் உச்சாடனம் பெற்றவனைப் போல உறுமிஞன; பயங்கரமாக விழித்தான். என்ன சொன்னேன்? உச்சாடனமா? ஹஹ்ஹா! சுத்த ஹம்பக்! பாவம் கள் இல்லாததால் முன் சுரத்து அவனிடமில்லை.

வடிவழகி திகைத்து விட்டாள். அந்தோ, சாவின் சந்நிதியில் நின்ற அத்தனை வாய் பேசமாட்டாத உயிர்களையும் ஒரு விசை ஏறிட்டு நோக்கினுள்! 'கருணை பொழியும் கடலாகிய அந்த 'ஜகன் மாதாவா கருணையின்றிக் 'கொடை' கேட்கிருள்? கோழி தன் குஞ்சை எங்ஙனம் தின்ன விழையும்?'

"தன் முன் எமன் வடிவில் நின்று கொண்டிருக்கும் பூசாரியை எப்படியாகிலும் ஏமாற்றி அவ்வளவு உயிர்களையும் காப்பாற்றிவிட்டால்...ஆகா!" அவள் ஆவல் அது. முடியுமா?

எதிரே திரும்பினுள். வீரப்பனைச் சுற்றி நாலைந்து தொண்டர்கள் பலி செய்யும் கொடுமையை விவரித்தனர். புத்தர், சமண முனி, காந்தி மகாத்மா போன்ற பெரியோர்களின் பொன் மொழிகளை அவர்கள் கூறக் கேட்ட வடிவழகியின்—சூழவிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் ஒவ்வொருவரின் கண்கள் நீரில் நீந்தின.

பறை ஒலி வானளாவியது. கொம்பு முழங்கியது. கோவில் அடிமைக்காரர்கள் அம்மனுக்கு என ஒவ்வோர் ஆண்டு கொடுக்கும் பலியை நிறுத்த ஒப்பவில்லை. வீரப்பன் தனித்து எவ்வளவோ மன்றாடினான்; பயனில்லை.

பூசாரி முதல் ஆட்டின் தலைக்கு நேராகப் பளபளவென மின்னிய வாளை ஏந்தப் போனான். அந்தப் பொறிதட்டும் நேரத்தில் வீரப்பன் ஓடிப்போய் நின்றான் வாள் பிடித்து நின்ற பூசாரியின் முன். அவ்வளவுதான். வடிவழகிக்கு உயிர் தத்தளித்தது; அவளும் ஒரே பாய்ச்சலில் பாய்ந்து "அத்தான்!" என்று அலறிவிட்டாள்.

"அத்தான், நம்ம ரெண்டு பேருமே காளிக்குப் பலியாகிப் போயிடுவோம். அப்புறம் அந்த வாய் பேசாத பிராணிகளாச்சும் உயிர் தப்பட்டும்," என்றாள் வடிவழகி.

கூட்டத்திடையே மயான அமைதி நிலவிற்று. கோவில் காரர்கள் சிலையாகி நின்றார்கள்.

அதே சமயம் தேரின் முன்பாக வந்து நின்ற 'ஜீப்'பிலிருந்து போலீஸ்காரர்கள் இறங்கினார்கள். அப்போதுதான் வீரப்பனுக்கு மலர்ச்சி ரேகை விட்டது. வடிவழகி அதிசயித்தாள்.

"தெய்வங்கள் பெயரால் செய்யப்படும் பல அநீதிகளில் பலி மிகவும் கண்டனத்துக்குரியது. எந்தத் தெய்வமும் இம்மாதிரி ரத்தப்பலியை விரும்புவதுமில்லை; ஏற்கவும் ஏற்காது. தங்கள் தங்கள் பிரார்த்தனைகள் நிறைவேறி விட்டால் உடனே கொடை கொடுப்பதாக வேண்டுகிறார்கள் குருட்டு நம்பிக்கை கொண்டு. ஆனால் இந்த உயிர்கள் கொட்டும் இரத்தக் கண்ணீரை அவர்களெல்லாம் அறிவதில்லை. அண்மையில் 'பலித்தடை மசோதா' நம் சர்க்காரில் சட்டமாயிருக்கிறது. இது சர்க்கார் உத்திரவு; பலியின்றித்தான் உங்கள் விழாவைக் கொண்டாட வேண்டும்......" என்றான் ஒரு போலீஸ்காரன்..

கூடியிருந்தவர்கள் மெய் சிலிர்த்தனர்.

அப்புறம் கேட்பானேன்? பலி இல்லாமலே தேரோட்டத் திருநாள் சுபமாக முடிந்தது. அவ்வளவு உயிர்களும் பிழைத்து மறு வாழ்வு பெற்ற விந்தையை வியந்தாள் வடிவு. பலியை நிறுத்த வேண்டி, முன்னமேயே அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்ததும் வீரப்பனின் தலைமையில்தான் என்பது யாருக்குத் தெரியும்?...

தெய்வம், தெய்வத்தின் நிலையில் நின்று புதிர்ச் சிரிப்பினை உதிர்த்துக் கொண்டேயிருந்தது!

# மையலும் தையலும்

மாடன் குடிசையினுள் நுழைந்த சமயம் மெல்லிய முனகல் சப்தமொன்று அவன் காதில் நன்ருக விழுந்தது; கையில் வைத்திருந்த மகுடியைத் தடாரென்று கீழே போட்டுவிட்டுத் திரும்பினன்.

"தம்பி......"

தரையில் விரித்திருந்த கிழிந்த பாயில் படுத்திருந்த தமையன் முருகுவின் அழைப்பு அவன் செவியில் ஏறிற்று. ஆனுலும் அப்போதைய மனநிலையில் அந்த வார்த்தைகள் மாடனுக்கு நெருப்பாகத் தகித்தன. வேதனை பெருமூச்சாகி வெளியேறிற்று.

"தம்பி, கொஞ்சம் விளக்கைப் பொருதுவேன்......... இருட்டு கம்முன்னு இருக்கு...கண்ணுகூடத் தெரியல்லே... சங்கிலிக் கருப்பண்ணசாமி, இதுவா உன் சோதனை? ஊம்... இருந்திருப்பிலே உடம்புக்கு இப்படி வந்திருச்சே. தேற எம்பிட்டு நாளாகுதோ...பாவம், மாடனுக்குத்தான் வீண் சிரமம்..."

நெருப்புக் குச்சியைப் பெட்டியின் ஓரத்தில் உரசி விளக்கேற்றினன் மாடன். இருண்ட வெளியில் ஒளி பரவிற்று. அவன் இருண்ட மனத்திலுங்கூட நம்பிக்கை ஒளி உதயமாவது போன்ற பிரமை இழைந்தது.

"வஞ்சி!"

மாடன் கம்மிய குரலில் அப்பெயரைத் தனக்குள் ஒரு முறை அழைத்துப் பார்க்கலானுன். அழைத்த வாய் கமழ்ந்தது. அவன் இதயத்திலே இன்ப ஊற்றுப் பெருகிற்று.

"கருப்பண்ணசாமி, வஞ்சி எனக்குக் கிட்டுவாளா? எட்டாப் பழமாகிவிடமாட்டாளே? ஒனக்கு ஒரு பொங்கல் வச்சுக் கும்பிடுறேன். எப்படியும் அந்தக் குட்டி என் வசம் வந்திர நீ நீதான் கண் திறக்க வேணும்."

சற்று நேரத்திற்கு முன்பு குடிசைக்குத் திரும்புகையில் மாடன் வழியில் வஞ்சியைச் சந்தித்தான்.

"வஞ்சி!" என்றுன்.

அவள் அழகு காட்டி நின்றுள். அவள் காட்டுப் பூ! குறவர் இனத்தில் அவள் ஒரு செந்தாமரை. அவள்மீது ஏனைய குறவர்களுக்கு எப்போதுமே ஒரு கண் உண்டு.

"வஞ்சி, இன்னிக்கு நம்ப கண்ணுலத்தைப் பத்தி உங்கிட்டே 'உண்டு இல்லே'ன்னு ஒரு முடிவு கேட்டிர ரோசிச்சிருக்கேன்" என்றுன் மாடன்.

"மச்சான், வெளுத்ததெல்லாம் பாலுன்னு நம்பலாமா என்ன? ஒங்கிட்டேயும் பேருக்கு அஞ்சு, பத்து வெள்ளிப் பணம் உருண்டுதாறு, நேத்திக்கு உங்க அண்ணுச்சி எங்கிட்ட அப்படிக் கேப்பாரா? அவருகிட்ட ரொம்பப் பணம் இருக்குதாம்; அவருக்கு எம்மேலே கண்ணுபோலேருக்கு. பூடகமாச் சொன்னுரு. நான் முடிவாச் சொல்லிப்பிடறேன். நீங்களும் கையிலே கொஞ்சம் பணம் சேர்த்ததும் நம்ம ரெண்டு பேரும் கண்ணுலம் பண்ணிக்கலாம் மச்சான்."

வஞ்சி மேல்பூச்சாகக் கூறியதைக் கேட்ட மாடன், ஒரு கணம் சிலேயானுன். தான் விரும்பும் பெண்ணேத் தன் தமையனும் அடையு வலேபோடுகிருன் என்ற செய்தி அவனேத் துயரத்திற்குள்ளாக்கியது.

'அண்ணனுமில்லே அண்ணன்......அந்தப் பயல் எனக்கு அண்ணனு? ஊஹூம்; எல்லாம் வெளிவேஷம்!

அப்படின்னு இதுவரை எம்பேரில் உசிரையே வச்சிருக்கவனைப் போல நடந்ததெல்லாம் பாவனைதானே? வரட்டும்.'

சொல்லாமல் கொள்ளாமல் வஞ்சி நடந்தாள். அதற்குள் மாடன் ஏதோ ஒரு ஸ்திரமான தீர்மானத்திற்கு வந்தவனைப் போல ஓடிப்போய், "வஞ்சி, அதுக்குள்ளார இப்படி விரசா ஓடறியே! நாளை விடிஞ்சதும் உன் கையிலே வெறும் வெள்ளிக் காசைக் குலுங்கச் செஞ்சுட்டாச் சம்மதந்தானே? அப்புறம் நீ என் கண்ணுட்டியாறதுக்கு அட்டியில்லையே" என்று சொல்லிக் கண் சிமிட்டினான். வஞ்சியும் குறு நகையை உதிர்த்தவாறு திரும்பினாள். இரு ஜோடி விழிகளின் சங்கமத்தில் அவர்களது மணவினை ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது!

* * *

"ஏலே மாடா..."

அடித்தொண்டைக் குழியினின்றும் மிதந்தோடிய வார்த்தைகள் முனகலுடன் வெளிப்போந்தன. முருகு தம்பியை அலட்டினான்.

முழங்காலில் கைகளை அணைத்துக் கட்டிய வண்ணமிருந்த மாடன் மனத்தைக் கல்லாக்கிக்கொண்டு சும்மாவிருந்தான், கேட்டும் கேளாதது மாதிரி.

முருகுவும் மாடனும் உடன்பிறப்பு. விபரம் புரிந்த நாள்தொட்டு அண்ணனின் பராமரிப்பில் வளர்ந்தவன் மாடன்: முருகு சற்று முன் கோபி. கோபமிருக்கும் இடத்தில்தானே குணமுமிருக்கும்? முருகுவுக்கு முதல்தாரம் கல்யாணம் பண்ணி அந்தப் பெண் இறந்துபோனாள். வருடங்கள் இரண்டு ஆகின்றன. இதுவரை அவன் கல்யாணத்தைப் பற்றி அக்கறை காட்டவில்லை.

தற்சமயம் அந்தக் குடிசையில் அவர்கள் இரண்டுபேர் மட்டுமே வாசம். முருகு பாம்பு விஷத்தைப் போக்கடிப்பதிலே சூரன். அத்துடன நாட்டு வைத்தியத்திலும் அவனுக்கு நல்ல பேர். பெயரும் புகழும் அவனுக்கு நிதி சேர்த்துத் தந்ததில் வியப்பில்லை அல்லவா? அது போக, மாடனும்

தினமும் பாம்பு, மகுடி சகிதம் ஊர் சுற்றி வருவான். வரும் போது அவனுடைய சுருக்குப் பையாகிய கஜானவில் பல காசுகள் இன்பஒலி எழுப்பிக் கொண்டிருக்கும்.

மாடனுக்கும் வயது வந்தது காதல் 'பண்ணினன்'; வஞ்சியின் வலேயில் சிக்கினன். ஆனல் முடிவில் பார்க்கப் போனல் வஞ்சிக்கொடியை அடையப் போட்டி!—அதுவும் அவன் கூடப்பிறந்த சகோதரனே போட்டி போட்டான்.

எண்ணச் சுழற்சியில் மாடனின் மனம் கிளே தாவியது; கண்களில் கண்ணீர் வேலி கட்டியது. அவன் மருண்டு நின்முன். வெளியே கப்பியிருந்த இருளே மின்னல் கீற்று ஒன்று கிழித்துச் சென்றது. சற்று நேரத்தில் ஒளி பரவி மறைந்தது. மீண்டும் அதே இருள் திரள். அதேபோல அவனுக்கு ஒரு யுக்தி மின் வெட்டியது; அல்ல—பழி! சுற்றுச் சூழ்நிலேயை அவன் மறந்தான். தன்னே இது காறும் ஆளாக்கிய அண்ணனே அடியுடன் மறந்தான். ஆனல் அந்த வஞ்சிதான் அவன் ஸ்மரணேயில் நின்று உணர்வூட்டி நின்முள். மாடன் தன் அன்பை, பாசத்தை, உள்ளத்தை—ஏன் எல்லாவற்றையுமே அந்த ஒரு வஞ்சி யின் நிமித்தம் திரணமாக எண்ணினன்.

மாடன் சூதாடினன். அவனுடைய சூதுப் பொருள் என்ன தெரியுமா? அதுதான் அவனுடைய தமையன் முரு குவின் உயிர்! பழி; வஞ்சம்! அவனது மனப் பாம்பு ஊர்ந் தது; படமெடுத்தது. காலேச் சுற்றின பாம்பு கடிக்காம லிருக்குமா? ஒரே கல்லில் இரண்டு மாங்காய்...! தனக்குப் போட்டியிடும் அண்ணன் ஒழிந்து போவான்; பிறகு வஞ்சி விரும்பும் பணம் கிட்டும்; அதற்கப்புறம் வஞ்சியே கிடைத்து விடுவாள். ஆகா! அவன் மனம் சிலந்திவலே பின்னியது.

"தம்பி..."

"அண்ணச்சி?"

"அப்பவே புடுச்சு அலட்டுறேனே...கேக்கல்லியா..."

"தூங்கிப்பூட்டேன். என்ன சேதி?" உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசினன் மாடன்.

"மேலுக்கு முடியலே. என்னமோ போல வருது. கொஞ்சம் சுடு தண்ணி வச்சுக் கஞ்சி காச்சித் தர்றியா?" வெள்ளை உள்ளத்துடன் பேசினான் முருகு.

"ஆகட்டும் அண்ணாச்சி."

அடுப்புப் பற்றவைத்து மாடன் கஞ்சி தயாரித்தான். பிறகு குவளையில் ஊற்றி ஆற வைத்தான். மறுபடியும் உள்ளே சென்று ஏதோ ஒன்றை எடுத்து வந்து கஞ்சியில் தூவிக் கலந்தான். அவன் கைகள் நடுங்கின; உடல் வியர்த்துக் கொட்டியது.

குவளையைத் தொட்டுப் பார்த்தான். சூடு தாளவில்லை. ஆறட்டுமே என்று பொறுத்திருந்த அவனுக்குத் தூக்கம் சுருட்டிக்கொண்டு வந்தது; தூங்கிவிட்டான் போலும்!

சற்றைக்கெல்லாம் "தம்பி...தம்பி..." என்று முருகு அலட்டினான். அலறல் கேட்டுக் கண் விழித்தான் தம்பி மாடன்.

"தம்பி, நான் உனக்கு என்ன தீவினை செஞ்சேன்... ஏதுக்கு என்னை இப்படிச் சந்தேகப்பட்டே? உன் சந்தோஷம் ஒண்டியேதான் என் மூச்சுண்ணு எண்ணிப் பூரிச்சிருந்தேன். ஆனா நீ என்னை இப்படி உசிரோட கொல்ல நினைப்பேயின்னு துளியும் எண்ணலையே...அதுதான் நீ மனசிலே முடிச்சிருந்ததை உன்னையறியாமல் தூக்கத்திலே உன் வாய் வெளியே கொட்டிருச்சுதே! தம்பி, ஓங்கிட்டே ரெண்டு, மூணு நாளு முந்தியே சொல்லியிருக்கவேணும். அந்தப் பொண்ணு வஞ்சியை ஒனக்கே கண்ணாலம் செஞ்சு வச்சிர வேணுமின்னு நேத்திக்கு அதுகிட்டே அளப்பறிஞ்சு பார்த்தேன். ஆனா என் கெட்ட காலம் என்னைச் சம்சயிச்சுட்டது போல. அத்தோடே என்னைப் பத்தியும் உங்கிட்டே அவதூறு சொல்லியிருக்கு. தம்பி, நீயும் வஞ்சியும் சந்தோசமா இருங்க. அதுவே என்னுடைய ரொம்ப நாளையக் கனா. உள்ளே கலயத்திலே அம்பது ரூபாய் பணம் இருக்கு; எடுத்துக்க..." தொடர வகையின்றி அவன் வார்த்தைகள் உதட்டுடன் ஒட்டிவிட்டன.

என்ன தோன்றியதோ, மாடன் 'சடக்'கென்று அண்ணனின் தலைமாட்டில் இருந்த கஞ்சிக் குவளையைப் பார்த்தான்; அது காலியாகவிருந்தது! 'பக்'கென்றது மாடனுக்கு. அவன் மனச்சாட்சி அவனைத் தூண்டில் போட்டு இழுத்தது.

அகல் விளக்கின் மங்கல் ஒளியில் முருகுவை நோக்கினான்; அவனுடைய இமைகள் மூடியிருந்தன. பேச்சு மூச்சற்றுப் பிரேதக் கணக்கில் அவன் கிடந்தான்.

"அண்ணாச்சி! ஐயோ! நான் பாவி! கொலைகாரன்...!" என்று ஓலமிட்டான் மாடன். உச்சாணிக் கொம்பில் அந்தரத்தில் கால் தவறித் திணறுபவனைப் போன்று அவன் தத்தளித்தான்; பதறினான். வெளியே மேகங்கள் வானத்துப் பாசறையில் போர் முரசம் கொட்டின. முகில் வானம் மழை பொழிந்தது.

அதே கணத்தில் "மச்சான்!" என்ற சப்தம் கேட்டது. மாடன் பிரமித்துத் திரும்பிப் பார்க்கலானான். பதட்டத்துடன் பூங்கொடி வஞ்சி நின்றிருந்தாள்.

"உங்க அழுகை சத்தம் கேட்டுது. உசிரே போயிருச்சு எனக்கு! ஓடியாந்தேன்" என்றாள் வஞ்சி.

தேரையைக் கவ்வும் பாம்புபோல மாடன் வஞ்சியின் கழுத்தில் கையைக் கொடுத்துக் குரல்வளையைப் பற்றினான்.

"பாவி மகளே, என் மனத்தை மாற்றி, என் அண்ணனையும் சாகடிச்சிட்டியே!...பாதகி!...அதுக்குப் பழி உங்கிட்டே வாங்கினாத்தான் எனக்கு மனசு ஆறும்..."

வஞ்சியின் ஓலம் வளர்ந்தது.

அப்போது "தம்பி..." என்ற மெல்லிய குரலை அவன் கேட்டான். கேட்டதுதான் தாமதம், அவன் பிடி தளர்ந்தது. "அண்ணாச்சி!" என்று கூவியழைத்து ஓடினான்.

"அண்ணாச்சி, நீங்க பிழைச்சுட்டிங்களா? அந்தக் குட்டிமேலே கொண்ட ஆசையிலே உங்க உயிருக்கு உலை

வைக்கக் கஞ்சியிலே விஷம் கலந்துட்டேன். அண்ணாச்சி! என்னைப் பெரிய மனசு பண்ணி மன்னியுங்க !"

மாடன் தேம்பினான். முருகுவுக்குக் கொஞ்சம் தெம்பு ஊறியது. தம்பியை அணைத்துக்கொண்டு, "தம்பி, எல்லாத்துக்கும் மேலே கடவுள் இருக்காரல்லவா? நீ விஷமின்னு எண்ணிக் கலந்தது சும்மா மயக்க மருந்து போல. நம்ப நல்லகாலம். கடந்தது கண்ணீரோடு தொலையட்டும். அந்தப் பொண்ணைக் குறை சொல்லாதே. அது என்ன செய்யும்? விடிஞ்சதுமே வஞ்சியைக் கண்ணாலம் செஞ்சிக்கிடப் பரிசம் போட்டுடுவோமா? அதை நீதான் கேளுவேன்..." என்றான் முருகு.

குடிசையின் மூலையிலிருந்த அகல்விளக்கின் திரியில் சுடர் ஏறியது; ஒளி மங்கியது. சற்றுக் கழித்து அச்சுடர் தெறித்துப் பூமியில் விழுந்தது. மறுபடியும் முன்போல அழகாக அகல்வெளிச்சம் எங்கும் பரவ ஆரம்பித்தது !

# மனச்சாட்சி

'ஸ்ரீவன்லால் ட்ரக் ஸ்டோர்ஸ்' என்ற போர்டைக் கண்டதும், பூவம்மாவுக்கு ஒருவகை அமைதி நிறைந்தது. கொதிக்கும் வெயிலில் கால் நடையாக தண்டையார்ப் பேட்டையிலிருந்து மவுண்ட் ரோடுக்கு நடந்து வந்ததன் அயர்வைப் போக்கியது அந்த விளம்பரப் பலகை. பெரு மூச்சு விட்டாள்; வியர்வைத் துளிகளைச் சேலைத் தலைப்பில் அடைக்கலம் புகச் செய்தாள்.

மருந்துக் கடையின் முதல் படியைக் கடக்கும்போதே, வலது கால் இடறி விட்டது. அவளுக்குக் கண்களில் கண்ணீர் முட்டி வந்தது. "பச்சை ஆத்தா!" என்று விளித்தாள். சேலை முந்தானையைத் தேடி எடுத்தாள். முடிச்சிட்ட தலைப்பு எதுவும் அவள் கைக்குப் பிடிபடவே யில்லை. உயிர் போய்விட்டதுபோல் இருந்தது அவளுக்கு. "ஐயோ!" என்று கதறினள். "மச்சான்!" என்று கூப்பாடு போட்டாள்.

அவளுடைய மச்சான் தோன்றினன்-மனக் கண்ணிலே-பாயும் படுக்கையுமாக. அவளுடைய கரம் பற்றியவனுக்கு ஆறு நாட்களாகத் தீராத—மாளாத காய்ச்சல். மருந்துக் கடையில் 'மிக்ஸ்சர்' வாங்கி ஒருவேளை கொடுக்கக்கூட அவளிடம் 'வக்கு' இல்லை. அவள் மட்டும் என்ன, அவன் கூடத்தான்! அன்றாடம் ரிக்ஷா 'இஸ்த்து'க் கிடைக்கும் ஒரு

ரூபாய், ஒண்ணரை ரூபாய் 'துட்டு' அவனுக்கும் அவளுக்கும் வயிற்றுப் பாட்டுக்குப் பதில் சொல்லுமா?

சுயநினைவைத் தூண்டில் போட்டு இழுத்தாள் பூவம்மா. தன்னையும் மீறிய அழுகை எரிமலையாக வெடித்தது. கையில் வழி தப்பிக் கிடந்த சேலைத் தலைப்பை அலுப்போடு வீசினாள். இடுப்பில் சொருகியிருந்த டாக்டர் எழுதித்தந்த மருந்துச் சீட்டைப் பிரித்தாள். அவளுக்கு எழுத்து வாசனையே தெரியாது—அப்படிப்பட்டவளுக்கு டாக்டர் ஒருவர் எழுதித் தந்த மருந்துச் சீட்டை மட்டும் படிக்கத் தெரியுமா, என்ன?

"பத்து ரூவா!...பத்து ரூவா!...முழுப் பத்து ரூவா நோட்டு...! ஐயோ!"—எண்ணங்கள் குமுறின. சுற்றுமுற்றும் பார்வையிட்டாள். மருந்துச் சீசாவும் கையுமாக அவரவர்கள் வந்து போய்க்கொண்டிருந்தார்கள்.

"என் மச்சானோட காச்சல் தீர வழி என்ன?" என்று ஒரு கேள்வி அவள் நெஞ்சடியிலிருந்து புறப்பட்டு எதிரொலித்தது. சூன்யம் எதிர் காலத்தின் விளிம்பில் நின்று கைகொட்டிச் சிரித்தது.

பூவம்மாவால் சிரிக்க முடியவில்லை அப்படி! தன்னைப் போன்ற ஒரு பெண்—அந்த டாக்டர் அம்மா மட்டும் எப்படிச் சிரித்தாள்? அவளுக்கு இதயம் இல்லையா? இருந்திருந்தால், தன் மச்சானை வந்து பார்த்து நோய் தீர வழி சொல்லும்படி கண்ணீரைக் காணிக்கை செலுத்திக் கெஞ்சிக் கதறியழுத அவளிடம், "போ, போ! இப்போது எனக்கு 'டைம்' இல்லை. வேறு யாராவது ஒரு டாக்டரைப் பார்!" என்று முகத்தில் அறைந்த மாதிரி கூறுவாளா?

பூவம்மாவுக்குத் தலை திரும்ப முடியவில்லை, இமயமலையின் எடைக்குக் கனத்தது. கண்கள் திரும்பின; அவற்றின் பின்னணியில் கண்ணீர் வெள்ளம்!

என்ன ஆச்சரியம்!

பூவம்மாவுக்குத் தான் காண்பது கனவா, நனவா என்று புரியவில்லை. அவள் எதிரே நின்ற அந்தப் பெண் கையில்

பற்றியிருந்த புத்தம் புதிய பத்து ரூபாய்த் தாளோடு, புன்னகை வதனத்துடன் நுனி விரலில் மருந்துச் சீசாவை யும் சீட்டையும் அனுயாசமாகப் பற்றியவாறு நின்று கொண்டிருந்தாள்!

பூவம்மா அந்தப் பெண்ணையே இமை விலக்காமல் பார்த்தாள். அந்தப் பெண் யாருக்காக மருந்து வாங்க வந்திருக்கிருளோ? அவள் கழுத்தில் பார்வை பாய்ந்தது; விலகியது. மங்கல நாண் சிரித்துக் கொண்டிருந்தது.

பூவம்மா சிந்திந்தாள், "ஒரு வேளை என் மச்சானுக்கு உடம்புக்கு வந்தாப்பிலே, அவள் புருசனுக்கும் காச்சல் வந் திருக்குமோ?...ம், அவங்க அவங்க நிழல் அவங்களை விட்டா போகப் போவுது!..."

மீண்டும் பூவம்மா அவளைப் பார்த்தாள். அவள் என்ன, அவள்!—பெயர் என்னவாம்?

பூவம்மா பார்த்தாள், பார்த்தாள் அப்படிப் பார்த்தாள்! "ஆ!" என்று கூச்சலிட்டாள்; அடுத்த நிமிஷம் நான்கு தப்படி எடுத்து வைத்து முன்னேறி, அந்தப் பெண்ணை அண்டினுள்; அவளுடைய வலது கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்: "ஏலே! இந்தப் பத்து ரூவாத் தாள் என்னோடது; இந்தாப் பாரு, நோட்டிலே பச்சை வர்ணம் பட்டிருக்குது; இந்தப் பச்சை என்னோட ரவிக்கை யோட சாயம்! ஐயோ, என் மச்சானுக்கு அசாத்தியமான சொரம். என்ன பாடுபடுதோ அங்கே?" என்று வேதனையும் வெந்த இதயமும் பின்னிப் பிணையப் பேசினுள் பூவம்மா.

"ஏ, என்னை—இந்த அங்கம்மாவை அமிஞ்சிக்கரை பூராவுக்கும் அத்துபடி யாக்கும்! இது ஒன்னோட பணமா? பட்டப் பகலிலே தாணுக்காரங்க சுத்தறப்போவே இப்படி 'லூட்' அடிக்கவா பார்க்கிறே? இது என் பணம். என் மச்சான் சுருக்குப் பையிலேருந்து புதுசா எடுத்துச் தந்துச்சு. இந்தாப் பாரு, என் ரவிக்கைகூடப் பச்சைதான். அந்தச் சாயமாக்கும் இப்படி பச்சை குத்தியிருக்குது ரூவா

யிலே! எல்லாம் வேடிக்கைக் கதையால்ல இருக்குது? அந்தக் கமலம் டாக்டரம்மா கிட்டே கெஞ்சாத கெஞ்சு கெஞ்சினேன்; மசியல்லே. பொம்பளையா அவள்?... இரக்கமத்த பாவி! என் மச்சானைப் பார்த்து ஊசி போடக் கூப்பிட்டேன், வரல்லே. இப்ப வேறே டாக்டர் கிட்டே போய் சீட்டு எழுதியாரேன். நீ என்னுன்னு, என் வயத்திலே மண் அடிக்கப் பார்க்கறே?...'' என்று எதிர்க்கட்சி பேசினுள் அந்தப் பெண்— ஆமாம்; அங்கம்மாப் பெண்!

பூவம்மா பாவம், எப்படிப் பேசுவாள்? "டாக்டர் கமலம்!''—இந்தச் சொல் அவளுள் எதிரொலி பரப்பியது. மத்தியான்னம் அவள் டாக்டர் கமலத்தைப் பார்த்து தன் மச்சானின் காய்ச்சலுக்கு மருந்து தரும்படி எவ்வளவோ வேண்டினுள். அவள் அசையவில்லை. 'முடியாது' என்று அனுபபி விட்டாள். "பாவி!'' என்று திட்டிக்கொண்டு பூவம்மா வேறு டாக்டரைப் போய்ப் பார்த்தாள். மருந்துக்குப் பெயர்—நோய் தீர வழி செய்யப்பட்டது. ஆனுல் வழிகாட்டி திசை தப்பி மறைந்து விட்டானே?

அங்கம்மா கர்வப் புன்னகை தளும்ப, தளுக்கு நடை நடந்து 'கவுண்ட'ரை அடைந்தாள். பூவம்மாவுக்கு ஆத்திரம் பீறிட்டது. "பச்சை ஆத்தா! நானு பொய் சொல்றேன்? அவள்தானே பொய் சொல்ரு? நீ பார்...!' என்று எண்ணமிட்டவளாக அங்கம்மாவை நெருங்கி, அவள் கையிலிருந்த அந்தப் பத்து ரூபாய் 'சலவை நோட்டை'ப் பிடுங்கப் போனுள். பெண்கள் இருவரும் பேய்களானுர்கள்; ஆண்கள் பேயாட்டத்தில் லயித்தனர், வெட்கம்!

அப்பொழுது—வாசலில் நின்ற 'கெடிலாக்' மோட்டார் குரல் கொடுத்தது. "நில்!'' என்று டாக்டர் கமலம் இறங்கி வந்தாள். மறுகணம், "அடேடே, நானும் இத்தனை நாழி உங்கள் சண்டையைக் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறேன். ஐயோ, பாவர்! இதோ பார்! பத்து ரூபாய் நோட்டுக் கிடக்கிறது!...இதுவும் புதுத் தாளாகத்தான் இருக்கிறது. இது யாருடையது?... அதிசயமா யிருக்கிறதே! இதில்கூட பச்சைக் கறை படிந்திருக்கிறதே?...'' என்று வினவினுள் டாக்டர் அம்மா.

பூவம்மாவும் அங்கம்மாவும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டார்கள். ஆச்சரியக் குறிகள் இரண்டு கொக்கி யிட்டு இணைந்தன!

இரண்டு பத்து ரூபாய்த் தாள்களும் விசித்திர பாவம் துலங்கப் புன்னகை தெளித்தன!

மறு விநாடி, பூவம்மா அந்த டாக்டர் அம்மாவைப் பார்த்தாள் ஆத்திரம் வெடிக்க! அதே தருணம், அங்கம்மா வும் அதே டாக்டரம்மாவைப் பார்த்தாள், மாளாத ஆத்திர வெறி தாளாமல்!

டாக்டர் கமலம் எம். பி. பி. எஸ். விஷமப் புன்சிரிப் புடன் அவர்கள் இருவரையும் நெருங்கிச் சொன்னாள்: "பூவம்மா, அங்கம்மா! நீங்கள் இருவரும் என்னைக் கோபிப் பீர்கள்—எனக்குத் தெரியும். அங்கம்மா, நீ வைத்திருக்கும் பத்து ரூபாய் நோட்டை நீயே வைத்துக் கொள்! பூவம்மா இந்தப் பத்து ரூபாய்த் தாளை நீ வைத்துக் கொள்! எப் படியோ அவரவர் பணம் அவரவருக்குத் திரும்பி விட்டது! நானும் பெண்தான்! உங்கள் இருவரின் குறையையும் அறியாதவளல்ல நான். நீங்கள் இரண்டு பேரும் தனித் தனியே வந்தபோது, என் கணவரின் உடல்நிலை ரொம்பவும் கவலைக்கிடமாயிருந்தது. . அதனால்தான் முடியவில்லை. கடவுள் கிருபையினால், இப்போது என் கணவர் மறு பிறவி பெற்று விட்டார். உங்களைத் தேடித்தான் புறப்பட்டேன். காரில் ஏறிக் கொள்ளுங்கள் இருவரும். இப்போதே உங்கள் இருவரின் கணவன்மார்களையும் பரீட்சை செய்து நோய் தீர என்னால் ஆனதைச் செய்கிறேன்......ம்...புறப்படுங் கள்!"

அடுத்த இரண்டாவது நிமிஷம் ஜீவன்லால் மருந்துக் கடையில் இந்த எதிர்பாராத அதிசயம் நிகழ்ந்தது!

"டாக்டரம்மா, என்னை மன்னிச்சிடுங்க! இந்தப் பணம் என்னோடது இல்லே!" என்று சொல்லி விம்மினாள் அங்கம்மா.

"அம்மா, அம்மா! என்னையும் மன்னிச்சிடுங்க! முதலிலே நான் காணோமின்னு சொன்ன பத்து ரூவா

நோட்டுகூட என்னுடையது இல்லே. அது உங்க வீட்டுக் காம்பவுண்ட் சுவர்ப் பக்கம் எடுத்தது தானுங்க!" என்று அழுதாள் பூவம்மா.

"பூவம்மா, நான் வச்சிருந்த பத்து ரூவா நோட்டு உன் சேலைத் தலைப்பிலேருந்து திருடினது தான்! என்ன செய்யட்டும், என் புருசன் நிலை என்னை அப்படிச் செய்யத் தூண்டிருச்சு. பாவம், என் மாதிரிதானே உன் மனசும் வெந்திருக்கும்!" என்று சொல்லிப் பத்து ரூபாய் நோட்டை பூவம்மாவிடம் நீட்டினாள் அங்கம்மா.

"இந்தாங்க டாக்டரம்ம! கொஞ்சம் முந்தி கீழே கிடந்த தின்னு நீங்க காட்டின பணமும், அங்கம்மா இப்போ கொடுத்த பணமும் இருக்குது, இந்த ரெண்டு பத்து ரூவா நோட்டுக்கும் சொந்தக்காரங்க வேறே யாரோ? அவங்க பாவம், பணத்தைக் காணுமலடிச்சுப்பிட்டு என்ன சங்கடப் படறுங்களோ?..." என்று சொல்லி, இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்களையும் டாக்டர் கமலத்திடம் நீட்டினாள் பூவம்மா.

"அம்மா, கோடிப் புண்ணியம் உண்டு, சீக்கிரம் புறப் படுங்க!" என்று துரிதப்படுத்தினாள் பூவம்மா.

"ஜல்தி பண்ணுங்க, தாயே!" என்றாள் அங்கம்மா.

"ஏன் பூவம்மா! இந்தா அங்கம்மா! தவறு செஞ்சவங் களுக்கு தண்டனை கிடைக்க வேண்டியதுதானே நியாயம்?" என்றாள் டாக்டர் கமலம்.

பூவம்மாவும் அங்கம்மாவும், "ஆமாங்க, அம்மா!" என்று பதிலிறுத்தனர்.

"பேஷ்! அப்படியென்றால், நான்தான் தவறு செய்தவள்! உங்களுடைய இரு உள்ளங்களுக்கும் உரிய சமயத்தில் அமைதி உண்டாக்க இயலாமல் போய்விட்டேனல்லவா? அதற்கான தண்டனையை இப்போது பணத்தின் ரூபத்தில் உங்களுக்குச் செலுத்தப் போகிறேன். இந்தாருங்கள், ஆளுக்குப் பத்து ரூபாய்! இந்த இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்களும் என்னுடையதே!"

"பூவம்மாவுக்கு என்னால் உதவ முடியாது போயிற்றே என்ற வேதனையினால்தான், என் பணமாவது அவளுக்கு ஆபத்துக்கு உதவட்டுமே யென்று புதுப் பத்து ரூபாய் நோட்டை மாடியிலிருந்து கீழே வீசினேன்; அவள் கையில் கிடைத்தது அது. சற்றுமுன் தரையில் கிடந்ததாகக்கூறி நான் காட்டிய அந்தப் புதிய பத்து ரூபாய்த் தாளையும் பச்சை மையினால் கறைப் படுத்தி, நானேதான் அப்படி யாரும் அறியாமல் வீசி எறிந்தேன்!......குற்றம் செய்வது சகஜம்; ஆனால் அதை உணர்ந்து திருந்திக் கொள்வது தான் ரொம்பவும் முக்கியம். நீங்கள் இருவரும் துளிக்கூடக் கவலைப் படாதீர்கள். உங்கள் இருவரின் தாலி பாக்கியம் கெட்டியாக இருக்க அம்பிகை அருள் புரிவாள்!" என்று உணர்ச்சிப் பெருக்குடன் கூறிய வண்ணம் ஆளுக்கொரு பத்து ரூபாய் நோட்டை நீட்டினாள் டாக்டர் கமலம்!

"டாக்டர் அம்மா!" என்று இரட்டைக் குரல்கள் விம்மி வெடித்து விண்ணைச் சாடின!

மனச் சாட்சி மூன்று தனித்தனிப் புள்ளிகளிலே நின்று கை கொட்டிச் சிரித்துக் கொண்டிருந்தது!

# ஊஹூம்!...

சுவர்க் கடிகாரம் ஐந்து முறை அடித்தது; ஓய்ந்தது. ரவீந்திரனின் இதயமும் ஐந்து தரம் அடித்துக் கொண்டது; ஆனால் ஓயவில்லை. நீள் மூச்சும், விழி நீரும் ஒன்றினை யொன்று போட்டியிட்டவாறு புறப்படலாயின. அவை இரண்டும் சங்கமம் ஆயின. விந்தைதான். அதன் விளைவு என்ன தெரியுமா? 'டங், டங்' என்று ஒலி எழுந்தது. எங்கே? அவனுடைய மண்டையோட்டிலே! நெற்றிப் பொட்டு விட்டுப் போய் விடுவதைப் போல அப்படித் தெறித் தது. தலையை இரு கைகளாலும் அழுந்தப் பிடித்துக் கொண்டான் அவன். கைகள் வலித்தன. தலையின் வலி கரங்களுக்குக் கூடு விட்டுக் கூடு பாய்ந்து விட்டதோ? வேண்டாத சிந்தனை! 'பைத்தியக்காரன்!' — தனக்குத் தானே ரவீந்திரன் பேசிக்கொண்டான்.

"சரிதான்; எந்திரு ஸார். நேரமாச்சு; கிளம்பின்னு சொன்னா, நீ நம்பளையே பைத்தியக்காரன்னு சொல்லிக்கினு இருக்கீயே, ஸார்?"

அவன் தலையை நிமிர்த்தினான். தலைவலி போய்விட வில்லை; தலைவலி போய்த் திருகுவலி வந்துவிட்டதோ என்று ஆராய்ந்து உணரவே அவ்வாறு செய்தான். அலுவலகப் பணியாள் நின்றான். எள்ளும் கொள்ளும் அவன் கையில் காட்சி தரவில்லை; ஆனாலும், அவனுடைய முகத்தில் எள் ளும் கொள்ளும் வெடித்தன.

ரவீந்திரன் இருப்பிடத்தை விட்டு எழுந்தான். வாய் விட்டுச் சிரிக்க வேண்டும் போலிருந்தது; சிரிக்க வாய் வழி விடவில்லை. 'பைத்தியக்காரன்!' என்று மீண்டும் ஓர் ஒலி அவனுள் எழுந்தது; இதய ஒலி பற்களுக்கிடையில் நசுங்கிற்று. 'நல்லவேளை; தப்பிப் பிழைச்சேன். எனக்கு நானே பைத்தியக்காரப் பட்டம் சூட்டிக்கிட்டதை எப்படியோ இந்தக் கிழம் துப்புக் கண்டு பிடிச்சிட்டுதே!...' என்று அவனுக்குச் சொந்தமான உள்ளம் நினைத்தது; பைக்குள் கையை விட்டான்; நாலணு நாணயம் வந்தது. ப்யூனிடம் நீட்டினன். கிழத்துக்கு வாயெல்லாம் பல்லானது; அல்ல சிரிப்பானது. அது 'பொக்கு வாய்!'

'பைத்தியம்!'

தைரியமாக, வாவிட்டுச் சொன்னான் ரவீந்திரன். இந்தப் பட்டம் அந்த நான்கணுவுக்கு உரியது!

' அம்மா வீட்டிலே இல்லே போலே! அதான் இவ்வளவு நேரமா ஆபீசிலே இருந்திட்டே போலே! ஏன் ஸார்?''

தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று எண்ணமிட்டவனாக வாசற்புறம் வந்து சேர்ந்ததும்தான் ரவீந்திரனுக்கு நல்ல மூச்சு வெளிக்கிளம்பியது. 'அம்மா வீட்டிலே இல்லே போலே...!' ஓர் அரைக்கணம் அவன் மேனியில் எரிமலை வெடித்தது; துடிதுடித்துப் போய்விட்டான். சிந்தூரப் பொட்டும், செக்கச் சிவந்த தக்காளிப் பழக் கன்னமும், போதையூட்டித் திகழ்ந்த உடல்வாகும் அவனைக் கிறங்க வைத்தன.

"மிஸ்டர்...!"

அந்த ஒலி தேய்வதற்குள், பூட்ஸ் கால்கள் தேயத் தொடங்கின; ஓட்டம் பிடித்தான். 'அவ ஆங்கிலோ இண்டியன் லேடி. அதாலேதான், நான் அவ தோள்மேலே இடிச்சதுக்கு சும்மா விட்டா! ஆமா, மன்னிப்புக் கொடுத்தா. இல்லாட்டி...'

'பஸ் ஸ்டாப்' ஒன்று, இரண்டு, மூன்று என பட்டியல் தந்தது. ரவீந்திரன் நிற்கவில்லை. 'அம்மா வீட்டிலே இல்லே

போலே!'—அவன் நின்றான். மின்னல் வெட்டிப் பாயும் நேரம் வரை அவன் வசமிழந்தான். 'ஐயையோ, பொன்னழகி!...'

சேப்பாக்கத்திலிருந்தவன் மயிலாப்பூரில் வந்து குதித்து விட்டானே? சேதுப் பாலமாகப் பணி இயற்றிய 'ஆட்டோ' பறந்தது, துட்டு ஏந்திய பெருமித நிறைவோடு. மணிக் கட்டைப் பார்வையிட்டான் ரவீந்திரன். ஐந்து, முப்பத்தைந்து! 'அப்பாடா!' என்று ஆசுவாசப் பெருமூச்சு விட்டான் அவன்.

'வெரி குட்! இன்னும் இருபத்தஞ்சு நிமிஷம் இருக்கு! சபாஷ்...!' வேதனையின் வெறி ஓங்கிற்று.

மணி ஆறு:

சிகரெட்டுத் துண்டைத் தூக்கி வீசி எறிந்தான் ரவீந்திரன். எரிந்த நெருப்பு அவன நெஞ்சில் தகித்தது.

ஒருமுறை அவனது மேனி சிலிர்த்தது. அதோ, அவள்...!

ஓவியப் பாவையெனத் தளர்நடை பயின்று வருகிறாள். மயக்கும் எழில் முகம்; மயங்கிய வேல் விழிகள். முண்டக் கண்ணி அம்மன் கோயில் சந்நிதி. ஆம்; அதோ அவள் கை தொழுத வண்ணம் நின்று விட்டாளே...?

ரவீந்திரன் கண்களைக் கூர்ப்பாக்கிக்கொண்டு எதிர் நோக்கிக் கொண்டேயிருந்தான். 'எங்கே அந்த உருவம்...?' வெற்றிலை பாக்குக் கடை முகப்பில் தொங்க விடப்பட்டிருந்த கித்தான் படுதாவில் தன் உடலை மறைத்தவாறு அவன் நின்றான். முள்மேல் நிற்பது போல ஓர் உள்ளுணர்ச்சி ஊடுருவியது. இதயத்தில் முள் குத்தாமலிருக்குமா, என்ன?

கோடைக் காற்று வீசியது; இதம் அளித்தது. மூன்றாம் பிறை விண்ணில் குந்திப் புகழைப் பறையறிவிக்க ஆயத்தமானது. ஒளி விளக்குகள் சிரித்தன.

ரவீந்திரனின் மனம் விம்மிப் புடைத்தது; வேதனையின் நெட்டுயிர்ப்பு வெடித்தது; அழுதான்; அழுதான்!

'ஏன் அவள் போய்விட்டாள்? எங்கே அந்த உருவத்தைக் காணும்? யார் அந்த உருவம்?...'

"ஆருயிர்ப் பொன்னழகி!

நம் இருவருடைய காதலுக்கும் அறிமுகத் தலமாகி, புனிதக் கோயிலாகக் காட்சி தரும் முண்டகக்கண்ணியம்மன் சந்நிதியிலே இன்று மாலை ஆறு மணி அளவில நாம் சந்திப்போம். உனக்காக நான் காத்துக் கொண்டேயிருப்பேன். உன் வழியில் என் விழிகள் காத்துத் தவம் கிடக்கும். மறந்து விடமாட்டாயே, கண்ணே?...மறுத்து விடலாகாது, பொன்னே!

இப்படிக்கு,
உன் அன்புக் காதலன்.

ரவீந்திரன் அக்கடிதத்தை மடித்துச் சட்டைப் பைக்குள் திணித்துக் கொண்டான். வேர்த்துக் கொட்டிற்று. கைபிடித்துண்டு முகத்தைத் துடைத்தது; முகத்தில் படிந்திருந்த—பதிந்திருந்த தொல்லையைத் துடைக்க முடியவில்லை!

வி. எஸ். வி. கோயில் தெருவில் இருந்தது அந்த வீடு. நுழைவாயிலில் அடி தொடுத்து வைத்தான் ரவீந்திரன். யம பட்டணத்தில் கால் பாவுவது போலிருந்தது அவனுக்கு. நேற்று இந்நேரத்தில் அவன் எவ்வளவு மகிழ்ச்சியுடன் இருந்தான்?... சொர்க்கத்தின் தலைவாசலிலமர்ந்து ஆனந்தக் கடலாடினனே அவன்? அவனும் அவளும் 'டீக்காக' உடுத்துக் கொண்டு டாக்ஸி அமர்த்தி 'எல்பின்ஸ்டனு'க்குச் சென்று திரும்பினர்களே?... உள்ளத்தின் துன்பத்தைக் கட்டுப்படுத்தக் கூடாத நிலைக்கு உள்ளான தருணத்தில், மனத்தின் இன்னல் கண் வட்டங்களில் ஓய்வு கொண்டு கண்ணீராய் வழிந்தது.

அப்போது, "அத்தான்! வந்திட்டீங்களா? ஏன் இன்னிக்கு இவ்வளவு நாழி?..." என்று தேன் குரல் உதிர்த்துத் தோன்றினாள் பொன்னழகி.

ஏறிட்டுப் பார்த்தான் அவன்.

அவள் தேடக் கிடைக்காத தெய்வமா? அப்படித்தான் அவள் அழகு கூட்டித் திகழ்ந்தாள். விழி வளைவுகளில் கருவளையங்கள் நெளிந்திருந்தன. எம்பிராய்டரி நூல், ஊசி, வளைவுச் சட்டம், பனிக்குல்லாய் முதலியன அவன் பார்வைக்கு ஆஜராயின.

"அத்தான்!..."

ரவீந்திரன் கண்களை லாகவமாகத் துடைத்துக் கொண்டு விட்டான்! கெட்டிக்காரன்!

'கெட்டிக்காரி இவள்! ஆடம்பரமாக டிரஸ் செய்து கொண்டு, தன்னுடைய காதலனைப் பேட்டி காணப் போய் விட்டு, ஏமாற்றத்துடன் திரும்பிய சுவடு தெரியாமல், என்னிடம் நடிக்கிறாளே? பலே கெட்டிக்காரி!'

"அத்தான்!..."

"ஆமா, ஆமா!"

அவன் 'டை'யை அவிழ்த்தான். அவள் உதவினாள். தங்கக்கரங்களை வெட்டிப் போட்டு 'சூப்' வைத்துக் குடித்து, அல்ல, வாயில் ஊற்றிக் கொண்டு, ஒரு வினாடி வைத்துக் கொண்ட பிறகு, காறித் துப்பிவிடத் துடித்தது அவனது உள் மனம். கத்திக்கு எங்கே போவான்?... 'சூப்' வைக்கவும் தெரியாதே? பாவம்...!

'பூட்ஸ், ஸாக்ஸ்' ஒதுங்கின. கைப் பைக்குள்ளிருந்து கதம்ப மலர்ச்சரம் எட்டிப் பார்த்தது. புதுமணம். 'இந்தா சாமி, பூ! மறந்திட்டுப் போறீயே?' என்று நினைவுக் குறிப்பாகி நீட்டிய வாடிக்கைப் பூக்காரியின் முகம் மனக்கண்ணில் தெரிந்தது. எரித்துவிடத் துடித்தான். அவனுக்கு நெற்றிக் கண் இல்லை; கடைசிப் பட்சம், தீப்பெட்டியில் கடைசிக் குச்சியாவது இருந்திருக்க கூடாதோ? சே!

"உட்காருங்க அத்தான்; காப்பி கொண்டாரேன்!"

முண்டகக்கண்ணியம்மன் கோயில் ரவீந்திரனின் முன் உருப்பெற்றது. 'என்னுடைய முதற்காதல் பலித்த அதே கோயிலின் சந்நிதியிலேயே என் உயிரையும் பலி வாங்கத் திட்டமிட்டுவிட்டாளே இவள்?... யார் அந்த நபர்?... ஏன் அவன் குறிப்பிட்டபடி தரிசனம் தரவில்லையோ? ம்!...'

பற்கள் வலி கண்டன. 'குப்பையிலே மாணிக்கம் கிடந்துச்சு; கண்டேன். கனிவு பிறந்துச்சு; காதலும் பிறந்திச்சு. என் அப்பாவோட காசு பணம் நிலம் நீச்சு எதையும் சட்டை பண்ணுமல், சட்டையை உதறிக்கிட்டு ஊரை விட்டுப் புறப்பட்டேன். என் மனசுக்குப் பிடிச்சவளோட கைகளைப் பிடிச்சுக் கல்யாணம் கட்டிக்கிட்டேன்! பெற்றவங்களை விட, காதலைப் பெரிதாக நினைச்சதுக்குக் கிடைச்ச வெகுமதியா இது?...'

பொன்னழகி பொன் திகழ, அழகு கொழிக்க வந்தாள். "இந்தாங்க காப்பி!"

முதலிரவில், அவள் இதயத்தினின்றும் வெளிக்கொணர்ந்து சொற்களை வீசினுளே, அவ் வார்த்தைகளை அவன் எங்ஙனம் மறக்க முடியும்? 'அத்தான், நீங்கதான் என் வாழ்க்கையில் விளக்கேற்றி வச்சீங்க; என் தெய்வம் நீங்க: தெய்வம் அனுமதி தந்து ஆசி சொல்லி நாம ரெண்டு பேரும் தம்பதியானேம்: இதுவே என் பாக்கியம்!'

"காப்பி குடியுங்க, அத்தான்!"

ரவீந்திரன் வேர்வை வழிய நின்றுன். காப்பிக் கோப்பையை வாங்கினுன். 'ஊஹூம், இதை குடிக்கப் பிடாது. விஷம் கலந்திருப்பா!' தூக்கி வீசி எறிந்தான். வழக்கமாக அவள் தரும் காப்பியை முதலில் அவன் குடிப்பான்; பிறகு அதில் வழக்கமாக மிச்சம் வைக்கப்பட்டிருக்கும் மீதிக் காப்பியை அவள் அருந்துவாள்! இன்று அந்தக் கண்ணுடிக் கோப்பை சுக்கல் நூருனது!

"அத்தான்!"

அவள் அன்பு மாருக் குரலில் அழைப்பினை விடுத்தாள்.

'வஞ்சகி!'—ஓங்கிய குரலில் கூவி அலற நினைத்தான்; ஓங்கி அலறவில்லை; ஓங்கி அறைந்தான்! உடல் தத்தளித்த நிலையில், சட்டைப் பையிலிருந்த 'பார்க்கர்' புதுப்பேனு தரையில் வீழ்ந்தது. முதல் தேதி இந்தப் பேனுவை அவள் தன் 'சிறுவாட்டுப் பணத்'தில் அல்லவா வாங்கி அவனுக்குப் பரிசளித்தாள்...?

கதம்ப மலர்ச்சரம் அவனைக் கண்டு வாய்விட்டுச் சிரித்தது!

அதே வேளையில், வெறொரு சிரிப்பொலியும் கேட்டது.

ரவீந்திரன் அதிசயப் பட்டான். 'யார் சிரிப்பது? பொன்னழகி அல்லவா சிரிக்கிருள்?'

பொன்னழகியின் விழி விளிம்புகளில் நீர்த்திரை படர்ந்திருந்தது. அவள் அவனை அண்டி வந்தாள். மார்பகம் விம்மித் தணிந்தது. "அத்தான், உங்களுக்கு ஒரு லெட்டர் வந்திருக்குதுங்க...!"

நீட்டிய கடிதத்தை ரவீந்திரன் ஏந்தினன்; படித்தான்.

"அன்பு நிறைந்த காதலரே,

என் முதற் காதலை வாழவைத்த தெய்வம் நீங்கள். உங்களை என் ஆயுள் உள்ள மட்டும் மறவேன். நாம் நேரில் பேசிக் கொண்டபடி, நம் திருமணத்துக்கு உடனடியாக ஆவன செய்யுங்கள். இது உங்களுக்கு நினைவின் குறிப்பாக அமைய வேண்டும். பிற நேரில்.

இப்படிக்கு,
உங்கள் அடியாள்."

ரவீந்திரனுக்கு ஒரு நிமிஷம் உலகம் சுழன்றது; அந்தச் சுழற்சியின் விளையாட்டு ஓய்ந்தபோது, அவனுக்குத் தன்னுணர்வு வழிவிட்டது.

"இந்த லெட்டர் நீ முன்பு எனக்கு எழுதியதுதானே?"

"ம்!" என்று சொல்லிக் கொண்டே, அவனை நெருங்கினுள் அவள். அவனது சட்டைப் பையிலிருந்த 'அந்தக் காதல் கடித'த்தை எடுத்தாள். "இது...?"

"பொன்னழகி, இந்த லெட்டர் நான் உனக்கு முன்பு எழுதின தல்லவா?" கண்ணீர் மாலை நீண்டது. இம்மாலைக்கு மணம் உண்டா?

பொன்னழகி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள். ஆமாம்! அசல் ஆனந்தக் கண்ணீர்!

"அத்தான், நான் வாங்கின பேனா சரியாக எழுதுகிறதா என்று டெஸ்ட் செய்து பார்க்க வேண்டிக் கடுதாசியைத் தேடினேன். அப்போது உங்க லவ் லெட்டர் கிடைச்சுது. ஒரு நாடகம் போட ஓடியது. உங்க காதல் கடிதத்தையே வில்லனாக்கி விட்டேன். நான் எதிர்பார்த்தபடிதான் இந்த நாடகம் சோகத்தில் முடிந்தது. நான் வெற்றி பெற்றேன்! என் கன்னத் தழும்புகள் என் கெலிப்புக்கு அடையாளம் சொல்லும்! வாஸ்தவம்தானே அத்தான்?"

"நான் தோற்றுவிட்டேன், பொன்னழகி, தோற்றுவிட்டேன்!" என்று அலறித் துடித்தான் ரவீந்திரன்; அவளுடைய கன்னத் தழும்புகளை மாற்ற எண்ணி அவளது மாம்பழக் கன்னங்களைத் தடவிக் கொடுக்க ஆரம்பித்தான்.

ஏதோ வாசனை மிதந்து வந்தது. அது மாம்பழ வாசனையா, என்ன?

கதம்ப மணம்!

"ஊஹும்!...சும்மா இருங்க, அத்தான்!..."

# "ஏய் காளி!"

அறந்தாங்கி ஸ்டேஷனில் ரெயில் நின்றதுதான் தாமதம்; ரெயிலினின்றும் ஜனங்கள் கும்பல் கும்பலாக இறங்க ஆரம்பித்தனர்; அவர்களில் குமாரசாமியும் ஒருவன். தலையில் சுமந்திருந்த பெரிய மூட்டையுடன் ரயில் நிலையத்தை விட்டு ஊருக்குள் நடந்தான். வெயிலின் வெக்கை சற்று தணிந்திருந்தது; அந்தி மயங்கும் வேளை.

ஊரின் முன்னடியிலிருந்த கடையில் 'சாயா' குடித்து விட்டுப் பணத்தை முதலாளியிடம் நீட்டியவண்ணம் "ஏனுங்க, ஆவணத்தாங்கோட்டைவரை துணைக்கு ஒரு ஆள் வேணும். சில்லரை எதாச்சும் கொடுத்துடலாம்; கிடைக்குங்களா?" என்று கேட்டான் குமாரசாமி.

"அவசியமானு ஒரு ஆளை வரச் சொன்னுப் போச்சு" என்று சொல்லிவிட்டு, ''ஏய் காளி" என்று அழைப்பைச் சுண்டிவிட்டான் கடைக்காரன். சோம்பல் முறித்து வீசித் தெழுந்த காளியை ஏற இறங்கப் பார்த்தான் குமாரசாமி.

"காளி, சீக்கிரம் எழுந்திருப்பா, ஒரு கிராக்கி வந்திருக்கு. பாக்கி தூக்கத்தைத் திரும்பவந்து மறந்துடாமல் தூங்கிக்கலாம். ஐயாவோட சாலேவரை போகணும்" என்று மேலும் துரிதப்படுத்தினுன் டீக் கடைக்காரன்.

கந்தலும் கிழுசலுமாகப் பார்க்கப் பரிதாபமாகத் தோற்றம் கொடுத்த காளிக்கும் ஒரு தேத்தண்ணீர் வாங்கிக் கொடுத்துப் புறப்பட்டான் குமாரச மி.

அந்தி மங்கல் எங்கும் படர்ந்தது. சூரியனின் கதிர்கள் பொன் ரேக்குப் பெற்றுப் பிரகாசித்தன. இயற்கை கண்ணுமூச்சு விளையாடியது.

மூட்டையை இதம் பதமாகத் தோளில் சாய்த்துத் தலை முண்டாசுக்கு அணைவாக வைத்துக்கொண்டு காளி முன் சென்றான். குமாரசாமிக்கு அவனையும் அறியாமல் காளியிடம் அனுதாபம் சுரந்தது. வழிப்பயணத்துக்குப் பேச்சு இருந்தால் தொலை—தூரம் தோன்றுதல்லவா? காளியின் வாயைக் கிளறிவிட்டால் ஒருகால் அவனைப்பற்றி ஏதாகிலும் விருத்தாந்தம் புலப்படுமென்ற ஆவல் குமாரசாமிக்கு. மறுவினாடி அவன் இதய சபலத்தைத் துழாவியறிந்தவனாட்டம் காளியே முதலில் பேச வாய் தூக்கினான்.

"அண்ணாச்சி, என்ன இப்படி ஒண்டியாய்ப் புறப்பட்டிங்க! ஆனா முடிச்சைப் பார்த்தாப் பெலமாக் கனக்குது. வேறு யாரும் உங்க சம்சாரம், பிள்ளைகுட்டி யாராச்சும் வருவாங்களா? அல்லது முன்னாடியே போயாச்சா?"

இது காளியின் கேள்வி:

சற்றே மறந்திருந்த ஏதோ ஒன்றை அவன் நினைவுப்டுத்திவிட்டவன் போலக் கணநேரம் குமாரசாமி பேசாதிருந்தான்.

"காளி, எனக்கு இன்னும் கல்யாணம் ஆகலே. ஆனா என் தங்கச்சிக்கு முதலிலே கல்யாணம் கட்டினப்புறம்தான் என்னைப்பற்றி யோசிக்கணும். தங்கச்சியையும் அம்மாவையும் காலம்பற வண்டிக்கு ரயிலேற்றி விட்டேன். அவசரமா ஒரு காரியம் எனக்குத் தலைமேலே இருந்துச்சு. அதாலே நான் அவங்களோடு போக வாய்க்கல்லே. எனக்காகக் காத்துக்கிட்டிருப்பாங்க. சொந்தக்காரங்க வீட்டிலே ஒரு சடங்கு. அதுக்குத்தான் போறேன்" என்று குமாரசாமி கூறினான். 'ஊம்' கொட்டிக் கேட்டான் காளி.

குறுக்கிட்ட ஆற்று மணலைத் தாண்டிச் சென்ற சமயம் கூப்பிடு தூரத்தில் 'குபுகுபு'வென்று தீப்புகை மண்டலம் மேகத்தை எட்டிப்பிடிப்பது போன்று பரவி வந்ததைக் கண்ட குமாரசாமி, வேடிக்கை மாதிரி அக்காட்சியைக் காளிக்கும் காண்பித்தான்.

"இதுக்கு இம்மாம் தெகப்புக் கொள்றீங்களே. அஞ்சாறு வருசத்துக்கு முந்தி ஜப்பான்காரன் பர்மாவைக் குண்டுபோட்டுத் தீக்கிரையாக்கினதை நீங்க கண்ணுலே காணக்கூடத் துணிச்சல் படமாட்டிங்க போலே. ஹ்-ம்; பாவிப்பய சண்டைவந்து......" என்று பேசிக்கொண்டு வந்த காளியின் குரலில் அளவிறந்த துயரம் தடம்பதிந்திருந்தது. இதையுணர்ந்த குமாரசாமி கனிவுடன் பச்சாதாபத்தோடு காளியைப் பார்த்தான். அவன் கண்களினின்றும் அருவி சோர நீர்ச் சொட்டுகள் படிப்படியாக வழிந்து கொண்டிருந்தன.

"காளி"

"ஐயா, இருந்திருந்தாப் போல இப்படி ஏன் கண் கலங்குதுன்னுதானே யோசனை பண்ணுறீங்க. வயிற்றுப் பிழைப்புக்காக நானும் என் தங்கச்சியும் கடல் கடந்து பர்மா தேசத்துக்குப் போனோம். பெற்றவுங்க எங்களை அனாதரவா விட்டுட்டுச் செத்துட்டாங்க. வேலை செஞ்சு பிழைச்சு அதிலே கிடைக்கும் வரும்படியைக் கொண்டு நானும் தங்கச்சியும் காலத்தைக் கடத்தினோம். இப்படி வருசம் ஒண்ணு தாண்டிப் போச்சு. அப்புறம்தான் சண்டை மூண்டு குண்டு வீச்சுத் தொடங்கியது. கடை அலுவலா அடுத்த வங்குசாலை வரை போயிட்டுத் திரும்பி வந்து பார்த்தேன். ஊரே நிர்த்தூளிப் பட்டுச்சு. பிணக் காடு கணக்காப் பட்டணம் தோணுச்சு. உயிரு தத்தளிக்க பதைச்ச நெஞ்சோடு என் கண்ணை எங்கெல்லாமோ தேடினேன்; அலசினேன்; காண முடியலை. அப்பவே என் ஜீவன் வடிஞ்சிருச்சி. உயிர் தப்பிச்ச இரண்டொரு பொங்கிச் சாமியார்களையும் விசாரிச்சுப் பார்த்தேன். தெரியாதுன்னுட்டாங்க. நடைப் பிணமாக நடந்து நம்ப மண்ணை மிதிச்சேன். சுற்றுவட்டாரத் திருநாள் ஒண்ணு பாக்கி

வைக்காம இன்னமும் தேடிக்கிட்டுத்தான் இருக்கேன். ஐயாவே, நீங்களும் ஒரு தங்கச்சியோட பிறந்தவங்க தானுங்களே. என் ஆசைத் தங்கையை என் உயிர் இருக்கிறதுக்குள்ளே காணலாமா? காணக்கூடுமா?—" என்றான் காளி. அவன் பேச்சில் சொல்லுக்குப் புறம்பான சோகமிருந்தது; சஞ்சலமிருந்தது; ஆர்வமிருந்தது; ஆதுரமிருந்தது!

குமாரசாமி காளியை நோக்கினான். அவன் செயலிழந்த பாவையாக நின்றிருந்தான். விழிக்குழியில் புதைந்து கிடந்த கண்ணின் கருவிழிகள் அங்குமிங்கும் யாரையோ தேடியலைந்தன. அவன் தங்கையையா? 'சகோதரியை மீண்டும் பார்க்கலாமா?' என்ற ஆசைக் கனவில் மிதந்த அவன் இமைப்பொழுது மலர்ச்சியடைந்தான். அதே நொடியில் 'இனி எப்படி, எங்கே அவளைக் காண இயலும்!' என்ற நிலை ஏற்படவே மலர்ச்சி பெற்ற அவன் வாட்டமுற்றான்; வாடிப் போனான்.

சாலை எல்லையை மிதிக்கும் வரை இருவரும் மோன நிலையில் வழிநடந்தனர். ஊரை அடைந்தவுடன் குமாரசாமி சில்லரையை எண்ணி எட்டு அணா காளிக்குக் கொடுத்தான். காளி சிரித்தான்; பலமாகச் சிரித்துக் கொட்டினான், ஊழிக் கூத்தில் பிரமன் உதிர்த்த பேய்ச் சிரிப்புக் கணக்கில்—! அவன் சிரிப்பில் இதய அந்தரங்க எண்ணங்கள் பூராவும் அலை பாய்ந்து மேல் பூச்சாகி எதிரொலிப்பது போன்று குமாரசாமி நினைத்துக்கொண்டான்.

"பாவம் பைத்தியம் போல."

குமாரசாமி இரக்கங் காட்டினான். காளி அப்படியென்றால் பைத்தியமா? யார் சொன்னார்கள்?

"ஐயா, காசு பணத்துக்கு என்னுங்க. உங்க மாதிரி நல்ல மனுசங்கதான் எனக்குப் பெரிசு. எனக்கு என் தங்கச்சிப் பொண்ணு கிடைக்குங்களா?" என்று கூறி, அவன் தங்கியுள்ள வீட்டைக் கேட்டுக்கொண்டு காளி விடை பெற்றுக்கொண்டான்.

அடுத்த நாள்.

மத்தியானம் கடைத் தெருப் பக்கம் குமாரசாமி சென்றிருந்தான்; சடங்கு விசேஷம் முடிந்ததால் ஊருக்குப் புறப்படச் சாமான்கள் வாங்கிவரப் போயிருந்தான் அவன்.

வீட்டின் தாழ்வாரத்தில் கைகளால் முகத்தை ஏற்றபடி உட்கார்ந்திருந்தாள் அவன் தங்கை சீவி முடித்திருந்தாள்; புது ஆடை உடுத்தியிருந்தாள். அழகான முகம் பொலிவுடன் விளங்கியது.

"குமாரசாமி ஐயா இருக்காங்களா?" என்று கேட்டுக்கொண்டு காளி முன்னே வரலானான். திரும்பவும் ரயிலடிக்குப் போக ஏதாவது 'சான்ஸ்' தட்டலாமல்லவா?

உட்கார்ந்திருந்த அப்பெண்ணை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்தான். யாருடைய முகம் அது? காளி பின்னும் ஓர் அடி முன் எடுத்து வைத்து, அந்த யுவதியை நோக்கினான்.

"நெசமாவே நம்ப தங்கச்சியேதானா இது?—"

கனவின் தொடுகோட்டில் சஞ்சரித்துக் கொண்டிருந்த அவனுக்குச் சுய நினைவு முடுக்கப்பட்டதும், அடுத்தும் ஒரு தரம் அவளைப் பார்த்தான்.

தன் தங்கச்சியைப் போன்ற அதே சாயல் — அதே முகம்! அதே பார்வை. அப்படியென்றால் அவள்தான் அவன் தங்கையா?

அவன் தங்கச்சியை அப்படியே உரித்து வைத்திருந்தது போலிருந்தது அப்பெண்ணின் உருவம். ஆனால் தன் தங்கச்சி மண்ணாகிவிட்டிருப்பாள் என்பதையும் காளி அவ்வப்போது உணராதில்லை. என்றாலும் சபலம்—பாசம் அவனை ஆட்டிப் படைத்தது. ஆட்டுவித்தால் ஆடாதார் யாரே உளர்?

இனம் விளங்காத பாந்தவ்யம், சிதைந்த எண்ணக் கலவையின் பிரதிபலிப்பென அந்தப் பெண்மீது கனிந்தது காளிக்கு. அவள் அவனுள் இடம் பெற்றாள்.

'தங்கச்சி'—

அழைத்த மனம் மணம் பெற்றது; உள்ளம் மலர்ந்தது; உடல் சிலிர்த்தது. காளி பரவசமடைந்தான். நரம்புக்கு நரம்பு புத்துயிர் ஊர்ந்து கிளர்ந்தது.

தங்கச்சி என்ற பாசத்தின் பிணைப்புடன், துல்லிய அன்போடு அந்தப் பெண்ணை இமை கொட்டாது பார்த்து நின்ற காளிக்கு இவ்வுலக எண்ணமே கிடையாது போலும்! அவன் தன்னையும் மறந்து சிரித்தான். ஆமாம்; அவள் உருவிலே அவன் தன் சொந்தத் தங்கச்சி நடமாடுவதை, அழகு காட்டி விளையாடுவதைக் கண் மூடாமல் பார்த்து நின்றான்!

குமாரசாமி கையில் பழங்களுடன் பிரவேசித்தான். வழியில் நின்ற காளியைக் கண்டுவிட்டு, "காளி, வாப்பா" என்று முகமன் கூறினான். காளி அப்போதுதான் உணர்வு பெற்றான்.

தமையன் வந்ததும் ஒதுங்கி நின்ற அப்பெண் சாமான் களை உள்ளெடுத்துப் போனாள்.

"ஐயா, கொஞ்சம் தாகத்துக்கு வேணும்" என்றான் காளி.

உண்மையில் அவனுக்குத் தாகமில்லை. ஆனால் அவள் கையால் ஒரு மிடறு தண்ணீரேனும் அருந்த வேண்டுமென்றிருந்தது அவனுக்கு. தண்ணீர், செம்பில் கொணர்ந்தாள் மங்கை.

அவள் நீட்டிய செம்பைக் கை நீட்டி வாங்கின காளியின் விரல்கள் அவளது பூக்கரங்களைத் தீண்டின. அவன் புளகித்தான்; பூரித்தான்; பாச வெள்ளம் கரை புரண்டது. தன் தங்கச்சியுடன் கழித்த 'அந்த நாட்கள்' மனத்தில் நிழலாடின. அவன் அவளை உவகையுடன் திருஷ்டி செலுத்தினான். ஆனால் பதிலுக்கு அவள் விழித்த நோக்கிலே ஏன் இத்தகைய புயல்? சூருவளி?

துவண்டு மறையும் மின்னலென அவள் மறைந்தாள்.

"அண்ணுச்சி"

ஏககாலத்தில் குமாரசாமியும் காளியும் திரும்பினுர்கள். குமாரசாமி மட்டுமே உள்ளே நுழைந்தான். காளி ஏக்க முற்றுச் சிலையானுன்.

"தங்கச்சி"

காளி மனத்திற்குள் அழைத்துக்கொண்டான். அவள் நிலைப்படியைத் தாண்டி நின்ருள்; சேலை தரையில் மிதந்து கிடந்தது. பார்வையைத் திசை விலக்கிவிட்டாள்.

"அண்ணுச்சி, யாரு அந்த மனுசன். அப்பவே தொட்டு என்னையே விழுங்கிப்பிடுகிறவர் கணக்காப் பார்த்துக்கிட்டே இருக்காரு. அந்த ஆளு பைத்தியமாங் காட்டியும்—?"

அந்த வார்த்தைகள் காளிக்குத் தெளிவாகக் கேட்டன. அந்தப் பெண்தான் பேசினுள்.

'சுரீர், சுரீர்' என்று அவ்வார்த்தைகள் ஒவ்வொன்றும் கூரிய அம்பாகப் பாய்ந்தன அவன் உடல், உள்ளம் இரண்டிலுமாக. எய்தவனிருக்க அம்பை நோவதா? அம்பை—சொல் அம்பை எய்தது அந்தத் 'தங்கச்சி'யாயிற்றே? உடன் பிறக்காவிட்டாலும் உடன் பிறந்ததாகப் பாசம் சொரிந்தானே அவன்?

காளி அன்பு காட்டினுன். அவளோ பழி காட்டிவிட்டாள். பேதை! அன்பும் பழியும் துருவங்களின் இருமாறு பட்ட புள்ளி மையங்களல்லவா? இந்த இரண்டு உள்ளங்களும் எங்ஙனம் ஒன்று சேர முடியும்? அவன் பிணைத்து இணைக்கப் பார்த்தான். அவள் அபவாதம் சொல்லிவிட்டாளே! எண்ணெயும் தண்ணீரும் ஒன்று கலக்க முடியுமா, என்ன?

அந்த யுவதி எய்த அம்பு காளியைத் துளைத்துக்கொண்டிருந்தது. புண் ரணமாயிற்று. கணத்தில் மீண்டும் அம்பு வீச்சு. ஐயையோ! அவன் துடித்தான், கரையில் வீசியெறிந்த மீனைப் போல.

"தங்கச்சி!"

கண்ணீர் வெள்ளம், வெந்து புரையோடிய நெஞ்சு, உயிர் ஊசலாடிய உடல்; இந்நிலையிலும் காளி அவளை மறக்கவில்லை.

துள்ளியோடும் ஆற்று நீரின் மேல் பரப்பு அழகாக—சலனமற்றுத்தானே தோன்றுகின்றது. ஆனால் நீரின் அடிப் பரப்பிலே சுழித்தோடும் சுழல் யாருக்குப் புலப் படும்?

மனம் ஒரு கைக் குழந்தை. எடுப்பவர்கள் குழந்தை வசம் மனமிழக்கலாம். அதே சமயம் குழந்தை, எடுப்ப வரைப்பற்றி எந்நிலையில் தீர்ப்பு நிர்ணயம் செய்கிறதோ? யார் அறிவார்கள்? காளியின் மனமும் அப்படித்தான்! அவன் அந்தப் பெண்ணைத் தங்கையாக மதித்தான். தன் சொந்தச் சகோதரியைப் போலவே, ஒரே அச்சாக—அசல் அவளே மாதிரி காணப்பட்ட அந்தச் சிறுமியின் சூழ் நிலை யிலேயே இருந்து, ஏதேனும் குற்றேவல் புரிந்து வாழ்வின் எஞ்சும் நாட்களைக் கழித்துவிடலாமென்று கனவு கண்டான் காளி. இது குறித்துக் குமாரசாமியிடம் பேச்செடுக்கவு மிருந்தான் அவன். ஆனால் அந்தப் பழி! காளி பாவமறி யாதவன். பழி சுமத்தப்பட்டான், பாவம்!

காளி கனவிற்குங் கனவின் விழிப்பிற்கும் ஊடே அல் லாடினான். விழிப்பு அவனது கண்களை வழி திறந்தது.

அதே கணம் அவ்வீட்டை விட்டு வெளியேறினான். நீர் முட்டிய கண்களால் உலகத்தைத் துழாவினான். காளிக்கு உலகம் இதய மற்றதாகப் பட்டது; பாசமற்றதாகப் பட்டது; அவிழ்க்கக் கூடாத விடுகதையாகப் பட்டது.

கால்கள் இழுத்த திசையில் நடந்தான்; நடந்து கொண்டேயிருந்தான்! அவனது நேத்திரங்களின் கூட்டுற வில் உலகம் சூன்யமாகிக் கொண்டே வந்தது!

ஐயோ! உலகம் பொல்லாதது!

# "ரூ!"

'ஸ்கூட்டர்', அந்தப் பங்களாவின் முகப்பு வாசலில் வந்து நின்றதுதான் தாமதம்; வேலைக்காரன் ஒருவன் ஓட்டமாக ஓடிவந்து, ஸ்கூட்டரை அழகேசனிடமிருந்து வாங்கிக் கொண்டு, அதை அதற்குரிய இடத்தில் பத்திரமாக வைத்துப் பூட்டினன். டென்னிஸ் மட்டை கைகளில் சுழல, நற் கனவுகளின் இனிய நினைவுகள் நெஞ்சினில் சுழல, சுழன்றோடும் விழிகளை ஒரு நிலைக்குக் கொணர்ந்தவனாக அவன் பற்களைக் கடித்தான். 'இராஜபாளையம்' தன் நன்றிப் பண்பை வாலில் இணைத்துக் காட்டிற்று. அவன் சிரித்தான். வேலைக்காரப் பையன் 'ஸல்யூட்' அடித்தான். அதற்கும் அவன் ஒரு தரம் சிரித்து வைத்தான். உற்ற பாசம் துள்ள, பத்துமாதம் சுமந்த பரிவு பெருமிதமடைய, பெற்றவள் வந்தாள். பணிவும் பாசமும் கலக்க, அவன் அவளிடம் அண்டிப் போனன். அவள் அவனது நெற்றியைத் தடவிக் கொடுத்துவிட்டு, பிறகு, கையிலிருந்த காப்பிக் கோப்பையை நீட்டினள். "அழகேசா!" என்ற தந்தையின் குரலுக்கு, "வந்திட்டேன் அப்பா; இன்னிக்குப் பந்தயத்திலே எனக்குத்தான் வெற்றி!" என்று சொல்லியவாறே, உடைமாற்றும் அறையை நாடி ஓடினன் அழகேசன்.

சிவப்பு வினடிமுள், கண்ணுக்குத் தெரியாத அமைப்புடன் கடமை இயற்றிக் கொண்டிருந்த நிமிஷ முள்களைச் சுற்றிச் சுற்றி வேகமாக ஓடியது.

அந்தி வானத்தில் மலர்ந்து விளையாடிய விந்தைக் கோளங்களின் வர்ணக் கோலங்கள் மாடித் தாழ்வாரத்தினைக் கடந்து கூடத்தில் இழைந்து, இறைந்து கிடந்தன.

அழகேசன் ஆரோக்கிய மலர்ச்சியுடன், தலைமுடியைக் கோதி விட்டவனாகக் கூடத்துக்கு வந்தான். எச்சில் கோப்பையும் கையுமாக சுந்தரி அம்மாள் நின்றாள்.

"அம்மா!"

"தம்பி, ராத்திரிக்கு பலாச்சுளை வத்தல் போட்டுக் குழம்பு வைக்கச் சொல்லவா? உனக்கு இஷ்டமான வடகம், அப்பளமும் பொறிச்சுப்பிடுறேன்," என்று கேட்டாள் தாய்.

"உங்க இஷ்டம், அம்மா!"

"என் இஷ்டம் எல்லாம் அடுத்த வாரம் ஆவணி பிறக்கிற மட்டுக்குந்தானே, அழகேசா?"

அழகேசன் தன் அன்னையின் அருள் நிறை அன்பு முகத்தை, பக்தி மண்டித் தழைத்த பாச உணர்வுடன் நோக்கினான். விழிகளிலே கண்ணீரின் சுழிப்பு; மெய் வெளியில் அழுந்தப் பதிந்த நடுக்கம்; இதயத்தின் அடி மட்டத் தளத்தினில் அழகுருக் கொண்ட இன்பக் கனவின் நிழலாட்டம். சுய நினைவை மறப்பதற்கும் நேரம், காலம் உண்டல்லவா?

"அப்படி ஏனம்மா சொல்றீங்க? உங்கள் இஷ்டத்துக்கும் விருப்பதுக்கும்தான் அம்மா இங்கே முதல் இடமும் முதல் மரியாதையும் முதல் மதிப்பும் உண்டு!...நான் கைப் பிடிக்கும் அபர்ணா, உங்களை முதலில் பெருமைப்படுத்தி—சந்தோஷம் அடையச் செய்து, அப்புறந்தான் என்னவளாக மாறுவாள், அம்மா! பெற்றவளுக்குப் பின்தானே உற்றவள்?... பாசம் வழிநடத்த, பந்தம் வழி தொடர வேண்டியது தானே உலகானுபவம்?..."

அபர்ணா என்னும் தெய்வப் பெயர் அழகேசனுள் மருக்கொழுந்து மணமாக வாசனை கூட்டியது. கிள்ளிய இடத்தி லெல்லாம் சுகந்தம் பரப்பும் பண்பு கொண்டதாயிற்றே மருக்கொழுந்து! எளிமையின் கோலம் கொண்ட மருக் கொழுந்தைத் தான் அபர்ணாவுக்குச் சாலச் சிறந்த உதாரணமாகத் தேர்ந்தெடுத்தான் அவன்!

"தம்பி, என்னமோ, என் ஆசையெல்லாம் நீ மன நிம்மதியோடவும் மனச் சந்தோஷத்தோடவும் இருக்க வேணுமிங்கறதுதான்!" பாசத்தின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வடிந்தது. உச்சியை நோக்கினுள். பிறந்த குழந்தையை உச்சிமோந்த அந்த இன்பமிகு நன்னுட்களை அவள் எண்ணினளோ?

"அண்ணு! அண்ணு!"

அழகேசன் திரும்பினுன்.

தம்பியும் தங்கையும் துள்ளி மகிழ்ந்து வந்தார்கள். 'ஸ்கிப்பிங் கயிறு' விளையாட்டுக் காட்டியது.

"அண்ணு, அம்மாவோட பேசவேண்டியதையெல்லாம் இப்பவே பேசிடு; அப்புறம் அண்ணி வந்ததுக்கப்புறம் 'டயம்' கிடைக்காதாக்கும்!..." ஒலிப் பதிவில் ஏற்பட்ட தவறு காரணமாக ஒரே குரலில் இரண்டு குரல்கள் 'பிசிறு' தட்டிப் பேசுமல்லவா, அந்தப் பாங்கில் பாலாவும் குமாரும் பேசினுர்கள்.

தாயும் தனயனும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித் தார்கள்.

"தம்பி, பார்த்தியா, மறந்துப்பிட்டேன். உனக்கு ஏதோ ரிஜிஸ்தர் கவர் ஒண்ணு வந்திச்சு. இனி நாளைக்குக் காலம்பறத்தான் கிடைக்கும். ஞாபகம் வைச்சுக்க, அழ கேசா!" என்று தெரிவித்தாள் தாய்க்காரி.

பத்தாம் நெம்பர் பஸ் அசுரவேகத்தில் ஓடிக்கொண் டிருந்தது!

* * *

"தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை" என்பார்கள்.

அழகேசன், தாயெனும் கோயிலின் தெய்வத் திருச் சந்நிதானத்தின் முன்னே பவ்யமாக நின்று உரிமையுடன் வேண்டிக்கொண்டான்: "அம்மா, நான் உங்ககிட்டே எப்போதோ சொல்லியிருக்க வேண்டிய தகவல் இது. சமய சந்தர்ப்பம் ஒண்ணுகூடி வரல்லே. இப்போ அந்தச் சந்

தர்ப்பம் வாய்த்திருக்குது. இதையும் கைநழுவ விட்டுப் பிட்டேன்னு, என்னோட கனவையே கைநழுவ விட்டுப்பிட்ட தாகவே உணர்வேன். அம்மா, உங்க விருப்பப் பிரகாரம் நான் உங்க தம்பிமகள் தாரணியைக் கல்யாணம் கட்டிக்கிட முடியலே. இதுக்காக நீங்க என்னை மன்னிச்சிடுங்க. தாரணி தங்கம். அது எனக்கு நல்லாப் புரியும். ஆனா, என் நெஞ்சிலேயும் நினைவிலேயும், நீக்கமற நிறைஞ்சிருக் கிற கடவுளாட்டம் ஒரு உயிர் முழுசாக வடிவமெடுத்துப் பரவிக் கிடக்குதின்னா, அது...அது அபர்ணா என்கிற ஒரு பெண்ணாகத்தான் இருக்கும். ஒவ்வொருத்தருக்கும் ஒவ் வொரு இடத்திலே—ஒவ்வொரு பேரிலே பிடிப்பமும் பிடித்த மும் உண்டாகிறது சகஜந்தான். என்னோட நிலைமையையும் நினைப்பையும் நெஞ்சு திறந்து சொல்லிப்பிட்டேன். அப்புறம் உங்க இஷ்டம், அப்பா இஷ்டம்!''

கண்ணீருக்கு இதயம் இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்தக் கண்ணீரின் இதயம், பாசத்தின் இதயத்துடன் கலந்து பேசியிருக்கவேண்டும்.

சுந்தரி அம்மாள் முத்தாய்ப்பு வைக்கலானாள்: ''தம்பி, உன் மனசு போலவே அபர்ணா என்கிற பெண்ணையே கட்டிக்க. ஜாதகம் அனுப்பச் சொல்லு. பெண் பார்க்க வாரதாக லெட்டர் போடு! லவிதம் என்று ஒன்று இருக்கு தில்ல, அதுப்படிதானே சகலமும் நடக்கும்...!''

* * *

தியாகராய நகரிலே அட்வகேட் அம்பலவாணன் என்றால், கைதேர்ந்த புள்ளி. கைவிட்ட 'கிரிமினல் கேஸ்' கட்டுக்களுக்கெல்லாம் உயிரூட்டிய மனிதர் அவர். தம் மைந்தன் அழகேசனை எம். ஏ. பட்டம் பெறச் செய்தார். அழகேசனுக்கும் அவனுடைய அம்மான் மகள் தாரணிக் கும் திருமணம் செய்வித்து, அவன் கையால் அவள் கழுத் தில் மூன்று முடிச்சுக்களைப் போட்டுவிடச் செய்யவேண்டு மென்பது அவரது அபிலாஷை. ''அந்த நாளையிலேருந்து உன் ஒருத்தனுக்குத்தான் அந்தப் பெண் ஒளிந்து கொள்ளு கிறாள்! ஒளித்து வைத்திருக்கும் பட்சணங்களை உன் ஒருத்த னுக்குத்தானே அவள் கொண்டாந்து தருகிறாள்? புருஷன்—

பெண்சாதி என்கிற பாந்தவ்யம் சின்ன வயசிலேயிருந்தே பிறந்திடும் போலிருக்கு!'' என்று அவனிடம் அவர் பூடகமாய்ச் சொன்ன நாட்கள் ஒன்றிரண்டல்லவே!

விதி வலிது!

* * *

உதயம் எனும் மலர் ஏடவிழ்ந்து, மணம் எனும் செஞ்சுடர்ப் பிழம்பை உலக உருண்டையைச் சுற்றிலும் இழைந்தோடச் செய்து வேடிக்கை காட்டி, அவ்வேடிக்கையை விளையாட்டாக்கி அனுபவித்துக்கொண்டிருந்தது.

திருமண அழைப்பு மடல்கள் கட்டுக் கட்டாக மேஜை விளிம்பில் அடுக்கி வைக்கப்பெற்றிருந்தன.

அழகேசனின் மனக்கனவுகள், அவனது கைப்பிடியிலிருந்த பேனுவுக்கு ஊட்டம் கொடுத்து இயக்கின. எடுபிடிப் பையன் அழைத்துவந்த தபால்காரன், ஓர் உறையை எடுத்துப் பிடித்து நீட்டினுன், அழகேசனிடம்.

பதிக்கப்பட்ட கையொப்பம், உறைவாயைத் திறக்கும் உரிமையை ஈந்தது.

அழகேசனின் நயனமணிகளிலே ஆர்வமும் ஆதங்கமும் ஒன்றுக்கொன்று சமன் நிலையில் இயங்கும் உணர்ச்சிகளாகப் பிரதிபலித்தன. மடிக்கப்பட்டிருந்த நான்கு மடிப்புக் கடிதத்தைப் பிரித்து நேர்வாக்கில் பார்ப்பதற்குள், அவனுக்கு பதட்டம் கண்டது. எம். ஏ. பட்டப்பரீட்சையில் தேர்வை எண்வாரியாகப் பார்த்தபோதிருந்த தென்பு எங்கே ஓடிற்றே? கடைசிப்பக்கம் புரட்டப் பட்டது. இமைக் கரைகளில் அதிசயம் கரை சேர்க்கப்பட்டது. இதயததினின்றும் வெய்துயிர்ப்புத் தள்ளப்பட்டது. 'இதயம் விடு தூது' போலும்!

அந்தக் கடிதத்துக்குப் பேசத்தாஞ தெரியாது?

"பெருமதிப்புக்கும் நல்வணக்கத்துக்கும் உரிய எனது எதிர்காலக் கணவர் அவர்களின் பாதகமலங்களில் தண்டனிட்டு அடியாள் அபர்ணு எழுதுவதாவது:

என்னுடைய இந்தக் கடிதம் உங்களுக்குத் திகைப்பை அல்லது ஆச்சரியத்தை விளைவிக்கக்கூடும்.

அன்ருெரு நாள், தஞ்சையம்பதியில் என்னைப் பெண் பார்க்க தாங்கள் வந்தீர்கள். பிஞ்சுப் பிராயமதில் என்பால் ஏற்பட்ட ஒரு நல்லெண்ணம் காரணமாக, தாங்கள் என்னை ஆட்கொள்ள விழைவதாக என்னிடம் தாங்கள் தெரிவித்ததைக் கேட்ட நிலையில், மெய்யாகவே நான் மெய் சிலிர்த்துப் போனேன். காலச் சக்கரத்தின் விபரீதச் சுழற்சியின் விளைவாக, அடித்தளத்திற்குக் கொண்டு வரப்பட்டுவிட்ட எங்கள் குடும்பம் தங்களது உயர் அன்பிஞல் புத்துயிர் பெறப் போகிறதென்பதை அறிந்த நான் ஆண்டவனை நினைந்து நினைந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்து, அந்த மகிழ்வுத் துளிகளையே ஐயனுக்குக் காணிக்கையாக வைத்ததுண்டு!

ஆம்; நாமெல்லோரும் ஆண்டவனுடைய விளையாட்டுப் பொம்மைகள். இல்லையென்ருல், இப்படிப்பட்ட சிருஷ்டி விளையாட்டுக்கள் நிகழ வாய்க்குமா?

வாழ்வே ஒரு சோதனை என்று புரிந்தும், உணர்ந்தும், தெளிந்தும் சொல்லியிருக்கிருர்கள் பெரியவர்கள்.

இப்போது நானே ஒரு சோதனைக் கட்டத்தில்தான் நின்று கொண்டிருக்கின்றேன்.

நேர்முகம் காட்டி உங்களிடம் சொல்லத் தயங்கித் தத்தளித்த ஒரு செய்தியை இப்போது உங்கள் முன் வைத்திடவேண்டியவளாக ஆகியிருக்கிறேன். இது என் கடமையாயிற்றே?

எனக்கு ஓர் அத்தான் இருக்கிருர். பெயர்; சுந்தரம். சுந்தரமானவர்தான். 'எனக்கு அவர்; அவருக்கு நான்' என்றே எங்கள் இருதரப்புக் குடும்பத்தவர்களும் தீர்மானம் கட்டி வைத்திருந்தார்கள். ஆனல், விதி மாறிச்சுழன்றது. எங்களைத் திசைக்குத் திசை மாற்றிவைத்துச் சுழன்றது. என் தந்தையின் வியாபார நொடிப்பு ஒருபுறம் இருக்கட்டும். அது எங்கள் வரை, எவ்விதமான சலனத்தையும் உண்டாக்கவில்லை. ஆனல்... ஆனல்...?

என் அத்தான் கைதேர்ந்த ஆட்டக்காரர். 'டென்னிஸ் சாம்பியன்'. சென்னைக்கும் தஞ்சைக்கும் நடந்த பந்தயத்தில் வெற்றி பெற்ற அன்று அவர் மகிழ்ச்சி துள்ள ஓடோடி வந்தார், கைமட்டையைச் சுழற்றிக் கொண்டே. களைப்பின் மிகுதியால் ஏற்பட்டிருந்த கிறுகிறுப்பினால் அவர் நிலை தடுமாறிச் சாய்ந்தார். சாய்ந்த வேகத்தில், நடையில் கிடந்த அரிவாள்மணை அவருடைய சோற்றுக்கை முட்டை வெட்டி விட்டது. தொடக்கத்தில் அசிரத்தையுடனும் அஜாக்கிரதையாயும் இருந்ததால், நிலை சீர்கெட்டது. இறுதியில், அவரது வலது கை வீங்கியது; துடித்தார். வலக்கையில் உள்ளுக்குள்ளேயே புரையோடிப் போய்விட்ட புண் காரணமாக, அவர் தனது வலது கையை இழக்க நேரிட்டுவிட்டது!... ஐயோ, காலம் கொடிது!

என் அன்பு அத்தானிடம் விளைந்த இம்மாறுதல், என் இதயத்துள் எத்தகைய மாறுதலையும் எழுதிக் காட்டவில்லை. "அத்தான், நான் என்றென்றும் உங்கள் அடியாள்தான். என்னை ஏற்று ரட்சியுங்கள். உங்களுக்குச் சகல விதத்திலும் நான் துணை நிற்பேன்," என்றேன்; நெஞ்சு நெக்குருகச் சொன்னேன். எரிதழலில் தூவப்படும் சாம்பிராணியினின்றும் எழுகின்ற நறுமணமென என் இதயம் அவர் மனத்திடை மணத்தைப் பரப்பியதை நான் அவரது முக பாவத்திலிருந்து கண்டு கொண்டேன். ஆனால் நான் பாவி, கொடுத்து வைக்காதவளாகப் போனேன்.

"உன் எழில் ஆதரிச எழில். முழுமை பெற்றிருக்கும் உன்னுடைய அழகிலே இணைவதற்கு, குறைபட்ட என் எழில் தகுந்ததன்று. என்னை நீ என்றென்றுமே மறந்துவிட வேண்டி நேரிடும். நிறை பெருக்குக்குள் என் குறை உடலைத் திணித்துக் கொள்வேன் !" என்று ஆணை வைத்தார்.

நான் துடித்தேன். தரை மீனானேன். "அத்தான், உங்கள் கருத்தெதுவோ, அதன் பிரகாரமே நான் நடக்கிறேன். நீங்கள் என்றென்றும் என் கண் பார்வையில் இருங்கள். அதுவேதான் எனக்கு அளப்பரிய ஆறுதல் நல்கும். இந்த ஒரு வரத்தையாகிலும் தாருங்கள் !" என்று வேண்டினேன்.

அவர் சிரித்தார்.

என் மனம் அழுததை அவரிடம் எங்ஙனம் கோடிட்டுக் காட்ட முடியும்?

"உனக்கென்று—உன்னுடைய ஓவிய எழில் நிறைக்கென்று வேறு ஒருவர் ஜனித்திருக்க வேண்டும். பாரேன், உனக்குரிய மாப்பிள்ளையைத் தேடிப் பிடிக்கிறேனா, இல்லையா!" என்று மகிழ்வின் பாதையில் மடங்கி நின்று, ஆசையின் கனல் வீச்சுடன் நாத் தழுதழுக்கப் பேசினார்.

அத்தான் தெய்வம்!

அடுத்த கட்டத்தில்தான் நீங்கள் தெய்வ உருக்கொண்டு வந்தீர்கள்.

விட்டகுறை—தொட்ட குறையின் விளைவுகள் சரித்திரப் பிரசித்தம் அடைந்தவை யாகும்.

உங்கள் மனங்கவர்ந்த அடியாளின் வேண்டுகோள் இதுவே: என் அத்தான் அவர்களுக்கு இன்றைய அளவில் என் ஒருத்தியைத் தவிர, வேறு எந்த ஆதரவோ, நிழலோ இல்லை. ஆகவே, என் அத்தான் என்றென்றும் நம்முடனேயே இருக்க தாங்கள் பெருந்தன்மை கொண்டு அனுமதி தருவீர்களா?

நான் உணர்கிறேன். தாங்கள் என்மீது கொண்டுள்ள அன்பு. இதய பூர்வமானதொரு மகத்தான நம்பிக்கையின் வாய்மடையில் ஜனித்திருப்பதாகும். விதியும் காலமும் தோற்றுவித்த புது வெள்ளப் பெருக்கில் கலந்திருந்த தூசு தும்பட்டையெல்லாம் மடைவாயிலேயே தங்க, அதன்பின் பிரிந்து ஓடிவரும் நிர்மலமான புதுநீர் போன்ற தங்கள் பாசத்தை நான் தீர்க்கமாக அறிவேன். உங்களது அடையா நெடுங் கதவமான அந்த அன்புக்கு—அந்தப் பாசத்துக்கு என்னுடைய இந்த விண்ணப்பம்—உண்மைநிலை 'தாழ்' எதையும் இட்டுவிடலாகாதே யென்ற பயத்தில்தான் முன் கூட்டியே தங்கட்குத் தெரிவிக்கலுற்றேன். இந்த ஒரு வேண்டுதலையின் தலைவாயிலில் நின்று, பலன் எதையும் கருதமாட்டாத பக்தை என்ற நிர்ணயிப்பில் தாங்கள் என்

அன்பை மதித்து, உரிய மதிப்பு அருளுவீர்களாயின், என்னைப்போல இப்பூவுலகிலே பாக்கியவதி வேறு யாரும் இருக்க இயலாது! அன்பு எதையும் கேட்காது. ஆனால், தங்களிடம் கேட்டுவிட்டது!

தங்கள் தாய் தந்தையரின் அனுமதி கூட்டி, கைகூடி, வந்த நல்ல தகவல் ஒன்றினைத் தங்கள் மறு மொழியாக மறு தபாலிலேயே எதிர் நோக்கித் தவம் கிடக்கிறேன்; எல்லாம் ஸ்ரீ பிரஹதீஸ்வரர் துணை.

இங்ஙனம்
தங்கள் அடியாள்,
அபர்ணா."

சுழித்த சுடுநீரை மெல்ல வருடிப் போக்கடித்தான் அழகேசன். அக்கணமே, அவன் அவசரத் தந்தி ஒன்றை அனுப்பினான்: "உன் எண்ணம் எதுவோ அதையே என் கடமையாகவும் ஏற்கச் சித்தமா யிருக்கிறேன்.

அழகேசன்."

இளம் பருவத் தடம் ஒன்று.

அழகேசன் எலிமெண்டரி ஸ்கூலில் படித்தான். வகுப்புத் தோழி அபர்ணா. அருகருகான இடம். அபர்ணாவின் குடும்பம் பசையுடன் வாழ்ந்த காலம். அழகேசனுக்கோ புதுப் புத்தகங்கள் வாங்குவதற்குக்கூட இயலாமை; தடங்கல். இரண்டு நாள் சேர்ந்த மாதிரி புத்தகங்கள் வாங்கப்படாததால், அவன் பெஞ்சியின்மேல் ஏற்றப்பட்டான். அவனுடன் அபர்ணாவும் அந்தக் கதிக்கு உள்ளானாள். மறுதினம், அவனுக்கு உண்மையின் இரு வேறு கிளைகளின் தாத்பரியம் புரிந்தது. அவனுக்கும் சேர்த்துப் பாடப் புத்தகங்கள் அனைத்தையும் அவள் வாங்கி வந்தாள். முதல் நாளில், அவனுக்காகவேதான், தன் புதிய புத்தகங்களை மறைத்துவிட்டு, அவனுடன் பெஞ்சியில் ஏறி நின்றாள். இது பரம ரகசியமாம்!

தஞ்சை, எல்லையம்மன் கோவில் தெருவில் நடந்த நிகழ்ச்சி இது. கனவின் கனவாக—அன்பின் அன்பாக—

இச்சம்பவம் அதனுள்ளே வாழ்ந்து, அவனை வாழவைத்த கதையை அவன்தான் அறிவான்! புயலில் சிக்கிய தளிராக, அபர்ணாவின் குடும்பம் காலவினைக்கு உடந்தையாகித் தவித்துத் தடுமாறிய கதையை அவளே அறிய முடியும்!

* * *

இறைமைச் சக்தியின் தலைமையின்கீழ், ஹோமத்தீ முன்மொழிய, கொட்டுமேளம் வழிமொழிய, வாழ்ந்து காட்டியவர்களின் முன்னிலையிலே சிரஞ்சீவி அழகேசன், சௌபாக்கியவதி அபர்ணாவுக்குத் திருப்பூட்டினான்.

ஆண்மையும் பெண்மையும் அதனதன் அளவில்—அதனதன் போக்கில் 'முழுமை' பெற்றன. இருவரும் உடலும் உயிரும் ஒன்று கலந்த பண்பாட்டில், காலம் பண் பாடிப் பறந்தது.

அழகேசனுக்கு அந்த ஒரு காட்சி பசுமை தட்டித் திகழ்ந்தது. கையிலேந்திய மங்கல நாணுடன் நாணம் பூத்த மணம் கமழ் மலராக—ரோஜாப் பூவாக, குனிந்த தலை நிமிராமல், நிமிர்ந்த பெருநோக்குப் பாசம்-அன்பு குனியாமல் வீற்றிருந்த மணப்பந்தல் கொலுப்பதுமையை ஜாடை சேர்த்துப் பார்த்திடத் தவித்த நேரத்தில், அவனது கண் விரிப்பில் அதுசமயம் தாரணி தட்டுப்படுவாள், கண்கட்டு மாயம் செய்வாள், தாளையடிப் பயிர் உதிர்க்கும் நெல் மணிகளாய் தன் நினைவுகள் சிதறுமென்று அவன் கணித்திருக்கவா முடியும்? இல்லை, அந்தப் பெண் தாரணியின் அந்த ஒரு சொட்டுக் கண்ணீரின் பொருளை மாற்றுரைத்துச் சோதிக்கத்தான் அவன் சாகஸம் பயின்றவனா?... காதலின் கதையில் கண்ணீரின் கறை இருக்கத்தான் செய்யும். கண்ணீரின் கறையில் காதலின் கரை தென்படாமல் இருப்பதும் நியதிக்கு முரண்பட்ட கோட்பாடல்லவே! என்னவோ, காதல்!...என்னவோ, வாழ்க்கை!...விளையும் ஆசாபாசங்களையும்—நொறுங்கிச் சிதறும் ஆசாபாசங்களையும் நம்பித்தான் உலகம் உருள்கிறது!

அடிக்கடி அழகேசன் எண்ணமிடுவது இயல்பு: 'தாரணி தங்கமான பெண். அவள் விரும்புகின்ற நல்ல

மாப்பிள்ளையாகப் பார்த்துத் திருமணம் முடித்து வைத்தால் தான் எனக்கு அமைதி பூக்கும்!...'

"குட்மார்னிங், மிஸ்டர் அழகேசன்!"

அழகேசன் விழித்துப் பார்த்தான்.

மேற்சட்டையின் வலதுகைப் பகுதி துவண்டு விழ, புதுமலர்ச் சிரிப்பை மாற்றுமல் வந்து நின்றுன் சுந்தரம்.

"குட்மார்னிங்... வெரி குட் மார்னிங்! உட்காருங்கள்!"

சுருட்டைத்தலை முடியுடன் வம்பாடிக் கொண்டிருந்த சீப்பைக் கையில் பற்றியவாறு, அவன் சுழல் நாற்காலியைச் சுற்றிய நேரத்தில், காலமெனும் சுழல் நாற்காலியும் சுழன்றது.

அழகேசனின் டென்னிஸ் ஆட்டத் திறன் பற்றி மாம்பலம், மயிலாப்பூர் வட்டங்களிலே நல்ல பெயர். ஒரு முறை சென்னைக்கும் தஞ்சாவூருக்குமிடையே பந்தயம் நடந்தது. 'ஸிங்கிள்ஸ் ஆட்டம்' ஒரு பக்கம்: அழகேசன், எதிர்த் தரப்புக்கு: சுந்தரம்! 'பாயிண்ட்ஸ்' கணக்கில் லயித்து, ஆட்டத்தின் சரிசமானமான திறமையில் மயங்கி நின்ற பார்வையாளர்களுக்கு இறுதியில் ஒரு செய்தி கிடைத்தது: அதுதான் சுந்தரத்தின் வெற்றி குறித்த செய்தி. வெற்றிக் கோப்பையும் தானுமாகக் காட்சியளித்த சுந்தரத்தின் உருவத்தை அழகேசன் பலமுறை நினைத்துப் பார்த்ததுண்டு. ஆனல், அந்த ஆட்டமே அவனுக்குக் கடைசி ஆட்டமாக அமையுமென்று அவன் நினைத்ததுகூட கிடையாது; அந்தச் சுந்தரம் என் அபர்ணவுக்குச் சொந்த அத்தான்!'

அபர்ண பலகாரத் தட்டுக்களுடன் அறைக்குள் நுழைந்து, தட்டுக்கள் இரண்டையும் ஸ்டூலில் வைத்துத் திரும்பினுள்.

அழகேசன் ஒரு தட்டைத் தன் மடியில் வைத்தான். சுந்தரத்தைப் பற்றிய சுயநினைவு அவனுள் வீரிட்டபோது, அவனுள்ளே பூகம்ப அதிர்ச்சி எழுந்தது. தன் தட்டை எடுத்து ஸ்டூலின் மீது திரும்பவும் வைத்தான். சுந்தரத்தின்

நாற்காலியுடன் தன் நாற்காலியை இணைவாக நகர்த்திப் போட்டுக்கொண்டு, அவன் மடியிலிருந்த தட்டினின்றும் இட்டிலியைப் பிட்டுத் துண்டாக்கி, சுந்தரத்தின் வாயில் போட்டான் அழகேசன். சுந்தரத்தின் கண்களில் பனித் திரை.

அபர்ணு வந்தாள். தாரணி வந்தாள். முன்னவள் கையில் நெய்; பின்னவள் கையில் காப்பி.

"அத்தான்! சுந்தரம் அத்தானுக்கு நான் பலகாரம் கொடுக்கிறேன். இருங்கள், நெய் ஊற்றுகிறேன். நீங்கள் முதலில் சாப்பிடுங்கள். கம்பெனிக்கு நாழியாகி விட்டது!" என்ருள் அபர்ணு. ஒரு தடவை, குளித்துவிட்டு வந்தான் சுந்தரம். அபர்ணுவை முந்திக் கொண்டு அழகேசன் அவனுக்குத் துணிமணி எடுத்துப் போட்டுவிட்ட சம்பவம் அவள் மனத்தில் ஆழப்பதிந்தது.

'ஓ. கே' சொன்னுன் அழகேசன்.

நெய் ஊற்றினுள் தாரணி. "இன்னும் கொஞ்சம்!" என்று கேட்டாள்.

கையமர்த்தினுன் அழகேசன். "சுந்தரத்துக்குப் பார்த்து ஊற்று, தாரணி!"

"ஓ...!"

சுந்தரம் 'போதும்' என்று நான்கு முறை சொல்லியும், அவள் கேட்டால்தானே?

ஸ்பூனில் ஊட்டிக்கொண்டிருந்த அபர்ணுவுக்கும் சேர்த்து நெய் அபிஷேகம் நடந்தது, ஜம் ஜம் மென்று!

உற்றவர்களும் உறவினர்களும் விருந்து முடித்து, அவரவர்களின் ஊரை நாடிப் போய்ச் சேர்ந்தார்கள்.

தாரணி மட்டுமே மிஞ்சினுள். "அபர்ணு, என் அத்தானை நீ கவனித்துக் கொள். உன் அத்தானுக்கு வேண்டியவைகளை நான் கவனித்துச் செய்கிறேன்!" என்று சொன்னுள்.

அபர்ணு எப்படி அகமகிழ்ந்து போனுள்!

ஒரு வாய்ப்பு:

அழகேசனும் சுந்தரமும் தடுக்குகளில் அமர்ந்திருந்தார்கள். கிருத்திகை. தாரணி தக்காளி சூப்பைக் கரண்டியில் எடுத்து ஊற்றினுள். ரசத்துளிகள் தாரணியின் விழிகளில் தெறித்து விட்டன. அவள் துடித்தாள். அழகேசன் எழுந்து கைக் குட்டையினுல் அவளது கண்மலர்களை ஒத்திட்டு, இதழ் குவித்து ஊதி, அவளுக்குண்டான வேதனை எரிச்சலைப் போக்கடிக்க முயன்று கொண்டிருந்த சமயத்தில், மோர்ச் செம்புடன் தோன்றிய அபர்ணு, ஆலயத்தின் முன் இருப்பது போன்ற களங்கமற்ற—பரிசுத்தமான அன்புக் கண் கொண்டு அக்காட்சியைக் கண்டு, பிறகு ஓடிச் சென்று, தாரணிக்கு உதவினுள்.

இளமை மதியம் பவனி வந்தது.

"அபர்ணு!..."

"அத்தான்!"

"என்ன, தீவிரமான யோசனையில் ஆழ்ந்து விட்டாயே?"

"ஒன்றுமில்லை; சுந்தரம் அத்தானைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்தேன். பூர்த்தி பெருதிருக்கும் அவர் வாழ்வைப் பற்றிய நினைப்பு, என்னையே உருக்குலைத்து விடும் போலிருக்கிறது!"

"சிருஷ்டியைத் தத்துவம் என்கிருர்கள் ஞானிகள். அப்படிப்பட்ட தத்துவம் இப்போது புதிராகவும் காணப்படுகிறதே!"

"ஊம், எல்லாமே வேடிக்கையாகத்தான் இருக்கிறது!"

அன்று பாதிச் சாமத்தில் விழிப்புப் பெற்ற அழகேசன், பீரோவைத் திறந்து 'பைல்' ஒன்றைத் தேடி எடுத்தான்.

அது:

"அன்புக்கும் தொழுகைக்கும் உரிய அத்தான் அவர்களுக்கு, அனந்த கோடி நமஸ்காரங்கள்.

உங்கள் கடிதம் கிடைத்தது. நான் பேரதிர்ச்சி அடைவேன் என்று நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். நான் அடிக்கடி உங்கள் முன் சொல்வது மாதிரி, உங்கள் வாழ்வும் வளமும்தானே என் கனவும் குறிக்கோளுமாகும்! உங்கள் நெஞ்சில் குடிகொண்டிருக்கும் பெண் கொடுத்துவைத்தவள். அட்டியில்லை! நான் உங்கள் தாரணி. உங்கள் அன்பின் ஏவுதலுக்காகக் காத்திருக்கும் தோழிப் பெண் நான். உங்கள் ஆணைதான் எனக்குக் கடமை. அதுவே எனக்குத் தேவ கட்டளை! பின், நான் எப்படி அத்தான் மன அதிர்ச்சி பெற முடியும்? என்னைப் பொறுத்த மட்டிலே, தங்களது அன்புக் கதவு எப்போதும் தாழ் இடப்படாமல் இருந்தால், அதுவே என் பூஜாபலனாக அமையும். நான் இருந்து உங்கள் கல்யாணத்தை நடத்தி வைப்பேன், அத்தான்!

இப்படிக்கு,
தாரணி."

அழகேசன் கண் இமைகளைத் துடைத்துக் கொண்டு மீண்டும் படுக்கையைச் சரணடைந்தான்.

* * *

காலத்தேர் என்றாவது ஓய்வுக்காக நின்றதுண்டா?

தாரணி அந்தரங்க சுத்தியுடன் அபர்ணாவைத் தேடி வந்து, "அபர்ணா! உன் அத்தான் சுந்தரம் அவர்களை நான் திருமணம் செய்து கொள்வதாய் முடிவு செய்திருக்கிறேன்!" என்று உணர்ச்சி வசப்பட்டவளாகச் சொன்னதைக் கேட்ட அபர்ணா, "நிஜமாகவா? ஆஹா, என் கவலைகளையெல்லாம் ஒரு நொடியில் தீர்த்து வைக்கும் தெய்வமாக மாறி விட்டாய், தாரணி!" என்று தேம்பிக் கண்ணீர் பெருக்கினாள்.

விவரம் தெரிந்ததும், அழகேசன் பூரித்துப் போனான். 'ஆம். தாரணி தெய்வமேதான். மனிதப் பிறவியின் காணக் கிடைக்காத தெய்வம் அவள். என் அபர்ணாவின் மனத்

துயர் துடைக்க, அவள் சார்பிலே தாரணியிடம் நான் தூது சென்று, கண்ணீரைக் காணிக்கையாக்கிக் கோரிய என் விண்ணப்பத்தைத் தேவ கட்டளையாக மதித்து, தன்னையே தியாகம் செய்து கொள்ளத் துணிந்திட்ட தாரணி மெய்யாகவே தெய்வம்தான். இந்த மர்மம் என்னைத் தவிர, தாரணியைத் தவிர வேறு யாருக்குத் தெரியும்?...'

* * *

விடிந்தது, பொழுது.

தாழ் விலக்கிக் கிடந்த அறையினுள்ளே அபர்ணாவுக்காக ஓர் உறைக்கடிதம் காத்துக் கிடந்தது.

"அன்புள்ள அபர்ணா!

விதியின் சேஷ்டையினால் நான் குறைமனிதனாகிப் போனேன். எனக்குப் பூரணத்வம் நல்கியருள நீ பாடுபட்டிருக்கிறாய். அந்தப் பெண் தாரணி தெய்வம்—அழகு எனும் தெய்வம்!...நான் எங்கே? அந்தப் பேசும் பதுமை எங்கே?

'விதி' விதித்த தத்துவத்தின் நியதிக்கு நான் எப்படிச் சவால் விடுவேன்?

தாரணிக்குத் திருமணம் ஏற்பாடாகி விட்டதென்னும் ஓர் இனிப்புச் சேதியை என் காதுகள் ஏற்றால்தான், நான் இனி உன் நிழலைத் தஞ்சமடைவேன்!

உன் அன்புக்கும் உன் கணவர் அன்புக்கும் தாரணியின் அன்புக்கும் ஈடு செய்ய நான் எத்தனையோ பிறவிகள் எடுக்க வேண்டும்!

எல்லாம் அலகிலா விளையாட்டுடையானின் விளையாட்டு!

சுந்தரம்."

* * *

"ஆமா, அபர்ணா! இது வெறும் பேச்சல்ல!... இன்னும் எத்தனை நாளானாலும் சரி; நான் பச்சைத் தண்ணியைப்

பல்லிலே நாடமாட்டேன். அவங்க அவங்க மனசுக்குள்ளே அவங்க அவங்க இஷ்டப் பிரகாரம் ஒவ்வொரு முடிவு இருந்துக்கிட்டுத்தான் இருக்கும்! என்னை மாலையும் கழுத்து மாப் பார்க்க வேணும்னு, என்னோடே—எனக்குத் தெய்வமாய் துணையிருக்கிற மகிமை அவர்...சுந்தரம் அவர்களுக்குத் தான் உண்டு!"

தாரணி வெறிச்சோடிய பார்வையை வீசியவளாகத் தேம்பினாள்.

மூன்றாம் நாள்.

இரவு.

நடுநிசி.

தாரணியின் கண்ணீர்த் தாழினை விலக்கிக்கொண் டிருந்தது அந்த 'இடது கரம்!'

அவள் நினைத்தாள்.

'...ஓர் இரகசியத்தை இனிமேல் அவருக்கு நினைவூட்ட வேண் டும். பிஞ்சுப் பிராயமதில் மணல் வீடு கட்டி விளையாடி மகிழ்ந்திட்ட வேளையில், என்னுடன் 'டூ' போட்டுக் கொண்டு பிரிந்த அவர், இனி யாவது என்னுடன் 'ராசி'யாகி விடுவார் அல்லவா? தொல்லைக் குவியல் களுக்கு மத்தியில் தவிக்கும் அவருக்கு இந்தப் பழங்கதை எங்கே நினைவிருக்கப் போகிறது? தெய்வத் தன்மைக்கு முன்னே வலிமை யிழந்ததாகி விடுகின்ற இந்தப் பேதை மனத்துக்கு இதைத் தவிர வேறு ஆறுதல் இல்லவே இல்லையோ?...'

நழுவி விழுந்த அந்தக் காகிதக் கிழிசல் கீழ்க்கண்ட வாசகத்தை ஒலி பரப்பிய பெருமையுடன் காற்றில் பறந்தது!

"என் மரணத்துக்கு நானே காரணம்—சுந்தரம்."

# தாலி பாக்கியம்

கோத்துவேலை முடிந்து வீடு நோக்கி நடந்து கொண்டிருந்தான் தங்கவேல். முகத்திரையில் நாள் முழுதும் வேலை செய்த களைப்பின் அயர்வு; நெற்றியில் முத்து முத்தாக அரும்பிக் காய்ந்துபோன வேர்வைத் துளிகளின் உவர்க் கோடு; உள்ளத்திலே, ஆசை வள்ளியைக் காணப்போகும் புளகிதம்!

சந்தின் திருப்பத்தில் தன்னை எதிர்கொண்டழைப்பவள் போலச் சடக்கென்று முன்வந்து நின்ற பொன்னுருவியைக் கண்ட தங்கவேல், சிலகணம் திகைப்பூண்டை மிதித்தவன் போலச் சித்தம் தடுமாறிப்போனான் அப்போது உண்டான அதிர்ச்சி நீங்கப்பெறச் சற்று நேரமாயிற்று. எதிரும் புதிருமாக நின்றுகொண்டிருந்த பொன்னுருவியை "வா!" என்று கூட அழைக்கவில்லையே என்று அப்போதுதான் நினைத்துக்கொண்டான் அவன்.

"பொன்னுருவி! பொழுது சாயப்போவுதே; எங்கே இந்த நேரத்திலே புறப்பட்டுட்டே!"

இப்படி நேருக்கு நேராக நின்று அவளுடன் பேசிக் கச்சிதமாக வருஷங்கள் இரண்டு ஆகப் போகின்றனவே! அந்த நாட்களில் இருவரும் சந்தித்துப் பேசும் சமயங்களில் ஏற்பட்ட லளிதமும் வேடிக்கையும் தற்சமயம் அவன் பேச்சில் தலைகாட்டவில்லை. ஏதாவது பேசியாக வேண்டுமே

என்ற நிர்ப்பந்தத்துக்கு உட்பட்டவனைப் போல ஏதோ கேள்வி யொன்றைக் கேட்டுவைத்தான். ஆனல் அவன் இதய அந்தரங்கத்தில் புதைந்து கிடந்த துயரம் மீண்டும் புத்துயிர் பெறும்படி தான் செய்துவிட்டதைப் பொன்னுருவி அறிவாளா? அறிந்துதான் அவளால் என்ன ஆகப் போகிறது?

பரிதாபமாகத் தன்னைப் பார்த்து நின்ற பொன்னுருவியை நிமிர்ந்து நோக்கினன். வசந்த மல்லிகையைப் போல, சுண்டிவிட்டால் ரத்தம் தெறிக்கும்படியான பூரண எலும்பும் தோலுமாக உருமாறிப் போய்விட்டாள்! அவள் முகத்தில் சஞ்சலம் பிரதிபலித்தது. ஆச்சரியப்பட்ட அவன் அனுதா பப்பட்டான். தங்கவேலின் மனம் தறிகெட்டுச் சுழல ஆரம்பித்தது.

பொன்னுருவி! ஆம்; அவள் அவனுடைய முறைப் பெண். அன்று மட்டும் அவள் அப்பா அப்படி விடாக் கண்டனகத் தங்கவேலின் குடும்பத்தாரோடு குஸ்திக்கு கிளம்பியிராமல் இருந்திருந்தால், கட்டாயம் அவள் அவனது 'ஆசைக் கண்ணாட்டி'யாகவேதான் ஆகியிருப்பாள். ஆனல் அவர்கள் இரண்டுபேருடைய துரதிர்ஷ்டம் அந்தப் பந்தம் அறுந்துவிட்டது. நல்லது, கெட்டது எந்தக் காரியத் துக்கும் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்வதில்லை. ஒட்டுறவு துண்டிக்கப்பட்டது.

"அத்தான்!"

"பொன்னுருவி!"

"உங்களைக் காணத்தான் வீடுவரைக்கும் போயிட்டு வாரேன்!"

"என்ன சேதி?"

'அத்தான், என் கைக்குழந்தைக்குக் கபவாத ஜுரம். நாலஞ்சு நாளாகக் காய்ச்சல். வைத்தியதுக்கு முன் அச்சாரமா ஏதாச்சும் கொஞ்சம் பணம் கொடுத்தாத்தான் மருந்து கொடுக்க முடியுமாம். அதுக்குத்தான் உங்க கிட்டேக் கொஞ்சம் பணம் வாங்கிட்டு போவலாமின்னு வந்தேன். என் வீட்டுக்காரர் இருக்கிறப்போ - எதுக்கு

இப்படி வந்து பணம் கேட்கணுமின்னுதானே தெகச்சுப் போயிட்டீங்க. உங்களுக்கு அவரைப்பத்தி ஏதும் தெரியாதா ? அவர் மனைமிதிச்சு என்னோடே பேசி, மகளை எடுக்கி மாசம் ஒண்ணுக்கு மேலே ஆகுது. பொழுது விடிஞ்சு பொழுதுபோனா எந்த நேரமும் அவருக்குச் சீட்டாட்டம்தான் பொழப்பு. குளத்தங்கரைச் சாயாக்கடைதான் அவருக்கு அடைக்கலம். காலம்பற வீட்டுக்கு வந்தப்பப் பிள்ளைக்கு முடியலைன்னு சொன்னேன். அவர் எம்மேலே எரிஞ்சு விழுந்து அஞ்சுரூவா அவசரமா வேணும்னு கேட்டாரு. அந்தப்பணத்தைக் கொண்டாச்சும் ஏதாச்சும் வைத்தியம் செய்யலாம்னு நினைச்சுருந்த என் எண்ணத்திலே மண்ணை வாரிப் போட்டுட்டாரு. பணத்தைக் கைப்பற்றியதுமே மறுபேச்சாடாமல் கிளம்பிட்டாரு. இப்படித்தான் ஒவ்வொரு சமயமும் உயிரைக் கையிலே பிடிச்சுட்டு அவர்கிட்டே நடக்கவேண்டியிருக்குது. குடிகாரன் கணக்காப் பசிச்சப்போ வராரு; சாப்பிட்டுட்டுப் போயிடுறுரு மேலுக்கு முடியாமக் கிடக்கிற பெத்த மகளைப்பத்திக்கூட கவலை கிடையாது மனிசனுக்கு. அத்தான், உங்க குழந்தையின்னு நினைத்து மனசு இரங்கி ஒரு அஞ்சுரூவா காசு கொடுத்திங்கன்னு கோடிப் புண்ணியமுண்டுங்க ! ''

விம்மிப் பெருமூச்செறியச் சொல்லி நிறுத்திய பொன்னுருவி வாய்விட்டு அழுதாள். தங்கவேலுவிற்கும் கண்களில் கண்ணீர் கொட்டியது. கண்ணுககுக் கண்ணான தன் மகளின் காய்ச்சலைப் பற்றிக்கூடக் கவலையின்றிச் சீட்டாடியவண்ணமிருக்கும் அவள் கணவன் காசிலிங்கத்தின் பேரில் அவனுக்குக் கரைகடந்த ஆத்திரம் பொங்கி எழுந்தது. அத்துடன் எப்படியாவது அவனை நல்வழிப் படுத்தவேண்டுமென்ற எண்ணம் உதித்தது.

பொன்னுருவிக்குக் கொடுக்கப் பணத்திற்கு எப்படி 'மால்' பண்ணுவது என்று யோசிக்கையில், சிலநாள் முந்தித் தன் மனைவிக்குச் சேலை வாங்க ஐந்து ரூபாய் பணம் கொடுத்து வைத்தது ஞாபகம் வந்தது.

"பொன்னுருவி ! கருக்கல்லே பணத்தைக் கொண்டாந்து தந்து வைத்தியர் கிட்டேயும் சொல்றேன். மனசு

கலங்காதே! உன் புருசனும் சீட்டாட்டத்துக்குத் தலை முழுக்குப் போட்டு, நல்லபடியா குணம் திருந்திடுவான், ஆயி கிருபையாலே. கவலைப்படாதே! ராவிலே புள்ளையைக் கவனமா பாத்துக்கோ!" என்றான் தங்கவேல்.

"அத்தான்! மகமாயி புண்ணியத்திலே உங்களுக்கு ஒரு குறைவும் வராது. உங்களைத்தான் அண்ணைக்கும் நம்பினேன்; இப்பவும் நம்பியிருக்கேன். படபடக்கும் மனசிலே பால்வார்க்கச் செஞ்சிடுங்க. புள்ளே தனியாக் கிடக்கும்...நான் வரட்டுமா அத்தான்?" என்று விடை பெற்றுச் சென்றாள் பொன்னுருவி. பித்துப்பிடித்தவன் மாதிரி அவள் போன வழிமீது விழி பதித்து நின்றுகொண்டிருந்தான் தங்கவேல்.

*　　　　*　　　　*

பொன்னுருவியின் வீட்டுக்குப் புறப்பட யத்தனப்பட்டுக் கொண்டிருந்தான் தங்கவேல். உறவு என்ற ஓர்மையில் ஓரளவு பாத்தியதைகொண்ட பொன்னுருவிக்குத் தான் செய்யவிருக்கும் உதவியை நினைத்து அவன் பூரித்துப் போனான்.

"வள்ளி!" என்று அழைத்த தங்கவேல், இரவு செய்து கொண்ட தீர்மானப் பிரகாரம் வள்ளியிடம் சேலைக்குக் கொடுத்த பணத்தைத் திருப்பிப் பெற எண்ணினான். மறு முறையும் மனைவியை அழைத்துப் பார்த்தான். அவளைக் காணோம்.

அவசரமாக வெளியே வந்து பார்த்தான். அப்போது தான் காசிலிங்கம்—பொன்னுருவியின் புருஷன், விர்ரென்று விரைந்து சென்றது தெரிந்தது. அவன் வள்ளியிடம் வந்துவிட்டுத்தான் போயிருக்கவேண்டும் என்று ஊகித்தவனாய், "வள்ளி, அன்னிக்கு உனக்குப் புடவைக்காகக் கொடுத்த அஞ்சு ரூபாயைக் கொடு. ஒரு அவசர ஜோலிக்கு வேணும். வர்ர சனிக்கிழமை சந்தையிலே உனக்குச் சேலை வாங்கிக் கொடுத்துடறேன்" என்றான் தங்கவேல்.

வள்ளி விழித்தாள்.

"என்ன வள்ளி வாயடைச்சுப் போய் நிக்கறே?"

"வந்து... அந்தப் பணம் ரெண்டு நாளைக்கு முன்னே காணுமப் போயிடுச்சு—நீங்க..." என்று விழுங்கினுள் கரகரத்த குரலில் வள்ளி.

சற்றுமுன் தன் கண்முன் கண்ட காட்சி அவன் எரிச்சலுக்கும் ஆத்திரத்துக்கும் தூபமிட்டது. "அந்தச் சூதாடிப் பயலோட இவளுக்கு என்ன பேச்சு?" என்று மனத்திற்குள் பொறுமினுன் தங்கவேல். அத்துடன் கோபம் தலைக்கேறியது. ருத்திர மூர்த்தியானுன்.

"பொய்யா சொல்றே பொய்? என்னை என்ன மூடன்னு மனசிலே நெனைச்சுப்பிட்டே?" என்று வள்ளியின் கன்னத்தில் 'பளீர்' என்று அறைந்தான்.

கன்னத்தைத் தடவியவளாய் விம்மினுள் வள்ளி.

"என்னை மன்னிச்சுப்பிடுங்க. காசிலிங்கம் அத்தான் வந்து தன் மகளுக்கு ஆகலேன்னு வைத்தியத்துக்கு அஞ்சு ரூவா கேட்டுச்சு. எங்களுக்கு அந்தக் காலத்திலே எவ்வளவோ ஒத்தாசை பண்ணியிருந்த அத்தான் இப்படிக் கெஞ்சிக் கேட்கிறப்ப 'இல்லே'ன்னு சொல்ல எப்படி மனசு வரும்? எனக்குப் புடவைக்குத் தந்த பணத்தை அப்படியே கொடுத்துட்டேன்..." என்று கூறினுள் வள்ளி.

வாழ்க்கை விசித்திரம் அவனை ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது. தான் செய்த தவறை உணர்ந்தவன்போலத் தன் மனைவியை நோக்கினுன். தன் மாமன் மகளுக்கு எப்படித் தான் பணம் கொடுத்துதவ விரும்பினுனோ, அதேபோல் அவளும் தன் அத்தானுக்குச் சமயத்தில் பணம் கொடுத்து ஒத்தாசை செய்ததில் என்ன தவறு இருக்க முடியும்?

"வள்ளி, கோவப்படாதே! நான்கூட உன்கிட்டே பணத்தைக் கேட்டது பொன்னுருவி மகள் வைத்தியத்துக்காகத்தான். முன்னடியே உள்ளதைச் சொல்லியிருக்கப் படாதா? காசி உனக்குச் சொந்தமின்னு எனக்குத் தெரியாதே. ஊம்; பணம் எப்படியுைச்சும் அதுகிட்டே போய்ச் சேர்ந்தாச் சரி"

* * *

மறுநாள் மாலை பொன்னுருவியின் வீட்டையடைந்ததும் அங்கு நிலவிய அசாதாரண அமைதியைக் கண்டு ஒரு கணம் திடுக்கிட்டான் தங்கவேல். பிள்ளைக்கு என்னவோ ஏதோ என்று பதறினன். "பொன்னுருவி மகளுக்கு ஆத்தா கருணையாலே ஏதும் நேர்ந்திடப்படாது," என்று பிரார்த்தித்துக்கொண்டே, அவன் உள்ளே நுழைந்தான்.

"அத்தான், உங்களைத்தான் எதிர்பார்த்துக்கிட்டிருந்தேன். குழந்தைக்கு ராத்திரி காச்சல் நெருப்பாயிருந்துச்சு. ராத்திரி பூராவும் சொரணை கூடக் கிடையாது மகளுக்கு!"

"பொன்னுருவி, எங்கே உன் புருஷன் காசிலிங்கம்? அவன்கிட்டே என் பெண்சாதி அஞ்சு ரூவா கொடுத்துச் சாமே. மகளுக்கு வைத்தியத்துக்கு வேணுமின்னும். அத்தானுச்சேன்னு இரக்கப்பட்டு பணத்தைக் காலம்பறவே கொடுத்தாச்சாமே!"

"அத்தான், அதிசயமால்ல இருக்குது! எம் புருஷனை காலையிலேயிருந்து கண்ணுப் புறத்தாலே கூட காணலையே! ஐயையோ, பொய்சொல்லி மறுபடியும் பணத்தை வச்சுச் சூதாடியிருக்கும்!" என்று சொல்லித் துடித்தாள் பேதை.

காசிலிங்கத்தின் தந்திரத்தால், சீட்டாட்டத்தில்தான் விரயமடைந்திருக்கவேண்டும் அவனிடம் கொடுத்திருந்த ரூபாய் ஐந்தும் என்று ஊகித்துக்கொண்டான் தங்கவேல். மேலும் காலத்தைப் போக்க எண்ணுமல் ஓடிப்போய் வைத்தியரை அழைத்து வந்து காண்பித்தான். கேட்கும் பணத்தைத் தான் தருவதாகப் பொறுப்பு ஏற்றுக்கொண்டான். வேறு வழி?

குழந்தையின் ஆயுசுக்கு எந்தவிதமான குந்தகமும் ஏற்படாது என்று உறுதி கொடுத்தார் வைத்தியர், நாடியைப் பரிசோதித்தபின். சூரணம் ஒன்றைத் தேனில் குழைத்துக் குழந்தைக்குக் கொடுக்கவே அது மெதுவாகக் கண்களைத் திறந்து விழித்தது. சந்தோஷ மிகுதியில் பொன்னுருவிக்குத் தலைகால் புரியவில்லை.

ஆனல் மறுகணம் அவளது ஆனந்தம் அழுகையாக மாறியது. தான் பார்த்த காட்சியைக் கண்டு அலறி

விட்டாள் பொன்னுருவி. இடுக்கியில் அகப்பட்ட மீன் போலத் துடிதுடித்துப்போனுள். ஏனென்ருல், போலீஸ் காரன் ஒருவன் பின்தொடர வந்து நின்ருன் அவளது கணவன் காசிலிங்கம்.

"ஊம், ஜல்தி பண்ணு, ஸ்டேஷனுக்குப் புறப்படணும்!" என்று அதட்டினுன் தாணுக்காரன்!

சீட்டு விளையாட்டின் விளைவே இந்த இக்கட்டான நிலைக்கு, போலீஸ் கையில் சிக்கும் அளவிற்கு கொண்டு வந்து விட்டது என்பது புலனுயிற்று பொன்னுருவிக்கு.

"இருங்க ஐயா, உடம்பு காயலாகக் கிடக்கும் என் மகளை ஒரே ஒரு தரம் மாத்திரம் பார்த்துட்டு வந்துடறேன்!" என்று கெஞ்சினுன் காசிலிங்கம்.

"போலீஸ்கார ஐயா, இந்தத் தடவை மட்டும் அவரை மன்னிச்சிடுங்க பெரிய மனசு பண்ணி. இனிச் சீட்டைக் கண்ணுலே கூடக் காண மாட்டாது காசிலிங்கம். அதுக்கு நான் ஜாமீன்!" என்று அழுத்தமாகக் கூறிய தங்கவேல், காசிலிங்கத்தையும் போலீஸ்காரனையும் மாறி மாறிப் பார்த்தான். முறுவல் பூத்தது இதழ் ஓரத்தில். பொன்னுருவியின் கண்களில் கண்ணீர் நிறைந்து வழிந்தோடிக்கொண்டிருந்தது. ஆனுல், போலீசைக் கொண்டு காசிலிங்கத்தை மிரட்டி வைத்தால்தான் ஒரு வழியாகச் சீட்டாட்டத்தை நாடமாட்டான் என்பதை உணர்ந்துகொண்டு, தங்கவேல் தான் இப்படிப்பட்ட நாடகத்தை நடத்தியிருக்கிருன் என்ற ரகசியம் பொன்னுருவிக்கோ அல்லது காசிலிங்கத்திற்கோ எப்படித் தெரிந்திருக்க முடியும்?

மறுபேச்சின்றி தாணுக்காரன் போய்விட்டான். பொன்னுருவி கண்ணீரைத் துடைத்துக்கொண்டு நிம்மதி யடைந்தாள். மறுபிறவி எடுத்தவன் போல, ஒரே எட்டில் பாய்ந்து தன் குழந்தையை வாரியெடுத்து மடியில் வைத்த ணம் தேம்பினுன் காசிலிங்கம்.

'பொன்னுருவி, இந்த மட்டும் ஆயா கண் திறந்திச்சே; வ நம்ப செஞ்ச பாக்கியம்தான். தலைக்கு வந்தது ரகையோடு போனது மாதிரி, போலீசு கையிலே

சிக்காமல் தப்பிச்சிட்டேன். தங்கவேலே உசிருள்ளவரை மறக்க முடியுமா? பொன்னுருவி, நீ என்னை மன்னிச்சுடு! குடிகாரன் கணக்காக உன் கழுத்துத் தாலியைக் கூட அறுத்திட்டுப் போய்க் கடைசியா ராத்திரி அதையும் தோத்துப்பிட்டேன். காலம்பற வள்ளிகிட்டப் போய், மகளுக்கு வைத்தியத்துக்கின்னு பொய் சொல்லி அஞ்சு ரூபாவை வாங்கிச் சீட்டாடினேன். கடைசியா எனக்குக் கெலிப்பு வந்துச்சு. பணம் கொஞ்சம் கைக்கு வந்ததும் அந்தத் தாலியையும் திருப்பிட்டேன்!'' என்று உணர்ச்சி மேலிடக் கூறி, துணியில் முடிந்து வைத்திருந்த தாலியைக் கொடுத்தான் தன் மனைவியிடம்.

இதைக் கேட்டதும் தங்கவேல், பொன்னுருவியின் கழுத்தைப் பார்த்தான். மங்கலச் சின்னம் பரிமளிக்க வேண்டிய கழுத்து சூனியமாகத் தோற்றமளித்தது. தங்கவேல் கற்சிலையாய்ச் சமைந்து நின்றான். தன் கணவனின் இஷ்டம் நிறைவேறி விட்டால் அதுவே போதும் என்ற கொள்கையுடைய பொன்னுருவியின் மனப்போக்கை நினைத்து மலைத்தான் அவன். அதே தருணம் காசிலிங்கத்தின் அடாத செயலைக் கண்டு பொருமியது அவன் உள்ளம். என்றாலும், இனியாவது அவன் வாழ்க்கைச் சுவடியில் புது ஏடு புரட்டப் பெற்று, பொன்னுருவி, குழந்தை சகிதம் இன்ப வாழ்வு தொடங்குவாளல்லவா என்ற எண்ணம் உதித்தது. உடனே அவனுக்கு நிற்கிறோமா, அல்லது பறக்கிறோமா என்ற சந்தேகம் உண்டாகி விட்டது. அவ்வளவு மகிழ்ச்சி.

“பொன்னுருவி, இனிக் கவலைப்படாதே! காசி மச்சான் திருந்திடுச்சி. எல்லாம் மகமாயி கடாட்சந்தான். அந்தோட மலைபோல வந்ததெல்லாம் பனி போல மாறினதும் உன் தாலி பாக்கியம்தான்!'' என்று கனிவுடன் வார்த்தைகள் உதிர்த்தான் தங்கவேல்.

நன்றி நிறைந்த பார்வையுடன் தன் அத்தானை ஏறிட்டு விழித்த வண்ணம், கையில் வைத்திருந்த தாலியை எடுத்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டு, கழுத்தில் அணிந்து கொண்டாள் அவள். மறுமலர்ச்சி பெற்ற பொன்னுருவியின் வதனத்தில் புது வாழ்வின் பூரிப்பு வலை பின்னியிருந்தது!

# இன்று நேற்று வந்த சொந்தமா?

'தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்' எழும்பூர் ரெயில் நிலையத்தில் வந்து ஓய்வு பெற்றதுதான் தாமதம்; கையில் பிடித்திருந்த தோல் பெட்டியுடன் கீழே இறங்கினன் தங்கப்பன். பெட்டியைத் தரையில் வைத்தான். ரெயில் பெட்டியினின்றும் கீழே இறங்க வழிபார்த்துக்கொண்டிருந்த தன்னுடைய அன்னையைக் கைகளைப் பற்றிய வண்ணம் கீழ்த்தளத்திற்குப் பதமாகக் கொண்டுவந்து சேர்த்தான் அவன்; சாமான்களுக்குத் தாயைக் காவல் வைத்தான்; வாடகைக் காருக்கு வகை செய்யலானன். ஜார்ஜ் டவுனில் ராமசாமித் தெருவுக்கு வந்ததும்தான், தங்கப்பனுக்கு நல்ல மூச்சுப் பிரிந்தது. வாடகைப் பணத்தை 'மீட்டர்' பார்த்து நீட்டினன். பிறகு பெட்டியும் கையுமாக, தாயுடன் வீட்டினுள் நுழைந்தான் அவன். வீடு என்ருல் வாடகை வீடு!

"என்ன அம்மா, பெண் பார்ககப் போன காரியம் சித்திதானே?..." என்று வினவினர் குடித்தனக்காரர்கள் சிலர். "ம்!" என்று வெய்துயிர்ப்பைப் பதிலாக்கிச் சுளித்துக் கொண்டே, வீட்டுக் கதவைத் திறந்து உள்ளே சென்ருள் மரகதத்தம்மாள்.

"தம்பி, நீ போய்க் குளிச்சிட்டு ஓடியாப்பா!"

தங்கப்பன் குளித்துத் திரும்பினன். பக்கத்து வீட்டுப் பையன் 'டிபன்' வாங்கி வந்தான். புதுத் துணிமணிகள்

வேண்டுமல்லவா? எனவே, சாவிக் கொத்தை எடுத்து, ஒரு சாவியை விலக்கி, அந்தத் தோல் பெட்டியைத் திறந்தான். ஒரு கணம், தங்கப்பன் சிலையானான்!

"தோல் பெட்டி மாறியிடுச்சு அம்மா! வேறே யாருடைய பெட்டியோ நமக்கு வந்திருச்சுது!" என்றான் அவன். இந்தப் பெட்டி, அவனுடைய சொந்தப் பெட்டி மாதிரியே தான் காட்சி கொடுத்தது!

'அட கடவுளே!' என்று பெருமூச்செறிந்தான் தங்கப் பன்.

அந்தத் தோல் பெட்டியைப் பிரிக்கப் பிரிக்க, அவனுக் கெனக் காத்துக்கொண்டிருந்தவை போல அதிசயங்கள் ஒன்று, இரண்டென்று விளைந்துகொண்டிருந்தன நவ நவமான நாகரிக உடுப்புக்கள் தனியே ஒதுங்கிக் கொண் டன. பிரிந்து கிடந்த அந்நாட்குறிப்பை மீண்டும் பார்த்தான்; படித்தான்.

"பேரழகி சாந்தினி எனக்குக் கிடைப்பதற்கு நான் பெரும் பாக்கியம் செய்திருக்கத்தான் வேண்டும், அப்பா எனக்கெனச் சேமித்திருக்கும் நிதியும், விதி எனக்காக வகுத்துத் தந்து விட்டிருக்கும் நீதியும் என்னுடைய எதிர் காலத்துக்குரிய நற் சகுனங்கள்! ஆம்; உண்மைதான். புத்தாண்டு பிறந்து, சித்திரை மாதம் முடிவதற்குள் என் வாழ்க்கைப் புத்தகத்தில் புத்தேடு புரண்டு விடும்!"

டைரியை வீசியெறிந்தான் அவன். கனவும் நனவும் கலந்தன; இதயம் கொப்புளித்த நீருக்கு வழியா இந்த விழிகள்?

'சாந்தினி!'

தங்கப்பன் ஒருமுறை தனக்குத் தானே அப்பெயரைச் சொல்லிக் கொண்டான்; இன் மழலைப் பைங்கிளிக்கு ஒவ் வொரு பெயராகச் சொல்லிக்காட்ட, அது செங்கனி வாய் திறந்து அப்பெயர்களைத் திருப்பிச் சொல்லிக் கேட்கையில் ஏற்படும் அகமகிழ்வு கனிந்தது; கண்களை ஒரு கணம் இறுக மூடிக்கொண்டான். அப்பேரழகி தன்னுடைய

நயன வட்டங்களை விட்டுப் பறந்து செல்லக் கூடாது என்று அவன் தன் விழிகளை அவ்வாறு மூடிக்கொண்டானோ? அவன் மறுகணம் விழிகளைத் திறந்த தருணம் இதயத்தின் அடித் தளம் விட்ட ஆத்திரப் பெருமூச்சு வெளிக் கிளம்பிற்று. ஏன், அந்த அழகுப் பசுங்கிளி சிறகடித்துப் பறந்து விட்டதா?

'சாந்தினி!'

தீக்குச்சியும் தீப்பெட்டியும் இதயம் பிணையச் சந்திக் கும்போது, எரி நெருப்பு உருவைக் காட்டுவது இயற்கை தானே? அவனுள் தீ எரிந்தது! சாந்தினி என்னும் அந்த ஒரு பெயர் ஓராயிரம் பெயர்களாகப் பெருகி அவனது நெஞ் சில் தீயை வளர்த்தன. தங்கப்பன் துடித்தான்; துவண் டான். தீ சுடாதா? முட்டப் பெருகிக் கரை புரண்டது வெள்ளம்.

"தம்பி, சாப்பிடுப்பா"!

அவன் மனம் திருச்சி மலைக்கோட்டையில் சஞ்சரித் துக்கொண்டிருந்ததால், சென்னையின் நினைவு எழவில்லை.

"தங்கப்பா!... தம்பி தங்கப்பா!"

பெற்ற பாசம் உற்ற அன்புடன் தட்டிக் கூப்பிட்டது. தொண்டைக் குழியில் வேதனை புறப்படும்வரை, வாய் ஓயாமல் கூவி அழைத்த பலகாரத் தட்டு, அவனது பரி தாபக் கோலம் கண்டு நிலை கலங்கியது.

"அம்மா!"

மகன் வடித்த சுடுநீர் பெற்றவளின் மாணிக்கக் கையில் தெறித்தது.

"தம்பி, நெருப்பு சூடுதான்; ஆனாலும் சுடு தண்ணி அதை அவிச்சுப்பிடும்; இல்லையா?... அதே போல, உன் னோட இந்தச் சூடான கண்ணீர் உன் மனசிலே எரிகிற நெருப்பை அணைச்சுப்பிடும், தம்பி!... மலைக்கோட்டைப் பிள்ளையாரும் நம்ம பிரஹதம்பாள் அம்மனும் நல்ல முடிவைக் காட்டாம இருக்க மாட்டாங்க. சரி, நீ இப்ப பலகாரத்தை

சாப்பிட்டுப்பிட்டு, வேலைக்குப் புறப்பட்டுப்போ. இந்தச் சனியனை மூடிப்பிட்டு எழுந்திரு!''

தங்கப்பனின் கையில் 'முகவரிச் சீட்டு' ஒன்று தட்டுப் பட்டது. எம். நாகநாதன் என்ற பெயருக்கு அடியில் அலுவலகம், வீடு ஆகிய இரண்டின் முகவரிகளும் அச்சடிக்கப் பெற்றிருந்தன. கண்களைத் துடைத்த வண்ணம், 'கை மாறிய' அந்தப் பெட்டியை துழாவிய வேளையில், புதியதொரு நிழற்படம் ஒன்று அவனுக்குரிய கைவிரல்களில் சிக்கியது.

'விலாசினி அல்லவா இவள்? இவளுடைய படம் இவன் பெட்டியில் எப்படி வந்தது?'

* * *

சிந்தாதிரிப் பேட்டையில் பஸ்ஸிலிருந்து இறங்கினான் தங்கப்பன். அவனுடைய கையில் அந்தத் தோற்பெட்டி இருந்தது. சைக்கிள் ரிக்ஷா ஒன்றை அமர்த்திச் சென்று கொண்டிருந்தான் அவன். குறுக்கோடிய தெருக்களையெல்லாம் காலால் ஏற்றிவிட்டு சைக்கிள் ரிக்ஷாக்காரன் பறந்தான். ஆனால் தங்கப்பனுக்கோ தன் வழியில் குறுக்கிட்டுப் பாய்ந்த நினைவுகளை 'சற்றே விலகியிரும், பிள்ளாய்!' என்று பணித்து, அல்லது வேண்டி, வழி விலக்கிச் செல்லும் மார்க்கம் புலன்களில் ஒட்டவில்லை!

'சாந்தினி!'

தங்கப்பன் ஏன் அவளை அழைத்தான்? மலைக்கோட்டைப் பதுமையை அவன் ஏன் கூவிக் கூப்பிட வேண்டும்? அவன் என்ன செய்வான்? பாவம், காலமும் கனவும் அவனுக்கு விடுகதைகள் போட்டு விட்டனவே?

'நான் என்ன செய்யட்டும் அக்கா? நம்ம சாந்தினியை நம்ம தங்கப்பனுக்குக் கொடுக்க வேணும்னுதான் நினைச்சுக் கிட்டிருந்தேன்; ஆனால், 'லவிதம்' வேறு மாதிரியாக விதித்து விட்டதே? சாந்தினி — தங்கப்பன் ஜாதகங்கள் சரிவரப் பொருந்தவில்லை, அக்கா!'

கண்ட கனவுக்கும் கொண்ட நினைவுக்கும் வெற்றி முத்திரை பதித்துத் திரும்பிவிட வேண்டும் என்று தங்கப்பனும் அவனைப் பெற்ற மாதாவும் 'தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்' வண்டியில் பயணமானார்கள். ஆனால், அதே 'தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்' அவர்கள் இருவரையும் சுமந்து திரும்புகையில், இடிந்த மனக் கோட்டைகளின் துகள்கள் மாத்திரமே எஞ்சிக் கிடந்தன. கனவு ராஜ்யத்தின் நுழை வாயிலைத் தரைமட்டமாக்கிவிட்டது அந்த இனம் புரியாச் செயலுக்குப் பெயர்தானா விதி?

அன்று புதுக்கோட்டை தனியரசாக இயங்கியது. தங்கப்பன் பிறந்தான். அவனுக்குச் சொந்த மாமன் மகள் சாந்தினி. மரகதத்தம்மாளின் உடன் பிறந்த தம்பி சோம சேகரன் திருச்சியில் 'வசதி'யுடன் திகழ்ந்தார். என்றாலும் தங்கப்பனின் கல்லூரிப் படிப்பு சென்னையிலேயே தொடர்ந்தது; எம். ஏ. படிப்பு; பொருளாதாரப் பிரிவு; வெற்றி பெற்ற இனிப்புச் சேதியை மட்டிலுமே அவனது தந்தை அனுபவிக்கக் கொடுத்து வைத்தார். தனியார் நடத்திய கல்லூரியில் 'லெக்ச்சரர்' ஆனான் தங்கப்பன். இருநூற்றைப்பது ரூபாய்ச் சம்பளம்; பாங்கில் தந்தை சேமித்துச் சென்ற பணம் பத்தாயிரம். பட்டண வாழ்வு இதுவரை அவனுக்குச் சோதனைகள் தரவில்லை; ஆனால் இப்போது, அவனைச் சோதித்து விட்டது; ஏன், அவனே சோதனைப் பொருளானான்.

மனம் ஒரு 'போட்டோ ஆல்பம்.' தானும் சாந்தினியும் பிஞ்சுப் பிராயம் தொட்டு, இதயம் தொட்டு உறவாடி மகிழ்ந்த இனிய நாட்களை அவனது மனம் 'காமிரா'வாகிப் படமெடுத்தது. ஆனால் அதே நிகழ்ச்சிகள் இன்றைக்குப் படமெடுத்து ஆடும் பாம்புகளாகிவிட்டனவே? 'உம்மைப் பெருவினை'யும் ஓர் அரவமோ?

வெங்கடேச கிராமணித் தெருவில் அவ்வீட்டின் முன்னர் சைக்கிள் ரிக்ஷா நின்றது.

"மிஸ்டர் நாகநாதன்...!" என்று குரல் கொடுத்தான் தங்கப்பன்.

*　　*　　*

"உங்களுடைய உதவிக்கு மிகவும் நன்றி, மிஸ்டர் தங்கப்பன்!" என்றான் நாகநாதன். வார்த்தைகளில் நன்றியறிவு மேலோங்கிப் பேசியது.

"பெட்டிகள் மாறிவிட்டன. உங்கள் பெட்டியைக் கொண்டுவந்து சேர்ப்பிக்க இயலவில்லை. ஏனென்றால், நான் வைத்திருந்தது போல நீங்கள் உங்களுடைய விலாசமிட்ட சீட்டு எதையும் வைத்திருக்கவில்லை. உங்கள் பெட்டியைத் திறக்கவேண்டிய சூழ்நிலை வந்ததால்தான் நான் திறந்தேன். மன்னிக்க வேண்டும்!" என்று கூறினான் நாகநாதன்.

"என்னையும்தான் நீங்கள் மன்னிக்கவேணும். ஏனென்றால், நான் உங்கள் பெட்டியைத் திறந்து பார்த்தேன்; அதனால்தான், உங்கள் இருப்பிடம் புரிந்தது!" என்று பதிலுக்குச் சமாதானப்படுத்தும் முறையில் தங்கப்பன பேசினான்.

"பரவாயில்லை!"

"ம்!"

தங்கப்பனைக் குறித்து நாகநாதன் வினவினான் :

"எனக்குத் தஞ்சாவூர்ப் பக்கமுங்க; எஸ். எஸ். எல். ஸி. படிச்சிருக்கேன். ஒரு மருந்துக்கடையில் வேலை பார்க்கிறேன். கல்யாணமானவன் !" என்று புள்ளி விவரம் தந்தான் தங்கப்பன்.

'நான் ஐ. ஏ. எஸ் பரீட்சை எழுதப் போகிறேன் ; அப்பாவுக்குத் திருச்சியில் கண்ணாடித் தொழிற்சாலை உண்டு. எனக்கு ஒரே ஒரு தங்கை; பெயர் விலாசனி: அவள் படிப்புக்காகத்தான் நான், அம்மா எல்லோரும் இங்கே இருக்கிறோம். அவள் திருமண விஷயமாகத்தான் அலைகிறேன். எனக்குச் சித்திரையில் கல்யாணமாகிவிடும். எங்கள் அப்பாவுக்குச் சமதையான இடம். மலைக்கோட்டையில் சோமசேகரன் அவர்களின் புதல்வி. சாந்தினி என்று பேர். பி. ஏ. பட்டதாரி. சாந்தினிக்கு வேறு எங்கோ மாப்பிள்ளை தயாராக இருந்தாலும். எங்கள்

அப்பாவின் தொடர்பு ஏற்பட்டதும், என்னையே மாப்பிள்ளை யாக்கிக்கொள்ள முடிவுகட்டிவிட்டார். பெண்ணைப் பார்க்க திருச்சி சென்று திரும்பும்போதுதான், நம் பெட்டிகள் இடம் மாறி, கைமாறிவிட்டன!''

நாகநாதன் கைப்பிடித் துண்டை எடுத்து நெற்றியில் ஒற்றினுன். அந்த இடத்தில் செம்மை படர்ந்தது. சுருள் முடியை அலட்சியத்தோடு ஒதுக்கிவிட்டான் அவன்.

தங்கப்பனின் இதயம் அழுதது; கண்ணீரை உண்டு விழுங்கினுன் அவன். 'பாவி! என் கனவைச் சிதைத்து விட்டானே காலன் நாகநாதன்? எவ்வளவு பெருமை தவழப் பேசுகிருன்! பேசுவதற்கு என்ன? தேவதையெனத் தோன் றும் சாந்தினி கிடைத்து விட்டாள் அல்லவா? ஏன் பேச மாட்டான்?'

''நான் போய் வருகிறேன்!''

''இருங்கள், காப்பி சாப்பிட்டுப் போய் வாருங்கள்! அழைப்பு அனுப்புகிறேன்; கலியாணத்துக்கு அவசியம் வந்துவிட வேண்டும்!''

''ஆஹா!''

சமையற்காரனுக்கு வாயெல்லாம் பல்.

''ஆகட்டுங்க; நிச்சயம் வருகிறேன்!'' என்று விடை பெற்றுத் திரும்புகையில், தங்கப்பன் ''வணக்கம் ஸார்!'' என்ற குரல் கேட்டுத் தலையை நிமர்த்தினுன். இடது கையில் பிடித்திருந்த பெட்டி நடுங்கியது. ''வணக்கம்!''

வந்து நின்ற பெரிய காரிலிருந்து விலாஸினி இறங்கி நின்ருள்.

''நான் போய் வருகிறேன், விலாசினி!'' என்று புறப் பட்டான் தங்கப்பன். 'என் ஸ்டூடென்ட் விலாசினி!'

* * *

கல்லூரி உத்தியோகத்திற்கு உண்டான உடைகளைக் கழற்றி விட்டு, தன்னுடைய அறைக்குள் நுழைந்தான் தங்கப்பன்.

"தம்பி, உனக்குச் சேதி தெரியுமா?"

"சொன்னால்தானே அம்மா தெரியும்?"

அவன் பேசிய பேச்சு அவனுக்கே நகைச்சுவையாகப் பட்டது. கையில் கொணர்ந்திருந்த இனிப்புப் பொட்டலத்தைப் பிரித்து அன்னையிடம் கொடுத்துவிட்டு முகத்தை உயர்த்தினன் அவன்.

"தம்பி, உன் ஜாதகமும் சாந்தினி ஜாதகமும் ரொம்பவும் அற்புதமாப் பொருந்தியிருக்குதாம். திருச்சியிலிருந்து அந்த ஜோஸ்யர் வந்திருந்தார்; எதேச்சையாப் பார்த்தேன். புதுச் சம்பந்தம் கிடைச்சா, ஏகப்பட்ட பணம் 'புரட்டிக் கொள்ள' வழி ஏற்படும்னு நினைச்சுத்தான் என் தம்பி— உன் மாமா இப்பிடி நம்பளை ஏமாத்தியிருக்கிருன்!... ம்! தங்கப்பா, சாந்தினிக்குக் கலியாணம் நடக்கும் அதே நாளிலே உனக்கும் கல்யாணம் பண்ணி வைச்சாத்தான், என் மனசும் ஆறுதல் படும்!" என்று வேதனையும் லட்சிய உறுதியும் இழை பின்னிப் பேசினுள் மரகதத்தம்மாள்.

"முன் வினைப்படிதானே அம்மா எல்லாம் நடக்கும்?... பணம் பணத்தைத்தானே நாடும்?... நீங்க பலகாரத்தைச் சாப்பிடுங்க அம்மா!" என்று கெஞ்சினன் தங்கப்பன்.

"இந்த நிமிஷத்தோட, எனக்கு ஒரு தம்பி இருக்கிறதையே மறந்துப்பிட்டேன்!" என்று கண்ணீர் பெருக்கினுள் மரகதத்தம்மாள்.

சாந்தினியின் வதனம் அவனது இதயத்திரையில் நிழலாடியது; தன் தந்தையின் கடைசித் தீர்ப்புப் படிக்கப் பெறும் நேரத்தில் சாந்தினியின் கண்மலர்கள் பனித்திரை ஏந்திய காட்சியை அவன் எப்படி மறப்பான்?

'சாந்தினி, நீ பாக்கியவதி!... என்னைவிட எல்லாவகையிலுமே உனக்கு ஏற்ற மாப்பிள்ளை மிஸ்டர் நாகநாதனே தான்!... உன் அப்பா கல்யாணப் பத்திரிகை அனுப்பினுலும், அனுப்பா விட்டாலும், என் இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிக்க நேரில் ஓடி வருவேன்!...'

* * *

அதிகாலையில், சோமசேகரனைக் கண்ட மரகதத்தம்மாளுக்கு ஒருபுறம் ஆச்சரியமும், மறுபக்கம் ஆத்திரமும் ஏற்படலாயின.

"வா!" என்று கூட வரவேற்புக் கூருமல் நின்ற அவளிடம் திருமண அழைப்பு ஒன்றைக் கொடுத்தார் சோமசேகரன்.

"அக்கா, இந்தப் புகைப் படத்தை நான் பார்க்காமல் இருந்திருந்தால், நான் உடன்பிறந்த பாசத்துக்கே நன்றி செலுத்தாதவனுகியிருப்பேன். என் கண்களைத் திறந்து விட்ட இப்படத்தை நான் எப்போதும் மறக்கவே முடியாது அக்கா!" என்று சொல்லிக்கொண்டிருந்தார் சோமசேகரன்.

அப்பொழுது, குளித்து முடித்துத் திரும்பிய தங்கப்பன், தன் மாமா ஏந்தியிருந்த அந்தப் படத்தை நோக்கினுன். அவனைத் திகைப்புணர்வு ஆட்கொண்டது. சோமசேகரனும் மரகதத்தம்மாளும் பிஞ்சுப் பிராயத்தினராகக் காட்சி தந்தார்கள்!

'அம்மா தன் தம்பிக்கு இந்தப் படத்தைத் தபாலிலே அனுப்பி வைக்கச் சொல்லி, எதிர்வீட்டுப் பையனிடம் கொடுத்தார்கள். இதைப் பார்த்தாவது, தன் தம்பியின் மனம் மாறி, உடன்பிறப்பின் மகிமையை எண்ண வழி பிறக்கும் என்பது அம்மாவின் உள்ளக் கருத்து. ஆனுல், நானே, அந்தப் போட்டோவை அனுப்பச் செய்யாமல், அதை ரகசியமாக வாங்கி என் பெட்டியடியில் வைத்துக் கொண்டு விட்டேனே?... பின், இந்தப் படம் எப்படி மாமாவுக்குக் கிடைத்தது?' என்று மனம் மறுகினுன் தங்கப்பன்.

"உனக்குப் பணக்காரச் சம்பந்தி கிடைச்ச பெருமையைச் சொல்லிட்டுப் போக வந்தியே, அது மட்டும் நல்லது தான்!" என்று 'அர்த்தம்' அமைத்துப் பேசினுள் மரகதத்தம்மாள்.

"அக்கா, என்னை மன்னிச்சுப்பிடு. நம்ம சாந்தினிதான் இப்படத்தை வீட்டுச் சுவரிலேயிருந்து எடுத்து எங்கிட்டே காட்டிச்சுது!" என்று திணறினுர் சோமசேகரன்.

"தம்பி, உட்கார். நீ உன்னோட ஏழை அக்காவை மறந்தாலும், நான் என்னோட பணக்காரத் தம்பியை மறக்க முடியுமா? நானும் என் மகனும் உன் மகள் கல்யாணத் துக்குக் கட்டாயம் வாரோம்!" என்ருள். அவள் குரல் தடு மாறியது.

"அக்கா, முதலிலே இந்தக் கல்யாணப் பத்திரிகையைப் பாரேன்!"

அழைப்பில் இருந்த பெயர்கள்:

மணமகன்: தங்கப்பன்.

மணமகள்: சாந்தினி.

*    *    *

தங்கப்பனின் பழைய நாட்குறிப்பு ஏடு புரண்டது

'சாந்தினி! என் நெஞ்சில் நீ என்றென்றுமே பிஞ்சுப் பிராயத்துச் சாந்தினியாகவே வாழ்ந்திடுவாய்! உன் அழகுக்கு என்னைப் 'பிணை' வைக்க விதி ஒப்பவில்லை. ஆனாலும், உன்னை மறக்கவேண்டிய கட்டம் வந்தால், எனக்குக் கட்டாயம் பைத்தியர்தான் பிடிக்கும். சாந்தினி, நீ பாக்கியவதி! என்னைக் காட்டிலும் சகல விதத்திலும் சிறந்தவர் ஒருவர் உனக்குக் கணவராய் வரப்போகிருர். நீ வாழி!'

நடந்து முடிந்தது பூராவையும் கனுப்போன்றே அவன் உணரவேண்டியவன் ஆனுன். விரல்வழி வழிந்த தேன் வாய்க்குத் திரும்பினுற்போல, இந்தத் திருப்பம் அவனுக்கு இனித்தது!

இப்பொழுது, தங்கப்பனின் மனம் விம்மிக் கண்ணீர் வடித்துப் புலம்பியது: "சாந்தினி, உன்னுடைய தியாகம் பெரிது! இன்று நேற்று வந்ததா நம் சொந்தம்?"

*    *    *

ஏக்கப்பட்ட தம்ளர்கள் உடைபட்டன!

தங்கப்பன் விழிமலர்ந்தான்; வாய்ச் சிரிப்பு ஏடு திரிந்தது. அவன் மீண்டும் சிரித்தான்!

"சாந்தினி!"

"............"

"பேசமாட்டாயா?"

"ஓடி வர மாட்டாயா?"

"............"

"சாந்தினி!"

"............"

"கனி இதழ் நுனி விலக்கிப் பதில் சொல், சாந்தினி!"

"............"

"மையல் நிறை கயல் விழி மலர்ந்து என்னைப்பார், சாந்தினி!"

"............"

"சாந்தினி!"

"............"

"ஐயோ! சாந்தினி!"

"............"

கிழித்துக் கிடந்த டைரியின் இதழ்களைத்தான் அப்படிப் பார்த்தானா அவன்? இல்லை, அந்தப் புது அழைப்பிதழைத் தான் அவ்வாறு வெறிக்க வெறிக்க நோக்கினானா? அல்லது, அந்தத் தினசரிப் பத்திரிகையைத்தான் அப்படி அவன் பார்த்தானா?

செய்தி:

"தன் தகுதி, நிலை ஆகியவற்றை எண்ணிப் பார்க்காமல், பிரபலமான நாடக நடிகை சாருமதியைக் கலியாணம் செய்து கொண்ட பாலகோபாலன், இப்போது அந்த நடிகையால் விவாகரத்துச் செய்யப்பட்டு நடு வீதியில் நிற்கிறான்!..."

# பொம்மித்தீ

''அடியே! பொன்னுத்தா!'' என்று அலட்டினுள் பூவாயி.

''ஏண்டி!'' என்று பதில் குரல் கொடுத்துக்கொண்டே வந்தாள் பொன்னுத்தா. குச்சின் விட்டம் தலையை முட்டி விடாமல் இருக்கவேண்டி, அவள் தலையைக் குனிந்து கொண்டே வந்து, திட்டி வாசலுக்கு வந்தாள்; தலை நிமிர்ந் தாள். மாரகச் சேலையைத் தூக்கி வீசிப் போட்டபடி, விழி களை ஏறிட்டு நோக்கினுள். சோளக் கூழ் கிண்டினுள் போலும்! நகக் கண்களில் ஒட்டிக் கிடந்தது. ''என்னும்மே!'' என்று பரதவிப்புடன் சிமிண்டினுள். இளங்கதிரொளியில் விழிகள் பளிச்சிட்டன!

பூவாயி வாயைத் திறப்பதற்குள், பத்துவீட்டுச் சின்னஞ் சிறுசுகளும் அவ்விடத்தே குழுமிவிட்டனர். அவர்கள் அனைவரும் எதிரும் புதிருமாக நின்று ஒருவரையொருவர் பார்த்தார்கள். சந்தைக் கூட்டம் போன்று, நெரிசல் கண்டது. திடு திப்பென்று ஒரு சத்தம் வெடித்தது. வாசலில் சனிமூலைப் பகுதியில் மாட்டுத்தோல் சவ்வு ஒட்டிக் காய வைக்கப்பட்டிருந்த 'தப்பு' தோல் விடுபட்டுச் சத்தம் போட்டது. ''ஆத்தாடியோ! போச்சுடி... மச்சான்காரவுக வந்து மொத்தப் போருவுகளே!'' என்று வருத்தம் தெரிவித் தாள். அச்சம் பச்சையாகத் தெரிந்தது. 'அய்ய!' என்று

தவற்றுக்குக் கழிவிரக்கம் பரப்பினாள் சின்னக்குட்டி நாத்தனார். "ஒண்ணுக் குள்ளாற ஒண்ணு! சமிச்சுப்புடுலே!" என்று அனுசரணை பேசினாள் பூவாயியின் ஆச்சி மகள். செவந்தி அவள்.

பூவாயி அந்தப் பறைத்தப்பை மறைத்துவிட்டு, இதழ்களில் மறையாமல் இருந்த கிலேசத்தை மறைத்திட பிரயத்தனம் செய்தவளாக, "ம்... தொலையுது. சள்ளைப்பட்டு என்ன ஆவுது!. ம்... ஒங்களுக்குச் சங்கதி தெரியுமாலே!" என்று காதைக் கடிக்கப் போனாள். அதே தருணத்தில், எதிர்க்குப்பத்தில் குடுமி முடித்தவண்ணம் சாம்பானும் சன்னாசியும் பரபரப்புடன் காணப்பட்டார்கள். இளவட்டங்கள் இஞ்சி கடித்த மாதிரி கலவரமும் கலக்கமும் பூண நின்றார்கள்.

"என்னடி அக்கா!"

"ம்!"

"சொல்லுங்க பெரியாயி பொண்ணு!"

"ம்!"

"ஏண்டி, வாயிக்குள்ளாற போட்டு அந்தக் கமுக்கமான சங்கதியை மெல்லவா எங்களைக் கூட்டிவச்சு வேடிக்கைக் காட்டுறே?"

"ம்!"

"என்னடி! சாம்பான் சக்களத்தித் தாயாட்டம் அப்படி மலைச்சுப் போயி நிக்கிறியேடி?"

"ம்!"

"சரி... வாங்கடி நாம போவோம். அடியே, ஒரு சேதி கண்டிங்களாடி?... நம்ம பொம்மாத்தாக் குட்டியைக் கண்ணுப் பொறத்தாலயே காண வாய்க்கலையே?" என்று நைப்புக் கொட்டினாள் கோவிந்தம்மா.

"ஆமாடி!" என்று அதிசயப்பட்டாள் பொன்னுத்தா.

அவரவர்கள் விலக முனையவே, அவளுள் ஒரு முனைப்புச் சக்தி வீறுகொண்டது. "நில்லுங்கடி... இல்லாப்போனா,

பொறக்கு மாசம் நம்ம சேரிக்குள்ள நடக்குற முனிசாமி காப்புக்கட்டுக்கு ஒங்களுக்கு சோளமொறுக்கு ஈவு தர மாட்டேனுக்கும்!" என்று அவர்கள் அனைவரையும் மோவாய்க்கட்டை பிடித்து, தோள் தொட்டு, நெற்றி தீண்டித் 'தனது' பண்ணினாள் பூவாயி. பிறகு காதும் காதும் வைத்த பாவனையாக அவள் ஓர் அந்தரங்கச் சேதியைச் சேலை முன்றானையினின்றும் அவிழ்த்து, கறுமை படிந்த செழித்த இதழ்க் கடையில் ஒட்டிவிட்டாள். "ஆ!" என்ற அதிசயக்குரல் விண்ணை முட்டிற்று.

பொம்மி, சூரக்கோட்டைக் கறுப்பர்சாமி போல அப்படியே அலுங்காமல் குலுங்காமல் நின்றாள். அவள் உடம்பில் கோபம் குறுகுறுத்தது. நாவல் பழச் சிவப்பு விழிகளில் உறவாடியது. முறிமேனியில் நிறமாற்றம் நிகழ்ந்தது. குனிந்து தன்னைத்தானே ஒருதரம் நோக்கினாள். வெய்துயிர்ப்பும் வேதனையும் கலந்தன. ஆத்திரமும் ஆற்றாமையும் ஒட்டின. மீண்டும் தனக்குத்தானே பார்த்துக் கொண்டாள். மேலாக்குச் சேலையினுள்ளே செழித்துக் கொழித்திருந்த இளமைத் துடிப்பின் கவர்ச்சியின் போதை அவள் மூளையைக் கிறக்கிவிட்டதோ!

"என்ன ஆயி! இம்மாங் கொத்த கிருத்திருவம் செஞ்சுப்புட்டியே?" என்று பெருமூச்சைப் பிரித்தபடி குத்துக் கல்லாக நின்றான். கொம்பு ஊத்துப் போல அவன் தொனி கீழிறங்கியது.

"பின்னே என்னுங்க அப்பனே! அடாவடி செஞ்சாக்க சந்திக்கு வரவேண்டியதுதானே கருமம்?" என்று கண்டங் கருவளையானாள்; உறுமினாள். மூச்சை உள்ளுக்குள் இழுத்து வெளியேற்றினாள். சுங்கடிச் சேலை கிழிந்து விடுமோ?...

"எனக்கு யாதொண்ணும் மட்டுப்படலே! சொட்ட வாளங் குட்டியாட்டம் நீயும் சாம்பான்சாமி கணக்குக்கு அந்தப் புள்ளே மூக்கனும் ஒண்ணடி மண்ணடியாப் பேசிப் பொழங்கினீங்க; ஒரு கும்பாச் சோத்தைச் சூடு போவக் கொட்டி, வவ்வால்பொடி கொசுறைப் போட்டு, ஆக்கின

வெஞ்சனத்தைப் போட்டு நீயும் அதுவும் முசுமுசுண்ணு உண்ணீங்க; ஒருத்தரு எச்சியை இன்னொருத்தர் குடிச்சீங்க...இப்ப...இப்பைக்கு அதான்...வார கிளமை கண்ணாலத்துக்குத் தேதி வச்சு ஊர் நாட்டாமைக்குப் பாக்கு வச்சி பரிசம் கண்டுதண்டி, கண்ணாலம் நடக்கிறதுக்குத் தோது கணிச்சு முடிஞ்சி, நேத்தைக்குச் சாமி கும்பிட்டுத் துண்ணூறு பூசிக்கிட்டுக் குந்தியிருக்கிற இந்தச் சமயத்திலே... நீ இப்படி காட்டேரியா உருமாறிப்புட்டியே மவளே!... எனக்கு ஒதவி ஒத்தாசைக்கு இல்லாம, உன்னைப் பெத்தவளைக் கூடல்ல அவஞ்சிரங் காட்டுச் சுடலையே கொம்பு ஊதிப் பொசுக்கிப் புட்டேனே கிழட்டுப் பாவிப்பய நானு!... சாமியோ!..."

கிழவனின் உடலில் ஆட்டம் கிளர்ந்தது.

செம்மறிக்கடாவும், கிடாரிக்கன்றும் முளைகட்டிக் கிடந்தன. கம்பு வரகுத்தழைகள், எருப்போட்டுக் கூட்டிக் கிடந்த வாசலில் காய்ந்தன. உருமப் பொழுதின் சுள்ளாப்பு ஓங்கார சுருதியில் லயித்திருந்தது.

பொம்மி குரோதம் சுழித்திட்ட உக்கிரப் பார்வையை மாற்றுமல், இடுப்புச் சேலையை வரிந்து கட்டிக்கொண்டு நின்றாள்.

"அக்காடி! ஊரு நாட்டாமை ஒன்னையும் பெரியப்பனையும் அழைக்குறுங்க!" என்று தெரிவித்தாள் குமரி குணவதி.

ஊர்க்காவலில் ஈடுபட்டிருந்த மதுரைவீரன் கோயில் சேகண்டி ஐந்து முறை முழங்கியது!

திருநாளூர் வட்டத்தில் ஒன்பது கரைக்குத் தலைமைக் கட்டுக் கொண்டவர் நாட்டாண்மைச் சேர்வைக்காரர். 'குப்புசாமிச் சேர்வை காரவுகளோட தங்கக் கையி பட்டாத்தான் மதுரைவீரன் சாமி தேரு நகருமாக்கும்!' என்று ஒரு பேச்சு எப்போதுமே வழங்கும். ஊர்வட்டம் ஒன்பது குடிக்காடுகளுள் எது நடந்தாலும், 'ஏன்' என்று கேட்கும் உரிமையும், 'ஆம்' என்று இணங்கும் உறவும் பூண்ட புள்ளி அவர். குடுமிச் சிக்கலை அவிழ்த்து ஒருலாகு

கொடுத்துத் தட்டி கோடாலி முடிச்சுப் போட்டு முடிந்து விட்டு, வெற்றிலே குட்டானைக் கைப்பற்றி ஒரு 'வாட்டி'க்கு வாய்க்கு வெற்றிலே தரித்துக்கொண்டு ஊர்ப் பஞ்சாயம் பேச உதடுகளை அசைத்துவிட்டால் போதும், எந்தச் சிக்க லும் விரல் சொடுக்குவதற்குள் தீர்வு கண்டுவிடும்...!

அவ்வளவு தூரத்திற்குக் கியாதியும் நேர்மையும் கண் டிப்பும் கார்வாரும் படைத்த சேர்வைக்கு இப்பொழுது சோதனை முளைத்து விட்டதோ? சோதனையாகி விட்டாளோ பொம்மி!

பொம்மி கன்னிச்சிரிப்பின் மதமதப்புடன்தான் நின்றாள். ஆனால் அவளது அகன்ற கண்களின் வெஞ்சினம் தணிய வில்லேயே!

"பொம்மி!..." என்றார் சேர்வைகாரர்.

கூப்பிடு தொலேவில் கைகட்டி நின்ற பொம்மி, விதியின் கண்ணுக்குத் தெரியாத சூட்சுமத்தைப்போல, நடந்துவந்து, கும்பிடுபோட்டு, "தண்டனுங்க ஐயா!" என்றாள்.

"மூக்கா!" என்றார் சேர்வைகாரர்.

கிழக்குப் பாரிசத்தில் கூடிக் கிடந்த கூட்டத்தை எட்டி விலகி நடந்து வந்தான் அவன். சேக்கு கலேந்திருந்தது. முதல் போகத்தில் வயல் வரப்பில் தலே சாய்ந்திட நேரம் பார்த்திருக்கும் சீரகச் சம்பாத் தளேக்கட்டுப் போன்று அவன் முகம் கீழே தாழ்ந்தது. உச்சி வெய்யில் சூட்டில் இளக்கம் கண்டு முத்துக் கோர்த்திருந்த வேர்வை மணிகள் கறுத்துக் கொழித்த மார்புப் புறத்தை அணைந்திருந்தன. இடுப்பில் கட்டியிருந்த துவாலேயை நெருடின அவன் விரல் கள்.

மூக்கன் நின்றான்.

பொம்மி நின்றாள்.

இருவரும் தலேகுனிந்தவாறு ஒருசில கணங்கள் நின்றார்கள்.

குப்பத்தில் கள்ளிச் செடிப் பத்தை மருங்கில் அழகும் அழகும் களியாட, அன்பும் அன்பும் அரவணைக்க, காலத்

தையும் கனவையும் கழற்சிக்காய்களாக்கிச் சிரித்து மகிழ ஆடிப்பாடி விளையாடிய நாட்களை எண்ணினார்களா?

செல்லத்தேவன் குட்டை ஓரத்தில் ஆவாரம்சுப்பி பொறுக்கிய கூடையை அவள் சும்மாடு கட்டிச் சுமந்து, அந்த அயர்வில் கச்சை நெகிழ, அவள் ஒயிலோட, மயி லாட, நடந்து வரும்போது, அவன் மனம்நெகிழ, மயல் விழிக்க, அருள்கொழிக்க, கள்ளவிழி வீசிப்பார்த்து மயக்கம் கண்டானே, அந்த ஒரு தொடக்கப் புள்ளியில் மறுபடியும் அவர்கள் தனித்தனிப் பான்மை கொண்டு போய் நின்றார் களோ?

'அசல் குப்பத்துப்பிள்ளை நம்ம சேரிய மிதிச்சு, நம்ம குட்டி பொம்மியைச் சொக்குப்பொடி போட்டு வசப்படுத்திக் கிடுச்சே! மெய்யாகவே அதிசயந்நான் இது!...பாவம், நம்ம சேரி வயசுப் புள்ளைக வாயில நகத்தைவச்சுச் சப்பிக் கிட்டிருக்குதுக!... எதுக்கும் பொசுப்பு வேணுமா?... நெச மாகவே, அது... அந்த மூக்கன்... பறைப்புள்ளையாவே தோணலே!... ரொம்ப சொரத்துத்தான்! வாரத்துக்குச் சேவகம் பண்ணி உழுத ஆண்டான் கிட்டவே வம்புபேசி நாலு மாகாணிகரைக்குக் குடிக்காணியாச்சி பாத்தியம் கொண்டாடிப் புடுச்சாமே!... அக்கரைச் சீமைக் காசுவேற பசையா இருக்காம்!...ரெண்டும் வசமான சோடிதான்!' என்று ஊர் வாய் முணுமுணுத்ததே, அந்த முணுமுணுப்பு இப்போது தடம்மாறிவிட்டதென்ற மனச சள்ளையில் சுழன் றார்களா அவர்கள் ?

"மூக்கா!" என்று அலட்டினார்.

"சாமி!"

"இப்ப ஒம்மேல வம்பு தொடுத்து இருக்குது பொம்மி. உனக்குப் பொம்மி முந்தானை விரிச்சு வாக்கப்படுறதுக்கு முகூர்த்தம் வச்சிக்கிற நேரத்தில், நீ இப்படி எத்துக் கொத்தா நடந்துகிட்ட போக்கு தப்புத்தான்!..."

நிறுத்தினார் சேர்வைகாரர்.

நிறுத்தப்பட்டுவிடுமா கதை?

நடந்த கதை இதுதான்...

மூக்கனும் பொம்மியும் புருஷன் பெண்சாதி ஆக 'வேளை' கணிக்கப்பட்டது. இந் நிலையிலே, நேற்று அந்தி மாலைப்பொழுதில் பொம்மி குட்டையில் குளித்துத் திரும்பிக் கொண்டிருந்தாள். அவளது இளமையின் அடக்கத்திற்கு மீறிய பாவனையில் ஈரத்துணியையும் கட்டறுத்துக்கொண்டு முட்டி நின்றன, அழகின் மையப்புள்ளிகள். இக்காட்சியில் காமம் தலைக்கேற, கொன்றைப் பத்தையில் ஒளிந்து நின்று கொண்டிருந்த மூக்கன், அவ் வழி யே குறுக்கிட்ட பொம்மியை அப்படியே நெஞ்சாரத் தழுவி... அப்படியே... ஆஹா!...

தீயான பொம்மி சினம் ஏற, வெஞ்சினம் ஏற்றம் புரிய, அவனைவிட்டுத் திமிறியவளாக விடுபட்டு, விரைத்திருந்த கைகளால் மாறிமாறி அவன் கன்னத்தில் அறைந்தாள். தென்றலாக வந்தவள், வளியாகத் திரும்பிய தருணம் ஒரு மறைவிடம் துறந்து தன்னைக் 'கண்ணி' வைத்துப் பிடிக்க மனப்பால் குடித்திருந்த காளியப்பன் வெளியேறிய காட்சியைக் கண்டாள். "தூவே!" என்று உமிழ்ந்து நடந்தாள். "பொம்மி!... எம்புட்டு சொத்து நீயிங்கற சொந்தத்தில்தான் நானு அப்படிச் செஞ்சிட முனைஞ்சேன், தப்புதான்... கன்னி கழியாப் பொண்ணு உங்கிட்ட, திருப் பூட்டறத்துக்கு முந்தி இப்படி ஈனத்தனமா நடந்துகிட்டது தப்புதான். சமிச்சுப்புடுலே!" என்று கண்ணீர் காட்டிக் கெஞ்சினன் மூக்கன். "தூ போ அப்பாலே!"

தொண்டைக் கனைப்பு எழுந்தது.

"நீ செஞ்ச அடாபுடிக்கு ஒனக்கு ஊரறிய அம்பதுரூவா அவராதம் போட்டிருக்கேன். அடிசாயுறதுக்குள்ள பணம் முச்சூடும் எங்கைக்கு வந்துப்புடணும்!...ம்... ஒனக்கு நல்ல விதி இல்லே! அதாலேதான் விதி ஒன் கண்ணைக் கட்டிப்புடிச்சுப்போல!... பொம்மியோடொத்த அழகுக் குட்டி ஒன்க்குக் கெடைக்கிறதுண்ணு நீ பூர்வத்தில் எம்புட்டோ பூசை செஞ்சிருக்க வேணுமா?...ம்...பாவம்!...நட!..."

மூக்கன் செருமியவாறு நின்றுன். "மெய்தானுங்க ஆண்டே!, நெசமாவே நானு பாவிதானுங்க; மொதலாளி!"

என்று தேம்பினான். பிறகு; குனிந்த தலை நிமிராமல் வழி நடந்தான் அவன்.

பொழுது அணையும்பொழுது, சேர்வைகாரர் வீட்டின் வெளிப்புறம் வந்து நின்ற மூக்கன் சேர்வைகாரரின் முன் கைகட்டி நின்றவனாக, அபராதப்பணம் செலுத்தினான். "பொம்மியை மறந்து எனக்குச் சீவன் தங்காதுங்க!" என்று சொல்லி விடைபெற்றான்.

சிறுபொழுது கழிந்தபொழுது பொம்மி அழைத்துவரப் பட்டாள். அவளிடம் அபராதத் தொகையைக் கொடுத்தார் சேர்வைகாரர்.

"ஆண்டேகிட்ட ஒரு ஆணை வாங்கிக்கிட வேணுமுங்க... எம்புட்டு நேசமச்சான்காரக எனக்குத் தொணை கெடைக் காட்டி, எம்புட்டுச் செம்மம் கடைத்தேறமாட்டாதுங்க!..." என்று சுடுநீர் வடித்தாள் பொம்மி.

"சபாசுலே! சபாசு'..."

வானப்பெண் பிறைசூடித் திகழ்ந்தாள்!

அதோ, பாருங்கள் பொம்மி!

"மச்சான்!...மச்சானே!..."

# ஆத்தா!

## 1. ஆதிபிரமர்

நீங்குல் தாய் கறுநிறத் துகிலெடுத்து, அதைத் தொட்டிலாக்கி உலக மக்களைப் படுக்கவைத்துத் தாலாட்டுப் பாடிக்கொண்டிருந்த வேளை அது. பலருக்கு உறக்கம் பிடித்தது. சிலர் கொட்டாவிகளை எண்ணிக் கணக்கிட்டுப் பிரித்துக் கொண்டிருந்தனர்; எஞ்சியவர்களுக்குத் தூக்கம் வேம்பானது. இந்தக் கும்பலில்தான் அவளும் சேர்த்தி.

அவள் என்றால் மட்டும் போதுமா?—போதாது. அவளுக்கும் பெயர் ஒன்று உண்டு. பெயர் சூட்டும் நிகழ்ச்சி ஒரு விழாவாக அமையாமற் போனாலும், அந்தப் பெயரை அவளுக்கு இட்டு அழைப்பதற்கு அவளுடைய பெற்றோர்கள் எவ்வளவோ காலம் காத்துத் தவங்கிடந்தார்கள். 'பொறக்கப் போறது ஆண் குஞ்சாக இருக்கோணும், ஆதிபிரமர் சாமியே!' என்ற அவர்களது 'வேண்டுதலை' பலிக்கவில்லை; ஆனால் பிறந்த பெண் குழந்தை 'மூக்கும் முழியுமாக' இந்த மண்ணில் முதற் குரல் கொடுக்கத் தவறவில்லை.

அவள் பெயர் என்ன தெரியுமா? பொன்னரசி! பெயரைச் சொல்லும் உதடுகளில் கற்கண்டுச் சுவை வழி

வதைப் போலவே, அவளைப் பார்க்கும் கண்கள் அன்புப் போதையும் இன்பப் போதமும் பெற்றுத் திகழும். பொன்னுக்கு அரசியாகவும், பெண்ணுக்கு அரசியாகவும் விளங்கின மகளுக்கு நடை வண்டி கொடுத்தவர்கள் அவளை ஈன்று வளர்த்து வந்தவர்களேதாம். என்றாலும், ஓர் அதிசயம் என்னவென்றால், பருவம் தாவணியையும், காலம் பருவத்தையும் பரிசளித்தன. அவள் 'சமைந்தாள்'. திறந்த வெளி அரங்கமாக இயங்கிவந்த ஊரும் உலகமும் அன்று தொட்டு அவள்வரை சுருங்கிக்கொள்ளப் பழகிக்கொண்டன. அவள் மனம் புழுங்கினாள். விரக்தியின் நெட்டுயிர்ப்பும், வேதனையின் குமைச்சலும் அவளது பருவத் துடிப்பைக் கிண்டிவிட்டு வேடிக்கை பார்க்கும் தருணத்தில் ஆசை முகமொன்றை ஆர்வம் பொங்க மனத்திரையில் வரைந்து ஓவியமாக்கி அனுபவித்து ஆறுதல் பெற்றாள் அவள். 'மச்சான் இந்தக் கணக்குக்கு பர்மாவிலே மாந்தலையிலேருந்து திரும்பினதும், எங்கழுத்திலே மஞ்சக் கயிறு கட்டிடுவாங்களாமே!' என்று தனக்குத்தானே வினா வடிவில் விடை அமைத்துப் பூரித்துப் போயிற்று பெண் உள்ளம். கனவின் வடிவிலே காதல் வளர்ந்தது; காதலின் உருக்கொண்டு கனவு நீண்டது. காதலும் கனவும் ஒட்டாத இரு துருவங்கள் என்கின்றார்களே? ஐயை அறிவாரோ?

## 2. ஆஞ்சநேயன்

முன்னைப் பழங்கதை ஆயிற்றே இத்தனையும்!

பொன்னரசி விம்மினாள். ஏன்? வாழ்க்கைப் பாதையில் இருபத்தெட்டு மைல் கற்களைக் கடந்து வந்தவளுக்குத் துயரம் ஒரு கேடா, என்ன?

பொன்னரசியின் செவிப்புலன், எங்கிருந்தோ மிதந்து வந்து மோதிய அழுகைக் குரலை நுகர்ந்தது. அவளும் நெஞ்சு வெடிக்க விம்மலானாள்; துயரம் மண்டிய ஓலத்தினின்றும் பிரிந்து தெரிந்த அந்தக் குழந்தையின் கதறல் அவளுடைய நெஞ்சில் அடித்தளத்தில் சம்மட்டி

யாக இயங்கியது. பொன்னரசி துடித்தாள்; துவண்டாள்; உயிர்ப்பு விடை பெற்றுவிடும் போல ஓர் உணர்வு கிளர்ந் தெழுந்தது. வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து உட்கார்ந் தாள். உடுத்திருந்த முன்றானைக்குள் அவளது மேனி ஒளிந்தது.

திருக்கோகரணத்தின் தலைவாயிலில் இருந்த பழைய அரமனை அப்போதைய மணி பனிரெண்டு என்று சொன்னது. பஸ் நிலையத்தில் இருந்தவள் கேட்டாள். அவலம் நிரம்பிய ஓலத்தில் சுருதி கம்மிப்பட்டிருந்தது. பொன்னரசி மெள்ள எழுந்து நடை பயின்றாள். ஆஞ்சநேயர் கோயிலைத் தாண்டிய இடத்தில் காணப்பட்டது இடிந்த சுவர்ப்பகுதி. அங்கிருந்துதான் அழுகை 'சிரித்து'க் கொண்டிருந்த தென்பதை உணர்ந்து கொண்டாள் அவள். பிரஹதாம்பாள் தெய்வத்தை எண்ணித்தொழுது அண்டி ஞள்; மண்டியிட்டுத் தரையில் உட்கார்ந்தாள். 'பச்சை மண்' அது. அடுத்துப் படுத்திருந்த பெண்தான் குழவி யின் அன்னையாக இருக்க வேண்டும். மூடுதுணி எதுவுமில் லாமல் திறந்து கிடந்த 'தாய்மை'யின் இருப்பிடத்திலே மதலை செப்புவாய் பற்றிச் சப்பிச் சப்பிப் பார்த்தது.பாலமுதம் சுரந்தால்தானே...? ஆகவேதான், தொண்டைக் குழியில் நோவு எடுக்கும் பரியந்தம் அப்படிக் கத்தித் தீர்த்தது அது —அந்தப் பச்சைப் பாலகன். பெற்றவளுக்குக் குழந்தையை ஈன்ற கடமையுடன் செயல் முடிந்துவிட்டது போலும்! அவள் தன் போக்கிலே ஆடாமல் அசையாமல் கண் வளர்ந்துகொண்டிருந்தாள்.

பொன்னரசி ஊர் பேர் அறியாத அந்த ஸ்திரீ மீது ஆத்திரப்பட்டாள்; தொட்டு எழுப்பினுள்; தட்டிக் கூப்பிட் டாள். ஊஹூம், அவள் ஏன் அக்கறை கொள்ளப் போகிருள்?

பொன்னரசி குனிந்து தன்னைத் தானே ஒரு முறை நோக்கிக்கொண்டாள். நெஞ்சகம் விம்மித் தணிந்தது. ஆனல் விழிப்புனல் மட்டுமே வடிந்தது! 'ம்......என்னாலே என்ன செய்யமுடியும்?'

கைந் நொடிப் பொழுது கழன்று வீழ்ந்தது.

ஆதுரம் துள்ள பொன்னரசி குழந்தையை அணு கினுள்; குனிந்து அதை வாரியெடுத்து அணைத்துக்கொள்ள முனைந்த நேரத்தில், இருதயத்தில் இடியொன்று வீழக் கண்டாள்; இடியோசை காதுகளைச் செவிடுபடச் செய்தது. அணைக்கத் துடித்த நெஞ்சு நஞ்சம் உண்டாற்போலப் பதைத்துப் பின்தங்கிற்று. "ஆ!...ஐயோ!" என்று கூக்குரல் பரப்பினுள் பொன்னரசி. உதிரம் கொட்டியது, கண்முனைகள் இரண்டிலுமிருந்து. அடிவயிற்றில் அவளது மெலிந்த விரல்கள் இழைந்தன. மறுகணம் அவை சூடு பட்டுச் சூம்பின. அமிர்தம் பிறக்கும் பகுதிகளில் தீ அழல் எரிந்தது. நெற்றிப் பொட்டுத் தெறித்தது. 'ஐயையோ! என்று கூப்பாடு போட்டவாறு பொன்னரசி மண்ணில் சாய்ந்தாள், அடி துண்டு பட்ட முருங்கையைப் போன்று.

அப்போது, 'ஆத்தா! ஆத்தா!' என்ற அழைப்புக் கேட்கத் தொடங்கியது.

அவள் விழிகளை விலக்கினுள். ஒருகால் 'ஆத்தா' என்ற சொற்கள் அவளுடைய உந்திக் கமலத்தைத் தொட்டனவோ? அவள் திகைப்படைந்தாள். குஞ்சுக் குழந்தை பிஞ்சுக் கைகளையும், பஞ்சுப் பாதங்களையும் பயன்படுத்தி முன்னேறி அந்தப் பஞ்சையிடம் பால் சேகரம் செய்ய எத்தனித்துக்கொண்டிருந்தது. பேசாத பொற் சித்திரத்தை நெஞ்சுடன் நெஞ்சு இறுத்தி இறுக அணைத்த வண்ணம் சத்தைக் கூட்டி எழுந்தாள் பொன்னரசி. எடுத்த முயற்சியில் தோல்வி கண்ட சிசு வீரிட்டு அலறியது. தாய்க்காரி அப்போது மட்டும் எப்படியோ விழித்து விட்டாள்; 'சீ! தூத்தேரி!' என்று ஏசியபின் குழந்தையை அவளிடமிருந்து பிடுங்கிக்கொண்டாள்; காறித் துப்பினுள்! எச்சிலைத் துப்பியவள் மீதும் அந்த எச்சில் துளியொன்று பட்டது. கோடை மழைக்குக் கட்டியங் கூறியது கொடி மின்னல்.

## 3. துர்க்கை

புதுக்கோட்டை பஸ் நிலயம் உதய சூரியனின் கருணைப் பார்வைக்கு ஆளானது. வாகன ஊர்திகளும் பிரயாணிகளும் கலந்த ஓர் அவசர - அவசியச் சூழலிலே, கால

மெனும் திரி இயற்கை யென்னும் விளக்கிலே நின்று நிதா னித்து எரிந்துகொண்டிருந்தது. முத்திநெறி அறிந்த தவமுனியின் இதயம் போல நிர்மலமாகக் காட்சி கொடுத் தது விண். துறவு மேற்கொள்ள நெஞ்சுரம் பூண்டவன், அதே மனநிலையில் செயற்பட இயலாமல் சலனமுற்றுத் தவிப்பதைப் போன்று இருந்தது மண்.

விடிவெள்ளி விண்ணைத் தொட்டதும், தூற்றல் மண்ணைத் தொட்டது. பொன்னரசி, சீர்குலைந்து பழுது பட்ட நடுத்தெரு துர்க்கையின் சிலை நிலையில் இருந்தாள். நனைந்த மாதிரியே கிழிந்த துணி உலர்ந்து விட்டது. அவளுடைய தளர்ந்த மனத்தில் அக்கணம் செந்நிறம் காட்டிய கேள்வி இது ஒன்று மட்டுந்தான்; 'நான் எத்தனையோ வாட்டி செத்து மடிஞ்சுப்பிடத் துணிஞ்சப் போவெல்லாம் என்னோட கனு பலிக்குமிங்கிற ஆசை மனசிலே ஓடினதாலேதானே நான் உசிர் மேலேயும் ஆசை வச்சுக்கிட ஆரம்பிச்சேன். ஆனா, இனிமே என் நெனைப்பு எங்கே பலிக்கப் போவுது?...ஆமா, மெய்தான், இனி நானும் மக்கி மடிஞ்சு மண்ணாகிப் போனாப் போலேதான்!...'

ஆளுடைய அடிகளாரின் கவியின் ஒரு பகுதியை சாது ஒருவர் அடித் தொண்டையில் ஏற்றிப் பாடிக்கொண்டிருந் தார்.

'தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி!
வழுவுஇலா ஆனந்த வாரி போற்றி!
அழிவதும் ஆவதும் கடந்தாய் போற்றி!
முழுவதும் துறந்த முதல்வா போற்றி!'

நாணயம் புழங்கத் தொடங்கிற்று; காவி வண்ணம் கொண்டிருந்தவர் திசை திரும்பினர்.

குலதெய்வத்தின் நினைவு பொன்னரசிக்கு ஏற்பட்டது. முன்னடியான், சன்னாசி, சங்கிலிக்கருப்பன் துணையுடன் நின்ற ஆதிபிரமரின் பயம் செறிந்த பாவம் தோன்றியது.

கண்களிலிருந்து உதிரம் கொட்டியது.

புழுதி மண்ணில் ரத்தத் துளிகள் சிந்தித் தெரித்தன.

பொன்னரசி தலைகுனிந்த போழ்தில், உருவான புழுதி மண்ணில் பச்சைக்கொடியின் சித்திரம் ஒன்று உருக்காட்டி அமைந்திருப்பதைக் கண்டபோது, சப்த நாடிகளும் அடங்கிப்போனாற் போலிருந்தது.

'மகனே, என்னை மன்னிச்சிட மாட்டியா?'

நூறடி ஆழமும் நூற்றுக் கணக்கான சுழிகளும் இணைந்த அந்தப் புதுக்குளம் அவள் வரவுக்குக் காத்திருந்தது!

## 4. ஐயை

இனி :

கதையின் கரு :

பொன்னரசி அப்பொழுது பதினெட்டு வயது கொண்ட வாலைக் குமரி. கன்னி கழிந்த கட்டம். கட்டழகு சொக்க நின்றாள். ஆப்பிள்பழத் தோல் அவளது உடலில் போர்த்தப்பெற்றிருந்தது. சுண்டினால் ரத்தம் தெறிக்கும். சிலட்டூர் 'இளசு'கள் அவளுக்காக 'மோப்பம்' பிடித்தன. ஆனால் அவளோ தன் அன்பு அத்தானுக்காகத் தவம் கிடந்தாள். மலைமகளின் தவம் பலித்து, பிறைசூடி கிடைத்த வரலாற்றை அவள் அறிந்திருந்தாள். ஆகவே, அது போன்று தன் இதயக் கனவும் ஈடேறும் என்பதாக எண்ணினாள்; எண்ணி மகிழ்ந்தாள். அவளுக்குரிய 'முறை அத்தானை' ஏந்திவரும் கப்பலுக்காக அல்லும் பகலும் விழி நோகக் காத்திருந்த நேரத்தில், எதிர்பாராத வெடியொன்றை வீசிச் சென்றான் செங்கிறப் பில்லைச் சேவகன். அழுதாள்; அழுதுகொண்டேயிருந்தாள் : மாண்ட அத்தான் மீளமாட்டான் என்று தெரிந்தும் கூடப் புலம்பினாள். தந்தை அனுப்பிய இலங்கைச் சீமைப் பணம் அவளுடைய நெஞ்சுப் புண்ணை ஆற்றவில்லை; வயதான அன்னையின் அன்பு அவளது ஆறாத் துயரத்தினைப் போக்கடிக்கும் அருமருந்தாக அமையக் காணோம். நீலக் கடலும் நீள் விழிகளும் ஒரே இனம்!

# 5. காட்டேரி

அந்திசந்திப் பொழுது. அப்படிப்பட்ட நடுவேளைப் பகுதியிலே, ஒருநாள், தண்ணீர் கொணர குளத்திற்குச் சென்ருள் பொன்னரசி. வயல் வரப்பைப் பார்த்து திரும்பிக் கொண்டிருந்தான் கங்காணி மகன் கந்தசாமி. அந்தம் நிறைந்த எழில் வதனம்; அரும்பு மீசை; குறும்புப்பார்வை; இரும்பு உடல். அக்கரைச் சீமை சீராட்டி வளர்த்த செல்வச் சீமானின் புதல்வனல்லவா? சின்னவயசில் 'கட்டுப் பாண்டி' ஆடிய காலத்தே அவன் அவளைக் கண்டது உண்டு. இனம் கண்டு கொண்டான்; ஆனல் அவள் பார்வை தட்டுப்பட்டதும், அவனுக்கு இனம் விளங்கமாட்டாத ஒரு கிளர்ச்சி; நிறைவு.

புன்னகையும் புது நிலவும் அவர்கள் இருவரையும் அந்தரங்கமாகச் சந்திக்க உதவின. எட்டாப் பழமாக இறக்காத தேனுக இருந்து வந்த பொன்னரசியின் உருவம் கந்தசாமியின் புகைப்படக் கருவிக்குத் தப்பவில்லை. ஊர்க் கோடியில் சந்தித்துவந்த அவன் ஒருநாள் மதியத்தில் அவளுடைய வீடுதேடி வந்துசேர்ந்தான்.

"பொன்னரசியை நான் கட்டிக்கிடலாம்னு எண்ணி யிருக்கேன். அப்பாவுக்கு கண்டிக்கு தபால் போட்டிருக் கேன். தாக்கல் வந்த கையோடு கல்யாணத்துக்கு தேதி குறிச்சி_வேண்டியதுதான்!"

செய்தியை வெளியிட்டான், பொன்னரசியைப் பெற்ற வளிடம்.

தன் புருஷனுக்குக் கடிதம் எழுதி இது பற்றி முடிவு சொல்வதாகத் தெரிவித்தாள் பொன்னரசியின் தாய்.

நாலிலே இரண்டிலே வந்து போனுன் கந்தசாமி. அந்த எழிலரசியைக் காண. ஒருநாள் உச்சிப் பொழுது. பொன்னரசி மட்டுமே வீட்டில் குந்தியிருந்தாள். அவள் அன்னை சந்தைக்குச் சென்றிருக்கும் விவரமும் கிடைத்தது. குளித்து முழுகி வந்திருந்த பொன்னரசி ஈரப் புடவையைக்

களைந்து மாற்றுடை உடுத்துக்கொண்டு கையில் ரவிக்கையுடன் உள் திண்ணையில் அமர்ந்தபோது, கந்தசாமியின் புகைப்படத்தின் நினைவு எழவே, அதை எடுத்து வந்து அழகு பார்த்தவாறு இருந்தாள். நிழற்படத்துக்குரியவனே நேரில் வந்ததும், அவளுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. வந்தவன் அவளுடைய படத்தைக் காட்டினான். ஆர்வம் துள்ள பொன்னரசி தன் உருவத்தைப் பார்த்துக்கொண்டிருந்தபோது, கந்தசாமி இளமை துள்ளும் பொன்னரசியின் அழகைப் பருகிக்கொண்டிருந்தான். பருவ மலரின் நெடி மண்டைக்கு ஏறியது. அவளுடைய கண்களுடன் அவனது விழிகள் அந்தரங்கம் பேசின. அவள் பிணங்கினாள். "நாளைக்கு உன் கழுத்திலே தாலி கட்டப்போறவன் தானே?... சரின்னு சொல்லு. பொன்னரசி!..." என்று கெஞ்சினான். ஒப்பவில்லை. கடைசியில் பலாத்காரத்தின் பிடியில் 'பெண்மை' கருத்தழிந்தது. காலத்தின் வளர்ச்சியோடு, அவளுள் கரு வளர்ந்தது. செய்தி அறிந்த அவள், செய்தியை உரியவனிடம் சேர்ப்பிக்க விரைந்தபோது, ஏச்சும் பேச்சும்தான் கிடைத்தன, "நீ துப்புக்கெட்ட கள்ளி! உன்னை நானா கண்ணாலம் பண்ணிக்குவேன்?... முடியாது!" என்று தீர்ப்பு வழங்கினான் கந்தசாமி. அடுத்த நாள் இரவிலே அவனை மயக்கிப் பொய் நாடகம் ஆடி, பழி தீர்த்துக்கொள்ள காட்டேரியாக மாறி, வெறிகொண்டு கூரிய கத்திகொண்டு. சென்றபோது, அவன் கடல்கடந்த தகவல் கிடைத்தது.

'நடத்தை கெட்டவள்னு அவப்பேர் எடுத்த பின்னாலே இனிமே நான் இந்த ஊர் நாட்டிலே தங்கவே மாட்டேன்!' என்று முடிவெடுத்து, பிறந்த வீடு துறந்து, இரவோடு இரவாக கால்போன திசைக்குச் சென்றாள் பொன்னரசி. மறுதினம் பிற்பகல் பொழுதிற்கு அவள் புதுக்கோட்டையைத் தரிசித்தாள்; அணிந்திருந்த நகைகள் தரிசனம் தந்தன; சுமந்திருந்த கரு அவளைச் சித்திரவதை செய்தது. 'சீ! சனியன்!' என்று ஆத்திரப்பட்டாள், உருத்தெரியாக் கருமீது. அண்டிய இடம் அடைக்கலம் தந்தது. ஏழைக் கிழவி ஒருத்தி நிழல் தந்தாள். பொன்னும் மணியும் படி அளந்தன. ஓரிரவு, கருவைக் கரைக்க விஷப் பச்சிலையைப்

பொன்னரசி தயாரித்தபோது, அவ்விஷயம் அம்பலமானது. கிழவி தடுத்துவிட்டாள். "நீ யோசிக்காம நடந்ததுக்கு அது என்ன செய்யும், பாவம்!" என்றாள்.

பொன்னரசிக்குப் பேறு காலம் நெருங்கியபோது ஆதரவு கொடுத்துவந்த கிழவியும் நமனுலகு ஏகினாள்.

## 6. காளி

பொன்னரசியின் வாழ்க்கைப் பாதையில், மீண்டும் ஒரு திருப்பம் ஏற்பட்டது. கிழவியிடம் 'நடந்த கதை'யை இதயம் திறந்து சொன்னதுபோல வேறொரு பங்களாவில் கூறிய சமயம், அவள் அடித்துத் துரத்தப்பட்டாள். காலங்கடந்த இரவு வேளையிலே நகர்ப்பகுதியைக் கடந்த இடத்தில் இருந்த சத்திரத்தில் ஒண்டினாள். வலி எடுத்தது. புதுக் கோட்டை அம்மன்காசுகூட அவளிடம் ஒட்டியிருக்க வில்லை மெல்ல எழுந்தாள். ஆங்கையின் குரலை அடை யாளமாக்கி கை முடிச்சுடன் நடந்தாள்; நடக்க முடியாமல் நடந்தாள். காடு தென்பட்டது. சுருண்டு விழுந்தாள். கும்மிருட்டு. அவள் திரும்பக் கண்மலர்ந்தாள். 'குவா' என்னும் மொழி கேட்டது. எஞ்சியிருந்த தெம்பைக் கூட்டினாள். 'பச்சை மண்'ணைக் கையிலெடுத்தாள். ஆண் சிசு! 'சனியன்!' என்று வாய்விட்டுக் கூறியவண்ணம் அதன் கழுத்தை நெறிக்கப் பிரயத்தனம் செய்தபோது, யாரோ நடந்துவரும் அரவம் கேட்டது. குழந்தையைத் தரையில் போட்டாள். ஒளிகாட்டத் தொடங்கியபின் நிலவில் அவள் நோக்கு மண்ணுக்கு ஓடியது; 'பச்சை ரத்தத்'தின் நெற்றியிலிருந்து குருதி வழிந்து, பூமியைச் செங்நிறப்படுத்தியிருந்த பயங்கரக் காட்சிதான் அவள் பார்வைக்கு இலக்கானது. ரத்த பூமி மீது கிடந்த பச்சைப் பாலகனை ஏறெடுத்துப் பார்க்க முற்பட்டாள். வழிப்போக்கர் களின் காலடிச் சத்தம் அருகில் கேட்டது. பொன்னரசி சற்றுத் தொலைவில் இருந்த புதர்ப்பக்கமாக மறைந்து, தன் அவலநிலையைச் செம்மைப்படுத்திக்கொண்டு, வந்தவர் கள் போனதும், மறுபடியும் பழைய செம்மண் பூமிக்குத் தள்ளாடித் தள்ளாடி நடந்து சென்றாள். குழந்தை காட்சி

தரவில்லை. அதுவரை சுமையாகத் தோன்றிய அந்த 'இன்பச் சுமை'யின் மகிமை இப்போதுதான் அவளுக்குப் புரிந்தது. "கங்காணி மகன் காட்டின ஆசையிலே மோசம் போன நான் கடைசியிலே என்னோட செல்வத்தைப் பறி கொடுத்துப்பிட்டேனே?" என்று புலம்பினாள். குழந்தை மரித்திருக்க நியாயமில்லை என்றவரைக்கும் அவளுக்கு நம்பிக்கை பிறந்தது. வழிப்போக்கர்கள் குழந்தையின் அழுகுரல் கேட்டு எடுத்துச் சென்றிருப்பார்கள் எனவும் திட்டமிட்டாள். உடனேயே வெறிபிடித்தது போல அந்தப் பாதையில் தொடர்ந்து நடக்கலானாள், காளிபோல. தவறி விழுந்த புகைப்படங்கள் அவளுடைய பார்வையில் பட்டால் தானே? பொழுது விடிந்ததுதான் கண்ட பலன். குழந்தை கிட்டவில்லை !

அண்டைக் கிராமத்தில் மூர்ச்சை போட்டுச் சாய்ந்து விட்ட பொன்னரசியை நிலைஉணர்ந்த நல்லவர்கள் காத்துப் பேணினார்கள். "ஏண்டா ராஜா என் வயத்திலே வந்து ஒண்டினே?... ஐயோ, நான் பேய்!" என்று தனக்குத்தானே பேசித் தலைமயிரைப் பிய்த்துக்கொண்டு நாட்கள் சில வற்றை ஓட்டினாள் அவள். புகல் கிடைத்த இடத்தில் 'கழுகு' ஒன்று வட்டமிடுவதை யூகித்த அவள் தன் வசமிருந்த பசி கொண்ட கத்தியின் துணையுடன் அங்கிருந்து மீண்டும் புதுக்கோட்டைக்கு வந்தாள். ஆஞ்சநேயர் சந்நிதியில் மண்டியிட்டு அழுது தன் தவற்றைப் பொறுத் தருளுமாறு கதறினாள். 'என் குழந்தை உசிரோட இருக் குமா?... என் கைக்கு திரும்பவும் கிடைக்குமா?' என்று ஆஞ்சநேயரிடம் மானசீகமாகக் கேள்வி விடுத்தாள். நல்ல பதிலே கிடைத்தது. அப்பொழுது அவளுக்குத் தன் உயிர் மீது ஒரு கவலையும் ஓர் அக்கறையும் ஏற்படலாயின. 'ம், என்னோட மகன் எனக்குக் கிடைச்சதும், என்னை ஏமாத் தின அந்தப் பழிகாரனை பழிவாங்கிப் பிடுறேன்!...' என்று சூளுரைத்துக் கொண்டாள்!

## 7. அங்காளம்மை

பத்து ஆண்டுகள் கழிந்து போயின. நிகழ் காலத்துக் கும் இறந்த காலத்துக்கும் பாலம் சமைத்த அந்தப் பெரும்

பொழுது எப்படித்தான் ஓடி நழுவியதோ? தண் எழில்—மாற்றுக் குறைந்த கொஞ்சும் அழகு மறுமுறையும் கறை படலாகாதே என்ற நினைவில் பசியும் பட்டினியுமாகக் கிடந்து, அவ் அழகைச் சிதைத்துக் கொண்ட அந்த விந்தைச் சம்பவம் அவளை மறக்க முடியாது. 'பத்து மாசம் சுமந்த பாலகன் உங்கிட்டே இருந்தா, இந்நேரம் உன்னோட சபதமும் பலிச்சிருக்கும்; உனக்கும் ஆறுதல் சொல்லியிருப்பான்!..; தாயாக இருக்க வேண்டிய நீ பேயா கிப் போனியே?...' என்று அவளுடைய மனச்சான்று ஏசித் திட்டி, ஆறாத புண்கள் ஆயிரமாயிரத்தை நெஞ்சத்திலும் பெற்ற மணி வயிற்றிலும் நிரப்பிவிட்ட துயர அனுபவங்களை அவளால் மறத்தல் சாத்தியமன்று.

காட்டுப் புதிரிடுக்கிலே புழுதி மண்மீது ரத்தக்கறையும் தானுமாகக் கிடந்த அக்குழவியை இமைப்போதுதான் அவள் கண்டிருக்க முடியும். உருப் புரியாத தோற்றமும், உருப் புரிந்த ரத்த வெள்ளமும் அவளை ஒவ்வொரு கணமும் சாகடித்துக் கொண்டிருந்தன. அத்தகைய சித்திரவதை யிலும் அவளுக்கு ஓர் ஆனந்தம் ஏற்படத்தான் செய்தது. 'ஆமா, நான் இப்பிடிச் சாகாமல் செத்துக்கிட்டிருப்பதுதான் நல்லது. நான் செஞ்ச மன்னிக்க ஏலாத குத்தத்துக்கு இதுதான் தகுந்த தண்டனை!...'

பொழுது ஏறிக் கொண்டிருந்தது.

மூச்சுப் பிடித்தது; எப்படியோ எழுந்தாள் பொன்னரசி. கந்தலும் கிழிசலும் கொண்ட துணி மூட்டை அவள் கக்கத் தில் இருந்தது. கத்தி முனை தோலில் உரசியது. அவளது வைரியான கந்தசாமியின் படமும் அவளுடைய படமும் ஞாபகத்தில் ஓடின; அவை என்றோ எப்படியோ அவளிட மிருந்து பிரிந்து விட்டனவே...? நடந்தாள்.

கீழராஜ வீதியிலிருந்து மடங்கி, சென்ற வழி வழியே மறுகி நடந்தாள் அவள். புதுக்குளம் வந்தது. படி ஏறிச் செல்ல அடிவைத்த போது, தொங்கல் வீட்டில் கல்யாணம் நடந்ததை அறிந்து அங்கு சென்றாள்; வெள்ளை பூசிய சுவர்களும் வாழைத்தார் கட்டின காவணமும் அவளைக்

கவர்ந்தன. மாப்பிள்ளையைப் பார்த்தாள். இளம் வயசுக் காரன். அவளுக்கு வேறு நினைவு பளிச்சிட்டது. ‘என் கண்ணுக்கும் இன்னம் ஆறேழு வருசம் போனு இதுபோல கண்ணுலம் ஆக வேணுமே!’

அன்னதானம் வழங்கப்பட்டது. ஏழைகளோடு வரிசையாக அவளும் நின்றுள். பிறகு என்ன தோன்றியதோ, அங்கிருந்து நகர்ந்து விட்டாள். ‘நான் சாப்பிட்டு, உசிரோடிருந்து யாருக்கு என்ன ஆவப்போவுது?......என் புள்ளையை இத்தினி வருசத்துக்கு அப்பாலேயா இனிக் கண்ணுலே காணப் போறேன்?... ஊரிலே ராசாங்கமாக் குடியும் குடித்தனமுமா இருக்க வேண்டிய நான் இப்பிடி நாயா அலையணும்னு எந்தலையிலே எழுதியிருக்கு. அங்காளம்மா! என்னை உங்கிட்டே அழைச்சுக்கிடு. எம்மவன் எங்கிருந்தாலும் அவனை நிறைஞ்ச ஆயுசுக்குக் காப்பாத்து!’

மஞ்சி விரட்டு நடந்து முடிந்த இடம் தென்பட்டது. நடந்தாள்.

புதுக்குளத்துத் தென்கரை ஓரத்தில் வந்து நின்று வேர்வையை வழித்தெடுத்தாள் பொன்னரசி. சிறுகுடல் பெருங்குடலைக் கவ்வியது; தலை சுற்றியது. பயம் உள்ளடங்கிய அந்தக் குளத்தையே வைத்த கண் வாங்காமல் பார்த்தாள். ‘ம்!... இன்னிக்கு நடுச்சாமத்தோட எல்லாம் முடிஞ்சிடும்!’

பிறந்த மண்ணுக்கு ஓடினுள் அவள்—மனோரதப் பயணம். பெற்றவர்கள் மறைந்து போனுர்களாம்...கந்தசாமி குடியும் குடித்தனமுமாக ஊரில் இருக்கிருனும்! பட்டணத்தில் நாட்டு வைத்தியர் நல்லதம்பியை எதிர்பாராமல் சந்தித்தபோது கிடைத்த விவரங்கள் இவை.

தேம்பிய நெஞ்சம் அவளுடைய ‘விதி’யை நோக்கிக் கேட்டது: ‘இத்தனை காலமாக எத்தனையோ ஊரெல்லாம் சுத்தி அலைந்தேனே? எம்மகனை ஒருவாட்டியாச்சும் காட்டப்பிடாதா? ஒருவாட்டி எங் கண்ணைக் கண்டுக்கிட்டா, நான் அப்பவே நெறைஞ்ச மனசோடே செத்திடுவேனே?...இந்த

ஆசையாச்சும் பலிக்குமான்னுத்தான் அங்கங்கே வேலை வெட்டி செஞ்சு, கிடைச்ச சோத்துப் பருக்கையைச் சாப்பிட்டு உசிரைக் காப்பாத்தினேன். ஆனா, என் ஆசை அவிஞ்சிருச்சு; இனி எங்கே என் கண்மணியை காணப் போறேன்? ஐயோ, நான் மாபாவி...!

குளத்துக்குக் கீழ் இறக்கத்தில் ஓடிய சாலையில் நிழலடர்ந்த மரங்கள் தென்பட்டன. சறுக்குப்படி வழியாக அவள் இறங்கினாள். கால் சறுக்கியது. முதல் படியில் விழுந்த அவள் மறு படிக்குப் புரண்டாள். பிறகு அப்படியே உருண்டு விழுந்து விட்டாள், பாவம்!

# 8. முத்துமாரி

"அம்மா!...அம்மா...!"

பொன்னரசி விழிகளை விரித்தாள். ஆலமரத்தடியில் யாரோ சிறுவனின் மடியில் தலைசாய்ந்து கிடப்பதை உணர்ந்தாள். அவசரப்பட்டு எழ முயன்றாள். நெற்றி மேட்டிலிருந்து வேதனை குரல் தந்தது. எழுந்தமர்ந்ததும், முதலில் தென்பட்டவை: பக்கத்தில் சிதறிக் கிடந்த ரத்தத் துளிகள்; துடிக்கும் இதயத்தோடு அந்தப் பையனை ஏறிட்டு நோக்கினாள். வழிந்த கண்ணீருடன் அவன், "அம்மா, நீங்க பிழைச்சிட்டீங்க... இனிப் பயமில்லை. இந்தாங்க... ஒரு மடக்கு காப்பித்தண்ணி குடியுங்க" என்று சொல்லிக் காப்பிக் குவளையை அவள் கரம் தொட்டு நீட்டினான்.

பொன்னரசிக்கு மின் அதிர்ச்சி ஏற்பட்டது. அவளுடைய பெற்ற வயிறு என்றுமே அடைந்திராத அமைதியைப் பெற்றது. மார்பகத்தில் பால் வெள்ளம் பாயத் துடிப்பது போலவும் உணரலானாள். இமை மூடாமல் அவனையே பார்த்தாள். பத்து அல்லது பதினொரு வயசான அச்சிறுவன் 'ராஜா' மாதிரி இருந்தான். செம்மறியாட்டுக் கும்பல் காவிக் கோலம் திகழ அவன் பின்னே அணி வகுத்திருந்தது. அவனது நெற்றிப் பக்கம் கூர்ந்து நோக்கினாள்

அந்த இடத்தில் பெரிய தழும்பு காணப்பட்டது. 'ஆதி பிரமரே, இவனே தான் எம்மகனு...?'

தான் மயங்கிச் சுருண்டு புரண்ட நிகழ்ச்சி அப்போது தான் பொன்னரசிக்கு விளங்கியது. அவள் அவன் கதையைக் கேட்டாள்.

"அம்மா, நான் அனுதை. என்னைப் பெத்த ஆத்தா பிறந்த மேனியா என்னைக் காட்டிலே அனுதையா வீசிப் போட்டுப்பிட்டுப் போயிட்டாங்களாம்; வழியிலே கண்டவங்க என்னை வளர்த்து ஆளாக்கினுங்க. யாரோ ஒருத்தன் ஆசைகாட்டி எங்க அம்மாவை ஏமாத்திப்பிட்டானும்; அதனுலேதான் என் தாயார் என்னை அனுதையாக்கிப்பிட்டாங்க போலே!... என்னைப் பெத்தவளை—என் தாயை ஒரு நடையாச்சும் கண்டாத்தான் என் ஆவி வேகும்...ஆனு, ஈவிரக்கம் இல்லாம என்னை வீசிப்பிட்டுப் போன ஆத்தாவுக்கு நல்ல தண்டனை கொடுக்கவும் கொடுப்பேன்!... என்னைப் பெத்தெடுத்த அம்மாவை ஏமாத்தின அந்த மனுசனை...ம்... என் அப்பனை எப்போ கண்டாலும் அப்பவே கண்டங் துண்டமாச் சீவிப் போடுவேன். அவன் படம் எங்கிட்டே தான் இருக்கு; எங்க அம்மா படங்கூட வச்சிருக்கேன்; என்னை வளர்த்தவங்க கொடுத்திருக்காங்க!..."

பையனின் கண் இமைகள் நனைந்து ஈரமாயின.

அவனுக்குத் தெரியாமல் பொன்னரசி நேத்திரங்களைத் துடைத்துக் கொண்டாள். சிறுவனுக்குப் பக்கமாகக் கிடந்த முடிச்சிலிருந்து தலை நீட்டிய புகைப்படங்களை எடுத்தாள். ஆம்; ஒன்று அவள் படம்; இன்னென்று கந்தசாமியின் நிழலுரு. மறுபடியும் அவற்றை முடிச்சுக்குள் திணித்தாள்.

'கடவுளே, நீ ரொம்ப நல்ல சாமி...என் ஆசை நிறைவேறிடுச்சு...இம்பிட்டு நாளா நான் பட்டபாடு வீண்போகலே. என் வைரியை பழி வாங்கிறதுக்கு என் மகன் கிடைச்சுப் புட்டான்!...'

"தம்பி, உன்னேட ஆத்தாவை நேரிலே கண்டா அவ பேரிலே ஒனக்கு ஆத்திரந்தான் வருமா?"

"ஆமா; என் பேரிலே ரவைகூட ஈவிரக்கமில்லாம என்னை விட்டுப் போட்டுப் போன குற்றத்துக்கு அவங்க மேலே ஆத்திரம்தான் வரும்!"

விக்கலுக்கும் விம்மலுக்கும் இடையில் பொன்னரசி தத்தளித்துக் கொண்டிருந்தாள்; மறுவினடி, பித்துப் பிடித்த மாதிரி கீழே கிடந்த பாருங்கல்லில் மோதிக் கொண்டாள். ரத்தம் பீறிட்டுக் கொண்டிருந்தது.

சிறுவன் அவளுடைய தோளைப் பற்றித் தடுத்தான்.

அதே சமயம் வேருெரு புதுக்குரல் கேட்டது: "ஏம்மா, ஏம்மா!" என்று ஓடி வந்தான் மீசைக்காரன் ஒருவன். அருகில் ரேக்ளா வண்டி நின்றது.

பொன்னரசி தலை நிமிர்ந்தாள்; அந்த மனிதனைப் பார்த்தாள். விழுங்கி விடுபவள் போல முறைத்துப் பார்த்தாள். புகை நெளிந்தது. முடிச்சில் ஒளிந்திருந்த கத்தி அவள் கைக்கு வந்தது.

செம்மறியாடுகளை மேய்க்கும் பையன் ஒன்றும் புரியாமல் பரக்கப் பரக்க விழித்தான்.

"தம்பி, இந்த ஆளுதான். உன் அப்பன்!" என்ருள் அவள், வெறியுடன்.

"ஆ! அப்பிடியா...?"

மீசைக்கார மனிதனை நோக்கிக் கைக்கப்பை வீசினுன் சிறுவன். அவன் சுருண்டு விழுந்தான். நெற்றியிலிருந்து ஊற்றெடுத்த ரத்தவெள்ளம் பூமித் தாய்க்கு வைத்த குருதிக் குங்குமம் அச்சமுறத் துலங்கிக் கொண்டிருந்தது.

"பொன்னரசி, என்னைப் மன்னிச்சிப்பிடு. இப்போதே என்னோட வந்திடு. நான் உன்னைக் காப்பாத்துறேன்... நம்ப மகனையும் கண்டு பிடிப்போம்...!" என்ருன் அவன்—கந்தசாமி.

பொன்னரசியின் கையிலிருந்த கத்தி மின்னியது. ரத்தக் காட்சியைக் கண்டதும் அவள் மனத்தில் புயல்

நீங்கிய அமைதி கனிந்ததோ? கத்தி நழுவியது. பைய னுடைய கையைப் பிடித்து அழைத்து வந்தாள். "பாவம்; மன்னிச்சிடு; அந்த ஆள் எக்கேடு கெடட்டும்!" என்று வேண்டினுள் அவள்.

புழுதி வழியே ரத்தத் துளிகள் சுவடு காட்டிக்கொண் டேயிருந்தன.

"அப்பனைக் காட்டினீங்க; என் ஆத்தாவையும் காட்ட மாட்டீங்களா, அம்ம ?" என்று விம்மிய பையன் அவளைப் பரிதாபம் இழையோட நோக்கலுற்ருன்.

"தம்பி, பழிக்குப் பழி வாங்கத்தானே உன் அம்மாவை நீ இப்ப தேடுறே?..."

"ஊஹூம், அவங்களை மன்னிச்சிடுவேன்; அவங்க என் தாய்!"

அடுத்த கணம் என்ன எண்ணிஞனே, தன் முடிச்சி லிருந்த புகைப் படத்தை எடுத்துப் பார்வையிட்டான் அவன்.

"ஆத்தா...!"

நெஞ்சில் பாய்ச்சிக் கொள்ள ஓங்கிய கத்தியைப் பிடுங்க முனைவதற்குள், செங்நிறம் பீறிடத் தலைப்பட்டது.

"ஆத்தா!... உங்களை நான் சாகவிடவே மாட்டேன். நீங்க என்னை அனுதையா விட்டது பெரிய தப்புதான். இருந் தாலும் பத்து மாசம் சுமந்து பெத்தெடுத்த தாயாச்சே நீங்க!... உங்களைத்தான் நிதமும் கையெடுத்துக் கும்பிட்டுக் கிட்டு வாரேன். முத்துமாரி அம்மா, நீதான் இனி எங்களுக்குத் துணை. இம்பிட்டு நாளைக்கப்பாலே ஆத்தாளும் மகனுமான எங்க ரெண்டு பேரையும் மட்டும் பிரிச்சுப்பிடாதே!..."

★

# திருவாசகம் தெளிவுரை

**400 பக்கங்கள்** **மக்கள் பதிப்பு.**

மணிவாசகப் பெருமானின் திருவாசகப் பெரு நூல் புலியூர்க் கேசிகனின் தெளிவான உரையமைப்புடன் வெளி வந்துள்ளது.

தமிழ் அன்பர்கட்கு நல் விருந்தாகச் சிறந்த அமைப்புடன் மலிவான விலையில் எங்கும் கிடைக்கிறது.

சென்னை விலை ரூ. 3—00

வெளியூரில் ரூ. 3—15

விற்பனை உரிமை :

## அப்பர் புத்தக நிலையம்

தெற்கு ராஜவீதி : : தஞ்சாவூர்.

# திருவருட்பா
# பாராயணத் திரட்டு

இரண்டாம் பதிப்பு

அருட்பெருஞ்சோதி இராமலிங்க அடிகளார் அருளிச் செய்த திருவருட்பா ஆறு திருமுறைகளினின்றும், திரட்டித் தொகுக்கப்பெற்ற நூல் இது.

திருவருட் பாடல்களைத் தொகுத்துத் தந்திருப்பவர் புலியூர்க் கேசிகன்.

மக்கள் பதிப்பு
சென்னை விலை ரூ. 1—25
வெளியூரில் ரூ. 1—30

விற்பனை உரிமை :
அப்பர் புத்தக நிலையம்
தெற்கு ராஜவீதி : : தஞ்சாவூர்.